# முதற்குறள் உவமை

ஆசிரியர் :

இராவ்சாகெப் - கு. கோதண்டபாணி பிள்ளை

88, வேங்கடேசபுரம், சென்னை – 23.

பாரி நிலையம்

59, பிராட்வே · சென்னை 1.

முதற்பதிப்பு : டிசம்பர், 1956

உரிமை ஆசிரியர்க்கு

விலை ரூபா 3—8—0

*For Bibliographical Details See page xxii.*

---

சாது அச்சுக்கூடம், இராயப்பேட்டை, சென்னை - 14.

# பொருளடக்கம்


பொருள் | பக்கம்

1. முன்னுரை : டாக்டர் - மு. வரதராசனர், எம். ஏ., எம். ஓ. எல்., பி. எச்டி. ... v

2. தகுதி நயத்தல் : திருவாவடுதுறை ஆதீன மகா வித்துவான் - ச. தண்டபாணி தேசிகர் ... xii

3. வாழ்த்துரை : இராவ் பகதூர் - தணிகைமணி வ. சு. செங்கல்வராய பிள்ளை, எம். ஏ. ... xvii

4. I. உரைத்திறன் : ... 1

உரைகளின் தன்மையும் திறன் ஆய் முறையும் - சொற்பொருள் - உவமத்தோற்றம் - எதற்கு எது உவமை? - பேராசிரியர் கருத்து - கருத்து வேற்றுமை காலத்தின் செயல் - வள்ளுவர் கால நிலையும் கருத்து நிலையும் - இருபெரு நெறிகளின் கலப்புத்தந்த மாற்றம் - உவமையின் உரை - பரிமேலழகர் உரைத்திறன் - 'உலகின்மேல் வைத்துக்கூறினர்' - 'காணப்படாத கடவுளுக்கு உண்மை கூற வேண்டுதலின்' - இவ்வுரை கொள்ளத்தக்கதா? - உடைமைப் பொருளின் சிறப்பு - பரிமேலழகர் உரையின் அமைவு - 'தலைமை பற்றிவந்த எடுத்துக்காட்டு உவமை' - எடுத்துக்காட்டு உவமை - அகரத்திற்குத் தலைமை - ஆதிபகவற்குத் தலைமை - ஒருபுடை ஒப்புமை.

5. II. இலக்கணத்திறன் : ... 77

உவமை எழுத்திலக்கண உவமை - எழுத்தின் தோற்றம் - பேச்சு மொழி - ஓவிய எழுத்து - வரி

பொருள் பக்கம்

வடிவம் - எழுத்து முறைகள் - மயங்கா மரபின் எழுத்துமுறை - அகரம் எழுத்துக்களுக்கு முதலாவ தெப்படி?

6. III. உவமத்திறன் : ... 117

உவமையிற்காணும் சொற்களை ஆய்தல் - 'முதல'- முதல்=செடி கொடிகளின் முதல் - முதல்=கைப் பொருள் - முதல்=எண் வரிசை முதல் - உலகின் மூவகைப் பெருக்கம் - முதல்=காரணம் - உவமைப் பொருள் - முதற்று - அகரமுதல - பண்புத்தொகை விளக்கம் - உவமை பண்பு உவமை - பெயர்ப்பெருக் கத்தில் ஒப்புமை - மெய்பெறு உவமை - உருவெய்து உவமை - வினையுவமை - பயனுவமை - அருவத்தில் ஒப்புமை - காலஒப்புமை - ஆதிபகவன் - எழுத்தெல் லாம் - எழுத்துக்களுக்கும் உலகிற்கும் உவமை - எஞ்சிய உடைமைப் பொருள் - உவம உருபு விரித் தல் - வேறுபட வந்த முடிவு - வேறுபட வந்த உவமத் தோற்றம் - வேறுபட வந்த முடிவின் குறிப்பு - ஒருமை காண்பதே வள்ளுவர் அறம் - பாயிரம் - பா நலன் - முடிவுரை.

7. இணைப்பு : ... 193

'அகர முதல' என்பதன் இலக்கணக் குறிப்பு.

# முன்னுரை

டாக்டர் - மு. வரதராசனர், எம்.ஏ., எம்.ஓ.எல்., பிஎச்.டி.

அமைதியும் ஒய்வும் மிக்கது பழங்காலம்; ஆதலின், அக்காலத்தே நூல்களை ஆழ்ந்துணர்ந்து நுணுகிக் கற்கும் வாய்ப்பு உளதாயிற்று என்பர். பரபரப்பும் வேகமும் மிக்க இக்காலத்தே கருத்துக்களை விரைந்துணர்ந்து ஓடிக் கற்பதற்கும் போதிய வாய்ப்பு இல்லை என்பர். ஒரு சில நூல்களைத் தொடர்ந்து பல ஆண்டுகள் தேர்ந்து தேர்ந்து கற்பது பழங்காலக் கல்வி முறை; பற்பல நூல்களை ஒவ்வோராண்டிலும் ஆங்கொன்றும் ஈங்கொன்றுமாகக் கற்று அவ்வப்போழ்தே மறந்து தாவுவது இக்காலக் கல்வி முறை. பெரும்பாலும் இந்நிலையே எங்கும் காணப்படினும், ஒவ்வொரு நூலில் ஈடுபாடு மிக்கவராய் நுண்பொருள் உணரத் தலைப்படுவோர் சிலர், பழங்காலப் புலவர் பெருமக்களைப் போல ஆழ்ந்து கற்கும் கல்வியினராய் விளங்கக் காண்கிறோம். இத்தகைய நுண்மாண் நுழைபுலன் உடையவர் ஒரு சிலரே. இந்நூலின் ஆசிரியர் திருவாளர் கு. கோதண்டபாணி பிள்ளை இத்தகு நுண்மாண் நுழைபுலன் உடையோர் வகையில் எடுத்துக்காட்டென இலங்குகிறார். நெடுநல்வாடைத் திறனாய்வும் முதற்குறள் உவமை என்னும் இவ்வரிய நூலும் அவர்தம் ஆராய்ச்சித் திறனையும் அருந்தமிழ்ப் புலமையினையும் விளக்கி நிற்கின்றன.

திருக்குறளைப் பலர் பல வகை நோக்கோடு கற்பர். அரசியல் அறிவுபெறக் கற்போர் சிலர்; அறநெறி உணரக் கற்போர் சிலர்; இன்பக் கற்பனைகளில் மகிழக் கற்போர் சிலர்; தமிழ் மொழியின் வளம் காணக் கற்போர் சிலர்; திருவள்ளுவரின் அனுபவச் செல்வத்தை நுகரக் கற்போர்

சிலர் ; பழந்தமிழரின் நாகரிகக் கொள்கைகளைத் தெளியக் கற்பவர் சிலர் ; வாழ்வாங்கு வாழும் நெறியை அறியக் கற்பவர் சிலர்; சொல்திறன் நாடிக் கற்பவர் சிலர்; பாநலன் போற்றிக் கற்பவர் சிலர் ; தாம் சொல்வன செய்வன யாவற்றிற்கும் சான்றுகள் காட்டக் கற்பவர் சிலர் ; பிற நூல்களிலிருந்து கடன் வாங்கிய கருத்துக்களே இந்நூலில் உள்ளன என்று நிறுவ முயன்று கற்பவர் சிலர். இவ்வாறே வேறு பிற நோக்கம் கொண்டும் திருக்குறளைக் கற்பவர் உள்ளனர்.

இந்நூலின் ஆசிரியர் திருக்குறளைக் கற்ற முறை சீரிது. திருக்குறளில் இவர் திருவள்ளுவரைத் தேடியுள்ளார் ; திருவள்ளுவர் காலத்துத் தமிழரைத் தேடியுள்ளார் ; அத்தமிழர் கற்ற இலக்கணம் முதலிய கலைகளைத் தேடியுள்ளார் ; உலகம் உயிர் ஆகியவற்றின் உண்மைகளை ஆராய்ந்துள்ளார் ; பொதுமை ஒருமை முதலாய அறநெறியின் அடிப்படைகளை ஆராய்ந்துள்ளார்.

இந்நூலில் முதல் குறள் பற்றிய ஆராய்ச்சி மட்டுமே உள்ளது. அதன் உவமையே இங்கு ஆராய்ச்சிப் பொருளாகத் திகழ்கின்றது. அதற்குப் பொருள் காணும் முறைக்கு அரண் செய்யும் வகையில் வேறு சில குறள் மணிகள் - தொடர்கள் - ஆங்காங்கே வந்து அமைகின்றன. முதற் குறளில் உள்ள முதல் என்னும் சொல், இன்னின்ன பொருள் பயக்கும் என்று விளக்குமிடத்தில், வேர் முதல், பொருள் முதல், எண்முறை முதல், காரணமெனும் முதல் என்பவை பற்றிய குறள் தொடர்கள் வந்து உதவுகின்றன. 'முதற்றே' என்பதில் உள்ள ஏகாரத்தின் பொருள் இன்னதெனத் தெளிவுறுத்தும்பொருட்டு, 'அறனெனப் பட்டதே' என்னும் குறள் விளக்கப்படுகின்றது. அங்கு ஏகாரம் தேற்றப் பொருளில் அமைவதற்குக் காரணமாக அக்காலத்தே இருந்த நிலைமை விளக்கப்படுகின்றது. விளக்கம் வேறு திசை நோக்கி அழைத்துச் செல்வதுபோல நீண்ட

போதிலும், முதற்குறளின் ஏகாரம் உணர்த்தும் பொருள் பற்றித் தெளிவு பயக்கின்றது. திருவள்ளுவர் இத்தகையவர் என எடுத்துணர்த்தும் சில இடங்களில், திருவள்ளுவ மாலை யின் தொடர்கள் பொருந்துமாறு ஆளப்பட்டுள்ளன. இவ்வாறு எவ்வெவை விளக்கப்படினும் நூல் முழுதும் முதற்குறளின் திறனாய்வாகவே அமைந்துள்ளது.

முதற்குறள் இந்நூலாசிரியர்க்கு உணர்த்தும் நுண் பொருள்கள் பல ; மிகப் பல. ஒலி நூலாராய்ச்சி, இல்லற - துறவற ஆராய்ச்சி, சமண - பௌத்த ஆராய்ச்சி, அறம் பிறத் தக்கது முதலிடமா மூன்றாமிடமா என்னும் ஆராய்ச்சி, அத்துவிதம் துவிதம் சித்தாந்தம் என்னும் முத் திறச் சமயக் கொள்கைகளின் ஆராய்ச்சி முதலாய பல திற ஆராய்ச்சிகளுக்கு முதற்குறள் தூண்டுகோலாகவும் அமைகின்றது. சமயக் கொள்கைகளில் உள்ள நுண்ணிய வேறுபாடுகளையும் இம்முதற்குறள் கொண்டு உணர்த்தல் இயலும் என்ற குறிப்புத் தோன்றச் செய்தபின், “இப்பூச லுள் புகாது அகன்றுவிடுவோம்,” என்று நூலாசிரியர் அப்பால் செல்கின்றார். ஆயினும், பொதுமையும் ஒருமையும் நாடும் விழுமிய நாட்டம் சான்ற திரு. வி. க. உரையினை ஒட்டி விளக்கம் தருகின்றார். “ஒரு நாமம் ஓர் உருவம் ஒன்றும்” இல்லாத கடவுளுக்குப் பல பெயரும் பல உருவ மும் அமைந்ததை முதற்குறளின் உவமை வாயிலாக விளக்கும் திறன் வியக்கத்தக்கது. உருவமற்ற அகர ஒலிக்கு மொழிதோறும் அகரம், அகாரகா, அலிப், ஆல்பா முதலாய பல பெயரும், வட்டமும் நேர்க்கோடும் வளைவு மாகப் பற்பல வடிவும் அமைந்திருத்தலைக் காட்டி, உவமை யின் அகலத்தைப் புலப்படுத்துகிறார். நூலைப் படிக்கும் ஒருவனுடைய கண்ணிற்குப் புலனாவன வெறுங்கோடுகளும் வளைவுகளுமான எழுத்து வடிவங்களே ஆயினும், அவன் நூற்பொருளில் தோயும்போது அழுதலும் விம்முதலும் மகிழ்தலும் தன்னை மறத்தலும் உளவாதலை ஒருபால் கூறி,

கடவுளின் உருவத்தின் முன்னே நிற்கும் ஒருவன் அன்புருவாய் நெக்குருகிக் கண்ணீர் ததும்பித் தன்னை மறக்கும் நிலையை மற்றொருபால் எடுத்துக் காட்டும்போது, உவமையின் ஆழத்தைப் புலப்படுத்துகின்றார். இவ்வாறே மேலும் பல ஒப்புமைகளை நுண்ணிதின் ஆய்ந்து விளக்குகின்றார்.

இத்துணை விரிவுடைய ஆராய்ச்சிக்கு அடிப்படையாக உள்ளது 'அகர முதல' என்னும் தொடர்க்குப் பொருள் காணும் திறனே ஆகும். மணக்குடவர் அத்தொடருக்குத் தரும் பொருள் பொருந்தாது என்பதற்கு இலக்கண ஆராய்ச்சி நிகழ்த்தப்படுகின்றது. தமிழிலக்கணம் பரிமேலழகரின் உரைக்குத் துணை நிற்கின்றது. பரிமேலழகரின் இலக்கண அறிவும் தெளிவும் நுட்பமும் பாராட்டுப் பெறுகின்றன. "பரிமேலழகரைத் தொடர்வோம். அவரை விட்டுவிடுதல் தவறாக முடியும். உண்மையைக் காணும் உரனைத் தந்தது அவர்தம் உரையே. உரையாசிரியருள் உடைமைப் பொருண்மையின் நுட்பத்தைக் கண்டவர் பரிமேலழகர் ஒருவரே. என்னே அவர் நுண்மாண் நுழை புலம்! என்னே அவர் புலமையின் ஆழமும் நுட்பமும்!" ஆயினும் பரிமேலழகரிடம் குறை உள்ளது; உள்ள குறை எடுத்துக்காட்டப்படுகின்றது. உலகம் கடவுளாகிய முதலை உடையது என்று திருவள்ளுவர் கூறியதைக் கூற அவ்வுரையாசிரியர்க்கு மனம் வரவில்லை; அவர் தயங்கினார்; 'உலகிற்கு முதல் ஆதிபகவன் என்பது கருத்தாகக் கொள்க' என்று திரித்தார். அவர்தம் தயக்கத்திற்கும் திரிபுக்கும் காரணம் இன்னது என்பதும் இங்குச் சுட்டிக்காட்டப்படுகின்றது. உடைமை கூறுமிடத்து விளங்குவது உரிமை; அதை மாற்றுமிடத்துக் காண்பது அடிமைத் தன்மை. காலத்தால் நேர்ந்த இம்மாறுதல் தக்கவாறு குறிக்கப்படுகின்றது.

உவமையின் பெற்றியும் அதனைத் தமிழ் முன்னோர் போற்றிய முறையும், அதன் வகைகளைக் குறித்த கருத்து

வேறுபாடும் இங்கு வேண்டுமளவிற்கு ஆயப்பட்டுள்ளன. எடுத்துக்காட்டுவமை என்ற பெயர்ப் புதுமை பற்றிய கருத்தும் நயம்பெறப் பொறிக்கப்பட்டுள்ளது. எடுத்துக் காட்டா உவமை எனக் குறிப்பிடத்தக்கது என்கின்றார். ஆயினும், 'அது போல' என்ற ஒரு தொடர் விரித்துக்கூறி யிருப்பின், முதற்குறள் ஆய்வாளர் சிந்தனையை இவ்வளவு தூண்டியிருத்தல் கூடுமோ என்பது கருதத்தக்கது. ஒவ் வொரு சொல்லுக்கும் சொல்லின் பொருள் வகைக்கும் ஒப்புமை விரியும் வகையில் உவமை அமைந்திருப்பது, உவம உருபு மறைந்திருத்தலாலே எனலாம். 'அது போல' என்னும் தொடர் இல்லாமையால்தான், உவமையின் சிறப்புப் பல திறத்தானும் எடுத்துக்காட்டப்படுவதாய் விளங்குகிறது; எடுத்துக்காட்டுவமை என்னும் பெயரும் பொருந்துவதாகிறது.

வினை பயன் மெய் உரு என்னும் உவமைவகை நான்க னையும் இவ்வொரு குறளிலே விரிவாகக் காட்டுவதோடு, அருவம் பற்றிய ஒப்புமை என்றும், காலம் பற்றிய ஒப்புமை என்றும் அப்பாலும் சென்று முதற்குறள் உவமையின் சிறப்பை விளக்கியுள்ளார்.

அகரம் முதலாதல் எவ்வாறெனக் காட்டுமிடத்து, எழுத்தொலி பற்றிக் குறித்துள்ள கருத்துக்கள் விழுமியன. நாகரிகத்திற்கே அடிப்படையாக விளங்குவது எழுத்து முறை; எழுத்து முறையை மயங்கா மரபினதாகக் கொண்ட வர் தமிழர்; தமிழ் எழுத்து முறையின் மரபைத் தெளிவாகக் கூறும் நூல் தொல்காப்பியம்; அதன் ஆசிரியர் தொல்காப் பியனார் தமிழகம் முழுதும் திரிந்து பேச்சுத் தமிழின் ஒலியையும் ஆராய்ந்தவர்; அவர் தம் நூலை அரங்கேற்றிய போது, வடமொழியினர் சிலர் தாம் கற்ற ஐந்திரத்தோடு மாறுபடும் இடங்களைச் சுட்டிக் குறை கூறினர்; அவற் றிற்குத் தக்கவாறு விளக்கங்கள் தந்து வடமொழியாளரும் போற்றுமாறு தமிழின் மயங்காமரபின் எழுத்து முறையை

விளக்கினர் தொல்காப்பியனர் ; வடமொழிப் புலவர் அதங் கோட்டாசான் கேட்டுத் தம் நாவால் போற்றினர் ; தொல் காப்பியத்தில் ஐந்திரம் இல்லை ; தொல்காப்பியனர் ஐந்திரம் அறிந்தவர் ; அவருடைய அறிவு அரங்கேற்றத்தின்போது, வடமொழியாளர் கூறிய குறைகளைக் களைந்தபோது விளங் கியது ; அப்போது தம் புகழ் விளக்கியதோடு அல்லாமல், தமிழின் புகழும் மயங்காமரபின் எழுத்தின் புகழும் விளக்கினர் என்று இந்நூலாசிரியர் எடுத்துரைக்கும் கருத் துக்கள் புதுமைச் சிறப்பும் புலமைத் திறனும் செறிந்தவை. வடமொழி எழுத்திலக்கணத்திற்கும் தமிழ் எழுத்திலக்கணத் திற்கும் உள்ள வேறுபாடுகள் சிற்சில புலப்படுத்தப்பட் டுள்ளன. தொல்காப்பியனரின் எழுத்தொலி பற்றிய கருத்துக்கள், முப்பது நூற்றாண்டுகளுக்கு முற்பட்ட கருத் துக்களே எனினும், இன்றைய ஒலி நூலார் கண்டேத்தும் சிறப்பு வாய்ந்தவை, புதுமைக்கும் புதுமையாக உள்ளவை என்று நூலாசிரியர் வலியுறுத்தியுள்ளார். ‘அகரமுதல எழுத்தெல்லாம்’ என்ற உவமைப் பகுதியின் கருத்தை விளக்கும்பொருட்டு, குழலிசையை எடுத்துக்காட்டாகக் கொண்டு, அதன் தலைத்துளையின் ஓசையே மற்ற ஓசை களுக்கு அடிப்படையாதலைத் தெளிவாக்கியுள்ளார்.

இத்துணைப் பொருட்செறிவுள்ள முதற்குறளின் தெளிவு கொண்டே குறள் நூல் முழுதும் கற்றல் வேண்டும் என்பது இவர்தம் உட்கோள். இம்முதற்குறளே நூலின் திறவுகோல் என்கின்றார் ; இவ்வொரு குறள், உயிர்களின் ஒருமையை அறிவுறுத்துவது எனக் காட்டுகின்றார்; ஒருமை பற்றிய தெளிவு இல்லையேல், ‘அற்றார் அழிபசி தீர்த்தல்’, ‘தீயவை தீயினும் அஞ்சப்படும்’ என்னும் மணிமொழி களுக்குத் தக்கவாறு பொருளுணரல் இயலாது என்கின்றார். “அவற்றிற்கெல்லாம் அடிப்படையாவது முதற்குறள். ஒருமையே உலக அமைப்பில் காணப்படுவது. ஒருமையே இயற்கைச் சட்டம். பன்மையில் ஒருமை காண்பதே பண்

பாட்டு உயர்வு. இவ்வொருமை காண்பதே ஒழுக்கத்தின் உயர்வுமாகும். இவற்றையே வற்புறுத்துவன, ஒருமைப் பாடு எய்தும் வாழ்வுக்கு வழி காட்டுவன, ஆயிரத்து மூந் நூற்று முப்பதருங்குறளும்,'' என்கின்றார்.

இந்நூலின் நடை செம்மை சான்றது; முன்னோர் மொழியும் கருத்தும் கலந்து இயன்றது; 'நாவண்ணம் அங்குக் கண்டோம், இதழ் வண்ணம் இங்குக் கண்டோம்' என்பன போன்ற இடங்கள் பற்பல. நூலாசிரியரின் 'ஈரடி இருநூற்'றின் பாக்கள் இடையிடையே அவர்தம் உரைநடையிலும் அமைந்து அணி செய்கின்றன. அவர்தம் வேறு பல பாக்களும் அமைந்து நலம் பயக்கின்றன.

குறள் ஒன்றே; அது குறித்த சிந்தனையோ பற்பல; அவற்றை ஒட்டிய ஆய்வும் தெளிவும் பல ஆண்டுகளாக நுண்ணறிவு உழைத்த உழைப்பின் பயன்கள். அப்பயன்களை இந்நூல்வடிவில் பிறர்க்கு வழங்கிய நோக்கமும் முறையும் போற்றத்தக்கன.

அறிவும் அனுபவமும் சான்ற ஒருவர், வேறு துறையில் உழைத்து உழைத்து ஓய்வு பெற்ற நிலையில், தாம் பிறந்த நாட்டுப் பண்பாட்டையும் அதனை ஆக்கி அளித்துப் போற்றிய புலமைத் திருவினரையும் நினைந்து நினைந்து போற்றி, அவர்தம் அடிச்சுவட்டைக் கண்டு மகிழ்வதும் காட்டி மகிழ்விப்பதும் பெறற்கரிய பேறுகளே ஆகும்.

மு. வரதராசன்

# தகுதி நயத்தல்

**திருவாவடுதுறை ஆதீன மகாவித்துவான்**
**ச. தண்டபாணி தேசிகர்**

திருக்குறள், ஒரு தெளிந்த நீரோடை. அதன் உண்மையான ஆழம் ஆயிரம் அடியும் அதற்கு மேலும். அது அதனை இரண்டடியாகக் காட்டி ஏமாற்றுகிறது. அடித்தளத்தில், பொன்னும், மணியும், முத்தும், பவழமும், பிறவும் நிரம்பக் கிடந்து மிளிர்கின்றன. இடையிலே வேறு சில பொருள்களும் மிதக்கின்றன. கோடையில் சூரிய ஒளி அடித்தளம் மட்டும் ஊடுருவிப் பாய்கிறது. அடியிலுள்ள பொன்னும் மணியும் பளபளவென்று மின்னுகின்றன. இடையில் மிதக்கின்ற சிப்பிகளும் கிளிஞ்சில் ஓடுகளும், மின்னுகின்றன. உற்று நோக்குபவர்கள் இரண்டடி ஆழந்தானே என்று கையை நீட்டுகிறார்கள். கை குட்டையானது. ஓடையின் அடித்தளம் எட்டவில்லை. துழாவுகிறார்கள். ஏதோ தட்டுப்படுகிறது. அதுதான் அடியிலுள்ள பொன்னும் மணியும் என்று எடுத்துப் பார்க்கிறார்கள். தாம் முயன்று எடுத்த பொருளல்லவா ? தம் முயற்சியில் உள்ள மதிப்பு, கிடைத்த பொருள் பொன்னா, மணியா, சிப்பியா, கிளிஞ்சிலா என்று ஆராயவொட்டாமல் கிடைத்த பொருளிலேயே உயர்ந்த எண்ணத்தை உண்டாக்குகிறது ; மதிப்பை உயர்த்துகிறது ; அப்படியே பதிய வைக்கச் செய்கிறது. கை நீளமானவர் சில பேர், மிடுக்கோடு முக்குளி போட்டு மூழ்கி மூழ்கித் துழாவினர் ; மண்ணை எடுத்து வந்தவர் சிலர் ; பொன்னை எடுத்து வந்தவர் சிலர் ; மணியை எடுத்து மகிழ்ந்தவர் சிலர் : இவ்வண்ணம் குறளோடையின் அடித்தளத்தில் உள்ள அரும்பெறற்

பொருள்களைத் தருமர், மணக்குடவர் முதலிய நீர்மூழ்கிகள் அடித்தளம் வரையிற்சென்று அகப்பட்டதை எடுத்துக் கொண்டு வந்து பரப்பி, அதனருமையை எடுத்துக் காட்டினர்.

வள்ளுவர் பெருந்தகை ஓடைக்குச் சொந்தக்காரர். உலகில் சேர்த்த அனுபவப்பொருளைக் கொண்டு அறிவாகிற கருவியால் ஆழமாக வெட்டியவரும் அவரே ; ஆயிரம் அடி ஆழத்திலுள்ள நுணுக்கமும் பெருக்கமுமான பொருள்களை அவர், 'உலகவர் எப்படி உணர்ந்துகொள்ளக்கூடும் ; அவர்கள் அறிவுக்கண் பொருள்களை ஊடுருவிச் செல்லும் மின்னொளிக்கண்ணோ ?'' என்று திருவுள்ளத்தில் எண்ணினார். ஒளிக்கண்ணாடிகள் சிலவற்றை அந்தந்த இடங்களுக்கு ஏற்பப் பொருத்தி வைத்தார் ; அக்கண்ணாடிகளே உவமைகள் ; உவமைகள் பொருட்டிறனை அறிந்து தெளிந்து அனுபவத்திற் கொண்டுவர உதவியாக இருக்கும் என்பது அவர் எதிர் நோக்கு. கல்வியில்லாதவனுக்குக் கண்ணாடி போட்டால் படிக்க வருமா? வள்ளுவர் உவமைக் கண்ணாடி உதவியும், உற்று நோக்கி உண்மைப்பொருளை உணர்ந்து கொள்ள உலகவரால் முடியவில்லை. சிலர் அடங்கி ஒடுங்கி ஒழுக்கமுடன், உவமைக் கண்ணாடியின் உதவிகொண்டு உரைகளை எழுதியும், ஐயத்திரை மையத்தில் மறைத்தது. ஒரு சிலர், வரம்புக்கு உட்படாத, வழி வழியாக வாராத, கண்ட கண்ட கருத்துக்களையெல்லாம் இதுவே குறட் கருத்து என்று இயம்பவும் தொடங்கினர். வள்ளுவர் பெருந்தகை, "மெய்யறிவினர்க்கு உண்மை விளங்காமற் போகாது; உவமை நலம் உண்மைப் பொருளை உணர்த்தாமலிராது : உணர்பவர்கள் உணர்ந்து கொள்ளட்டும். 'காணாதாற் காட்டுவான் தான்காணான்' என்று நாமே சொல்லி வைத்திருக்கிறோம். நடப்பது நடக்கும்,'' என்றமைந்தார்.

இந்த நிலையில் இருபதாம் நூற்றாண்டின் பிற்பகுதித் தொடக்கத்தில் திருக்குறளுக்கு ஆயிரமாயிரம் உரைகள் புற்றீசல் போலப் புறப்பட்டன. புதிய கருத்துக்கள் நாளிதழ்களிலே பூத்துப் புதுமணம் பரப்பின. 'திருக்குறள் எழுந்த காலச்சுழல் எது ? எத்தகையது? அக்காலந் தந்த கருத்துக்கள் அந்த நூற்றாண்டுக்கு முன்னே பின்னே எங்கெந்த இலக்கியங்களில் எவ்வெவ்வகையில் உருக் கொண்டு உலாவின ? இலக்கண மரபு எது ? சொல் ஆட்சி யின் நோக்கம் யாது?' என்பதைச் சிறிதும் சிந்தியாமலும் - ஏன் - அறியாமலுங்கூட, அரசியற்போர்வை ஒன்றே அறிவுத் திறத்தை உயர்த்துமென்ற உறுதிகொண்டு எழுதப் பெற்ற உரைகள் பல. இத்தகைய உரைகளையும் முன்னோர் கள் முக்குளியிட்டு மூழ்கி எடுத்த அரும்பெறலுரைகளையும் அறிந்து ஆய்ந்து, சமன் செய்து சீர்தூக்கும் கோல்போல, ஒருபாற் கோடாது உண்மையை உரைக்கும் ஆராய்ச்சி உரை ஒன்று மிக இன்றியமையாததாயிற்று.

விஞ்ஞான வளர்ச்சியும், மெய்ஞ்ஞான உணர்ச்சியும் மிக்க இந்த நூற்றாண்டிலே பொருளின் பெருமையை அறிவது மட்டும் போதாது. கருவியின் பெருமையையும் திறனையும் ஆராய வேண்டும். அந்த ஆய்வே, பொருளின் உண்மையையும் திறனையும் உணர்ந்துகொள்ள உதவும் என்ற எண்ணம், அறிஞர்களிடையே உளதாயிற்று. அத் தகைய அறிஞர்களிடையே தலை சிறந்தவர் நமது அன்பர், கோதண்டபாணி பிள்ளையவர்கள். பொருளியல்பைப் புலப்படுத்தும் கருவியாகிய உவமைத்திறனை 'முதற் குறளுவமை' என்னும் இப்புத்தகத்தில் எடுத்து ஆராய்ந் திருக்கிறார்கள். 'மருந்தின் இயல்பு தெரியாமல் மருந்தைக் கொடுக்கும் வைத்தியன் பிணியைப் போக்குவானா, பெரும்பிரிவளிப்பானா ?' என்பதை எல்லோரும் அறிவர். அதுபோல, உவமத் தோற்றமும் உவம இயல்பும், உவம வளர்ச்சியும், உவமத்தின் மாற்றமும் அறியாதவர்கள்

எப்படி அவ்வுவமத்தால் உணர்த்தப்பெறும் பொருளின் ஆழத்தை அறிய இயலும், அறிவிக்க இயலும்? ஆதலால், இதன் ஆசிரியர் பிள்ளையவர்கள் உவம இயலை ஆராய்கிறார்கள். பின்னர்த் திருக்குறளில் உவமை யாருக்கும் கூத்தி ஆகாமல், உண்மையை உணர்த்தும் ஒருமனப் பெண்டிராக இருக்கும் உயர்வை எடுத்து விளக்க வந்தவர்கள், எடுத்த எடுப்பிலே முதற்குறளிலேயே உவமையையும் பொருளையும் அவற்றிற்குள்ள இயைபையும் எடுத்து விளக்க முற்பட்டார்கள். பேராசிரியர் கூறியபடி வேறுபட வந்த உவமமாக உள்ள இக்குறளை, உவமை இது, பொருளிது என்று இருவழி காட்டி ஏற்ற விளக்கந் தந்திருக்கிறார்கள். இடையிடையே "புறந்தூய்மை நீரானமையும்", "சிறைகாக்கும் காப்பு எவன் செய்யும்", "அறத்தாற்றின் இல்வாழ்க்கை ஆற்றின்" என்பன போன்ற பல குறள்களுக்குப் பழைய உரையாசிரியர்களின் கருத்துக்களையும் எடுத்துக் காட்டி உண்மையைத் தெரிவித்து ஒருதலை துணிந்திருக்கிறார்கள். வள்ளுவரது காலச் சூழ்நிலையாகச் சைன பௌத்த சமயங்களின் வளர்ச்சி முறையையும் வரலாற்றையும் எடுத்துக் காட்டி, 'அவர்கள் கொள்கைப்படி இன்பம் பொருள் அறமென இருத்தல் கூடாது. தமிழர்தம் பண்பாட்டுக்கு ஒப்ப அறம் பொருள் இன்பம் என்ற முறையே சாலச் சிறந்தது; அறத்தின் தலை நின்றே பொருளும் இன்பமும் எய்துதற்குரியன' என்ற இவர்கள் எழுத்து, புரட்சியை விரும்பும் புத்தறிஞர்களால் சிந்திக்கத்தக்கது. அங்ஙனமே, 'அறனெனப்பட்டதே இல்வாழ்க்கை' என்ற குறளில், இல்லறத்தை வெறுக்கும் பொல்லாச் சமய நிலையினைப் பொருந்தாதவர் வள்ளுவர் என்பதை எடுத்துக்காட்டும் இவர்களது ஆராய்ச்சி மிக இனிமை பயப்பதாகும். பலபடியானும் ஆராய்ந்து பரிமேலழகருரையைப் பின்பற்றி நெடுந்தூரம் சென்று, இணைப்பினிறுதியில் 'இலக்கண வரம்பிலிருந்து இயற்றப்பட்டது பரிமேலழகருரையே.

தொல்காப்பியத்தின்படி அமைந்த உரையே திருக்குறளுக்குத் தக்க உரை' என்ற கருத்து, இவர்கள் ஆழ்ந்து ஆய்ந்து கண்ட உண்மை. இது மிகவும் போற்றுதற்கு உரியது.

இந்நூல், உரைத்திறன், இலக்கணத்திறன், உவமத்திறன், இணைப்பு என்ற நான்கு தலைப்பில் தமிழுக்கே முடிக்கலனாகவும் திருக்குறளுக்குச் சிறந்த மணிவிளக்காகவும் தோன்றியவாறு கூறுகின்றவர்களுக்கு வாய்ப்பூட்டாகவும் தமிழ் நடையும், தமிழர் பண்பாடும் குன்றாமல் அமைந்திருக்கிறது. முப்பது ஆண்டுகளாக உரைகளைத் தொகுப்பதிலும் வளம் தேடுவதிலும் ஒத்த கருத்துடைய இலக்கியங்களை, ஒத்த கருத்துடைய பாக்களை ஒன்று சேர்ப்பதிலும், உரைநயம் தேடுவதிலும், உரைப்பதிலும், எழுதுவதிலும் ஈடுபட்ட திருக்குறள் அடிமையாகிய எனக்குக் குறிக்கொள்ள வேண்டிய பல கருத்துக்கள் இவ்வுரைநடை நூலில் இடமிடங்கள்தோறும் ஒளிர்கின்றன என்ற அளவிலமைகின்றேன். உரை வளத்தைப் புரட்டியும், அங்கொன்று இங்கொன்றாக இணைத்தும், பலர் உரைகளைப் படித்த பண்பால், இவற்றினும் புதிதாக இருக்கவேண்டுமென்ற எண்ணத்தால் இதுவரை எழுந்துள்ள ஆய்வு நூல்கள் புத்துரைகள் பலவற்றைப் படித்துப் புண்பட்ட மனத்தைப் பண்படுத்தும் ஒரு நன்மருந்து இது என்று சொன்னால் அது மிகையாகாது. செந்தமிழ் உலகம் இதனை ஏற்று நன்கு பயன் கொள்ளுமாக !

இங்ஙனம் :

ச. தண்டபாணி

# வாழ்த்துரை

இராவ்பகதூர் தணிகைமணி -
வ. சு. செங்கல்வராய பிள்ளை, எம். ஏ.

தமிழ்ப் பேரறிஞர் திருவாளர் ராவ்சாஹெப் கோதண்டபாணி பிள்ளை அவர்கள் தமிழுக்கே செய்து வரும் பல தொண்டுகளுள் தலைசிறந்ததாகும் 'முதற்குறள் உவமை' என்னும் இத் திறன்ஆய்வு நூல். 'அகர முதல' எனத் தொடங்கும் முதற்குறளுக்கு இனி ஒருவர் இவ்வளவு விரிவாக, இவ்வளவு நன்றாக, இவ்வளவு தெளிவாக, பொருள் காண முடியாது என்று கற்றோரும் மற்றோரும் கருதும் வகையில், வியக்கும் வகையில், இக்குறட்பாவின் சொற்களையும், சொற்றொடர்களையும், உவமைத் திறனையும், ஆய்ந்தாய்ந்து தமது பரந்த இலக்கண இலக்கிய அறிவு கொண்டு 'உண்மை விளக்கமாம்' இந்நூலை இவர் எழுதி யுள்ளார். 'அகரம்' என்னும் எழுத்தின் தோற்றத்தையும் சிறப்பையும், 'முதல' என்னும் சொல்லின் பல திறப் பட்ட பொருள்களின் விளக்கத்தையும், இலக்கணத்தை யும், 'எழுத்தெல்லாம்' என்னும் சொற்றொடரின் பொருள் விளக்கத்தையும், 'ஆதி', 'பகவன்' என்னும் சொற்களின் பொருளையும், 'முதற்றே' என்னும் சொல்லின் பொருளை யும், அச்சொல்லில் 'ஏகாரத்தின்' இன்றியமையாமை யையும், 'உலகு' என்னும் சொல்லின் பொருட்செறிவை யும் பல வகைய தடை விடைகளுடன் இவர் வெள்ளிடை மலைபோல விளக்கிச் செல்லும் திறன் பெருவியப்பைத் தருகின்றது. அகரத்துக்கும் இறைவனுக்கும் உள்ள இணைப்பின் பெருமை நன்கு விளக்கப்பட்டுளது. உமா தேவியின் ஞானப்பாலையுண்ட சம்பந்தப் பெருமான் தமது

திருவாக்கால் ‘ அகர முதலானை ’* என இறைவனை உணர்த்தினதும் ஈங்கு நினைவுக்கு வரும். திருவள்ளுவர் வாழ்ந்த காலநிலை இத்தன்மைத்தென ஆய்ந்து அதற்குப் பொருந்திய உண்மை உரை இதுதான் என அறுதியிட்டுரைக்கும் இவரது நுண்ணிய ஆற்றல் அறிஞர்கள் போற்றுதற்குரிய பொற்பினைக் கொண்டதாகும். இந்த ஆய்வுரையில் ஒலியின் இயல், எழுத்துக்களின் தோற்றம், மயங்கா மரபின் எழுத்து முறை, தொல்காப்பியத்தின் பாயிரப் பொருள் முதலிய அரிய பெரிய ஆராய்ச்சிகளும் பொதிந்து கிடக்கின்றன.

நாடகமேடையில் நடிக்கும் ஒருவன் தன்னை அற மறந்து தான் கொண்ட வேடம் எதுவோ அந்தப் பாத்திரமாகவே தன்னை மதித்து நடிப்பின் எங்ஙனம் அந்த நடிப்புச் சிறக்குமோ, அங்ஙனம் இக்கட்டுரை ஆசிரியர் நக்கீரரைப் பற்றி முன்பு எழுதின கட்டுரையில் தம்மை மறந்து, தமது உள்ளம் நக்கீரர் உள்ளமாகவே மாற நெடுநல்வாடை என்னும் நூற்சிறப்பைச் சிறந்த வகையில் ஆய்ந்தெழுதினது தமிழுலகம் அறிந்ததொன்றே. அவ்வாறே இப்போது திருவள்ளுவர் காலத்தினராகவே தம்மை மதித்து அவர் உள்ளத்திலே தமது உள்ளத்தையும் பாய வைத்து இம் முதற்குறளுக்கு உரை கண்டுள்ளார் இவர் எனின், இதன் சிறப்பை எடுத்துரைக்கவும் வேண்டுமோ !

இந்நூலின் செந்தமிழ் நடை படிப்பவர் மனத்தை ஈர்த்துச் செல்லும் ஆற்றலுடன் அமைந்துளது. அரிய கருத்துக்கள் பூதக் கண்ணாடியிற் காட்டுவதுபோலத் தெளிவு பெற விளக்கப்பட்டுள. ‘ தொட்டனைத்தூறு மணற்கேணி ’ என்னும் திருக்குறளுக்கு இலக்காக இவர் முதற்குறளின் எழுத்தையும், சொல்லையும், பொருளையும், உவமை நயத்தையும் அலசி அலசி ஆய்ந்து ஆய்ந்து எடுத்து விளக்கும் திறம், ‘என்னே இவர்தம் நுண்ணறிவு! என்னே இவர்தம் கல்வித் திறம் !’ என வியக்கச் செய்கின்றது.

* திரு ஆப்பனூர்த் தேவாரம் I-88-5.

தமது உத்தியோகத் தொழிலிலிருந்து ஓய்வு பெற்ற இவர் பல்லாண்டு தமிழ்த்தொண்டு செய்யத் தமிழ்க் கடவுள் திருவருள் புரியுமாறு அவரது பொன்னுர் திருவடிகளைப் போற்றிப் பணிகின்றேன்.

முதற்குறளை முற்றும் முறைதெரிந்து ஆய்ந்தே
அதற்குரிய பண்பை அலசி—இதற்கிதுதான்
கொள்க பொருளென்று கோதண்ட பாணியார்
தெள்ளி உரைத்தார் தெளிந்து.

திருக்குறளின் முன்னும் திருப்பாட்டை ஆய்ந்து
தருக்கமற ஓர்விளக்கந் தந்த—திருவளரும்
ஆசிரியர் வாழ்க! அவர் ஆய்திறனைச் சொற்றநூல்
காசினியில் வாழ்க கமழ்ந்து!

வ. சு. செ.

# எடுத்தாண்ட நூல்களின் வரிசை


அகப்பொருள், இறையனார்

அற்புதத் திருவந்தாதி, அம்மையார்

இலக்கண விளக்கம், வைத்தியநாத தேசிகர்

கரந்தைக் கட்டுரை, திருக்குறள் மாண்பு, ம. ந. சோமசுந்தரம் பிள்ளை

சங்கராசாரிய சுவாமிகள் அருளிய நன்மொழிகள், தவத்திரு. சங்கரா-சாரிய சுவாமிகள்

சித்திர மீமாம்சை, அப்பைய தீக்ஷிதர்

சித்தாந்த கௌமுதி, பட்டோஜி தீக்ஷிதர்

சிலப்பதிகாரம், இளங்கோவடிகள்

சிவஞான சித்தியார், அருள்நந்தி சிவாசாரியார்

சிவஞான போதம், மெய்கண்டார்

சீவக சிந்தாமணி, திருத்தக்கதேவர்

தண்டி அலங்காரம், தண்டி

தம்மபதம், புத்தர், அப்பாதுரைப் பிள்ளை வெளியீடு

திருக்கலம்பகம், உதீசித் தேவர்

திருக்குறள் உரைவளம், தருமையாதீனம்

,, காலிங்கர் உரை

,, பரிமேலழகர் உரை

,, மணக்குடவர் உரை

திருமந்திரம், திருமூலர்

திருவள்ளுவமாலை, சங்கப்புலவர்

திருவாசகம், மாணிக்கவாசகர்

தேவாரம், சுந்தரர், திருநாவுக்கரசர்

தொல்காப்பியம், உவமவியல், பேராசிரியர் உரை

,, செய்யுளியல், ,,

,, எழுத்ததிகாரம், நச்சினார்க்கினியர் உரை

,, சொல்லதிகாரம் நச்சினார்க்கினியர் உரை

தொல்காப்பியம் சொல்லதிகாரம் சேனவரையர் உரை
தொல்காப்பியப் பாயிர விருத்தி, சிவஞானமுனிவர்
,, ,, அரசன் சண்முகனர்
,, புறத்திணையியல், பேராசிரியர் உரை
தொல்காப்பியம் முதல் சூத்திரவிருத்தி, சிவஞான முனிவர்
,, பொருட்படலம், S. S. பாரதியார்
நன்னூல், சங்கர நமச்சிவாயர் உரை
,, மயிலைநாதர் உரை
சூடாமணி நிகண்டு, மண்டலபுருடர்
பிங்கலந்தை, பிங்கல முனிவர்
பிரபுலிங்க லீலை, சிவப்பிரகாச சுவாமிகள்
ரூபாவதாரம், தர்மகீர்த்தி, அரங்காசாரியார் பதிப்பு
Phonemics of old Tamil, Dr. Sankaran, Deccan College Monograph Series 7.
Phonetics in Ancient India, W. S. Allen.
Studies in Proto Indo-mediterranean culture } Rev. Father Heras.
The Voice, W. A. Aikin M. D.

---

## Bibliographical Data

Author's name: Rao Sabib K. Kodandapani Pillai,
Madras Civil Service—Controller of Emigration, Government of India— Member, Railway Service Commission. } Retired.

Year of birth: 1896.

Title of the book: Mutharkural Uvamai

Place of Publication: Madras.

Publisher's name: Paari Nilayam.

Price: 3—8—0.

Year of publication: December, 1956.

Pagination: (xxiv) 200 including 8 pp. of Appendix.

Size of the book: 18. 3. C. M.

Brief Indication of the contents: Critical examination of all the important commentaries on the first Kural and exposition of a new mode of interpretation of the grand simile and metaphor of the first kural. In explaining the grammatical base the book deals with the origin of alphabets and the system of Tamil alphabets with reference to Tholkappiam and its Payiram and elucidates how Ah (அ) forms the first normal and natural sound in human speech.

# I

# உரைத் திறன்

"மூதறிவும் சற்று முறைமறக்கும் முன்ஏரு
தாதலின் ஆய்தல் கடன்."

—ஈரடி இருநூறு

# முதற்குறள் உவமை

## I

## உரைத்திறன்

### உரைகளின் தன்மையும் திறன் ஆய் முறையும் :

" அகர முதல எழுத்தெல்லாம் : ஆதி
பகவன் முதற்றே உலகு."

என்பது முதற்குறள். உலகு கடவுளை முதலாக உடையது ; அகரத்தை முதலாக உடையவை எழுத்துக்கள் ; ' அகர முதல ' என்னும் குறளை முதலாக உடையது திருக்குறள். கடவுள் உலகிற்கு எவ்வளவு முக்கியமோ, அகரம் எழுத்துக்களுக்கு எவ்வளவு முக்கியமோ, அவ்வளவு முக்கிய மானது திருக்குறளுக்கு இம்முதற்குறள். இக்குறள் மிக்க ஆழமுடையது ; அழுத்தமுற்றது ; நுட்பமிக்கது ; பொருள் செறிந்தது ; முதன்மையும் வாய்ந்தது.

இத்திறமெலாம் முதற்குறளுக்குத் தந்தது இதிற் காணும் உவமையே என்பர். இக்குறளின் உண்மைப் பொருளை உணர வேண்டின், இதன் உவமைப் பொருளை உணர்தல்வேண்டும். உவமைப் பொருளை உணர்ந்தவர்களுக்கே

இதன் ஆழம் நுட்பம் ஆதியன புலப்படும். இவ்வுவமைக்கு உரையாசிரியர் உரைகளோ பற்பல ; பல்வேறு வகையின ; பற்பல மாறுபாடுகள் கொண்டன. 'உரையாசிரியர் உரையிற் புகுந்தால் உண்மையைக் காண்பது அரிது,' என்பர் சிலர். 'அவர்தம் உரைகள் மதியை மயக்குவன ; உண்மையை ஒளிப்பன ; குழப்பமே தருவன,' என்பாரும் உளர்.

ஒரு நூலுக்குப் பலர் உரையாசிரியர் உளர் எனில், அவர்தம் உரைகளில் மாறுபாடு காண்பது இயல்பு ; அவற்றைப் படிப்போர் குழப்பம் எய்தலும் இயல்பு. அவர் தரும் குழப்பம் அறிவியல் குழப்பம். அறிவியல் குழப்பம் அவ்வளவு குறைபாடு உடையதன்று. குழப்பமே குறைவிலா நன்மை பயப்பதும் உண்டு. குழப்பம் என்பது அறிவின் இயற்கை ; தெளிவின் காரணம். தெளிவைக் காணும் உழைப்பைத் தருவதும் உண்மையைக் காண ஊக்கம் தருவதும் குழப்பமன்றி வேறு எது ? குழப்பத்தாற்குலைந்து, கலங்கி, மயங்கித் தெளிந்த அறிவே திடம் பெறும் அறிவு. குழப்பம் யாதாயினும் ஆகுக ! உரையாசிரியர் குழப்பம் ஓராயிரம் ஆயினும் ஆகுக ! அவற்றை விளக்கப் புகுந்தார் குழப்பம் அவற்றினும் கோடி ஆயினும் ஆகுக ! உண்மையைக் காணும் உறுதியே தேவை. தெளியும் திடமே ஒளியின் பிறப்பிடம் என்பர். ஆதலின், உரையாசிரியர்களின் சிறந்த உரைகளை ஆய்வோம். 'ஆய்தொறும் ஊறும் அறிவு.' மயக்க உரைகளுக்கு மயங்க வேண்டா. அவ்வுரைகளை எல்லாம் ஆய்வோம். அவற்றைப் பகுதி பகுதியாகப் பிரித்துப் பிரித்து எடுப்போம். ஒவ்வொரு பகுதியின் திறனையும் ஆய்வோம். 'பூவின் எழில்கண்டு போற்றுது மற்றதனைத் தாவிச் சிதைப்பா ருளர்.' நாம் அவருடன் சேரவேண்டா. எழில் கண்ட இடத்து எழிலைப் போற்றுவோம். ஒவ்வொரு திறனையும் உரைகல்லில் தேய்த்து, அதனதன் மாற்றைக்

காண்போம். 'உரைஎன்னும் பண்டியில் அச்சாணி யன்னவன் அரைநொடியும் வேண்டற்பாற் றன்று.'

RECEIVED 27 NOV 1961 MADRAS-5

## சொற்பொருள் :

முதற்குறளின் சொற்பொருள் எளிது. அகர முதல எழுத்தெல்லாம் = எழுத்துக்கள் யாவும் அகரமாகிய முதலை உடையன. ஆதி பகவன் முதற்றே உலகு = உலகம் ஆதி பகவனாகிய (கடவுளாகிய) முதலை உடையது. இதுவே இக்குறளின் சொற்பொருள். சொற்பொருள் அறிந்த பின்னும் இதன் உட்பொருள் விளங்கிற்றில்லை. உட்பொருள் விளங்குவது எளிதன்று. சொற்பொருளின் உள்ளே நுழைந்து ஊன்றி நோக்குவார்க்கு உட்பொருள் விளங்கும். சொற்பொருட்குள்ளே புகுமுன் இக்குறள் பொதுவாக எக்கருத்தை உணர்த்துகின்றது எனக் காண்போம். 'இக்குறளால் எந்த உண்மையை வள்ளுவர் உலகத்திற்கு உணர்த்துகின்றார்?' என்பதை உணர்வோம். எழுத்துக்களுக்கு அகரம் முதலானால் என்ன, வேறு எழுத்து முதலானால் என்ன? அதனால் உலகம் பெறும் பயன் யாது? ஏன் அகரத்தின் முதன்மையை வள்ளுவர் இங்குக் கூற வேண்டும்? குறளின் கருத்தை—குறள் உணர்த்தும் உண்மையை—நாம் அறிய முயலும் போது இக்கேள்விகளெல்லாம் இயற்கையாக எழுகின்றன.

இக்குறளில் இரண்டு கருத்துக்கள்—இருவகை உண்மைகள்—இரண்டு இயற்கைக் கூறுகள் காணப்படுகின்றன. ஒன்று, எழுத்துக்கள் அகரமாகிய முதலை உடைமை; மற்றொன்று, உலகம் ஆதி பகவனாகிய முதலை உடைமை. இவ்விரண்டும் தனித்தனி கருத்துக்கள்; தனித்தனியாகக் கூறப்பட்டுள்ளன. வள்ளுவர் பெருமான் இவ்விரு கருத்துக்களில் ஒவ்வொன்றையும் தனித்தனி கருத்தாக உலகத்திற்கு எடுத்

துக் கூறக் கருதினரா? இதிற்காணும் ஒரு கருத்திற்கும் மற்றொரு கருத்திற்கும் தொடர்பு ஏதேனும் உண்டோ?

இவ்விரு கருத்துக்களின் தன்மையைச் சற்று ஆராய்வோம். முதலில் 'அகர முதல எழுத்தெல்லாம்,' என்னும் கருத்தைக் கருதுவோம். எழுத்தொலி நூலின் (Phonetics) அடிப்படையான கருத்து இது. எழுத்திலக்கணத்திற்கே அடிப்படையான உண்மை இது. இஃது எப்படி அடிப்படையாகின்றது என்பதைப் பின்னர்க் காண்போம். இதை வள்ளுவர் ஏன் இங்குக் கூற வேண்டும்? இந்த எழுத்தொலி உண்மையை வள்ளுவர் முதன்முதல் கண்டு பிடித்தாரா? தாம் கண்டு பிடித்ததை உலகிற்கு எடுத்துக் காட்டக் கருதினரா? அவ்வாறு கருதினர் எனக் கொள்ள இடம் இன்று. வள்ளுவருக்குப் பல நூறு ஆண்டுகளுக்கு முன்பே தமிழ் கூறும் நல்லுலகம் இவ்வுண்மையைக் கண்டது; கண்ட உண்மையை நூலாக எழுதி, "மயங்கா மரபின் எழுத்து முறையை" அதங்கோட்டாசாற்கு மட்டுமன்றி, உலகிற்கே எடுத்துக் காட்டிற்று. இலக்கண நூலின் அடிப்படையான கருத்தை வள்ளுவர் இங்கு எடுத்துக் காட்டக் காரணம் என்ன? இனி இரண்டாம் கருத்தின் தன்மையையும் சற்றுக் காண்போம்: 'உலகு கடவுளாகிய முதலை உடையது,' என்பது இரண்டாம் கருத்து. இஃது உலகத்தையும் கடவுளையும் பற்றிய உண்மையைக் கொண்டது. இக்கருத்தோடு மேலே கூறிய எழுத்தொலி நூலின் தன்மையை இங்கு வள்ளுவர் ஏன் இணைக்கின்றார்?

ஒரு கருத்திற்கும் மற்றொரு கருத்திற்கும் ஒப்புமை காட்ட வள்ளுவர் கருதியிருக்க வேண்டும் என்று கொண்டனர் உரையாசிரியர். உவமை என்று வெளிப்படையாகக் காட்டத்தக்க சொற்கள் பாட்டில் இல. ஆனல், முதற்குறளின் சொற்போக்கும் அமைப்பும் வள்ளுவர் இங்கு

ஒப்புமை காட்டுகின்றார் என்பதை வலியுறுத்துகின்றன. இக் குறளின் சொற்போக்கைச் சற்றுக் கருதல் வேண்டும். 'அகர முதல' என்றார் முதலடியில்; 'முதற்றே உலகு' என்றார் அடுத்த அடியில். அதாவது, 'முதலை உடையன' என்றார் முதலடியில். 'முதலை உடையது' என்றார் இரண்டாம் அடியில். 'முதல, முதற்று' என்று இரண்டிடத்திலும் கூறுதல் ஒன்றோடு மற்றொன்றை ஒப்புமை காட்டுவதை உணர்த்தவே போலும்! 'எழுத்தெல்லாம் அகர முதல; அது போல (அல்லது அவ்வண்ணமே) உலகு கடவுளாகிய முதலை உடையது; அல்லது கடவுளை முதலாக உடையது,' என்று பொருள் கொண்டனர் உரையாசிரியர். 'போல' என்னும் சொல்லோ, 'அது போல' என்னும் சொற்களோ, 'அவ் வண்ணமே' என்னும் சொற்களோ, குறளில் காணப்பட வில்லை. இல்லாத இரண்டு சொற்களை உரையாசிரியர்கள் வருவித்து இக்குறளிற்காணும் இருபெருங்கருத்துக்களுக்கு இடையே அமைத்தார்கள்; இவ்வாறு இணைத்துப் பொருள் கண்டார்கள். இல்லாத சொற்களை வருவிக்காமல் இக்குறளுக்கு உரை காண்பது அரிதாயிற்று. இங்கு வள்ளு வர் கருத்து உவமை காட்டுவதே என்று துணிந்த பின்பு அதை விளக்கத் தகுந்த சொற்களை வருவித்துக் கூறுவதே தக்க முறை; தக்க உரையும் ஆகும்.

## உவமத் தோற்றம்:

உவமை என்பது யாது? உவமை என்பது ஒப்புமை காட்டல் என்பர். ஒப்புமை காட்டுதல் எதற்கு? ஒப்புமை காட்டி ஓர் உண்மையை அல்லது விளங்காத ஒரு கருத்தை விளக்குதல் ஒரு சிறந்த முறை; எளிய முறை. பற்பல சொற்களால் பற்பலவிதமாகக் கூறிக்கூறி விளக்கினும் விளங் காக் கருத்து, ஓர் ஒப்புமை காட்டிவிட்டால் தெளிவாக

விளங்குதல் இயல்பு. ஒப்புமை காட்டுவதால் தெளிவு எப்படி ஏற்படுகிறது என்பதற்கு ஓர் எடுத்துக்காட்டு வேண்டும். நியூட்டன் என்ற ஆங்கிலப் பேரறிஞர் அசைவின் உண்மைகளைக் (Laws of Motion) கண்டார். அந்த உண்மைகளில் ஒன்று 'எந்தத் தாக்கு நிகழ்ந்தாலும் அதற்கு நேர்மாறான தாக்கு அதே அளவில் நிகழ்கின்றது,' என்பது. இப்படிச் சொல்வது எவருக்கும் எளிதில் விளங்குவதன்று. "'தாக்கு' என்பது என்ன? 'நிகழ்தல்' என்பது என்ன? 'நேர்மாறான தாக்கு' என்பது எதைக் குறிக்கும்?" என்றெல்லாம் மயங்குதல் இயல்பு. இதே உண்மையை ஓர் ஒப்புமை காட்டி எளிதாக விளக்கலாம். நாம் ஆற்றலோடு ஒரு பந்தைச் சுவரின்மீது எறிகின்றோம். அப்பந்து எதிர்த்து நம்மிடமே திரும்பி வருகிறது. சுவருக்கு எறியும் ஆற்றல் உண்டோ? இல்லை. ஆனால், எப்படி அப்பந்து நம்மிடமே திரும்பி வருகிறது? நாம் எறிந்த பந்திற்கு எதிர்ப்பு அல்லது தடை ஏற்பட்டது. பந்து அத்தடையின்மேல் தாக்கிற்று. தாக்கு நேர்ந்த போது அத்தாக்கின் வேகமே திரும்பி வரும் வேகத்தைப் பந்திற்குத் தந்தது. பந்து நேர்மாறான தாக்கை அல்லது அசைவைப் பெற்று நம்மிடம் அத்தாக்குதல் தந்த வேகத்தோடு திரும்பி வருகிறது. அவ்வண்ணமே எவ்விதத் தாக்கு நிகழ்ந்தாலும், அதற்கு நேர்மாறான தாக்கு அதே அளவில் நிகழ்கின்றது. இந்த ஒப்புமை காட்டியதால், அசைவின் உண்மை, முதலில் விளங்காதிருந்த உண்மை, எவ்வளவு எளிதாக விளங்குகின்றது! ஒப்புமை செய்த உதவி இது.

காண்டற்பொருளால் காணாதது உணர்தல் பழைய முறை; பண்டைய நாள் தொட்டு இன்றளவும் கையாளப் படும் முறை. அஃதாவது, தெரிந்த பொருளைக் கொண்டே - தெரிந்த பொருளின் ஒப்புமையைக் கொண்டே - தெரியாத பொருளைத் தெரிந்து தெரிந்து மனித அறிவு வளர்ந்து

வருகின்றது. இதுவே மனித அறிவின் இயல்பு. இதுவே அறிவின் வளர்ச்சிக்கு எளிய முறை ; தக்க முறை. இது தக்க முறை என்றே அளவை நூல்களும் விஞ்ஞான நூல்களும் ஒப்புமை முறையைக் கையாளுகின்றன. ஒரு கருத்தின் உண்மையை - உண்மையின் அளவை - அளந்து காண, அளவை நூல் ஒப்புமையைக் கையாளுகிறது. ஓர் உண்மையை நிலைநாட்ட ஒப்புமை கண்டு கண்டு விஞ்ஞானிகளும் உறுதி காண்பார்கள். இம்முறையால் கண்டு பிடிக்கப் பட்ட உண்மைகள் பற்பல. இவற்றை இன்னும் விரிக்கிற் பெருகும்.

'இத்தகைய ஒப்புமை காட்டித் தம் கருத்தை வள்ளுவர் விளக்கினார்; தம் நூலைத் தொடங்கினார்,' என்பது மிக மிகப் பொருந்தும். அளவை நூல் முறையில், விஞ்ஞான முறையில், வள்ளுவர் தம் நூலைத் தொடங்கியிருத்தல் சாலச் சிறந்தது. இவ்வாறு இல்லாத சொற்களைப் பொருந்தும்படி வருவித்து உரையாசிரியர்கள் உரை கண்டதும் சாலப் பொருந்தும்.

இவ்வாறு ஒப்புமை காண்பதை அல்லது காட்டுவதை இலக்கிய உலகில் உவமம் என்பர். 'உவமமாவது ஒப்புமை அளவை,' என்பர் அளவை நூலார். இலக்கியங்களில், பாக்களில் தங்கள் கருத்தை எளிதே விளக்கும் முறையை, எளிதே பிறர் தெரிந்துகொள்ளும் முறையை, உவமை அல்லது ஒப்புமை காட்டும் முறையைப் புலவர்கள் கையாளாது விடுவார்களா ? புலவர்கள் எழுதுவதெல்லாம், செய்யுள் செய்வதெல்லாம், பாக்கள் பாடுவதெல்லாம் தங்கள் கருத்தைப் பிறருக்கு விளக்குதற்குத்தானே ? அவ்வாறு விளக்குதற்கு உவமை கூறுவதே சிறந்த முறையாயிற்று. உவமையைக் கையாளாத புலவர் இலர் என்றே கூறலாம். பாவலர் கையிற் பட்டபின் உவமை பற்பல பாநலங்களைப் பெற்றது. அப்பாவலர் அழகும் ஆற்றலும் அதன்பால் சேர்த்தனர் ;

உளங்கவர் வனப்பெலாம் அதன்பால் உய்த்தனர். உவமையே கவிஞர்தம் கருத்துக்கள் பொதிந்த கருவூலமாயிற்று ; கற்பனை தனக்குக் கால்கோள் செய்தது ; கற்பனைக் களஞ்சியமாய்ப் பெருகிற்று. இலக்கிய உலகில் உவமையே புலவனது புலமையை அளக்கும் கோலாயிற்று. உவமை காணும் தன்மையும் புலமைக்கு இன்றியமையாததாயிற்று. ''இலக்கிய உலகையே இயக்கும் உவமை, உள்ளக் கருத்தைத் தெள்ளென உணர்த்தும்; தெரியாப் பொருளைத் தெற்றென விளக்கும் ; அறியாப் பொருளையும் அழகுடன் காட்டும் ; அறிவின் விளக்கு ; அறிவார் விருந்து,'' என இதன் புகழைப் பாடுவர். இவ்வாறு அறிவின் விளக்காய் அழகின் ஒளியாய்த் திகழ்ந்த உவமை கூத்தியான காலமும் உண்டு.

'' உவமை என்னும் தவலறுங் கூத்தி
பலவகைக் கோலம் பாங்குறப் புனைந்து,
காப்பிய அரங்கில் கவினுறத் தோன்றி,
யாப்பறி புலவர் இதயம்
நீப்பறு மகிழ்ச்சி பூப்பநடிக் கும்மே.''*

என்பதைக் கண்டார் அப்பைய தீட்சிதர்.

உவமை, அறிவின் விளக்காய் அழகின் ஒளியாய் விளங்கியது, சங்க காலத்தில் ; வான்மீகர் காலத்தில் ; வள்ளுவர் காலத்தில். கூத்தி ஆனது, காளிதாசன் காலத்தில் ; கம்பன் காலத்தில் என்பர். உவமைகள் எவ்வாறாயினும் ஆகுக. குறள் உரைகளைப் பின் பற்றிச் செல்வோம். வள்ளுவர் உவமையின் பொருளே நமக்குத் தேவை.

வள்ளுவர் பெருமான் தாம் விளக்கக் கருதிய கருத்தை ஓர் ஒப்புமை காட்டி விளக்குகின்றார் என்பதைக் கண்டோம். முதற்குறளிலேயே ஓர் உவமையால் தாம் கருதிய பொருளை

* சித்திரமீமாம்ஸை.

விரித்துள்ளார். இதிற்காணும் உவமை எதை உணர்த்து கிறது ? இதனால் விளங்கும் உண்மை எது ? இந்த உவமை யின் பொருளை நன்கு உணர்ந்தாலன்றி வள்ளுவர் கருத்துச் சிறிதும் விளங்காததாகும். உவமையைத் தவறாக உணர்வத ஞல் உளவாகும் தீமையோ பல. உவமை தரும் நன்மையினும், அதைக் குறைபட உணர்தல் பிறவிக் குருடர்கள் யானையைத் தடவிக் கண்ட கதையாக முடியும். அவர்களுள் காலைத் தடவிக் கண்டவன், 'யானை உரல் போன்றதே; வேறு அன்று,' என்றனன். காதைத் தடவிக் கண்ட மற்றொருவன், 'யானை உரல் போன்றதன்று; முறம் போன்றதே,' என்று எதிர் மறுத்தனன். அவர்களுள் ஒருவனும் முழு உண்மை யைக் கண்டானிலன். உண்மையைக் காணுதலோடு நின்றிலது அவர்களது ஆராய்ச்சி; அவர்களுள் ஒவ்வொருவரும் தாம் தாம் கண்டதே உண்மை என்றும், பிறன் கண்டது தவறு என்றும் போரில் முடிந்தது. வள்ளுவர் கூறிய உவமையைக் குறையின்றியும் பிறழாதும் காண வேண்டும்.

## எதற்கு எது உவமை ?

உவமையின் பொருளைக் காணுமுன் இக்குறளில் எக் கருத்திற்கு எக்கருத்து உவமை என்பதைக் காண்போம்: எந்தப் பொருளை விளக்க எதை ஒப்பிடுகிறார், அல்லது உவமை காட்டுகிறார் என்பதைக் காணுதல் வேண்டும். எந்தப் பொருளை விளக்க வேண்டுமோ, அதைப் பொருள் அல்லது உபமேயம் என்பர் இலக்கணப் புலவர். அதை விளக்கக் கூறும் கருத்தை உவமை அல்லது உபமானம் என்பர். இக் குறளில் வள்ளுவர் விளக்குவது எக்கருத்தை, அல்லது எப் பொருளை ? அதற்கு எந்தக் கருத்தை உவமையாக அல்லது ஒப்புமையாகக் காட்டுகிறார் ?

இக்குறளில் இரண்டு கருத்துக்கள் அல்லது உண்மைகள் உள என்பதைக் கண்டோம். ஒன்று, ‘ எழுத்தெல்லாம் அகரமாகிய முதலை உடையன,’ என்பது ; மற்றொன்று, ‘ உலகம் கடவுளாகிய முதலை உடையது,’ என்பது. “ இந்த உண்மைகளில் விளக்க வேண்டிய உண்மை எது ? அதை விளக்குதற்கு வந்த ஒப்புமை எது ? இதைப்பற்றி உரையாசிரியர்கள் கருத்து என்ன ?” என்பதை ஆராய்வோம்.

## பேராசிரியர் கருத்து :

பேராசிரியர் என்ற பெரியார் தொல்காப்பியத்தின் செய்யுளியலுக்குச் சிறந்த உரை கண்டவர். அவர் இக்குறளில் காணும் உவமையை வகைப்படுத்திக் காண்கின்றார் ; மேலே நாம் கண்டவாறு இக்குறள் இரண்டு பொருள்களை வேறு வேறு கூறுகிறது என்பதைக் கண்டார். ஆனால், ‘எழுத்தெல்லாம் அகரமாகிய முதலை உடையன ; அது போல உலகு கடவுளாகிய முதலை உடையது,’ என்று கொள்வதா, அல்லது, ‘ஆதிபகவன் முதற்றே உலகு ; அது போல அகரம் முதல எழுத்தெல்லாம்,’ என்று கொள்வதா என்று துணியும்படி வள்ளுவர் உவமையும் பொருளும் கூறினாரிலர் என்று மயக்கம் கொண்டார்.* ஆதலின், இந்த உவமைக்கு ‘ வேறுபட வந்த உவமம் ’ என்று பெயரிட்டார்.

‘இதுவோ, அதுவோ?’ என்று வேறுபாடுகொள்ள வருகின்ற உவமை வேறுபட வந்த உவமை என்பது பேராசிரியர்

*“ அகர முதல.........முதற்றே உலகு,” என்ற வழி இரண்டு பொருள் வேறு வேறு கூறியதன்றி, ‘ அகர முதல எழுத்தெல்லாம்; அது போல ’ என்றானும், ‘ ஆதி பகவன் முதற்று உலகம் ; அது போல’ என்றானும் ஒன்றாகத் துணியும் ஆற்றான் உவமையும் பொருளும் கூறாமையின், அதுவும் வேறுபட வந்த ‘ உவமமாயிற்று ’ (தொல். உவமவியல், 307 பேராசிரியர் உரை.)

கருத்து. அவ்வாருயின் வேறுபட வந்த உவமை சிறந்த உவமை யாகாது. அந்தோ! வள்ளுவர் தம் நூலைத் தொடங்கும்போதே வேறுபடத் தோன்றும்படியாகவா தொடங்கினுர்? 'இதுவோ, அதுவோ?' என்று வேறுபடக் கொள்ள ஒரு புலவன் கூறுவா ணுயின், சொற்ருெடர்களால் கூறுவாணுயினும், உவமை முகத் தால் கூறுவாணுயினும், மாறுகொளக் கூறல் என்பர்; மயங்க வைத்தல் என்றும் கூறுவர். மாறுகொளக் கூறலும் மயங்க வைத்தலும் எவ்வகை நூல்களுக்கும் குற்றமாவனவே! மாறு படக் கூறலும் மயங்கவைத்தலும் தவறு என்பதை வள்ளுவர் அறியாரோ? இப்பெருங்குற்றங்களோடு எப்புலவனுவது ஒரு நூலைத் தொடங்குவாணு? புலவர்களுட்சிறந்த வள்ளுவரா இக்குற்றத்தோடு நூலைத் தொடங்குவார்? நன்று! நன்று! தொடங்கும்போதே வள்ளுவருக்கு முதற் பரிசு கிடைத்துவிட்டது! பேராசிரியர் தந்த பெரும்பரிசு! மயங்கக் கூறுதலில் முதற்பரிசு வள்ளுவர்க்கே. அப்பரிசை யும் முதற்குறளிலேயே பெற்றுவிட்டார். மாறுகொளக் கூறுவதற்கும் முதற்பரிசு அவருக்கே. அம்மம்ம! உரை காணத் தொடங்கும்போதே பெரிய இடர்ப்பாடு குறுக்கிடு கின்றது. எதற்கு எது உவமை என்பதே ஐயமாயின், உவமையின் பொருளை எவ்வாறு காண்பது?

பேராசிரியர் இவ்வாறு துணிந்து கூறக் காரணம் என்ன? அவர் கூறிய உரையை மீண்டும் காண்போம்: "'அகர முதல எழுத்தெல்லாம்; ஆதி பகவன் முதற்றே உலகு,' என்றவழி, இரண்டு பொருள் வேறு வேறு கூறிய தன்றி, அகர முதல எழுத்தெல்லாம் அதுபோல என்ருனும், ஆதி பகவன் முதற்று உலகம் அதுபோல என்ருனும் ஒன்ருகத் துணியுமாற்ருன் உவமையும் பொருளும் கூருமை யின், அதுவும் வேறுபட வந்த உவமமாயிற்று," என்பது அவர் உரை.

'இதுபோல என்றானும் அதுபோல என்றானும் ஒன்றாகத் துணியும் வழியால் கூறாமையின்,' என்றார். இதைத் துணியும் வழிதான் உண்டா? உண்டெனில், அவ்வழிதான் யாது? பேராசிரியர் குறிப்பிடுவது எவ்வழியை? போல என்ற சொல்லைச் சேர்த்து, 'இதுபோல அது' என்று கூறி விட்டால், எது உவமப் பொருள் என்பது எளிதே விளங்கி விடும். போல என்ற சொல்லை அல்லது உவமை உருபைச் சேர்த்துக் கூறுவதுதான் துணியும் வழியா? அப்படிச் சேர்த்துச் சொல்வதுதான் பேராசிரியர் கருதிய வழியாகுமா? துணியும் சொல் அல்லது உவமை உருபைச் சேர்த்துச் சொல்லாததால், எது பொருள் எது உவமை என்று துணியும் வழி இல்லை என்பது பேராசிரியர் கருத்தாகுமா? 'போல' என்ற சொல் அல்லது உவமை உருபு இன்றிச்சொல்வது இலக்கியத்திற்கு அல்லது பாட்டிற்குக் குறைபாடு ஆகுமா?

உவமை உருபு இன்றிக் கூறுவதைப் பாக்களில் பல இடங்களிற் காணலாம். வள்ளுவரே உவமை உருபு இல்லாமல் இம்முதற்குறள் மட்டுமன்றி, வேறு பல குறள்களும் தந்துள்ளார். எடுத்துக்காட்டாகப் 'போல' என்னும் உருபில்லா உவமை அமைந்த ஒரு குறளைக் கருதுவோம்.

'புறந்தூய்மை நீரான் அமையும்; அகந்தூய்மை வாய்மையால் காணப்படும்.' 'ஒருவனுக்கு உடம்பு தூயதாகுந் தன்மை நீரால் உண்டாகும்; அது போல, அகத் தூய்மை வாய்மையால் உண்டாகும்,' என்பது இக்குறளின் பொருள். இப்பாட்டில் 'போல' என்னும் உருபைக் காணோம். 'போல' என்னும் சொல் பாட்டில் இல்லாததால் உவமை உருபை வருவித்தே 'அது போல' என்னும் சொற்களைச் சேர்த்து உரை கூறல் நேர்கின்றது. ஆனால், இக்குறளில் எதற்கு எது உவமை என்ற ஐயம் இது வரையில் எந்த உரையாசிரியருக்கும் ஏற்பட்டதின்று.

இவ்வாறு உவமை உருபு இன்றி அமைந்த குறள்களும் பல உள. அவற்றுள் ஒன்றிலேனும் இத்தகைய ஐயம் இது காறும் ஏற்பட்டதின்று.

உவமை உருபு மறைந்து நிற்குமாறு, உவமை உருபை விட்டுவிட்டுக் கூறுவது ஓர் அழகு என்று கூடப் புலவர்கள் கருதினார்கள் போலும்! இவ்வாறு உவமை உருபு இன்றிக் கூறுகின்ற முறையை இலக்கணமும் ஒப்புக்கொள்ளுகின்றது.

போல முதலிய உவம உருபு இன்றிக் கூறுவதை உவமைத்தொகை என்பர். 'பவளவாய்' என்பது உவமைத் தொகை. இதில் உவம உருபு ஒன்றும் காணப்படவில்லை. உவம உருபு இல்லாதிருந்தும், 'பவளவாய்' என்பது எப் பொருளைத் தருகின்றது என்பதுவது, இதில் எதற்கு எது உவமை என்பதுவது ஐயம் இதுவரையில் யாருக்கும் நிகழ்ந்ததின்று. ஆதலின், 'போல' என்ற உருபு இன்றி வள்ளுவர் இங்கு உவமை கூறியது தவறு அன்று. தவறாகவும் பேராசிரியர் கருதியிரார். பேராசிரியர் கருதிய வழி வேறு எது? 'எது பொருள்? எது உவமை?' என்று துணிய வேறு வழி உண்டோ? உண்டெனில் அது யாது?

துணியும் வழி உண்டு. இங்குத் துணியும் வழியும் ஒரு வழிதான் அன்று. இரு பெரு வழிகள் உள. அவற்றுள் ஒன்று, 'ஆசிரியர் எழுதிய நூலுக்கு ஏற்ற கருத்து எது? அல்லது அந்த நூலில் விளக்கவேண்டிய கருத்து எது?' என்று துணிவது. முதற்குறளில் இரு பெருங்கருத்துக்கள் உள்ளன என்று கண்டோம். ஒன்று, எழுத்தொலி இலக்கணக் கருத்து; மற்றொன்று, உலகத்தையும் கடவுளையும் பற்றிய கருத்து. இவ்விரு கருத்துக்களில் ஆசிரியர் நூலில் விளக்க வேண்டியது எது? வள்ளுவர் எழுதியது எழுத்

திலக்கண நூலா? அன்று. எழுத்தொலி நூலா? அதுவும் அன்று. அவர் நூல் அற நூல். எழுத்தொலி இலக்கணக் கருத்தை விளக்கப் புகுந்த இலக்கண ஆசிரியரா வள்ளுவர்? அல்லர். வள்ளுவர் அறம் கூறப் புகுந்த அறவோர். ஆதலின், விளக்கவேண்டிய கருத்து எழுத்தொலிக் கருத்தாக 'அகர முதல எழுத்தெல்லாம்' என்னும் கருத்தாக இருத்தல் இயலாது என்பது துணியப்படும்.

இக்குறளில் காணப்படும் மற்றொரு கருத்தையும் காண்போம்: அஃது, 'உலகு ஆதி பகவனாகிய முதலை உடையது,' என்பது. உலகையும் கடவுளையும் பற்றிய கருத்து இது. இக்கருத்திற்கும் வள்ளுவர் கூறும் அறத்திற்கும் தொடர்பு உண்டா? அறங்கூறியது யாருக்கு? அகரத்திற்கா? அன்று. அகரமுதலுக்கா? அன்று. எழுத்திற்கா? அன்று. இவற்றிற்கு அறம் கற்பிப்பார் இவ்வுலகில் இலர்; எவ்வுலகிலுமிலர். இவை அறத்தைக் கற்கும் ஆற்றல் அற்றவை. அறங்கூறியது உலகிற்கு. உலகம் இல்லையேல், அறம் ஏது? அறத்திற்கு அடிப்படை உலகு. உலகுக்கும் ஓர் அடிப்படை உண்டு என்று வள்ளுவர் உணர்த்தப் புகுந்தார் போலும்! இவைகளே அறத்திற்குத் தொடர்புடைய கருத்துக்கள். அறநூலில் விளக்க வேண்டிய கருத்துக்களும் அல்லது பொருள்களும் இவைகளே. இவற்றை விளக்குதற்குக் காட்டிய ஒப்புமை அல்லது உவமையே எழுத்தொலி இலக்கணக் கருத்து—அகர முதல எழுத்தெல்லாம் என்பது—என்றும் துணியலாம்.

மற்றொரு வழியாலும் இதைத் துணியலாம். உவமை கூறுவதெல்லாம் புலப்படாப் பொருளைப் புலப்படச் செய்வதற்கே. பேராசிரியரும் இதே கருத்தை மற்றோர் இடத்துக்

கூறுகின்றார்.* இதுவே உவமையின் பண்பு என்றும் முன்பே கண்டோம்.

முதற்குறளில் இரண்டு கருத்துக்களில் தெரிந்த கருத்து எது? தெரியாத கருத்து எது? உலகம் கடவுளை முதலாக உடையது அல்லது கடவுள் உண்மையே தெரியாப் பொருள். கடவுள் உண்டென்றால் இல்லை என்பார் சிலர். கடவுள் என்று ஒருவர் உளரா, இலரா? இதை எப்படி அறியக்கூடும்? கடவுளைக் கண்ணால் காணுதல் அரிது. கண்டார் ஒருவரும் இலர் என்பர். ஆதலின், தெரியாப் பொருள் கடவுள் உண்மையே. இந்தத் தெரியாப் பொருளை விளக்கவே வள்ளுவர் ஓர் உவமையைக் கையாண்டிருத்தல் வேண்டும். இம்முறையாலும் எதற்கு எது உவமை என்று துணியலாம்.

இவ்விரு வழியாலும் துணியாது எதற்கு எது உவமை என்று துணியும் வழியால் உவமை கூறினாரிலர் என்று எவ்வாறு பேராசிரியர் குறை கூறுகின்றார்? மயங்கும்படி அமைந்தது வள்ளுவர் குறளா, அல்லது பேராசிரியர் உரையா? கருதிப்பாருங்கள்.

நன்று நன்று! இதற்கு மறுப்புக் கூறப் பேராசிரியரோ இங்கு இலர். மறைந்தவர் உரையில் எவ்வாறும் குற்றம் கூறலாம். கடவுட்கொள்கையா மக்களுக்குத் தெரியாத பொருள்? கடவுட்கொள்கை மக்கள் வாழ்க்கையில் ஊறிக் கிடக்கின்றது. 'ஆண்டவா, பொன்னைத் தா! பொருளைத் தா! வாழ்வைத் தா! நோயைப் போக்கு! பகையைத் தாக்கு!'

---

* "உவமத்தானும் பொருள் புலப்பாடே கூறுகின்றானாகலின், எங்ஙனமோ எனின், 'ஆ போலும் ஆமா' என்றக்கால், ஆமா கண்டறியாதான் காட்டுட்சென்றவழி அதனைக் கண்டால் ஆபோலும் என்னும் உவமையே பற்றி ஆமா இதுவென்று அறியுமாகலானென்பது." (தோல் - பொருள் - உவமவியல் 276 உரை.)

என்று வரம் வேண்டும் மாந்தரோ, பலர். 'ஈசனே, என்னைக் காத்தருள் ; என் மனைவியைக் காத்தருள்,' என்றெல்லாம் வரம் வேண்டாத மக்களும் உளரோ? கடவுள் ஒருவர் உளர் என்று நம்பாமலா இவர்கள் கடவுளை வேண்டுகிறார்கள்? துன்பத்துட்பட்டுத் துடிக்கும் ஒருவனை நோக்கி, 'ஏன் உனக்கு இத்துன்பம் நேர்ந்தது?' என்று கேளுங்கள். 'எல்லாம் அவன் செயல்! நான் என்ன செய்வேன்?' என்பான். தம் குற்றத்தைக்கூடக் கடவுள் குற்றம் என்று கூறுவோர்க்குக் கடவுள் உண்டு என்பது புலப்படாமலா போயிற்று?

கடவுட்கொள்கையை விட்டுவிட்டு, எழுத்தொலி இலக்கணக்கருத்தை எடுத்துக்கொள்வோம். 'எழுத்துக்கள் அகர முதல' என்பது எத்தனை மக்களுக்குத் தெரியும்? எழுத்தே தெரியாத மாந்தர் பலர். எழுத்தே அறியாத மக்களுக்குக் கூடக் கடவுள் ஒருவர் உளர் என்ற நம்பிக்கை உண்டு. அகரம் எழுத்துக்களுக்கு முதலாக நின்றது எப்படி? எவனோ ஒருவன் அகரத்தை எழுத்துக்களுக்கு முதலாக எழுதிவிட்டால், அது முதன்மை பெற்றுவிடுமா? கற்றவர்களுக்குக்கூட அகரம் எப்படி முதன்மை பெற்றது என்பது விளங்குவதன்று. மெய்யெழுத்தோடு அகரம் கலந்து நிற்பது இலக்கணம் கற்றோர்க்குத் தெரியும். க் என்னும் மெய் எழுத்தோடு அகரம் சேர்கின்ற பொழுது க என்னும் ஒலி பிறக்கிறது. அ என்னும் உயிர் ஒலி இல்லையேல், க் என்னும் மெய்யை வாய் விட்டுக்கூடச் சொல்லல் இயலாது. மெய்யெழுத்துக்களுக்கு உயிர் தருவன உயிர் எழுத்துக்களே. இவைகள் இல்லாவிடில், கி, கு, கெ, கை முதலிய எழுத்துக்களையும் வாயை விட்டுக் கூறுதல் இயலாமற் போகும். அகரத்தைக் கொண்டு மாத்திரம் கி, கு, கெ, கை என்னும் மெய்களை உச்சரித்தல் இயலுமா? இ, உ, எ, ஐ

முதலிய உயிரெழுத்துக்களுக்கு இல்லாத சிறப்பு அகரத்திற்கு மாத்திரம் எப்படி வந்தது? யாரோ ஒருவர் அகரத்தை முதலில் கூறியதால் மற்ற உயிரெழுத்துக்களுக்கு. இல்லாத சிறப்பு, இல்லாத முதன்மை, அகரத்திற்கு வந்துவிடுமோ? ஆங்கில நெடுங்கணக்கில் உள்ளது போல 'எ' என்ற எழுத்தை ஏன் முதலில் கொள்ளுதல் கூடாது? அம், அ: (அஹ) என்ற ஒலிகள் வடமொழி நெடுங்கணக்கில் கடைசியில் இடம் பெறுகிற பொழுது அகரத்திற்கு ஏன் கடைசி இடம் கொடுத்தல் கூடாது? அம், அ:, அ என்று கடைசியில் அகரத்தைத் தள்ளினுல் அது கடுஞ்சினம் கொள்ளுமோ?

அகரம், மற்ற உயிர் எழுத்துக்களில்—இ, உ, எ, ஐ முதலிய உயிர் எழுத்துக்களில்-கலந்திருக்கிறதா? கலந்திருக்கிறது என்று எப்படிக் காட்ட முடியும்? இதைப்பற்றி நச்சினுர்க்கினியர் கூறுவதைக் கேளுங்கள். 'பதினேருயிர்க்கண்ணும் அகரம் கலந்து நிற்குமென்பது ஆசிரியர் (தொல்காப்பியனுர்) கூருராயினுர்.' ஏன் கூருராயினுர்? 'அந்நிலைமை தமக்கே புலப்படுதலானும், பிறர்க்கு இவ்வாறு உணர்த்துதல் அரிதாகலானும் என்று உணர்க,' என்ருர் நச்சினுர்க்கினியர்.* 'தொல்காப்பியருக்கு உணர்த்த அரிதான ஒரு நிலையை-சிறந்த உரையாசிரியர் நச்சினுர்க்கினியர்க்கே உணர்த்த அரிதான நிலையைக்—கல்வி அறிவு முதிரா மக்கள் உணர்தல் எங்ஙனம்? புலவர்களுள் எத்தனை பேர்கள்தாம் இதை உணர்வார்கள்! கடவுட்கொள்கை தெரியாத பொருள் என்று கொண்டாலும், தெரியாத ஒரு பொருளை மற்ருெரு தெரியாத பொருளால் மயக்குவதாக முடியுமேயொழிய, தெளிவைத் தருமா? தெளிவில்லாத ஓர் உவமையைத் தேடிப் பிடித்தது வள்ளுவருக்குப் பெருமையைத் தருமோ? புகழைத்

*தொல். எழுத்து 46 உரை.

தருமோ? தவறு பேராசிரியருடையதா, வள்ளுவருடையதா? விருப்பு வெறுப்பின்றி ஆய்க,' என்பர் ஒரு சாரார்.

மற்றொரு சாரார், "தொல்காப்பியரைவிட வள்ளுவர் மிகுதியாக இலக்கண நுட்பங்களை ஆய்ந்து உண்மை கண்டவராதல் வேண்டும். தொல்காப்பியரே கூறாராயினர் என்ற உண்மையை வள்ளுவர் கண்டார் போலும்! கண்டதோடு நில்லாது, அவர் நூலினும் முதல் முதல் இதைக் கூறுவாராயினர். வள்ளுவர் ஆய்ந்து ஆய்ந்து கண்ட உண்மையும் இலக்கணப் படிப்பும் அவர் மனத்தில் ஊறி ஊறிக் கிடந்தன போலும்! 'சட்டியில் உள்ளதுதானே அகப்பையில் வரும்?' என்பது முதுமொழி. வள்ளுவர் மனச்சட்டியில் ஊறிக் கிடந்த எழுத்தொலி உண்மையன்றி வேறு எது அவர் கைக்கு எட்டும்? வேறு எங்குச் சென்று உவமை தேடுவார்? தமக்குப் புலப்பட்ட உண்மை பிறருக்குப் புலப்படுமா, விளங்குமா என்று சிறிதும் கருதாது எழுதிவிட்டுச் சென்றார். ஆதலினாலேதான் இக்குறளுக்கு உரை காண்பது அரிதாகின்றது. பலரும் பலவாறு உரை கண்டனர். காண்கின்றனர்," என்று வருந்துவர்.

### கருத்து வேற்றுமை காலத்தின் செயல்:

அந்தோ! 'தெரியாப் பொருள் எது, தெரிந்த பொருள் எது?' என்பதிலும் வழக்கு! இம்மறுப்பும் எதிர்ப்பும் வெற்றுரைகள் அல்ல. இவற்றுள் பல உண்மைகள் பொதிந்து கிடக்கின்றன. வள்ளுவர் பெருமான் தவறேதும் செய்திலர்; உரைகளும் தவறுடையன அல்ல; காலத்தின் மேலது தவறு. கற்போர்க்கு அல்லது படிப்போர்க்குப் புலப்படாத உவமையை ஆசிரியருள் எவரேனும் கையாளுவரா? நூல் எழுதுவதும், செய்யுள் செய்வதும் பிறர் கற்கும்பொருட்டன்றோ? பிறருக்கு விளங்

காத உண்மையை வள்ளுவர் கையாளுவாரா ? அவர் இயற்றிய அறநூல் யாருக்கு ? கற்றுத்துறைபோகிய புலவர்களுக்கு மட்டுமா ? அன்று. ஆன்றவிந்தடங்கிய கொள்கைச் சான்றோர்தமக்கா ? அன்று, அன்று ! அவருக்கு அறநூல் எதற்கு ? அறநூல் பொது மக்களுக்கே தேவை ; அவர்கள் எளிதில் உணர்ந்து அதன்படி தம் வாழ்க்கையை அமைத்துக் கொள்ள எழுதுவது அறநூல். இத்தகைய பொது நூலில் - எல்லோருக்கும் விளங்கவேண்டிய ஒரு நூலில்-ஒருவருக்கும் தெரியாத ஓர் உவமையை வள்ளுவர் அமைப்பாரா ? அதுவும், முதற்குறளிலேயே விளங்காத உவமையை அமைத்தால், அவர் நூலை யார் கற்பார் ? கற்பதே அரிதாகும். அரிதாகும் என்பதை வள்ளுவர் உணராதிருந்திருப்பரோ ? வள்ளுவர் காலத்தில் மலிந்து கிடந்தது இலக்கண அறிவு. இவ்வறிவு பிற்காலத்தில் அரிதாயிற்று. மறைந்தே போயிற்று என்று கூடக் கூறலாம். தொல்காப்பியம் முதல் சூத்திரமே 'எழுத்தெனப்படுவ அகரமுதல,' எனத் தொடங்குகிறது. தொல்காப்பியத்தின் முதல் சூத்திரத்தை, அச்சூத்திரக் கருத்தில் ஒன்றையே தம் முதற்குறளில் திருவள்ளுவர் அமைத்துக் கொண்டார் போலும் என்று கருதவும் இடமுண்டு. தமிழ் நாட்டில் முதன்மை பெற்ற நூல் தொல்காப்பியம். தொல்காப்பியத்தின் முதற்சூத்திரமே தெரியாதவன் அக்காலத்தில் தமிழனுகக் கருதப்பட்டிருக்க மாட்டான் போலும் !

ஒரு காலத்தில் மலிந்து கிடந்த அறிவு மற்ரெரு காலத்தில் அறிவதற்கே அரிதாகின்றதுபோலும் ! இவ்வுண்மையை விளக்கத் திருக்குறளிலிருந்து வேருெரு சான்று காட்டுதல் தகும். மென்மைக்கு அனிச்சமலரை வள்ளுவர் உவமை காட்டுகிருர்; ' மோப்பக்குழையும் அனிச்சம் ; முகம் திரிந்து நோக்கக் குழையும் விருந்து,' என்கிருர். அனிச்சமலர் என்பது எப்பூ ? எத்தனை மக்களுக்கு இப்பூத் தெரியும் ? இப்

பூவின் பெயரைக் கேட்டிராத மாந்தரோ பலர். „ இப்பூவைக் குறித்துச் சிறந்த ஆராய்ச்சியாளர், இலக்கணப் பேராசிரியர், திரு. மா. நா. சோமசுந்தரம் பிள்ளை அவர்கள் கூறுவதைக் காணுங்கள் : " இவ்வனிச்சமலர் இன்னதெனப் பலரும் அறியார். நீர்ப்பூவென்பாரும் புதற்பூவென்பாரும் உளர். இது கோட்டுப்பூவே. வேதாரணியத்தை அடுத்த ஊர் (Railway Station) ஆகிய குறவப்புலம் என்பதன் மேல்பால் ஐயனார் கோயில் தோட்டத்தில் இப்பூக்கள் நிறைய உள்ளன ; இதன் கிளையும் இலையும் சிறு சண்பகம் போல்வன. மாசி பங்குனியில் நீர்க்கடம்புபோலக் கொத்துக் கொத்தாக (சரமாக)ப் பூக்கும் ; மாலையில் மலரும் ; விடியற்காலத்தில் மலர்கள் பொடியாய் உதிர்ந்து கிடக்கும். காய் முற்றில் வங்குஸ்தான் காய்போல வலிதாயிருக்கும். மலர்கள் வெண்கடம்புபோல நறுமணம் உள்ளனவாய் இருக்கும். செவந்த கோடுகள் படர்ந்த வெள்ளைப் பூக்கள் இவை ; கோயிலில் சிறுதேருக்கு (சப்பரத்துக்கு) அணியப்படும் ; அரசர் கோயிலில் அணையில் பரப்பப்படும். இம்மலரை நேரில் பார்த்து அறிதல் வேண்டும்."* இப்பூவின் பெயர் இப்போது வழக்கிலும் இல்லை. பலருக்கும் தெரியாத ஒரு பூவை - தமிழ் நாட்டிலே இல்லாத ஒரு பூவை - வள்ளுவர் உவமை காட்டிவிட்டார் என்று கூறல் தகுமா? வள்ளுவர் காலத்தில் யாவருக்கும் தெரியாத பூவாக அனிச்சம் இருந்தால், வள்ளுவர் அதை உவமையாகக் கொள்வரா ? அனிச்சமரம் போன்ற நிலத்தில் காணும் நிலைப் பொருள்களை அறியும் அறிவே குன்றிய போது இலக்கண அறிவு பிற்காலத்தில் குன்றியிருக்கும் என்றே துணியலாம். இவை எல்லாம் காலத்தின் செயல்கள்.

---

*கரந்தைக் கட்டுரை - திருக்குறள் மாண்பு, பக். 118.

## கடவுள் வாழ்த்தின் தனி இயல்பு:

நாம் இதுகாறும் கூறியவற்ருல் வள்ளுவர் பாட்டுத் தவறுடைத்தன்று என்றே கொள்வோம். அவர் உவமையும் மயக்கம் தருவதன்று என்றும் கொள்வோம். இங்கு வள்ளுவர் ஏன் உவமை கூற வேண்டும்? இப்பாட்டால் வள்ளுவர் கடவுள் வாழ்த்துக் கூறினுர் என்பர். கடவுள் வாழ்த்துக் கூறுதற்கு உவமையா வேண்டும்? கடவுள் வாழ்த்துக் கூறி நூலைத் தொடங்குதல் தொன்றுதொட்டு வரும் ஒரு மரபு. அப்படி வாழ்த்துக் கூறுமிடத்து எவராவது உவமை கூறியதுண்டா? இவர் வாழ்த்துக் கூறுவதில் ஒரு தனிமுறை காணப்படுகிறது. மற்றைப் புலவர்கள் வாழ்த்துவது போல வள்ளுவர் கடவுளை வாழ்த்தினுரிலர். 'மும்மைசால் உலகுக்கெல்லாம் மூலமாம் முதலே வாழ்க!' என்று வாழ்த்தினுரா? வாழ்த்தினுரிலர். 'அகரமாம் முதலே வாழ்க!' என்ருவது கூறினுரா? கூறினுரிலர். 'மலர் சிலம்படி வாழ்த்தி வணங்குவாம்!' என்ருவது கூறினுரிலர். 'ஏத்தி ஏத்தித் தொழுவோம் யாமே' என்றும் வணக்கம் கூறினுரிலர். வள்ளுவர் கூறுவது ஒரு புதுமுறை. இதை ஆழ்ந்து கருத வேண்டும்.

'ஆதி பகவன் முதற்றே உலகு,' என்பது வள்ளுவர் கூறிய வாழ்த்து. இது, கடவுளாகிய முதலை உடையதே உலகு என்று பொதுவாகப் பொருள்படும். 'உடையதே உலகு' என்று ஏன் கூறினுர்? 'முதலாக உடையது' என்று கூறினுற்போதுமே! 'உடையதே' என்று ஏகாரம் சேர்த்து ஏன் கூறல்வேண்டும்? 'கடவுளை முதலாக உடையதன்று உலகு,' என்று யாராவது கூறினுர்களா? அதற்கு விடையா இது? கடவுளை முதலாக உடையதே உலகு எனக் கூறியது மட்டுமா? அதற்கு ஓர் ஒப்புமை காட்டி, உலகு கடவுளை முதலாக உடையது என்று நிலை நாட்டப்பார்க்கிருர்.

கடவுட்கொள்கை இன்று மலிந்து கிடப்பதாகவே கொள்வோம். இதற்கு மறுப்பு இன்றும் இல்லையா ? உண்டு என்பதில் உதித்த பிறவியே இல்லை என்னும் எதிரொலி. இல்லை என்று எடுத்த குரலுக்கும் உண்டு என்ற எதிரொலி பிறக்கும். கடவுட்கொள்கையை மறுத்தார் அன்றும் உளர்; இன்றும் உளர். மறுத்தாரை எதிர்த்தாரும் அன்றும் உளர் ; என்றும் உளர். வள்ளுவர் காலத்தே யாராவது, " உலகம் கடவுளை உடையதன்று," எனச் சான்று காட்டி - ஒப்புமை காட்டி - நிலை நாட்டினார்களா ? அதற்கு எதிராக வள்ளுவர் ஒப்புமை காட்டி உண்மையைக் காட்ட முன் வந்தாரா ? அளவையால் அளந்து காட்டி உண்மையை ஊன்றப் பார்க்கின்றாரா ?

### வள்ளுவர் கால நிலையும் கருத்து நிலையும் :

திருக்குறளின் முதற்குறள் எடுப்பே - முதற்குறளைத் தொடங்கும் முறையே - இவ்வித எண்ணங்களையும் ஐயங்களையும் எழுப்புகின்றது. இவற்றையெல்லாம் ஆராய்ந்து உண்மை காணுதல் வேண்டும். வள்ளுவர் காலத்திருந்த கால நிலையும், சூழ்நிலையும், கருத்து நிலையும் கண்டாலன்றி வள்ளுவர் ஏன் முதற்குறளையே இவ்வாறு தொடங்குகிறார் என்பது விளங்காததாகும். முதற்குறளுக்கு உரைகாண்பதும் அரிதாகும். முதற்குறளுக்கு மட்டுமா, திருக்குறளுக்கே உண்மை உரை காண்பதும் அரிதாகும். முதற்குறளின் உரைத்திறனைக் காணுமுன் வள்ளுவர் காலத்தின் கருத்து நிலையையும் மக்களின் பண்பாட்டு நிலையையும் ஒருவாறு காண முயல்வோம் :

வள்ளுவர் தோன்றிய காலத்திற்குச் சில நூறு ஆண்டுகளுக்கு முன்பு வடநாட்டில் இரண்டு பெரிய அறிஞர் தோன்றினர். அவர்களுள் ஒருவர் மகாவீரர். மற்றொருவர் புத்தர் பெருமான். இவ்விருவர்தம் நுண்ணிய அறிவும்

அரும்பெருமுயற்சியும் அயரா ஒழுக்கமும் அக்காலத்து மக்கள் வாழ்க்கையைப் பண்புறச்செய்தன. மக்களிடையே நிலவிய மூடக் கொள்கைகள் பற்பல ஒழிந்தன. இவ்விருவ ராலும் வேதவேள்வி வேருடன் சாய்ந்தது. இனம் அல்லது ஜாதி வேற்றுமையை இவர்கள் வீறுடன் தாக்கினுர்கள்; காணு உயிர்க்கும் கையற்று ஏங்கினுர்கள். தீங்கிழையாமையே திகழ்ந்தது அறமாய். "அஹிம்ஸா பரமோ தர்ம:" எனும் அறக்கொடி ஆடியது எங்கணும்; பறந்தது பாரெலாம். கொல்லாமை எங்கும் பரவிற்று. மக்களுட்பெரும்பாலார் இவர்தம் அறநெறிகளைப் பின்பற்றினர். இவ்வீரர்தம் நெறி களுக்குள்ளே சிற்சில வேற்றுமைகளும் உள.

சமண சமயத்தைச் செம்மை செய்து சீர்பெறச் செய் தவர் மகாவீரர். உண்ணுதொழிந்தும், உடையைத்துறந்தும், ஊரை விட்டோடியும், காடும் மலையும் தேடி அடைந்தும், உடலை ஒறுத்தும், உயிரை வருத்தியும், கண்டோர் மெய் பனிப்ப - கண்டோர் நடுநடுங்கும்படி - கடுந்தவம் செய்தும் வெற்றி கண்டவர் இவர். வெற்றியாளன் (சினன்) என்ற பெயரும் பெற்றவர்.

சமணர்தம் கொள்கையின்படி முழுமுதற்கடவுள் என்று ஒன்று இல்லை. ஐம்புலன்களை வென்று வெற்றி பெற்ற அற வோர் அயராது நோற்றுக் கருமக் கூட்டமும் கரும ஈட்ட மும் தேய்ந்து தேய்ந்து ஒழிய 'அர்கத்' அல்லது 'அருகர்' நிலையை அடைந்து, சித்தர்களாய் என்றும் நிலைபெறுகின்ற னர். இதைத் தவிர வேறு முத்தி என்பதில்லை. இறைவன் அடி சேர்தலோ, இறைவனுடன் இரண்டறக் கலத்தலோ, இல்லை.* இந்நிலையை அடைவதற்கு இல்லறம் இடர்ப்பாடு

---

*The moment a man reaches the fourteenth stage Ayogi Kevali gunasthanaka, all his Karma is purged away and he proceeds at once to Moksha as a Siddha. In

தருவது. இல்லறத்திலிருந்துகொண்டே உய்யு எண்ணுதல் 'சையம் பூண்டு - பெருங்கல்லைக் கட்டிக்கொண்டு - சமுத்திரத்தை நீந்துவது ஒக்கும்,'† என்பர். உடலை ஒறுத்தலும் துன்பத்தை ஏற்றலும் இவர் நெறிக்கு வேண்டற்பாலன. "ந சுகேனசுகம் அதிகந்தபம்—துக்கேன சுகம் அதிகந்தபம்" என்பது இவர்தம் அறமொழி. "துக்கத்தாலே சுகத்தைப் பெறலாம். சுகத்தால் சுகம் பெறுதல் இல்;" என்பது இதன் பொருள்.

மகாவீரரைப்போன்று புத்தரும் மக்களுக்குச் சிறந்த வழி துறவே என்று கொண்டவர். இவர் தம் மனைவியை, மகனை, உற்றார் உறவினரை, பெற்றோர் முதலியோரை விட்டு ஓடினவர்; தம் அரச வாழ்வைத் துறந்து பிச்சை ஏற்றுண்ணத் துணிந்தவர். உடலை ஒறுத்தலும், உடையைத் துறத்தலும், நடுங்க நோற்றலும் இவருக்கு உடன்பாடில்லை. உலகத்தையே துன்பமாகக் கண்டார். இல்லறம் மட்டுமா! உலகமே துக்கம், துக்கம், துக்கப் பெருங்கடல்! இவ்வுலகில் 'பிறந்தார் உறுவது பெருகிய துன்பம்.' இத்துக்கத்தைப் போக்க—துன்பத்தை விலக்க—இப்பெருமகனார் உணர்த்திய வாய்மைகள் நான்கு. அவை துக்கம், துக்க உற்பத்தி, துக்க நீக்கம், துக்க நீக்க நெறி என்பன. நிர்வாணமே, அதாவது,

---

Moksha there is ofcourse no absorption into the infinite, but the freed soul dwells for ever above the land called Siddhasila whence it returns no more and this is Moksha.

There the innumerable delivered souls exist and are to be there for ages that never were begun and which never close.

'THE HEART OF JAINISM' by Miss Sinclair Stevenson; Pages 191-192.

†சீவக சிந்தாமணி, கேமசரியார் இலம்பகம், 1426.

ஒன்றுமற்ற நிலையே—பற்றற்று மனமற்று எல்லாம் அற்று நிற்கின்ற நிலையே—முடிவான நிலை. அதுவே பேரின்பம் என்பது இவர் கண்ட உண்மை. "நிப்பாணம் பரமம் சுகம்" என்று கூறும் 'தம்மபதம்' என்னும் இவர் நூல். இறைவனைச் சேர்தலோ இறைவன் அடி சேர்தலோ இறைவனோடு இரண்டறக் கலத்தலோ இவருக்கும் உடன்பாடில்லை. 'இறைவர் அல்லது கடவுள் என்று ஒருவர் உளரோ?' என ஒருவர் புத்தர் பெருமானைக் கேட்டார். "இக்கேள்வியைக் கேட்டவனும் கேட்பது என்ன என்பதை அறியான். அதற்கு விடை சொல்வோனும் அறியான். ஆழம் தெரியாத இடத்தில் காலைவைப்பது தவறு," என்று விடை கூறினார் என்பர். "கடவுள் இருந்தால் என்ன, இல்லாவிட்டால் என்ன? ஐந்து நற்குணங்களே—பஞ்சசீலமே—மக்களுக்குத்தேவை. 'நற்காட்சி, நல்லொழுக்கம், நல்வாய்மை, நல்வாழ்க்கை, நற்செய்கையோடைந்தையே நாடு.' இவையே நிர்வாண நிலையை அளிப்பன," என்பது இவர் அறநெறி.

இவ்விரு பெருங்குரவர்தம் மாணாக்கரோ பற்பலர். இவ்விரு பெரிய நெறிகளை அவர்கள் எங்கெங்கும் பரவச் செய்தார்கள். புத்தர்தம் பெருநெறியோ, கடல் தாண்டிக் கூடச் சென்றது. இவ்விரு நெறிகளும் தமிழ் நாடு புக்கன. தமிழர் பண்பாடு கலக்குண்டது. அவர்தம் கொள்கைகள் தாக்குண்டன. புது நெறிகளைப் பரப்பினோர் ஆர்வமும், அளவைத் திறனும், வாதமும், வழக்கும், வழக்கெடுத்துரைக்கும் வன்மையும், வாய்ச்சொல் ஆற்றலும் மக்கள் அறிவைக் கலக்கின. ஒருவர் ஒருவழி நில்லார் ஆயினர்; செல்லாராயினர். இல்லற வாழ்வு நிலை குலைந்தது. வள்ளுவர் காலம் வரைக்கும் இல்லற வாழ்வு நிலை குலைந்திருந்தது என்னலாம். அவ்வாறு இருந்தது என்பதற்குச் சான்றும் வேண்டுமோ? வேண்டுமாயின், திருக்குறள் இல்வாழ்க்கை என்னும் அதிகா

ரத்தில் போதிய சான்றுகள் காணலாம். அச்சான்றுகளில் ஒன்றைத் தெரிந்துகொண்டு மேலே செல்வோம்:

இவ்வதிகாரத்தில் நாம் ஆராய வேண்டுவது, "அறன் எனப்பட்டதே இல்வாழ்க்கை; அஃதும் பிறன்பழிப்பதில் லாயின் நன்று," என்னும் குறள். இக்குறள் எக்கருத்தை உணர்த்துகின்றது? "அறன் என்று சொல்லப்பட்டதே இல் வாழ்க்கை; அந்த இல்வாழ்க்கையும் பிறனால் பழிக்கப்படாத தாயின் நன்று," என்பது இக்குறளுக்கு நேரான பொருள். இக்குறள் துறவறத்தைப்பற்றி ஏதாவது கூறுகின்றதா? இல்லை. துறவறத்தைக் குறித்த ஒரு சொல்லும் இக்குறளில் காணப்படவில்லை. ஆனால், பரிமேலழகரோ, இக்குறள் துற வறத்தையும் குறிப்பதாக உரை காண்கின்றார். திறன் ஆய் வுக்கு இக்குறளின் உண்மைக் கருத்து முக்கியமாதலின், இதன் உண்மைப் பொருளைக் காணுதல் வேண்டும். பரிமேலழ கரோ, ஒதுக்கிவிடத்தக்க உரையாசிரியர் அல்லர்; உரை யாசிரியர்களுள் நுண்மாண் நுழைபுலம் வாய்ந்தவர். அவர் உரையை ஆராய்வோம். அதில் உண்மை காண்போமானால், அவர் உரையையே மேற்கொள்வோம்.

'அறன் எனப்பட்டதே இல்வாழ்க்கை,' என்பது இக் குறளின் முற்பகுதி. இதைப் பரிமேலழகர் 'அறன் எனப் பட்டது இல்வாழ்க்கையே,' என்று மாற்றிக்கொண்டார். அதாவது, 'எனப்பட்டதே' என்னும் சொல்லில் உள்ள ஏகாரத்தைப் பிரித்தெடுத்து, அதை இல்வாழ்க்கைக்குமாற்றி, 'இல்வாழ்க்கையே' என ஆக்கி, 'அறன் எனப்பட்டது இல் வாழ்க்கையே' என அமைத்துக்கொண்டு உரை காண்கின் றார். இது முதல் மாற்றம். 'அறன் எனப்பட்டதே இல் வாழ்க்கை' என்பதும், 'அறன் எனப்பட்டது இல்வாழ்க்-கையே' என்பதும் ஒரே பொருளைத் தருமா? தாரா. கருதிப்பாருங்கள். இவ்விரண்டிற்கும் ஆழ்ந்த பொருள்

வேற்றுமை உண்டு. இதை விரிவாகப் பின்னர்க் காணலாம். ஒரு சொல்லில் உள்ள எழுத்தைப் பிரித்து மற்றொரு சொல்லோடு சேர்த்து உரைகாணும் உரிமை பெரிய உரையாசிரியர்களுக்கு உண்டு போலும்! 'அறன் எனப்பட்டது இல்வாழ்க்கையே,' என்று கூறுவது வள்ளுவர் கருத்தாயின், அவர் அவ்வாறே செய்யுள் செய்திருப்பர். அவ்வாறு செய்யுள் செய்வதும் இயலாதது அன்று. வள்ளுவர் அவ்வாறு செய்யாதிருக்க, அவர் சொல்லமைப்பை மாற்றிக் கூறுவது வள்ளுவர் கூறியதைத் தலைகீழாக மாற்றியதாக முடியும்.

பரிமேலழகர் மாற்றிக்கொண்டபடியே இப்போது பொருள் காண்போம். 'அறம் எனப்பட்டது இல்வாழ்க்கையே' என்பது எப்பொருள் தரும்? 'அறம் என்று சொல்லப்பட்டது இல்வாழ்க்கையே—இல்வாழ்க்கை ஒன்றே அறம்; மற்றவை அறம் எனப்பட்டவை ஆகா. அதாவது, பிரமசரியம் அறம் அன்று; வானப்பிரஸ்தம் அறம் அன்று; துறவு அறம் அன்று; மற்றெதுவும் அறம் அன்று' என்றெல்லாம் அது பொருள் இசைத்து நிற்கின்றது. இவ்வாறு பொருள் தருவது ஏகாரம் ஒன்றே. இவ்வாறு பொருள் கொள்ளின், இதைத் தேற்றேகாரம் என்பர். இஃது, 'இல்வாழ்க்கையே அறம் எனப்பட்டது,' என்று தேற்றமாகக் கூறுகின்றது; தெளிவாகக் கூறுகின்றது; நிச்சயமிக்க உறுதியாகக் கூறுகின்றது. இவ்வாறு உரை காணுதல் நேர் உரையாகும்.

இவ்வாறு உரைகண்டால் பின்னும் ஓர் இடர்ப்பாடு ஏற்படுகின்றது. வள்ளுவர், துறவை அறத்துப்பாலில் சேர்த்துக் கூறியவர், அஃது அறம் அன்று எனப் பொருள் படும்படி கூறுவாரா? கூறார். அவ்வாறு கூறியிருந்தால், அது முன்னுக்குப் பின் முரணாக முடியும். பரிமேலழகர் இந்த இடர்ப்பாட்டைக் கண்டாராதலின், இதற்கு வேறு பொருள் காணவேண்டும் என்று அவர் கருதினார்போலும்!

இங்குள்ள ஏகாரத்திற்குத் தேற்றப்பொருள் கூறாது பிரி நிலைப் பொருள் கூறுகின்றார்.

'பிரிநிலை' என்பது, ஒன்றிலிருந்து மற்றொன்றைப் பிரிக்கும் நிலை, பிரித்துப் பொருள் தரும் நிலை, அல்லது பிரிக்கப்பட்ட பொருளைத்தரும் நிலை, ஏகாரத்திற்கு, 'ஏ' என்னும் இடைச்சொல்லிற்கு உண்டு. "அவர்களுள் இவனே கள்வன்," என்னும் சொற்றொடரில் உள்ள ஏகாரம் பிரிநிலை ஏகாரம். இது ஒருவனைக் கள்வன் என மற்றவர்களிலிருந்தும் பிரித்துவிடுகிறது. 'அறன் எனப்பட்டது இல்வாழ்க்கையே,' என்பதில் பிரித்தெடுக்கத்தக்க அல்லது ஒன்றிலிருந்து மற்றொன்றைப் பிரித்துக் காட்டக்கூடிய சொற்கள் காணப்படவில்லையே! அவ்வாறு பிரிக்கத்தக்க சொற்கள் இங்கு இருந்தால், பிரிநிலைப் பொருளும் ஏற்றுக்கொள்ளத் தக்க பொருளாகும். பிரிக்கத்தக்க சொற்கள் இக்குறளில் இல்லையாதலின், இங்குப் பிரித்தெடுக்கப் பொருந்தும் சொற்களைப் பரிமேலழகர் தேடிப் பிடித்தார். 'இரு வகை அறத்தினும் - இல்லறம் துறவறம் என்னும் இரு வகை அறத்தினும்' என விரித்தார்; இவ்வாறு விரித்ததிலிருந்து இல்வாழ்க்கையைப் பிரித்தார். 'இரு வகை அறத்தினும் இல்வாழ்க்கையே அறன் எனச் சிறப்பித்துச் சொல்லப்பட்டது' என முடித்தார். இவ்வாறு உரை காணினும் இடர்ப்பாடு விட்டபாடில்லை. 'துறவறம் இல்லறம் என்னும் இரண்டில் இல்லறமே சிறப்பித்துச் சொல்லப்பட்டது,' என்றால், துறவறம் சிறப்பித்துச் சொல்லப்படாத அறம் என்றன்றோ முடிகின்றது? 'இது, துறவு; அறம் அன்று' என்னும் உரையைவிட ஒருவாறு நல்லது; வள்ளுவருக்கு ஏற்பட்ட முரண்பாட்டையும் ஒருவாறு அகற்றும். ஆனால், 'துறவு எப்படிச் சிறந்த அறமாகாது? துறவு சிறந்த அறமென அன்றோ உபநிஷத்துக்கள் கூறுகின்றன? வள்ளு

வர் அதைச் சிறந்த அறமெனப்பட்டது அன்று என்று கொண்டது தவறு என்று கருதப்படுமே!' என்று கவலையுற்றனர்போலும் பரிமேலழகர்! அறிவிலும் ஒழுக்கத்திலும் சிறந்த வள்ளுவர், துறவைச் சிறப்பில்லாத அறம் எனக் கொண்டதும் தவருக இருப்பதற்கில்லை. ஏதோ ஒரு காரணம் பற்றியே இவ்வாறு கூறியிருத்தல் வேண்டும் என அவர் அவ்வாறு கூறியதற்குக் காரணம் கண்டார். துறவு முன்பு இருந்தது போல இல்லை; தன் நிலையில் இழிந்து பழிக்கத்தக்க நிலையில் இருக்கிறது. ஆதலின், துறவு சிறப்பித்துச் சொல்லப்பட்ட அறம் அன்று எனக் கருதினர்போலும் வள்ளுவர்! 'அஃதும் பிறன் பழிப்பதில்லாயின் நன்று,' என்று கூறினர். அஃதும் என்பது, தாம் பிரிநிலையால் பிரித்த துறவையே குறிக்கும் என்று துணிந்தார் பரிமேலழகர். பிற்பகுதியில்—'அஃதும் பிறன் பழிப்பதில்லாயின் நன்று,' என்னும் பகுதியில்—இக்கருத்தைத் திணித்தார்; உரை கண்டார். இப்பகுதியில் உள்ள 'அஃதும்' என்னும் சொல் எப்பொருளைத் தரும் என்பதை நாம் கருதுவோம்:

'அறம் எனப்பட்டதே இல்வாழ்க்கை; அஃதும் பிறன் பழிப்பதில்லாயின் நன்று,' என்னும் சொற்றொடரில் 'அஃதும்' என்பது இயற்கையாக எதைக் குறிக்கும்? அஃதும் என்பது இயற்கையாக அதற்கு முன்னிருக்கும் இல்வாழ்க்கையைத்தானே குறிக்கும்? அவ்வாறு வள்ளுவர் சொற்களை அமைத்தவாறு பாட்டில் சொற்கள் உள்ள முறையில்-பொருள் கொள்ளார் பரிமேலழகர். 'மற்று அத்துறவறமோ என்னின்' என்ற கேள்விஉரையை வருவித்தார்; 'அஃதும்' என்பதோடு இணைத்தார். 'துறவறம் இல்லறம் என்னும் இருவகை அறங்களில் இல்வாழ்க்கையே அறம் எனச் சிறப்பித்துச் சொல்லப்பட்டது; (மற்று அத்துறவறமோ என்னின்) அதுவும் பிறன் பழிப்பதில்லாயின் நன்று' என்று முடித்தார்.

வெற்றி கண்டார். நன்று நன்று இவர் கொற்றம் ! துறவைக் காக்கும் இவர் துணிபு நன்று ! நன்று இவர் உரையின் வெற்றி !

பரிமேலழகர்தம் கொண்டுகூட்டு இன்றியும், விரித்தல், பிரித்தல், திரித்தல், இணைத்தல், திணித்தல் முதலிய இன்றியும், உரை காண்பது இயலுமா? சொற்கள் குறளில் அமைந்தவாறே பொருள் காணுதல் முடியுமா ? இதை ஆராய்வோம் : பாட்டிற் சொற்கள் அமைந்தவாறே பொருள் கிடைத்தால், அதுவே சிறந்த பொருளாகும். அதுவே வள்ளுவர் கருத்தாகவும் இருக்கும் என்றும் துணியலாம்.

'அறம் எனப்பட்டதே இல்வாழ்க்கை' என்னும் குறட் பகுதி, அல்லது சொற்றொடர், ஒரு கேள்விக்கு விடையாகலாம் ; ஓர் எதிர்ப்புக்கு மறுப்பாகலாம் ; ஓர் ஐயத்தைப் போக்கித் தேற்றம் கூறுவதாகலாம். 'அறம் எனப்பட்டதோ இல்வாழ்க்கை ?' என்னும் கேள்விக்குத் தேற்றமாகக் கலங்காது உரைக்கும் விடை, 'அறன் எனப்பட்டதே இல்வாழ்க்கை,' என்பது. இதைச் செவ்வன் இறை என்பர். இதிற்காணும் ஏகாரம் மெய் அவற்குக் காட்டும் தேற்றேகாரமுமாம் என்னலாம். 'அறம் எனப்பட்டதன்று இல்வாழ்க்கை' என்னும் எதிர்ப்பு இருந்தால், அதற்கு மறுப்பு 'அறம் எனப்பட்டதே இல்வாழ்க்கை,' என்னும் உறுதி மொழியாகும். இல்வாழ்க்கை அறம் எனப்பட்டதோ, அன்றோ. இல்வாழ்க்கை அறம் எனப்பட்டது ஆகுமோ, ஆகாதோ என்ற ஐயத்தைப் போக்கித் தெளிவைத் தந்து தேற்றுதல் செய்வது, 'அறம் எனப்பட்டதே இல்வாழ்க்கை,' என்பதாகும். 'அறம் எனப்பட்டதே இல்வாழ்க்கை' என்பதற்கு இந்த மூன்று நிலைகள் உள. இதை இந்த மூன்று நிலைகளிற்காணலாம். இந்த மூன்று நிலைகளில் ஏதாவது ஒன்றைக்கொண்டு இதற்குப்

பொருள் காணலாம்; அல்லது மூன்று நிலைகளையும் சேர்த்துக் காண்டலும் பொருந்தும். இவற்றில் காண்பது எல்லாம் தேற்றப் பொருளே! 'எனப்பட்டதே' என்னும் சொல்லாட்சியில் காணும் 'ஏ' என்னும் இடைச்சொல்லே இப்பொருளெல்லாம் தந்து நிற்கின்றது. பரிமேலழகர்தம் இடர்ப்பாடுகள் நீங்குகின்றன. துறவை இவ்வுரை தொடுவதும் இன்று. துறவிற்கு வெகு தூரத்தே இவ்வுரை நின்று விடுகின்றது.

வள்ளுவர் காலத்தே 'அறன் எனப்பட்டதோ இல்வாழ்க்கை?' என்ற கேள்வியோ, எதிர்ப்போ, ஐயமோ இருந்திருத்தல் வேண்டும். அவற்றின் பயனாக மக்களிடையே குழப்பமும் கலக்கமும் ஏற்பட்டன போலும்! இவற்றைப் போக்கவே இக்குறள் எழுந்தது போலும்! இவ்வாறு இல்லாவிடில் 'எனப்பட்டதே' என்று வள்ளுவர் நீட்டி உரைக்கத் துணியார். இந்த நீண்ட சொல்லைக் கூறியே இரார். சொற்செட்டு மிக்கவர் வள்ளுவர். ஏழு எழுத்துக்கள் கொண்ட ஒரு சொல்லை வீணே ஆளும் புலவரோ வள்ளுவர்? மேலே கூறிய காரணங்கள் இல்லாமல் இச்சொல்லை ஆண்டிருக்கவும் மாட்டார்; ஏகாரத்தை இக்குறளில் வேறு சொற்களோடு சேர்க்காமல் 'எனப்பட்டது' என்பதோடு சேர்த்திரார் என்றே துணியலாம்.

'எனப்பட்டதே' என்னும் சொல்லை இன்னும் சற்று ஆழ்ந்து நோக்குவோம். எனப்பட்டது என்பது இறந்த காலம். ஒரு புலவன் தன் கருத்தைத் தெரிவிக்க வேண்டுமானல், அறம் எனப்படுவதே எனக் கூறுவதுதான் இயல்பு. இதை விட்டு அறம் எனப்பட்டதே என்று மாற்றி ஏன் இறந்த காலத்தால் கூறினர்? 'எனப்படுவதே' என்பது குறள் யாப்புக்குப் பொருந்தாது எனக் கருதி, 'எனப்பட்டது' என்று அமைத்தார் என்று கொள்ளல் தகுமா?

பொருளைக் கருதாது யாப்புக்காகச் சொற்களை மாற்றும் புலவர் வள்ளுவர் அல்லர். வேண்டுமானால், 'அறன்எனச் சொல்வதே இல்வாழ்க்கை' என அமைத்து யாப்புக்குப் பொருந்தச் செய்யுள் செய்திருப்பர். அவ்வாறு செய்யாது இறந்த காலத்தால் கூறியது ஓர் ஆழ்ந்த கருத்தை உணர்த் தவே போலும்!

'இல்வாழ்க்கை அறம் எனப்பட்டதே,' என்பது வள்ளுவர் புதிதாகக் கூறியதன்று. பழந்தமிழர்கள் - ஆன் றறிந்தடங்கிய தொன்முது தமிழர்கள் - ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு கூறியதையே வள்ளுவர், எதிர்ப்பும், கேள்வியும், ஐயமும் நிகழ்ந்த தம் காலத்தே எடுத்துக் காட்டுகின்றார் என்பதைக் காட்டி நிற்கின்றது, 'எனப் பட்டதே' என்னும் சொல், சொல் அமைப்பு, சொல் ஆட்சி.

அம்மம்ம! வள்ளுவர் குறளில் ஓர் எழுத்தில், ஒரு சொல்லில், ஒரு சொல் அமைப்பில் எவ்வளவு செறிந்த பொருள்கள் அமைந்து கிடக்கின்றன! ஓர் ஏகாரத்திற்கு இவ்வளவு பொருளா! இந்த ஓர் எழுத்திற்குப் பொருள் காண எவ்வளவு எவ்வளவு போராட்டம்!

'எனப்பட்டதே' என்னும் ஒரு சொல்லைக்கொண்டே வள்ளுவர் கால நிலையையும் கருத்து நிலையையும் துணிதல் கூடுமோ? இவற்றைக் காண இன்னும் சில சான்றுகளாவது வேண்டற்பாலன. 'அறம் எனப்பட்டதோ இல்வாழ்க்கை?' என்னும் ஐயவினா யாரால் எழுப்பப்பட்டதாகும்? அல்லது, 'இல்வாழ்க்கை அறம் எனப்பட்டது அன்று,' என்ற எதிர்ப்பு யாரால் நேர்ந்திருக்கும்? இவ்வித எதிர்ப்பாலும் கேள்வி யாலும் உண்மையாகக் குழப்பம் ஏற்பட்டிருத்தல் கூடுமோ? இவை எல்லாம் நாம் ஆராய வேண்டுபவை.

இது வரையில் நாம் ஆராய்ந்தது இங்கு எடுத்துக் கொண்ட குறளின் முற்பகுதியே. அதன் பிற்பகுதி இன்னும்

எஞ்சி நிற்கின்றது. இப்பிற்பகுதி கூறுவதையும் ஆராய்வோம். "அஃதும் பிறன் பழிப்பதில்லாயின் நன்று" என்பது பிற்பகுதி. 'அஃதும்' என்பதற்கும் பரிமேலழகர் கூறிய 'ஏனைத் துறவறமோ என்னின், அதுவும்' என்னும் பொருள் பொருத்தமற்றது எனச் சற்று முன்பே கண்டோம். 'அஃதும்' என்பதற்கு அவ்வில்வாழ்க்கையும் என்பது தான் நேரான பொருள். 'அவ்வில்வாழ்க்கையும் பிறன் பழிப்பில்லாததாயின் நன்று' எனக் கூறுகிறது இப்பிற்பகுதி. இப்பிற்பகுதியும் வள்ளுவர் கால நிலையைக் காட்டுகிறது. வள்ளுவரின் முன்னோர், தொன்முது தமிழர், அறம் எனச் சிறப்பித்துக் கூறிய இல்வாழ்க்கை, வள்ளுவர் காலத்தில் எப்படி இருந்தது? பிறன் பழிப்பதொன்றாய் இருந்தது. ஆதலின், 'அஃதும் பிறன் பழிப்பதில்லாயின் நன்று' என்றார். பிறன் பழிப்பதற்கு அஃது இடம் தருமாயின், நன்று அன்று போலும்! 'பிறன் பழிப்பதில்லாயின் அது நன்று' என்று கூறினாலே, மேலே கூறிய வள்ளுவர் கருத்தை விளக்கிவிடுமே! அப்படிக் கூறாது உம்மையைச் சேர்த்து 'அஃதும்' (அது + உம் = அஃதும்) என்று வள்ளுவர் ஏன் கூறினார்? உம் என்னும் சொல் வள்ளுவர் காலத்தில் இல்வாழ்க்கை இருந்த நிலையையும் அவர் காலத்திற்கு முன்பே இருந்த நிலையையும் காட்டும். அறம் எனச் சிறப்பித்துக் கூறுமாறு உயர்ந்து நின்ற அதுவும், பிறன் பழித்துக் கூற இடம் தாராததாயின் நன்று என்பதை 'உம்' என்னும் சொல் காட்டும். இதை உயர்வு சிறப்பு உம்மை என்பர் இலக்கண நூலார்.

வள்ளுவர் 'பழித்தது இல்லாயின் நன்று' எனக் கூறினாரிலர். வள்ளுவருக்கு முன்பே இல்லறம் பழிக்கப்பட்டதை இப்பகுதி குறித்தல் இன்று. வள்ளுவர் காலத்தே தான் இப்பழிப்பு இருந்தது போலும்! பழிப்பு இல்லாததாக இல்வாழ்க்கை

யைச் செய்ய முடியவில்லையாயின், இல்வாழ்க்கை அறம் அன்று என்று கூறுதல் இயலுமா? இயலாது. இல்வாழ்க்கை பழிப்பை ஏற்பதும் பழிப்பின்றி விளங்குவதும் அவ்வக் காலத்து மக்கள் நிலையைப் பொறுத்தன. 'இல் வாழ்க்கை பழிப்பே கொள்ளினும், பழிப்பையே தள்ளினும், அறமே—அறமெனப் பட்டதே—பழிப்புக்கு இடங்கொடாததாயின், அது நன்று ; தூயதுகூட,' எனப் பொருள்படும்படி அமைந்துள்ளது இப்பிற்பகுதி.

'பிறன் பழிப்பது' என்பது யார் பழிப்பது? இல்வாழ்க்கையைப் பழிப்பவன் யார்? 'பிறன்' என்பது யாரைக் குறிக்கும்? இவற்றைப் பரிமேலழகர் விளக்கினரிலர்; 'பிறனல் பழிக்கப்படுவது' என்று விளக்கமின்றிக் கூறிச் சென்றார். மணக்குடவரோ, "பிறன் ஒருவனல்" என்று கூறினர். பிறன் ஒருவன் என்றது அண்டை வீட்டான், அயல் வீட்டான் ஒருவனைக் குறிக்குமா ? தமிழர்கள் ஒருவர் மற்றொருவரைப் பழிப்பதையா ஒழுக்கமாகக் கொண்டிருந்தார்கள் ? இங்குப் பழிப்புண்டது தமிழர்தம் இல்வாழ்க்கை அல்லது நாட்டின் இல்வாழ்க்கையே. தமிழர் ஒருவரையொருவர் பழித்துக்கொண்டாலும், பழித்துக்கொள்ளாதிருப்பினும், இல்வாழ்க்கை பழிப்புக்குரியதாயின், அப்பழிப்பு இருந்தே வரும் ; நல்லதாகுதல் இன்று.

பிறன் என்றால் இல்வாழ்வான் அல்லாத பிறன் எனக் கொள்ளல் தகுமா ? இல்வாழ்வான் அல்லாத பிறன் துறவி என்று கொள்ளலாம். துறவிகளோ, பற்றற்றவர்கள்; அல்லது பற்றையே அறுக்கும் நோன்பு பூண்டவர்கள். உடம்பின் தொடர்பே மிகை என்று கொள்வோருக்கு இல்வாழ்வோன் எவ்வாறு வாழ்ந்தால் என்ன ? பிறரைப் பழித்துக் கூறுதல் துறவிகள் தொழிலாகுமா ? பழிப்பது என்பது எப்பொருள் தரும் ? ஒருவனை இழித்துக் கூறுதல் எனப் பொருள்படும்.

இஃது ஒருவனை இடித்துக் கூறுதல் அன்று ; வெகுண்டு கூறுதல் அன்று ; கண்டித்துக் கூறுதல் அன்று ; புத்தி கூறுதலும் அன்று. இவை வேறு ; பழித்துக் கூறுதல் வேறு. பழித்துக் கூறலைத் துறவிக்காக்குதல் பழியே ஆகும்.

பரிதியார் உரையும் பழைய உரையும் இங்குப் பழிப்பது என்பதை உலகம் பழிப்பதாகக் கொள்ளுகின்றன. வள்ளுவர் துறவிகளைப் பழித்துக் கூறுமிடத்து, 'உலகம் பழித்தது ஒழித்துவிடின்,' என்றார். ஈண்டுப் பழித்தது என்று இறந்த காலத்தால் கூறியதையும் இல்வாழ்க்கையைப் பற்றிக் கூறிய போது பழிப்பது என்று கூறியதையும் காண்க. இவ்வாறு வேறுபடக் கூறியதன் பொருளைக் கருதுக. இல்வாழ்க்கையை உலகம் பழித்தது என்று கொண்டிருந்தால், அவ்வாறே கூறியிருப்பார். உலகம் பழித்தது வேறு ; பிறன் பழிப்பதும் வேறு. இவ்வேற்றுமையை வள்ளுவர் நன்கு அறிந்தவர் போலும் ! ஆதலின், ஓர் இடத்து 'உலகம் பழித்தது' என்றார் ; மற்றோர் இடத்துப் 'பிறன் பழிப்பது' என்று குறிப்பிடுகிறார். ஆதலின், இவ்விரண்டையும் ஒரு பொருள் எனக் கொள்ளுதல் தவறு.

'பிறன் பழிப்பது' என்பது வேறு எவன் பழிப்பதைக் குறிக்கும்? இல்வாழ்க்கையை அறம் எனக் கொள்ளாத பிறன், அதாவது இல்வாழ்க்கையை அறம் அன்று என்று கூறும் பிறன் என்றுதான் கொள்ள இடந்தருகின்றது. இல்வாழ்க்கையை அறம் அன்று எனக் கொண்டவர் யார் ? அவ்வகைக் கொள்கையர், துறவு நெறியாளர் என்னலாம். அவர் பௌத்தராகலாம் ; சமணராகலாம் ; அல்லால், இல்லறத்தையே வெறுக்கும் துறவைத் தமிழர் பண்பாட்டிற் சேர்க்க எண்ணிய தமிழராயினும் ஆகலாம். இவர் யார் எனத் துணிவது ஆராய்ச்சிக்குரியது. இவர் யாராயினும் ஆகுக ! இத்தகு பழிப்பு—பிறன் பழிப்பு—இருந்தது

என்பதே இங்குச் சாலும். திருவள்ளுவர் காலத்தில் இல்லறத்தை எதிர்த்த ஒரு கூட்டம்—இழிதகு கூட்டம்—இருந்தது என்பதை இக்குறள் காட்டும். அக்கூட்டத்தாரைப் 'பிறர்' என்றுகூடப் பன்மையால் சுட்டினார் இலர் திருவள்ளுவர் ; அவர்தம் இழிதகைமை தோன்றப் பிறன் என்றே ஒருமையால் சுட்டுகின்றார்.

இல்வாழ்க்கை எப்பொழுது பழிக்கப்படுகின்றது ? இல்வாழ்க்கையின் இழிவு எப்பொழுது ஏற்படுகின்றது ? மனைவியை வாழ்க்கைத் துணையாகக் கருதாது காமத் துணையாகக் கருதும்பொழுது ஏற்படுகின்றது. இதை விளக்கும் பொருட்டே வாழ்க்கைத் துணை என்று (காமத்துணை அன்று என்பது தோன்ற) திருவள்ளுவர் அதிகாரமும் வகுத்தார். வாழ்க்கைத்துணை என்று குறித்தாலே மனைவியைக் குறிக்குமெனினும், அவர் 'வாழ்க்கைத் துணை நலம்' என்று அவ்வதிகாரத்திற்குப் பெயரிட்டுள்ளார். ஏன் 'நலம்' என்னும் பெயரையும் சேர்த்தல் வேண்டும் ? மனைவியே வாழ்க்கையின் தீங்கு என்று நிலவிய கொள்கையை மாற்றவே நலம் என்ற பெயரையும் சேர்த்துப் பெயர் நீளினும் நீளுக என்று 'வாழ்க்கைத்துணை நலம்' என்ற நீண்ட பெயரை அதிகாரத்திற்கு இட்டார் போலும் !

காமத்தால் நேர்ந்த இழிவு ஒன்று மட்டுமா பழிப்புக்கு இடந்தந்து நிற்பது ? மகளிர் நிறை காவாது சிறை காவல் ஏற்படும்போது பழிப்பு ஏற்படுகிறது. ஆணோ பெண்ணோ நிறையின் நீங்குதல் எப்போது ஏற்படுகின்றது ? உயிர் ஒன்றும் தன்மையை நாடாது, உடல் ஒன்றும் தன்மையை நாடும்போது ஏற்படுகிறது. இத்தகைய இழிந்த செயலால் பழிக்கப்படுவது எது ? இழிந்து நடந்த ஒருவனா பழிக்கப்படுகிறான்? ஒருத்தியா பழிக்கப்படுகிறாள்? ஒருவனுமல்லன் ; ஒருத்தியுமல்லள். இல்வாழ்க்கையே பழிக்கப்படுகின்றது.

இதுகாறும் ஆராய்ந்த குறள் எச்சான்று பகர்கின்றது? வள்ளுவர் கால நிலையும் கருத்து நிலையும், வள்ளுவர் விரும்பியோ விரும்பாமலோ, அவர் நினைத்தோ நினையாமலோ இக்குறட்பாவில் பதிந்து கிடப்பதைக் காட்டு கின்றது. வேண்டுமாயின், இன்னும் பற்பல சான்றுகள் திருக்குறளிலிருந்தே காட்டலாம். சான்றுக்கெடுத்த ஒரு குறளிலேயே ஆழ்ந்து ஆழ்ந்து சென்றோம். நீண்ட காலமும் சென்றது. ஆயினும், இன்னும் சிற்சில சான்றுகளையாவது மேற்போக்காகப் பார்த்து மேலே செல்வோம்.

'புறத்தாற்றின் போஒய்ப் பெறுவதெவன்?' என்றார் மற்றொரு குறளில். 'புறத்தாறு' என்பது என்ன ஆறு? புறத்தாறு என்பது இல்வாழ்க்கைக்குப் புறமாகி இல்லை விட்டுச் செல்லும் நெறி என்று பொருள்படும்படி உரை எழுதினார் பரிமேலழகர். இங்கு இல்லை விட்டுச் செல்லுதல் என்பது துறவு என்று இசைந்தாரிலர். 'வனத்துட்செல்லும் நிலை' என்றார். இது தானாகவே துறவை விலக்கிவிடும் போலும்! மணக்குடவர் 'தவநெறி' என்றார். 'பாவத்தின் வழி' என்றார் பரிதியார். 'ஆறு' என்பது 'நெறி' என்று பொருள்படும். 'சமயம்' என்பதற்கு நேரான தமிழ்ச் சொல் 'நெறி'. 'புறத்தாறு' என்பது, இல்லற நெறிக்குப் புறம்பான நெறி அல்லது புறச் சமயம் என்றுதானே பொருள்படும்? துறவையும் தவநெறியையும் வள்ளுவரே பின்பு சிறப்பித்துக் கூறுகின்ற போது இங்கு அவற்றைக் குறித்துப் 'புறத்தாற்றிற் போஒய்ப் பெறுவது எவன்?' என்னும் பொருள்படும்படி எழுதியிருப்பாரா? கருதுக. மற்றொரு குறளில் 'முயல்வாருள் எல்லாம் தலை' என்று கூறுகிறார். முயல்வார் யார் யார்? பௌத்தரையும் சமணரையும் குறிக்குமா? கருதுக. ஆராய்க.

இங்குக் கூறியவற்றைக் குறித்து இல்வாழ்வைப் பழித்தது, எதிர்த்தது, இழித்தது முதலிய சூழ்நிலைகளைக் குறித்து ஒரு கேள்வி எழுகின்றது. இவற்றைக் காட்டத் திருக்குறளையே சான்றாகக் கொள்ளுதல் தகுமா? திருக்குறள் கூறுவது தங்கள் தங்கள் அறமே என்று, திருக்குறளையே சான்று காட்டிச் சமணர்கள் பௌத்தர்கள் உரை காணவில்லையா? இப்போது கூறுவதுதான் உண்மை என்று எவ்வாறு கொள்வது? பிற இலக்கியங்களில் இக்கருத்துக்களுக்குச் சான்று உண்டோ? இவை தக்க கேள்விகளே. சான்றுகள் உள. வள்ளுவர் காலத்து நூல்களிற் குறளன்றி வேறு எதுவும் காலத்தின் கைப்படாது தப்பிப் பிழைத்ததாக, பிழைத்திருப்பதாகத் தெரிந்திலது. வள்ளுவருக்குப் பிறகு வந்த திருத்தக்கதேவர் நூலில் இவற்றிற்குச் சான்றுகள் காணலாம். விரிவின்றிச் சுருக்கமாக இவற்றில் சிலவற்றையும் கண்டு மேலே செல்வோம். 'நோய் முதிர் குரங்கு போல நுகர்ச்சி நீர் நோக்க வேண்டா'* என்ற ஏச்சைக் காண்க. 'பண்ணிறக் கிளவியார்தம் பசையினாற் பிறந்த பாவம் கண்ணிற முலையினார்தம் கலவியாற் கழிக்கலாமே?'† என்ற தாக்கைக் காண்க. 'எண்ணிப்பத்தங்கை இட்டால் இந்திரன் மகளும் ஆங்கு வெண்ணெய்க்குன்றெரியுற்றாற் போல் மெலிந்து பின் நிற்குமன்றே?'‡ என்ற பழிப்பைக் காண்க. இவற்றினும் இழிவுரை இன்னும் வேண்டுமோ?

வள்ளுவர் காலத்தில் இவ்வித ஏச்சும் தாக்கும் இழிவுரைகளும் சொல்லளவில் நின்றன போலும்! வள்ளுவர் காலத்தே சொல் அளவில், பேச்சளவில் நின்ற அவை,

---

* சீவக சிந்தாமணி, கேமசரியார் இலம்பகம், 24.

† ,, கனகமாலையார் இலம்பகம், 41.

‡ ,, கேமசரியார் இலம்பகம், 22.

அவருக்குப் பின் எழுத்தளவை அளாவின போலும்! அதற்கும் பின்னர்ப் பாக்களில் பதிந்தன; சான்று பகர்கின்றன.

"காலத்திற் கேற்ற வாறே கருதுவர் நூல்கள் செய்யக்
காலத்திற் கேற்ற வாறே கருத்தெலாம் அமையும் நூலில்
காலத்திற் கொப்பி லாநூல் கனவிலும் தோன்றல் இல்லை
காலத்தின் கோல மெல்லாம் காணலாம் நூலில் என்பர்"

என்பது இங்குக் கருதத்தக்க ஒரு பாட்டு. காலத்திற்கேற்ற வாறே வள்ளுவர் நூல் எழுதிச் சென்றார். காலத்தின் வடிவம், அது தாங்கிய வேடம் எல்லாம் அவர் நூலில் காணலாம். வள்ளுவருக்கும் தெரியாமலே காலமும் அவர் நூலில் கோலமிட்டுச் சென்றது. காண்போர் காண்க, கண்ணுளார் எனினே!

## பெருநெறிகளின் கலப்புத் தந்த மாற்றம்:

இரு பெருநெறிகளின் கலப்பால் தமிழர்தம் பண்பாடு கலக்குண்டதைக் கண்டோம். அக்கலக்கத்திற்குச் சான்றுகளும் கண்டோம். இங்குக் கூறியவை இரு பேரறவோர் கண்ட அறநெறிகளைக் குறை கூறுதற்கு அல்ல; அவற்றால் தமிழர் பண்பாடு தளர்வுற்றது என்று குறிக்கவும் அல்ல. இவ்விரு பெருநெறிகளின் கலப்பால் ஏற்பட்ட மாற்றத்தைக் காட்டவே அவை குறிப்பிடப்பட்டன. இக்கலப்பால், கலப்புத் தந்த மாற்றத்தால், ஏற்பட்ட நன்மைகளும் உள. அந்நன்மைகளுள் இங்குப் பொருத்தமான ஒன்றையும் காண்போம்.

அறம் அறம் என்று அவ்விருவர்தம் நெறிகளும் அறை கூவி, தமிழர்களைத் தட்டி எழுப்பின போலும்! அறம் அறம் என்று இவை அரற்றி மலிந்தன என்றால், தமிழ் நாடு

அறமே அறியாததா? தமிழர்களிடையே அறம் அற்றே போயிற்று? அன்று அன்று. அறம் பிறந்தது தமிழரிடையே. இமயமுதற் குமரி வரையில் குடிகொண்டிருந்த உலக முதற் பெருங்குடி, தமிழ்க்குடியேயாகும். அத்தொல் தமிழ்ப் பெருங்குடியிலேயே அறம் பிறந்தது; வேறு எவரிடமும் அன்று. 'அறம் வளர்த்தவன் தமிழன். அவ்வறமே சீர்திருத்தங்களோடு, மாறுதல்களோடு, காலத்திற்கேற்ப, சூழ்நிலைக்கேற்ப, சமணமாயிற்று; பௌத்தமாயிற்று' என்பர் ஆராய்ச்சியாளர். அறம் பிறந்த இடத்தில் அதற்கு முதன்மை அற்றது போலும்! 'பிறந்த இடத்தில் பெயர் பெறுதல் அரிது,' என்னும் முதுமொழி இங்கு மெய்யாயிற்றுப் போலும்! பழந்தமிழர் பண்பாட்டு முறையில் அறத்திற்கு முதல் இடம் அளித்தாரிலர்; கடைசி இடமே அளித்தனர். 'இன்பமும் பொருளும் அறமும் எனுஅ' என்பது தொல்காப்பியம்.

இன்பம் பொருள் அறம் என்னும் முறையே இயற்கை முறை என்பர். மக்கள் தோற்றத்தில் அவர்தம் பண்பாட்டில் முதலில் தோன்றியது இன்பம் அல்லது 'இணை விழைச்சு'. இந்த விழைச்சு அல்லது இணைதல் விருப்பமே மக்களை இழுத்துத் தன் வயமாக்கி முதல் முதல் இயக்கியது. இந்த இணை விழைச்சு மக்களிடம் மட்டுமா தோன்றிற்று? கண்ணிற்காணு நுண்ணுயிர்தனையும் வாட்டிற்று, இன்றும் வாட்டுகிறது இவ்விழைச்சு. இவ்விழைச்சு இல்லையேல் உயிரின் பெருக்கமில்லை, உலக வளர்ச்சியுமில்லை. உயிர்தொறும் உயிர்தொறும் சென்று சென்று இயக்கி, உயிரைப் பெருக்கியது, உலகை வளர்த்தது இவ்விழைச்சு. நுண்ணுயிர் தோன்றிய போதே தோன்றிய இவ்விழைச்சே இன்று நாம் காணும் உலகப் பெருக்கத்திற்கு அடிப்படை.

இதன் பின்னர்த் தோன்றியன பொருள், பொருள் உடைமை, பொருள் உரிமை, பொருட் பிணிப்பு ஆதியன.

மக்கள் வாழ்வு மிக மிக, பண்பாடு உயர உயர, இன்பம் துய்த்தலை முறைப்படுத்தினர். பொருளை ஈட்டலை, துய்த்தலை, காத்தலை, வகுத்தலை வரையறுத்தனர். மக்கள் எல்லோரும் சேர்ந்து வாழத் தொகுதி வாழ்வின் முறை கண்டனர். உடலின்பமும் பொருளின்பமும் துய்த்தலோடு உயிரின்பம் காணுமாறும் ஒழுங்கு செய்தனர். இவ்வாறு வகுக்கப்பட்டு வரையறுக்கப்பட்ட ஒழுக்கமே அறமாவது என்பர். ஆதலின், இவ்வொழுக்கமுறையே, இன்பம் பொருள் அறம் என்னும் முறையே, இயற்கை முறை, இயற்கை வாழ்வின் முறையாகும். இதையே பின்பற்றுவது தொல்காப்பியம். தொல்காப்பியத்தின் பொருளதிகாரம் அகத்திணை இன்பத்தோடு தொடங்குவது காண்க.

இவ்வாறு அறத்தைக் கடைசியில் உய்த்ததால் அக்காலத்துத் தமிழர் அறத்தில் கடையர் என்பது கருத்தன்று. இன்பம்அறத்தைநோக்கிச் செல்லுதல்வேண்டும். பொருளும் அறத்தை நோக்கிச் செல்லுதல் வேண்டும் எனச் சேருமிடம் நோக்கி இயற்கை முறையில் அறத்தை இறுதியில் அமைத்தனர் என்பர்.

இரு பெருநெறிகளும் தமிழரிடையே கலந்து குழைந்து தமிழர்களைக் கலக்கிக் குலுக்கிய பிறகு தமிழர் தெளிவு பெறத் தொடங்கிய காலத்தில் வள்ளுவர் பிறந்தார். இவ்விரு பெருநெறிகளின் உண்மைகளை ஆராய்ந்து தெளிவு கண்டவர் வள்ளுவர் என்பது அவர்தம் நூல் காட்டும்.

"எப்பொருள் எத்தன்மைத்தாயினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்ப தறிவு," என்ற வள்ளுவர் குறளுக்கு வள்ளுவர் அறிவே சிறந்த எடுத்துக்காட்டாய் அமைகின்றது. தமிழர்தம் பண்பாட்டு முறையில் அறத்திற்குக் கடைசி இடம் அளித்தது அவருக்குப் பொருத்தமாகத் தோன்றவில்லை. அம்முறை அவர் காலத்திற்கு ஏற்றதன்றென்று

கண்டார். பௌத்தரும் சமணரும் கூறியவற்றில் பொருத்த மானவற்றை அல்லது மக்களுக்கு நலம் தருவனவற்றைமேற் கொள்ள அஞ்சியவர் அல்லர் வள்ளுவர். பௌத்தரும் சமண ரும் அறம் அறம் என்று அறை கூவும் காலத்தே அறத்தைக் கடைசியிலா அமைப்பது? தமிழர் பண்பாட்டு முறையை வள்ளுவர் அடியோடு மாற்றினர். இன்பம் பொருள் அறம் என்ற வரிசையைத் தலைகீழாகப் புரட்டினர். அறம் பொருள் இன்பம் என்று அமைத்தார்.* வள்ளுவர் வெறும்புலவர் மட்டும் அல்லர்; அறங்கூறும் ஆசான் மட்டும் அல்லர்; பெரும்புரட்சியாளர். ஒரு நாட்டில் தொன்று தொட்டு வழக்கிலிருந்த பண்பாட்டு முறையை—ஒரு மக்கள் தொகுதி யின் வழக்க ஒழுக்கங்களை—மேல் கீழாக வள்ளுவர் மாற்றிய புரட்சியைக் காண்க! அவர் மாற்றியமைத்த முறையே இன்றும் நிலைபெற்று நிற்கின்றது.

---

*அறம் பொருள் இன்பம் என்னும் வரிசை புறநானூற்றில் 28, 31 இரு பாக்களில் காணப்படுகின்றது. இப்பாக்கள் சோழன் நலங்கிள்ளியைப் பற்றியவை. இப்பாக்களில் ஒன்று கோவூர் கிழார் பாடியது. திருவள்ளுவ மாலையைப் பாடியவர்களுள் ஒருவர் கோவூர் கிழார். ஆதலின், இவ்வரிசை திருவள்ளுவர் காலத்தது அல்லது அவருக்குப் பிற்பட்டது எனக்கொள்ள இடமுண்டு.

"அந்நிலை மருங்கின் அறமுதலாகிய மும்முதற்பொருட்குமுரிய வென்ப," என்னும் தொல். செய். 418-வது சூத்திரம் இடைச் செருகல் என்பர். தொல்காப்பியத்தின்படி முதற்பொருள் என்பன. நிலம் பொழுது என்பன. "ஆரியர் செய்யுள் அனைத்தும் அறம் பொருள் இன்பம் வீடு என்பவற்றுள் ஒன்றும் பலவும் பொருளெனக் கொண்டே அமைதல் வேண்டுமென்பர். தமிழ்ப் புலவர், மக்கள் பொருளாக மதிப்பன எல்லாம் செய்யுளுக்குரியவாகும் எனக் கொள் வர்," என S. S. பாரதியார் பொருளதிகார ஆராய்ச்சியில் கூறுவதும்

'ஒரு புலவனால் ஒரு நாட்டின் வழக்க ஒழுக்கங்களை மாற்றுதல் இயன்றதா ?' என ஐயுறல் வேண்டா. புலவர்கள் பேராற்றல் வாய்ந்தவர்கள். செயற்கரிய செய்வர் புலவர். வேறு எவரும் செய்ய இயலாத செயலை, மாற்றங்களை, இவர் எளிதில் செய்வர். இவர்தம் ஆற்றலைக் குறிக்கும் பாக்களைக் கீழே காண்க :

"கத்தி யின்றியும் குத்த தின்றியும்
பறைய தின்றியும் சிறைய தின்றியும்
அறியா முறையால் தெரியா வகையால்
திருத்த வல்லவர் திறமிகு புலவரே."

"நீதி கூறுவர் நெறியும் வகுப்பர்
பழியும் போக்குவர் வழியும் காட்டுவர்
சட்டம் வகுத்ததைப் பற்றவும் செய்வர்
குற்றம் போக்கிக் குணத்தைப் பெருக்கி

---

காண்க. முன் பின் சூத்திர அமைப்பையும் சொல் ஆட்சியையும் நோக்கின் இது இடைச்செருகல் என்பது துணியப்படும்.

பிரமன் திரிவர்க்கம் என்னும் ஒரு நூலைச் செய்தான் என்று மாபாரதம் கூறுகின்றது என அதனுடன் வள்ளுவர் முப்பாலைத் தொடர்புபடுத்த முயல்வார் சிலர். திரிவர்க்கம் என்பதைக் கண்டாரு மிலர் ; கற்றாருமிலர். இதைக் குறித்து ஆராய்ச்சியாளர் கூறுவதும் குறிக்கத்தகும். யவனரிடமிருந்து (கிரேக்கரிடமிருந்து) கற்ற வான நூல் முறையைச் சூரிய சித்தாந்தம் என்றும், பல நூறு ஆண்டு தவம் செய்து சூரியனிடமிருந்து பெற்றதாகவும் கூறும் சூரிய சித்தாந்தம். இந்திரன் இயற்றியது ஐந்திரம் என்னும் வடமொழி இலக்கணம் என்பர். இவ்விலக்கணத்தை இந்திரன் தேவ குருவினிடமிருந்து ஆயிரம் தேவ வருடம் கற்றான் என்று பதஞ்சலியார் மாபாடியம் கூறுகிறது. பிறரிடமிருந்து தாம் மேற்கொண்டவற்றிற்கு இவ்வாறு தெய்வ உற்பத்தி கூறுதலும், சூரியன், பிரமன், இந்திரன், தேவகுரு, அசுரகுரு ஆதியோரைப் புவியிடை இழுத்தலும், பண்டும் இன்றும் பயின்று வரும் ஒரு மரபு என்பர்.

**மனத்தைப் பற்றி மக்களை மாற்றப்**
**புலவரின் வல்லோர் உலகினில் யாருளர் ?''**

இத்தகு ஆற்றல் எல்லாம் வாய்த்திருந்த அறநூற்புலவரே திறமிகு வள்ளுவர் ; புரட்சியைச் செய்த பொய்யில் புலவர். இவர் அறத்தை மேற்கொள, புரட்சியை ஏற்க, தமிழ் நாட்டின் நிலைமை காத்திருந்தது. இத்தகு ஆசான் வரவை எதிர்நோக்கி நாடு தவம் செய்து நின்றது போலும் !.

இன்பத்திற்குத் தமிழர் முதலிடம் தந்திருந்தனர் என்பதை மேலே கண்டோம். அவர்தம் இன்பநெறிக்கு அகப்பொருள் நெறி என்பது பெயர். அது தமிழர் கையாண்ட பழந்தமிழ் நெறி ; தமிழ் என்றாலே அகப்பொருள் என்று பொருள்படும்படி, பண்பாட்டு முறையில் அவ்வளவு உயர்ந்திருந்தது இந்நெறி. தொல்காப்பியர் காலத்திலேயே இந்நெறிக்கண் பொய்யும் வழுவும் புகுந்திருந்தன என்று தொல்காப்பியம் காட்டும். வள்ளுவர் காலத்தே இது வழக்கொழிந்திருந்ததோ, அல்லால் இங்கும் அங்கும் தலை காட்டி நின்றதோ, சொல்வதற்கில்லை. இதன் நிலை யாதாயினும், ஆகுக ! இதைத் தம் அறநூலிலிருந்து விலக்கினாரிலர் திருவள்ளுவர். தமிழனுக்கு ஏற்றம் அளித்த நெறி, தள்ளொணா நெறி, தனித்தமிழ் நெறி, அன்பு நெறி, "அவளே தானே"* ஆகப்பழக்கி, "அவனே தானே"† ஆமாறு கற்பித்த நெறி. இன்ப அன்பு நெறி. இத்தகைய அகப்பொருள் நெறியை வள்ளுவர் போன்ற தமிழ்ப் பெருமகனாரா தள்ளிவிடுவர் ? 'துக்கநெறியே தூயநெறி'; 'சுகத்தால் சுகம்பெறுதல் இல்' என்றெல்லாம் புத்தர் கூறினும் கூறுக ! மாவீரர் கூறினும் கூறுக ! வேறு யார் கூறினும் கூறுக ! அகப்பொருள்

---

*இறையனார் அகப்பொருள், சூ. 2.

†சிவஞானபோதம், சூ. 10.

நெறியை, இன்ப அன்பு நெறியை, வள்ளுவர் தம் அறநூலி லிருந்து விலக்கினாரிலர்; ஆனால், கால நிலைக்கு ஏற்ப அதற்குக் கடைசி இடமே அளித்தார்; அறத்திற்கே முதன்மை தந்தார். பிற பெருநெறிகளின் கலப்பால் ஏற்பட்ட மாற்றம் இவை.

இல்லறத்தைப் பின்பற்றி நெடுந்தூரம் சென்றுவிட்டோம்! இது நாம் செல்ல வேண்டிய வழியன்றே! வள்ளுவர் கால நிலையைக்காண வழி மாறிச்சொல்லுதல் நேர்ந்தது. இல்வாழ்க்கையைப் பற்றிய கொள்கைகளுக்கு மறுப்பும் எதிர்ப்பும், அவற்றில் ஐயமும் குழப்பமும் இருந்தமை போலவே, அவர் காலத்தில் கடவுட்கொள்கைகளுக்கு மறுப்பும் எதிர்ப்பும் அவற்றில் ஐயமும் குழப்பமும் இருந்து வந்தன என்பதை அவர் நூல் காட்டும். கடவுள் உண்டு என்பார் ஒருபாலும், இல்லை என்பார் மற்றொருபாலுமாகி அறிஞர்களுக்கிடையே 'உண்டு, இல்லை' என்னும் போர் நிகழும் போது, பொது மக்களுக்கிடையே ஐயமும் குழப்பமும் நிகழ்தலே இயல்பு. இந்த நிலையிலேதான் வள்ளுவர் நூல் எழுந்தது; அவர் முதற்குறள் எழுந்தது. முன்பு இல்வாழ்க்கையிற் கூறியது போலவே இம்முதற்குறளையும் தேற்றேகாரத்துடன் "முதற்றே" என்று தொடங்குகிறார். 'ஆதி பகவன் முதற்றே உலகு,' என்பது அக்குறளின் பகுதி. இத்தொடக்கத்தைப்பற்றி முன்பு கூறியவற்றை மீண்டும் நினைவுகூர்தல் வேண்டும். இத்தொடக்கம் புது மாதிரியானது. தேற்றேகாரத்தோடு நூலைத் தொடங்கக் காரணம் யாது என்ற ஐய வினா முன்பே எழுந்தது. அதற்கு இப்போது விடை காணல் வேண்டும். இயற்கையாகக் கடவுள் உண்மை கூறுவோர், அல்லது வாழ்த்துக் கூறுவோர், "முதற்றே உலகு," என்று கூறுவது, அதுவும் முதற்பாட்டி

லேயே தேற்றேகாரத்தோடு கூறித் தொடங்குவது இயற்கை யான முறை அன்று என்பதைக் கண்டோம்.

கடவுள் உண்மையை வள்ளுவர் உலகிற்கு உணர்த்தக் கருதியிருந்தால், 'கடவுளாகிய அல்லது ஆதி பகவனுகிய முதலை உடையது உலகு,' என்று இயற்கையாகப் பாடியிருப் பார். "ஆதி பகவன் முதலதுலகு," என்று பாடிவிட்டால் அப்பாட்டுச் செய்யுள் யாப்புக்கு முற்றிலும் பொருந்தி மெல் லோசையைப் பயக்கும்; எளிய நடையையும் பெறும். இதை விலக்கி வள்ளுவர் ஏகாரத்தைச் சேர்த்துக் கூறுகிறார். ஏகா ரத்தை முதலது என்னும் சொல்லோடு சேர்த்தால், அது 'முதலதே' என ஆகும். "முதலதே உலகு" எனப் பாடி விட்டால் அது செய்யுள் யாப்புக்குப் பொருந்துவதன்று. இது தளை முரண் ஆகும். ஆதலின், முதலதே என்ற சொல்லை விலக்கி முதற்றே எனக்கூறல் நேர்ந்தது. இஃது ஏகாரத்தைச் சேர்க்கவேண்டியதால் நேர்ந்த மாற்றம். 'முதல துலகு' என்பதை 'முதற்றே உலகு' என மாற்றியதால் அவர் செய்யுள் மெல்லோசையை இழந்து வல்லோசையைப் பெறு கின்றது; இழுமென் மொழியையும் இழக்கின்றது. செய்யுள் வல்லோசை பெற்றால் பெறட்டும்; மெல்லோசை தரும் இன் னோசையை அது இழந்தால் இழக்கட்டும்; ஏகாரத்தைச் சேர்த்தே கூறல் வேண்டுமென வள்ளுவர் கருதினர்போலும்! ஏகாரமும் அது தரு பொருளும் திருவள்ளுவருக்கு எவ்வளவு முக்கியமாகத் தோன்றின என்பதைக் கருதிக் காண்க.

ஏகாரம் எப்பொருளைத் தருகின்றது! உரையாசிரியர் என்ன கூறுகின்றனர் என்பதைக் காண்போம். 'ஏகாரம் தேற்றத்தின்கண் வந்தது,' எனக் குறிப்பெழுதினர் பரிமே லழகர். ஆனல், இத்தேற்றப் பொருளைச் சேர்த்து உரை செய்தாரிலர். 'எனப்பட்டதே' என்னும் சொல்லில் இருந்த ஏகாரம் இவரிடம் பட்டபாட்டைச் சற்று முன்பு கண்டோம்.

ஏன் இங்கு உரையிற்கூடச் சேர்க்காமல் குறிப்பெழுதியதோடு விட்டுவிட்டார் என்பது விளங்கவில்லை ; 'உலகம் ஆதி பகவனாகிய முதலை உடைத்து,' என்பதே இவர் உரை. மற்ற உரையாசிரியர்களும் ஏகாரத்தை நீக்கியே பொருள் கண்டனர். எவ்வளவு கருதி வள்ளுவர் ஏகாரத்தை இங்குச் சேர்த்திருத்தல் வேண்டும் என்பதைக் காண்க. திருவள்ளுவர் கருதிக் கருதி வேண்டுமென்றே சேர்த்த ஏகாரத்தைப் பொருளற்றதாகத் தள்ளிவிடுதல் பொருந்துமா ?

இரு பெருநெறிகளின் கலப்பால் நேர்ந்த மாற்றம், அதனால் மக்கள் மனத்திற் குடிகொண்டிருந்த ஐயம், கடவுள் உண்டோ இல்லையோ என்னும் குழப்பம், நிலை குலைந்த இல்வாழ்க்கையின் பண்பு, இல்வாழ்க்கையின் இழிவு முதலிய யாவற்றையும் மனத்துட்கொண்டார்போலும் திருவள்ளுவர்! இவை அவர் மனத்துள் கிடந்து உறுத்தி உறுத்தித் தமிழ் மக்களுக்குத் தெளிவு காட்டி உறுதி கூற அவரைத் தூண்டின போலும் ! ஆதலின், தேற்றேகாரத்தோடு தம் நூலையே, தம் நூலின் முதற்பாட்டையே தொடங்குகின்றார்.

தேற்றேகாரம் எங்கெந்தப் பொருளை எல்லாம் தரும் என்பதை முன்பே கண்டோம். அவை எல்லாம் இப்பாட்டிற்காணும் ஏகாரத்திற்கும் பொருந்தும். 'உலகம் கடவுளாகிய முதலை உடையதோ ?' என்னும் வினாவிற்குத் தேற்றமான விடை, கலங்காதுரைக்கும் விடை எனக் 'கடவுளாகிய முதலை உடையதே உலகு' என்பதைக் கொள்ளலாம்—ஆதி பகவன் என்ற சொல் கடவுளைக் குறிக்குமோ என்பது பின்பு ஆராயப்படுகிறது. இங்குக் கடவுளைக் குறிப்பதாகவே கொண்டு எழுதப்படுகின்றது—உலகம் கடவுளாகிய முதலை உடையதன்று என்பதன் மறுப்பாக வந்தது கடவுளாகிய முதலை உடையதே உலகு என்ற உறுதிமொழி. உலகு கடவுளாகிய ஒரு முதலை உடையதோ, கடவுளே இல்லையோ என்ற

ஐயத்தைப் போக்கித் தேற்றம் கூறுவது, 'ஆதி பகவன் முதற்றே உலகு,' என்பதாகும். தேற்றேகாரம் தரும் இந்த மூன்றுவகைப் பொருண்மையில், மூன்றுவகையாகப் பொருள் தரும் நிலைமையில், ஏதாவது ஒன்றைக்கொண்டு உரை காணலாம் ; அல்லது இந்த மூன்றையும்கொண்டே பொருள் காணினும் காணலாம்.

வள்ளுவர் காலத்திற்கேற்ப, அவர் காலச் சூழ்நிலைக் கேற்ப, அறத்திற்கு முதலிடம் அளித்தார். ஆனல், முழு முதற்கடவுளுக்கு இடம்கொடாத சமணரோடு ஒத்தாரிலர்.* கடவுள் உண்டோ இல்லையோ, அறத்திற்கு—அறவாழ்விற்குக் கடவுள் உண்டென்ற கொள்கை வேண்டுவதன்று என்று கொண்ட புத்தரோடும் ஒத்தாரிலர். கடவுட்கொள்கை அற்றது அறமாகுமா ! அறத்தை அதன் நெறியில் செலுத்துவது கடவுட் கொள்கையே. வாழ்வெனும் பெருங்கடல்மீது துன்பெனும் பெருவளி வீச அறத்தைத் திசை தவறி ஓடாது அதன் நேர்வழியிலேயே செலுத்துவது கடவுட்கொள்கையே. அறத்திற்கு அசைவு ஏற்படும் போது அஃது அசைந்து விழாது பிணித்துக்கட்டும் நடுதறியே கடவுட்கொள்கை.

---

*Yet once again with its explicit belief in a plurality of eternal spirits every material entity having its own individual spirit Jivatma no less expressly disbelieves in the Supreme Spirit, the Paramatma. Jainism is definitely atheistic if by atheism we mean the denial of a divine creative spirit. In the philosophy of Jainas no place is reserved for God. Indeed it seems probable that the first Jaina did not acknowledge Gods at all.

Denying God they worship man to wit the Venerable (Arhat) the Conquerer (Jina), the founder of the four orders (Thirthankara).—Introduction to the Heart of the Jainism by G. P. Taylor, M.A., D.D.—Pages 13-14.

கடவுட்கொள்கை அற்ற அறம் மறமாக முடியும் என்றெல்லாம் கண்டார் போலும்! ஆதலின், வள்ளுவர் அக்காலத்திருந்த உரைசால் கட்டுரைகளுக்கும் அவற்றின் ஊடே உலாவிய கொள்கைகளுக்கும் மாறாக, ஐயம் நீங்கத்தக்க முறையில் அறவாழ்வு தோன்றக் கடவுளின் முதன்மையில் உறுதி கூறித் தேற்றேகாரத்தோடு தம் நூலைத்—தம் நூலின் முதல் பாட்டைத்—தொடங்குதல் காண்க.

கடவுட்கொள்கையை அல்லது கடவுளின் முதன்மையை வள்ளுவர் வாளா கூறினும் வலிந்தே கூறினும் அது காலத்தின் போக்கைத் தடுக்க வல்லதோ? பௌத்தம் என்னும் பெரும்புயலைச் சமணம் என்னும் சண்டமாருதத்தைத் தடுக்க வள்ளுவரின் கடவுட்சிறு குறளுக்கு ஆற்றல் உண்டோ? வள்ளுவர் தாம் எழுதியவற்றைப் பரவச்செய்ய மாணுக்கர்களைச் சேர்த்தாரிலர். அல்லால் வள்ளுவருக்கு வணக்கம் அவர் அறத்திற்கு வணக்கம் என்னும் வணக்கவிதிகளை விதித்து மக்களுக்கு அறத்திடத்தும் அறங்கூறிய அறவோரிடத்தும் பற்றுண்டாமாறு செய்தாரா? செய்தாரிலர். 'எம் அறத்தைச் சங்கையின்று எண்ணுக. எம் அறத்திடை ஐயம்கொள்ளேல்; ஐயம்கொள்ளும் அவர்களைச் சேரேல்; அவர்களைப் புகழேல்; அயலார் அறத்தை அயர்ந்தும் அணுகேல்,' என்றெல்லாம் விதித்து விரதங்களால் அறுவிரதங்களால் மக்களைப் பிணித்தாரா? அவ்வாறும் செய்தாரிலர்.*

---

*The Jainas though they do not know of any dynamic power such as would give a man strength to keep his promises, nevertheless firmly believe in the helpfulness of taking vows.

He cannot take any vow unless he has first renounced five faults Pancha Aticara and so has no

இறைவன் அருளின் தோன்றிய அரும்பெரும்புலவர் வள்ளுவர். அவர் நாட்டின் நெறியை நலம்பெறச் செய்தும் பழுதகற்றியும் நிலை நாட்டினார். அவர் செயலால் அவர் நூலால் மக்களை மயக்கிய "பொய்ப்பால பொய்யே யாய்ப் போயின. பொய்யல்லாத மெய்ப்பால மெய்யேயாய்" விளங்கின. இதுவன்றித் தாம் புது நெறி ஒன்றும் தனியே வகுத்தாரிலர் ; தமிழன் தொன்முது கொள்கையைத் திருத்தி முதல் நூல் இயற்றினார் ; வழக்க ஒழுக்கங்களை வளம்பெறச் செய்தார். இவற்றில் புலவன் செய்யும் திருத்தங்களும் மாற்றங்களும் அன்றே பலன் தருவன அல்ல. அவை பல நாள் நின்றே பலன் தருவன ; நின்று நின்று மக்கள் மனத்தில் ஊறி ஊறி மனத்தைத் திருத்தியும் குறைகள் மறையக் கொள்கையை மாற்றியும் மெல்ல மெல்லப் பண்பாட்டுடன் கலந்து பண்பாட்டையே மாற்றிப் பயனளிப்பன. புலவன் செய் மாற்றம் அன்றே பயனளிப்பது அரிது. அரசன் ஆணை பண்பாட்டுள்ளும் புக்கு அஃதை அன்றே மாற்றினும், அம் மாற்றம் நின்று பயன் தருவதின்று.

வள்ளுவர் தொடங்கிய மாற்றமும் திருத்தமும் மக்களிடையே மெல்ல மெல்லப் பரவி, அவர்கள் அறிவைத் தெருட்டித் தெளியச்செய்து, தமிழர் பண்பாட்டை மீண்டும் நிலை நாட்டச் சில நூற்றாண்டுகள் ஆயின எனலாம். சில நூற்றாண்டுகளுக்குப் பின்பே அவை பலன் முழுவதும் அளித்தன. கடவுட்கொள்கையும், 'உண்டு கடவுள்' என்ற

---

doubts (Sanka), no desire to belong to another faith (Kankha), no questioning about the results of the fruits of Karma (Vitigiciha) undertakes not to praise hypocrites, (Parapakhanda Parasamsa) and not to associate with them (Parapakhanda Santhana).—Heart of Jainism, by Miss Sinclair Stevenson, page 205.

உறுதியும் மக்கள் பண்பாட்டில் ஊறி ஊறி நாயன்மார்களைத் தந்தன; ஆழ்வாராதியோரை அளித்தன. வள்ளுவர் தொடங்கிய பணியை இவர்களே பயன் பெறச் செய்தனர். இவர்களால் கடவுள் தொண்டும் அன்பும் (பத்தியும்) பெருக்கெடுத்தன; வெள்ளமாய் ஓடின. காடுகள், மலைகள், நாடுகள், நகரங்கள், மூலை முடுக்குகள் எங்கும் கோவில்! சந்து பொந்துகள் எங்கும் கோவில்! எங்கும் தெய்வமணம்; எங்கெங்கும் தெய்வப்பேச்சு; பண் இசை பரவியதொருபால்; திருவாய்மொழி திகழ்ந்தது மற்றொருபால். எங்கும் பூசனை. எங்கும் வழிபாடு. எங்கெங்கும் பரபரப்பு. கடவுட்கொள்கைகள் காட்டுத்தீயின் கடிதே பரவின. இவை மக்கள் மனத்தை எளிதே மாறுமுறையில் மாற்றி முடித்தன; மறவா முறையில் மாற்றி நின்றன. இவற்றின் பயனாக உறுதிபெற்ற கடவுட்கொள்கையும் கடவுள் நம்பிக்கையும் இன்றும் நிலவி நிற்கின்றன. இவை கற்றாரிடமும் கல்லாரிடமும் வல்லார் மாட்டும் வலியிலார் மாட்டும் எல்லோரிடத்தும் பெரும்பாலாக இன்றும் இருந்தே வருகின்றன.

இப்பெருங்கிளர்ச்சியும் மாற்றமும் முடிந்த பின்னர்த் தோன்றிய பேராசிரியருக்கும் அக்காலத்து மக்களுக்கும், 'கடவுட்கொள்கை எல்லோருக்கும் தெரிந்ததாயிற்றே! இதையா வள்ளுவர் விளக்க வேண்டும்!' என்ற வியப்பும் ஐயமும் இருந்தமை இயல்பே. இலக்கண அறிவோ, அக்காலத்தே குறைந்து நின்றது. இலக்கண அறிவிற்கு மீண்டும் உயிர் தந்தவர்கள் பண்டை உரையாசிரியர்களே. இவ்விரு நிலைகளுக்கும் பேராசிரியர் உரையே—வள்ளுவர் முதற்குறளை 'வேறுபட வந்த உவமத் தோற்றம்' என்பதற்கு அவர் கூறிய உரையே—சான்று பகர்கின்றது. இதைப்போன்றே பரிமேலழகர் உரையும் அவர் காலத்தை ஒட்டி அவர் காலத்திற்கேற்பப் பிறந்தது ஆகும். வள்ளுவர் காலத்தே காக்க

வேண்டியது இல்லறமாயிருந்தது. பரிமேலழகர் காலத்தே காக்க வேண்டியது துறவறமாயிற்றுப் போலும்! துறவுக்கென்று பரிந்துரைத்த பரிவுரை, பரிமேலழகர் உரையாமாறு காண்க.

உரையாசிரியர்கள் அவரவர் கால நிலையின் பயனாக உரை கண்டனர். அவர்களின் உரைகள் நமக்கு ஒருவாறு மயக்கத்தைத் தந்தன. அம்மயக்கமே தெளிவைக் காணுமாறு தூண்டிற்று; நம்மைப் பின்னே இழுத்துச் சென்று இரண்டாயிரம் ஆண்டுகள் வரையிலும் அதற்கப்பாலும் சேர்த்துவிட்டது. இனி முன்னேறி முதற்குறளுக்கு உரை காண்பதிலேயே முனைவோமாக.

## உவமையின் உரை :

இதுகாறும் நாம் ஆய்ந்த உரையை நினைவு கூர்வோம். நாம் ஆய்ந்தது முதற்குறள் உரையின் ஒரு சிறு பகுதியும் அன்று. இன்னும் நாம் அதன் உரையுட்புகுந்தோம் அல்லோம். முதற்குறளை உவமையாகப் பொருள் கொள்ளல் தகும் என்று கண்டோம். அக்குறளின் எப்பகுதி பொருட்பகுதி, எப்பகுதி உவமைப் பகுதி என்பவற்றைப் புற ஆராய்ச்சிகளால் துணிந்தோம். இப்போது அந்த உவமப் பொருட்பகுதியைப் பிரிப்போம்; உவமப் பகுதியையும் பிரிப்போம். அவற்றுள் எதற்கு எது உவமை என்று காண்போம். எழுத்தெல்லாம் அகரமாகிய முதலை உடையன என்பது உவமைப்பகுதி. உலகு ஆதி பகவனாகிய முதலை உடையது என்பது உவமப் பொருட்பகுதி. இவற்றுள் வள்ளுவர் கூறுவது எழுத்திற்கும் உலகத்திற்கும் உவமையா? அகரத்திற்கும் ஆதி பகவனுக்கும் உவமையா? அல்லால் எழுத்துக்கள் ஒரு முதலை உடைமைக்கும் உலகம் ஒரு முதலை உடைமைக்கும் உவமையா?

. பரிமேலழகர் உரைத்திறன் :

உரையாசிரியர்கள் எவ்வாறு இவ்வுவமையை விளக்கு கின்றனர் என்பதைக் காண்போம். பரிமேலழகர் உரையி லிருந்து தொடங்குவோம். "எழுத்துக்கள் அகரமாகிய முதலை உடையன. அது போல உலகம் ஆதி பகவனாகிய முதலை உடைத்து," என்பது அவர் பொழிப்புரை. இப் பொழிப்புரையிலிருந்து எதற்கு எது உவமை என்று விளங்கு தல் இன்று. அது போல என்றால், எது போல? எழுத்துக் களைப்போலவா? அன்று. எழுத்துக்களைக் குறித்தால் 'அவை போல' என்று பன்மையால் கூறியிருப்பார். "அது போல" என்பது, முதலாக உடைமை அல்லது முதலாக உடைய தன் மையைக் குறிக்குமோ? உடைய தன்மையை உணர்த்த வேண்டுமானால் அத்தன்மை போல என்றாவது அத்தன்மை யைக் குறிக்கும் வேறு சொற்களாலாவது தம் உரையை விளக்கியிருப்பார். மணக்குடவர் இத்தன்மையைக் குறிக்க "அவ்வண்ணமே" என்று உரை கண்டார். அவர் உரையை யும் காண்க. "எழுத்துக்கள் எல்லாம் அகரமாகிய எழுத் தைத் தமக்கு முதலாக உடையன; அவ்வண்ணமே உலகம் ஆதியாகிய பகவனைத் தனக்கு முதலாக உடையது" என்பது அவர் உரை. எழுத்துக்கள் அகரத்தை முதலாக உடைய தன் மையைப்போல என்பதைக் குறிக்க, அவ்வண்ணமே என்ற மணக்குடவர் உரையைப் பரிமேலழகர் மேற்கொண்டாரிலர். அவர் உரையை மேற்கொள்ளாது, அவருடன் உடன்படாது, 'அது போல' எனப் பரிமேலழகர் கூறினாராயின், அவ்வாறு கூறியது வாளா கூறியதன்று; வேண்டுமென்றே கூறியது; ஆழ்ந்த கருத்தோடு கூறியது. மேற்போக்காகக் கூறியதன்று; பிழைபடக் கூறியதுமன்று. 'அவை போல' என எழுத்துக் களுக்கு உவமையாகக் கொள்ளப் பரிமேலழகர் இசைந்தா

ரிலர்; முதலாக உடைய தன்மைக்கும் உவமையாகக்கொள்ள அவர் இசைந்தாரிலர். இவ்வாறு உரை காண்பது சிறந்த உரையாக அவருக்குத் தோன்றிற்றில்லை போலும்! அவர் சிறந்த உரையாகக் கருதியது எது என்பதை அவர் விளக்க உரை காட்டும். அவர் எக்கருத்தோடு 'அது போல' என்னும் உவமைச் சுட்டை ஆண்டார் என்பதை அவர் விளக்க உரையே காட்டும். அவர் விளக்க உரையைக் காணு முன் அவை போல என உவமையை விரித்தால் அல்லது அவ் வண்ணமே என உவமையை விளக்கினுல் என்ன இடர்ப்பாடு நேர்கின்றது, அல்லது சிறப்பின்மை எவ்வாறு ஏற்படு கின்றது என்பதைக் காண்போம்.

'எழுத்துக்களெல்லாம் அகரமாகிய முதலே உடையன. அவை போல உலகு ஆதி பகவனுகிய முதலே உடையது,' என்று கூறும்போது எழுத்துக்களுக்கும் உலகுக்குமே உவமை அமைகின்றது; இவ்வாறு உவமையை விரித்தால் உலகிற்கே தலைமை அல்லது கிழமை ஏற்படுகின்றது. 'உலகு ஆதி பகவனுகிய முதலே உடையது,' என்பதில் எது எழுவாய்? உலகு எழுவாய், எது உடையது? உலகு உடையது. எதை உடையது? ஆதிபகவனை உடையது. இவ்வாறு பொருள் கண்டால் கடவுளை (ஆதிபகவனை) உலகிற்கு ஓர் உடைமையாக அன்றோ கொள்ளல் நேர்கின்றது? கடவுளையே தன்னுடைய உடைமையாகக் கொள்ளும் பெருமை உலகிற்கு எவ்வாறு பொருந்தும்? உலகத்திற்கா உடைமை, அதுவும் கடவுளா உடைமை? அந்தோ! இவ்வாறு வள்ளுவர் கருதுவார்? கடவுளுடைய உடைமை உலகு. கடவுளன்றோ உலகத்தை உடையவர்? இந்த உண்மையைத் தலைகீழாக மாற்றி, உலகு கடவுளாகிய முதலே உடையது எனப் பொருள்படுமாறு வள்ளுவர் எழுது வாரா? இவ்வாறு கொள்ளும் உரை சிறப்பற்றது. அவ்

வண்ணமே என்று கொள்ளினும் இதே சிறப்பின்மை ஏற்படு கின்றது. கடவுளின் தலைமையைக் குறைத்து மற்றொன்றிற்கு—அவர் படைப்பில் ஒன்றிற்கே—கடவுளை உடைமை யாக்கும் இடர்ப்பாடு நேர்கின்றது என்றெல்லாம் பரிமே லழகர் கருதினர் போலும்! இவற்றை விலக்கி, விளக்கம் காண்கின்றது அவர் விளக்க உரை. அவர் விளக்க உரையைக் கீழே காண்க.

"இது தலைமை பற்றி வந்த எடுத்துக்காட்டு உவமை. அகரத்திற்குத் தலைமை விகாரத்தானன்றி நாத மாத்திரை யாகிய இயல்பாற்பிறத்தலானும், ஆதி பகவற்குத் தலைமை செயற்கை உணர்வானன்றி இயற்கை உணர்வான் முற்றும் உணர்தலானுங் கொள்க. தமிழெழுத்திற்கே அன்றி வட வெழுத்திற்கும் முதலாதல் நோக்கி 'எழுத்தெல்லாம்' என்றார். ஆதி பகவன் என்னும் இரு பெயரொட்டுப் பண்புத் தொகை வடநூன்முடிபு. உலகென்றது ஈண்டு உயிர்கண்மேனின்றது. காணப்பட்ட உலகத்தால் காணப் படாத கடவுட்கு உண்மை கூறவேண்டுதலின், 'ஆதி பகவன் முதற்றே' என உலகின்மேல் வைத்துக் கூறினர். கூறின ரேனும், உலகிற்கு முதல் ஆதி பகவன் என்பது கருத்தாகக் கொள்க. ஏகாரம் தேற்றத்தின்கண் வந்தது. இப்பாட்டான் முதற்கடவுளது உண்மை கூறப்பட்டது."

இந்த விளக்க உரையில் இங்குப் பொருத்தமானது ஈற்றிலுள்ள பகுதியே. "காணப்பட்ட உலகத்தால் காணப் படாத கடவுளுக்கு உண்மை கூற வேண்டுதலின் 'ஆதி பகவன் முதற்றே உலகு' என உலகின்மேல் வைத்துக் கூறினர்" என்பது நாம் இப்போது உணரவேண்டிய பகுதி. தெளிவின்பொருட்டு இப்பகுதியையும் இரண்டாகப் பிரித்து உரை காண்போம்.

" உலகின்மேல் வைத்துக் கூறினர்." .

உலகின்மேல் வைத்துக் கூறினர் என்பது எப்பொருள் தருகின்றது? உலகின்மேல் எதை வைத்துக் கூறினர்? உடைமையை வைத்துக் கூறினர். வைத்துக் கூறினர் என்றால், என்ன பொருள்? அந்த உடைமை உலகுக்குரிய தன்று. அதை உலகின்மேல் தூக்கி வைத்தார். உலகின்மேல் சுமத்தினர் என்று பொருள்படும். உடைமை யாருடையது? உலகுடையதன்று. உலகுக்கு உரியதானால் அதனுடனே அவ்வுடைமை இருப்பதியல்பு. அதை அதன்மேல் வைப்ப தில்லை. உடைமை வேறு யாருடையது? கடவுளுடையது. கடவுளுடைய உடைமையை உலகின்மேல் வைத்துக் கூறினர். கடவுளுடைமையைப் பறித்தார் என்று கூடப் பொருள் கொள்ளலாம். அதை உலகுக்கு அளித்தார். அது ஏற்றுக்கொள்ள மறுத்தது. பிறருடைய உடைமையை ஏற்கும் பேதையேன் அல்லேன் என்று உலகு மறுத்ததோ, பாவம், சேர்ப்பது பறிமுதல் சொத்து என்று மறுத்ததோ தெரியவில்லை. உலகு அதை ஏற்றுக்கொள்ளவில்லை. வள்ளுவர் அதன்மேல் வைத்துவிட்டார். இப்பொருள் எல்லாம் இசைக்கின்றது பரிமேலழகர் உரை. இங்குப் பரிமேலழகர் கூறியது உலகிற்குக் கொடுத்துக் கூறியதன்று; உலகிடத்திற் கண்டு கூறியதன்று; இல்லாததை ஏற்றி வைத்துக் கூறியது. உலகின்மேல் வைத்தது, வள்ளுவர் செயல். அவ்வாறாயின், வள்ளுவர் செய்தது வழிப்பறி குற்றம். அவரையும் பின்பு திறன் ஆய் மன்றிற்கு இழுப்போம். அவர் வாய்மொழியை யும் கேட்போம். இப்போது நாம் காண வேண்டுவது வள்ளுவர் அவ்வாறு உலகின்மேல் வைத்துக் கூறியதற்குக் காரணம்; பரிமேலழகர் இதற்குக் கூறும் காரணத்தை ஆராய்வோம்.

" காணப்பட்ட உலகத்தால் காணப்படாத கடவுளுக்கு உண்மை கூறவேண்டுதலின் "

என்பது அவர் காட்டும் காரணம்.

இக்காரணமும் எளிதாக விளங்குவதன்று. இதற்கு நீண்டதொரு விளக்கம் வேண்டும். விளக்கத்தைக் காண்போம். காணப்பட்ட பொருளால் காணப்படாததொன்றை அறிதல் என்பது அளவை முறை. அளவை முறைகள் பல. அவற்றுள் இங்குக் குறித்தது கருதலளவை அல்லது அநுமானப் பிரமாணம். இதை ஓர் எடுத்துக்காட்டால் விளக்கலாம். மலைமேல் புகை காணப்படுகிறது. நெருப்பின்றிப் புகையில்லை என்பது இயற்கை உண்மை. ஆதலினால், புகையைக் கண்டால், புகைக்குக் காரணம் நெருப்பு உண்டென்று அனுமானிக்கிறோம்; கருதிக் காண்கிறோம். புகை காணப்பட்டது. நெருப்பு மலை மேலிருப்பது; கண்ணால் காணப்படாதது. கண்டதைக்கொண்டு அதற்குக் காரணம் எது என்று கருதுகிறோம்; முதல் எது என்று கருதுகிறோம். நெருப்பிருந்த காரணத்தால்தான் புகை என்னும் காரியப் பொருள் உண்டாயிற்று எனத் துணிகிறோம். காணப்பட்ட புகைக்குக் காணப்படாத நெருப்பு முதல் என்னும் முடிவுக்கு வருகிறோம். இவ்வாறே வள்ளுவர் அளவை முறையால் கூறவேண்டும் என்று கருதினார். காணப்பட்டது உலகு. எப்படி இது வந்தது? இதற்கு ஒரு காரணம் உண்டு. இதற்கு ஒரு முதல் உண்டு. அது காணப்படாத முதல், ஆதி பகவனாகிய முதல். உலகிற்கு முதல் ஆதி பகவன் என்று உணர்த்த வேண்டுதலின் உலகு ஆதி பகவனாகிய முதலை உடைத்து என்று உலகின்மேல் வைத்துக் கூறினார் என்பது அவர் தரும் விளக்கம்.

இவ்விளக்கத்திற்கு இன்னும் விளக்கம் வேண்டும். வள்ளுவர் 'உடையது' என்று கூறியிருந்தும் உடையது

என்னும் சொல்லையே அது தரும் பொருளையே விட்டுவிடல் வேண்டும். உடைமைப்பொருள் இங்குக் கொள்ளுதல் தவறு. இது வள்ளுவர் கருத்தன்று. வள்ளுவர் கூறியபடி உலகு எழுவாய். உலகு உடையது. அதன் உடைமை கடவுள். எழுவாயாக உலகைக் கூறியதால் அது முதன்மை பெறு கிறது. அவ்வாறு கொள்வதும் தவறு. அது வள்ளுவர் கருத் தன்று. 'ஆதி பகவன்' (கடவுள்) முதன்மையானவர். அவர்தாம் இங்கு எழுவாயாக இருத்தல் தகும். ஆதலின் உலகிற்கு முதல் ஆதி பகவன் என்று கொள்ளல் வேண்டும். இதுதான் வள்ளுவர் கருத்து. இஃது அளவை முறைப்படி கொள்ள வேண்டிய கருத்து என்பது பரிமேலழகர்தம் விளக்கம். இவற்றை உணர்த்துவது 'உலகின்மேல் வைத்துக் கூறினர். கூறினரேனும், உலகிற்கு முதல் ஆதி பகவன் என் பது கருத்தாகக் கொள்க' என்னும் அவர் உரையின் பகுதி.

## இவ்வுரை கொள்ளத் தக்கதா?

'பரிமேலழகர் கூறிய பொருள் பொருந்துவதாகுமா? கொள்ளத் தகுவதா?' என இப்போது ஆராய்வோம். "ஆதி பகவன் முதற்றே உலகு," என்பதில் உலகு எழுவாய் எனக் கண்டோம். "உலகிற்கு முதல் ஆதிபகவன்," என்பதில் ஆதிபகவன் எழுவாய். வள்ளுவர் அமைத்த எழுவாய் உலகு; பரிமேலழகர் அமைத்த எழுவாய் ஆதிபகவன். தம் கருத்தின் படி எதை எழுவாயாக அமைக்கவேண்டும் என்பது தெரியா தவரா வள்ளுவர்? எழுவாய்கூட அமைக்கத் தெரியாமலா வள்ளுவர் நூல் எழுத முன் வந்தார், சிறந்த ஆசிரியரும் ஆனர்? ஒரு நூலாசிரியன் அமைத்த எழுவாயையே மாற்றி உரை காணல் உரையாசிரியரின் பண்பாகுமா? அவ்வாறு மாற்றிக் கூறிய உரையும் தக்கதாகுமா? கருதுக.

வள்ளுவர் அளவை முறையால் காரண காரிய முறைப்படி உலகிற்கு முதல் ஆதி பகவன் என்று கூற வேண்டுமானால் அவ்வாறே கூறியிருப்பர். உலகிற்கு முதல் ஆதி பகவன் என்னும் கருத்துத் தோன்றக் குறளை அமைப்பது அவருக்குக் கடினமாகுமா? அவ்வாறு அவர் கூறக் கருதியிருந்தால் இக்கருத்தை மிக எளிதாகப் பாட்டில் அமைத்திருத்தல் கூடுமே! "ஆதி பகவன் முதற்றே உலகு," என்பதற்குப் பதிலாக, "ஆதி பகவன் முதலே உலகு" என்று அமைத்துவிட்டால் அது உலகிற்கு முதல் ஆதி பகவன் என்னும் பொருளைப் பயந்து நிற்குமே! இப்பொருள் தோன்றாவிடினுங்கூட உடைமைப்பொருள் ஓடியேவிடுமே! இப்படி அமைக்கத் தெரியாதவரா முதற்பாவலர், குறட்பா அரசர்? முதலே உலகு என்று எளிதாகப் பாட்டு அமையவும் அதை விட்டுவிட்டுக் கிழமைப் பொருண்மையும் உடைமைக் கிழமையும் தோன்ற 'முதற்று' என்று கொண்டு, அஃதோடு நில்லாது தேற்றேகாரத்தையும் சேர்த்து முன்பு கண்டபடி யாப்புக்குப் பொருந்த முதற்றே எனச் செய்யுள் செய்தவெல்லாம் வள்ளுவர் வீணைகச் செய்தனவா? கருதாது செய்தனவா? உடைமைப் பொருளே இங்குக் கொள்ளல் வேண்டும் என்று செய்தனவா? கொள்ளுதல் வேண்டா எனச் செய்தனவா? எவ்வளவு கருதிக் கருதி உடைமைப் பொருள் தோன்ற வேண்டுமென்றே, வெளிப்படையாகக் கூறியதைப் பொருளற்றதாகத் தள்ளிவிடுதல் கூடுமா? அதைத் தள்ளிவிட்டு வேறு பொருள் அதற்குக் காண்பது முறையாகுமா? கருதாக. கருத்து ஒன்று இருக்க, சொற்கள் மற்றொன்று காட்ட, வள்ளுவர் செய்யுள் செய்தார் என்று கருதல் தகுமா? கருதாக; கருதாக.

கிழமைப் பொருண்மையும் உடைமைக் கிழமையும் யாருக்குத் தேவை? வேண்டப்படுவது விளக்கமே. இன்னும்

விளக்கம் கண்டிலோம் என்று கருதுவோரும் உளர். முற்காலத்தே விளங்காப் பொருளை விளக்க, ஆரியச் சான்றுகள் காட்டுதல் வழக்கம். 'அறிவெனப்பட்டது ஆரிய முதற்றே' எனக் கொண்டது அக்காலம் ; ஆரியத்தையே அண்டியும் பிழைத்தது. ஆரியத்தை வெருட்டி ஓட்டுவது இக்காலம். இன்று ஆரியமொழியை அணுகியபோதிலும், ஆவது ஒன்றுமில்லை. 'அறிவெனப்படுவது ஆங்கில முதற்றே' என்பது இக்காலப் பண்பு. சில ஆங்கிலச் சொற்கள் மூலமாவது இங்கு விளக்கம் காண்போம்.

### உடைமைப் பொருளின் சிறப்பு :

இங்கு ஒரு வழக்கு—உடைமை வழக்கு—உலகத்தின் உடைமை கடவுள் என்பது வள்ளுவர் வழக்கு. பரிமேலழகர் உலகத்திற்குக் கடவுள் எப்படி உடைமையாக முடியும் ? உடைமை உலகுக்கு உரியது அன்று என்று மறுக்கிறார். இதற்குத் தக்கவாறு வள்ளுவர் கருத்தையே திருத்திக் கொள்ளல் வேண்டும் என்பது அவர் உரை. இந்த வழக்குக்கு முடிவு காணல் வேண்டும். உடைமை என்பது ஆங்கிலத்தில் (Property) சொத்து என்று பொருள்படும். சொத்து (Property) என்று கூறியவுடனே அதற்குரிய நிலைகள், அதைக் குறித்த சட்டங்கள், சொத்தை உடையதாம் தன்மை (Ownership or possession), அதை உடையவன் உரிமை (Rights of the owner) யாவும் தற்காலத்தின் முன்னே உருவெடுத்து நிற்கும். ஆ ! கடவுளையா உலகத்தின் சொத்து (Property) என வள்ளுவர் கூறினர் ? உலகத்தின் கையில் உடைமையாகவா அகப்பட்டார் கடவுள்! அப்படியாயின் சொத்தைப் பற்றிய சட்டங்களெல்லாம் அதற்குப் பொருந்துமே ! துய்ப்பு அல்லது நுகர்வின் உரிமை (அநுபோக பாத்தியம்) அதற்கும் உளதாகுமே ! ஆம். இருபது

ஆண்டுகளல்ல ; அறுபது ஆண்டுகளல்ல ; ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளாக உலகம் உடைமையாகக் கொண்டு நுகர்ந்து நுகர்ந்து பெற்ற உரிமைகளெல்லாம் பரிமேலழகர் பறிக்கப் பார்க்கின்றார். தொடக்கத்தே உடைமை யாருடையதாயினும் ஆகுக. எண்ணற்ற ஆண்டுகளாக நுகர்ந்து நுகர்ந்து உடைமையை உலகு தன்னுடையதாக்கிக்கொண்டது. இதன் நுகர்வால் இன்பம் துய்த்தவர்கள் எத்தனை மக்கள் ? ஈடேறியவர்கள் எத்தனை எத்தனை மக்கள் ? கணக்கிடுதல் முடியுமா ? அத்தனை மக்களும் வேண்டுமாயின் உடைமை யாருடையதென்று சான்று பகர்வார்கள்.

உடைமையின் உடன் பிறந்தது வழக்கெனப்படுவது. என் சொத்து, உன் சொத்து என எங்கும் வழக்கு, என்றும் வழக்கு ; உடைமை பிறந்த நாள் முதல் வழக்கு. என் 'தெய்வம் உன் தெய்வம் என்று எங்கும் தொடர்ந்து எதிர் வழக்கிடவும் நின்றது எது ?' உடைமை, உடைமை ; உடைமையாய்க் கொண்டதன் விளைவு. உடைமையாய்க் கொண்டதால் தான் வழக்கு, எங்கணும் பெருவழக்கு. ஒருவர் சொத்தை மற்றொருவர் கொள்ளாதவாறு குறிகள் இட்டுக் கோவிலில் பூட்டினர். திருநீறிட்டும் திருமண் சார்த்தியும் திருடாது காத்தனர். திருநீற்றை மாற்றித் திருமண் இட்டும் திருமண்ணை மாற்றித் திருநீற்றை இட்டும் திருடியதாக வழக்குகள் இலவா ?

உடைமையை உடையவன் தன் கருத்தின்படி எல்லாம் ஆளலாம் ; ஆக்கலாம் ; அழிக்கலாம். இவை சொத்தை உடையோனின் முதன்மையான உரிமைகள். இவற்றை மாற்றுதல் யாராலும் இயலாதது; தடுத்தலும் முடியாதது. ஆதலால் தான் ஆயிரம் ஆயிரம் செலவிட்டு அணிகள் பூட்டிப் பணிகள் செய்து, கண்ணார, உளம் குளிர, கண்டு கண்டு, களிப்பெய்திப் பாடுகின்றனர் ; ஆடுகின்றனர் ஒருபால். மற்றொருபால்

மொட்டையடித்து முழுநீறு பூசி முன்னின்று அழுகின்றனர். கடவுள்கூட "அவ்வாறு செய்பவரின் உடைமைதான் நாம்; ஒன்றும் பேச இடமின்று; உரிமை அவர்களுக்கே," என்று கருதிவிட்டனர்போலும்! கருதாவிடின், மொட்டைபோடத் தலையைக் கிட்டவும் விடுவரா? உடன்பட்ட அல்லது உடன்பாட்டு உரிமையும் உண்டாயிற்று போலும்! இவையெல்லாம் உடைமையின் விளைந்த உரிமை—உடைமைப் பாத்தியம்—அன்றி வேறு எது? இத்தகு உரிமையை—உடைமையின் உரிமையை—உலகு ஒரு கணமேனும் விட்டுக்கொடுத்தல் இயலுமா?

உடைமை இரண்டு வகைப்படும்; ஒன்று பொருள் உடைமை; மற்றொன்று ஆள் உடைமை; அல்லது ஆளை அடிமையாக உடைமை. பொருள் உடைமை ஒரு புறம் இருக்க, ஆள் அடிமையின் உரிமையை உலகம் விட்டுக் கொடுத்ததில்லை. இறைவன் மண்ணைச் சுமந்ததும் மாறன் அடித்ததும் ஆள் அடிமையால் விளைந்த உரிமையைக் கொண் டல்லவா? சுந்தரர் வாழ்க்கையைச் சற்று நோக்குக. இறைவர் சுந்தரரை ஆட்கொண்டாரா? இறைவர் ஆட் கொண்டதாக நூல்கள் பேசும். ஆனால் உண்மையாக நிகழ்ச்சி முறையில், சுந்தரர் வாழ்வின் நிகழ்ச்சிகளில் சுந்தரருக்கே இறைவர் ஆளாகி உழைத்தார். அந்தோ! அவருக்கு ஏவல் குறுந்தொழில் யாவையும் செய்தார். ஈதெலாம் உடைமை யின் பெற்ற உரிமையால் விளைந்தவையல்லால் வேறு எவை?

பரிமேலழகர் உயர்ந்த தத்துவ நிலையில் நின்று அளவை முறையால் உரை காணவும் அதற்கு மறுப்புத் தாழ்ந்த நிலை யாகிய உருவ வழிபாட்டில் நின்று கூறுவதா? அவருடன் ஒத்த நிலையில் இருந்து, ஒரே படியில் இருந்து, மறுப்புக்கூறு தல் இயலுமானால் அதுவே பொருந்தும் என்பர். இஃதும் உண்மையே. பொருள் மட்டுமன்றி, ஆள் மட்டுமன்றி, கருத்தும்

கொள்கையுங்கூட உடைமையாகும். கடவுள் உண்டென்று கண்டவர் யார்? அவர் உலகிற்கு முதல் என்று கண்டவரும் யார்? கடவுள் எங்கேயாவது தாமே தோன்றி, "ஏ! மூட உலகமே, இதோ கண்டுகொள். நான்தான் கடவுள். நான்தான் ஆதி பகவன். நான்தான் உனக்கு முதல். நீ என்னுடைய உடைமை," என்று கூறி வெளிப்பட்டதுண்டா? இல்லை இல்லை. அவ்வாறு ஓரிடத்திலும் நிகழ்ந்ததில்லை. அன்றும் நடந்ததில்லை; இன்றும் நடக்கின்றதில்லை; இனி நடப்பதுமில்லை. உலகம் ஆயிரம் ஆயிரம் ஆண்டுகள் உழைத்து அரும்பாடு பட்டுத் தேடியது இந்த உடைமை; கடவுள் உண்டெனும் உடைமை; அவரே தனக்கு முதலென்னும் உடைமை. இதைக் காண உழைத்தவர்கள் கணக்கற்றவர்கள். கண்துயில்கொள்ளாது காலமெல்லாம் உழைத்தும், கருதிக் கருதி மூளையே குழம்பியும், காலில் நின்றும் கடுந்தவம் செய்தும், உண்ணாது ஒழிந்தும் ஊரைவிட்டோடியும், உண்மையைக் காண உழைத்தவர்கள் எத்தனை எத்தனை பேர்கள்! இவ்வாறு அரிதில் தேடிய அரும்பெறல் உடைமையன்றோ கடவுட்கொள்கை, கடவுள் முதல் எனும் கொள்கை? கடவுட்கொள்கையைவிடச் சிறந்த உடைமை வேறு எது? மாட மாளிகைகளும், நாடும் நகரமும், ஊரும் பேரும், ஆடையும் அணியும் உலகிற்குச் சிறந்த உடைமைகள் ஆவனவா? உலகம் கண்ட மின்சார ஒளியும், வானொலிப் பெட்டியும், இசையின் தட்டும், இயந்திரப் பெருக்கமும், வான ஊர்தியும், ஈனக் குண்டும் இதற்கு ஈடாவனவோ? மக்களை உயர்த்திய உடைமை! உயிரை வளர்த்த உடைமை! உள்ளத்தை உருக்கிய உடைமை! ஒன்றுமாறு உணர்த்திய உடைமை! மதிப்பிடற்கரிய உடைமை! மட்டிலாப் புகழ் வாய்ந்த உடைமை! மறக்கமுடியாத உடைமை—இக்கடவுட்கொள்கை! இதைவிடச் சிறந்த உடைமை, உயிர் நலம் தரும்

உடைமை, வேறு யாதுளது? இவ்வுடைமை இல்லையேல் மக்கள் நிலை எவ்வாறு இருந்திருக்கும் என்று கருதிப்பார்த்தல் வேண்டும். இவ்வுடைமை இல்லையேல், மக்கள் மக்களாய் வாழ்ந்திருத்தல் முடியுமா? உயர்ந்திருத்தல் முடியுமா? நாடு நாடாதல் முடியுமா? மக்கள் எல்லாம் மாக்களாய் இன்றும் திரிகுவர். காணப்படாத கடவுள்தன்னைக் கண்டனன் ஒருவன். அவன் யார்? மெய்கண்டான் எனும் மேதகு சிறுவன். சுற்றி வளைத்தான்; சுருக்கிப் பிடித்தான்; சூத்திரக் கயிற்றால் கட்டியே போட்டான். கடவுளைக் கண்டு பிடித்த உடைமை, கண்டு எடுத்த உடைமை, யாருடையது? கண்டெடுத்த சொத்துக் கண்டெடுத்தவனுக்கே உரியது. அவன் நாட்டிற்குரியது; அவன் உலகுக்கு உரியது. இந்த உடைமையை யாரும் அசைத்தல் முடியாது; பெயர்த்தலும் முடியாது. அதைப் பறிக்கக் கருதினால் பெறுவது அடி. சொல்லால் அடிமட்டும் அன்று, வில்லாலும் அடி. பார்த்தன் தந்த அடியினும் பருத்த அடி. உடைமை என்னும் கருத்தின் ஆழத்தைக் காண்க! அழகைக் காண்க! எவ்வளவு எவ்வளவு பொருள்களை முதற்றே என்ற சொல் அமைப்பு ஒரு சிறு சொல் அமைப்பு அடக்கி நிற்கின்றது! இசைத்து நிற்கின்றது காண்க! காண்க! கண்டு மகிழ்க!

## பரிமேலழகர் உரையின் அமைவு :

இவ்வாறு உண்மை இருக்கவும், பரிமேலழகர் அவ்வாறு ஏன் உரை கண்டார்? தவறு அவருடையதன்று. நாம் முன்பு கண்டவாறு காலத்தால் விளைந்தது தவறு. இறைவனையே உடைமை எனக்கொள்ளும் பெருமை உடைத்து இவ்வுலகு, வள்ளுவர் காலத்தில். அக்காலம் தமிழன் தலை எடுத்து நின்ற காலம், தலை நிமிர்ந்து நடந்த காலம், தமிழன் தன் உரிமையெலாம் பெற்றிருந்த காலம். எல்லாம் தன்

உடைமை என்று இறுமாந்திருந்த காலம். இதன் பிறகு அடிமையே உலகு, ஆண்டான் தலைவன் என்ற பெருமை பிறங்கிற்று உலகு. இது பரிமேலழகர் காலத்தில். ஆண்டான் அடிமைத்திறம் பரிமேலழகர் காலத்தில் தழைத்து நின்றது என்பர். உடைமைப் பொருளை வள்ளுவர் குறளில் கண்டது பரிமேலழகர்தம் நுண்ணறிவு—நுண்மாண் நுழை புலம். இதைக்கண்டு நடுங்கிற்றுப்போலும் அவர் அறிவு! பரிதவித்தது போலும் பண்பட்ட உள்ளம்! கடவுட்கொள் கையால் கனிந்த அவர் உள்ளம் வள்ளுவர் கருத்தைக்கண்டு எப்பாடு பட்டதோ! எப்படி எப்படித் தவித்ததோ! 'அரிய பெரிய புலவர் இவ்வாறு இறைவனைத் தாழ்த்திக் கூறுதல் தகுமோ! முற்றிய அறிவிலா மக்கள் இதை எவ்வாறு கருதுவர்? இறைவனுக்கு இழிவு நேர்ந்தது மட்டுமன்றி, நாட்டுக்கும் இதனால் இழிவு நேரும்; தீமையும் நேரும்,' என்று கருதினார் போலும்! அவர் அறிவு அவருக்குத் துணைநின்றது. அவர் புலமை அவருக்கு வழிகாட்டிற்று. வள்ளுவர் அமைத்த எழுவாயையே மாற்றத் துணிந்தார்; மாற்றி வள்ளுவர் கருத்திற்கு ஓர் அமைவு கண்டார். உருவெடுத்தது அவர் உரை. அவர் கருத்தின்படி அவர் காலத்திற்கேற்ப உரை கண்டது தவறுடையதன்று. வள்ளுவர் காலத்தே "உலகைப் படைத்தவன் பகவான்." உலகிற்கு முதல் ஆதி பகவன் என்று எழுதியிருப்பாரானால், அஃது அக்காலத்தே—சமயக் கணக்கர் தம் திறமெலாம் கண்ட அக்காலத்தே—தமிழ் நாடு அறிவே உருவாய் நின்ற அக்காலத்தே—நகைப்புக்கிடமாகும். பரிமேலழகர் காலத்திலோ, வள்ளுவர் வெளிப்படையாகக் கூறியபடி உரை கண்டிருந்தால் அது நகைப்புக்கு மட்டுமன்றி, ஏச்சுக்கும் இடம் தந்திருக்கும். இன்னும் உடைமையின் அழகையும் உலகம் என்பதன் பொருளையும் பின்னே காண்போம். இந்த உடைமைப்பொருள் நம் பொறுமையை ஒடித்தது;

புழுங்கவும் செய்தது. இதை இப்போது இங்கு விட்டுவிடுவோம். பரிமேலழகரைத் தொடர்வோம். அவரை விட்டு விடுதல் தவருக முடியும். உண்மையைக் காணும் உரனைத் தந்தது அவர்தம் உரையே. உரையாசிரியருள் உடைமைப் பொருண்மையின் நுட்பத்தைக் கண்டவர் பரிமேலழகர் ஒருவரே. என்னே அவர் நுண்மாண் நுழைபுலம்! என்னே அவர் புலமையின் ஆழமும் நுட்பமும் !

" ஆதி பகவன் முதற்று," என்பதற்கு " ஆதி பகவனை முதலை உடையது," எனப் பொருள் கூறி, அவ்வுடைமைப் பொருளில் பொதிந்து கிடக்கும் நுட்பத்தைக் கண்டு அவ்வுடைமைப்பொருளை மாற்றப் பரிமேலழகர் எவ்வளவு எவ்வளவு முயன்றுள்ளார், காண்க. தாம் கற்ற கல்வி எல்லாம் காட்டியும், தம் ஆற்றலை எல்லாம் அழைத்து நிறுத்தியும் வெற்றி பெற்ருரிலர். ஏன் இவ்வாறு இடர்ப்படுதல் வேண்டும்? முதற்று என்பதற்கு வேறு சிலர் உரை கூறுவது போல வேறு பொருள் கூறிவிட்டால் இடரெல்லாம் நீங்குமே! உடைமைப் பொருளை நீக்கி உரை கண்டால் இடர்ப்பாடு ஏதும் நேராதாகுமே ! தாம் கண்டவுரை தம் கடவுட்கொள்கைக்குப் பொருந்தாதிருந்தால் வேறு உரை காண்பதுதானே முறை? உடைமைப்பொருளை உண்டுபண்ணிக்கொண்டு பின்பு ஏன் அதைத் தகர்த்தல்வேண்டும்? "இவ்வாறு கூறிஞரேனும் இது கருத்தாகக் கொள்க," என்றெல்லாம் ஏன் அமைவு காணல் வேண்டும்? வேறு பொருள் காண இலக்கணம் இடம் தந்திலது. இலக்கண வரம்பே தன் இயல்பாகப் பெற்றது தமிழ் மொழி. இவ்விலக்கண வரம்பில் இம்மியும் இகவாதது பரிமேலழகர்தம் உரை. அவர் இலக்கண அறிவின் ஆழமும் நுட்பமும் வியக்கத்தக்கன. இவை பின்னர் விளக்கப்படும்.

இதுகாறும் கூறியவற்ருல் என்ன உணர்கின்ருேம்? வள்ளுவர் உவமப்பொருளுக்குக் கூறிய சொற்கள் வெளிப்

படையாகத் தரும் பொருளைப் பரிமேலழகர் கொண்டாரிலர். சொற்கள் ஒருவாறு பொருள் தரினும், அப்பொருள் வள்ளுவர் கருத்தன்று ; உலகிற்கு முதல் ஆதி பகவன் என்பதே வள்ளுவர் கருத்து எனப் பரிமேலழகர் தம் விளக்க உரையில் உவமப்பொருளைத் திருத்தி அமைத்தார். இவ்வாறு உவமப் பொருளைத் திருத்தியதற்கேற்ப உவமையையும் திருத்துதல் வேண்டாவோ ? திருத்தம் பெறாது பொழிப்புரையில் அமைந்தவாறே அவ்வுவமை பொருள் தருதற்கு வல்லதோ எனக் காண்போம்.

பரிமேலழகர் திருத்தியமைத்த கருத்தை அவர் பொழிப்புரையில் அமைப்போம். " எழுத்துக்கள் எல்லாம் அகரமாகிய முதலை உடையன. அது போல உலகிற்கு முதல் ஆதி பகவன்,'' என அவர் பொழிப்பு அமைகின்றது. இதில் பொருளும் உவமையும் பொருந்துதல் இன்று. உவமையும் பொருளும் ஒத்தல் வேண்டும் என்பது இலக்கணம். இங்கு அவை ஒத்திருத்தலைக் காணோம். உவமை ஒருவழிச் செல்லப் பொருள் மற்றொரு வழியே செல்கின்றது. " அது போல என்றால், எது போல ?'' என்று முன்பு எழுந்த கேள்விக்குப் பதில் அறிதற்கில்லை. உவமையும் பொருளும் ஒத்திருத்தலை வேண்டின், அதுபோல என்பது எதைக் குறிக்கும் என்று பரிமேலழகர் கருதினார் என்பதை அறிய வேண்டின், உவமப் பொருளின் கருத்தை மாற்றியதற்கேற்ப உவமைக் கருத்தையும் மாற்றி அமைத்தல் வேண்டும். அப்படி மாற்றி அமைத்தால்தான் பரிமேலழகர் அது போல எனக் கூறியதன் கருத்து விளங்கும். ஆனால், பரிமேலழகரோ, தம் விளக்க உரையில் உவமையையும் திருத்தி அமைத்தாரிலர். உவமையைத் தக்கவாறு கொள்க என்றும் குறித்தாரிலர். ஏன் ? சுருங்கச் சொல்லுதலே அவர் உரையின் இயல்பு. அவர் உரையை உணரவல்லவர் உவமையை ஏற்றவாறு பொருத்திப் பொருள்

காண வல்லவராதல் வேண்டும் என்று கருதினர் போலும்! உவமையை எவ்வாறு அமைத்துக்கொள்ளுதல் வேண்டும் என்பதற்குப் போதிய குறிப்புக்களை அவர் உரையிற் காணலாம். அவர் கூறிய பொழிப்புரையை மீண்டும் நினைவு கூர்வோம். "எழுத்துக்களெல்லாம் அகரமாகிய முதலை உடையன. அது போல உலகு ஆதி பகவனாகிய முதலை உடையது," என்பது அவர் பொழிப்புரை. இதில் உலகு ஆதி பகவனாகிய முதலை உடையது என்பது, 'உலகிற்கு முதல் ஆதி பகவன்,' எனத் திருத்தப்பட்டது. இனித் திருத்தம் பெற வேண்டுவது 'எழுத்துக்களெல்லாம் அகரமாகிய முதலை உடையன' என்னும் உவமைப்பகுதி. அது போல என்பது உவமைச்சுட்டு. அதாவது உவமையைச் சுட்டிக் காட்டும் சொல். அது போல என்பது ஒருமை. இச்சொல்லால் உவமையில் சுட்டப்படும் பொருளும் ஒருமையாகவே இருத்தல் வேண்டும் என்பது இலக்கண விதி. "உலகிற்கு முதல் ஆதி பகவன்" என்னும் திருத்திய உவமப் பொருளுக்கேற்ப உவமையும் அமைதல் வேண்டும்; அதுவும் ஒருமைச் சொல் கொண்டு அமைதல் வேண்டுமானால், உவமையை எவ்வாறு மாற்றல் வேண்டும்? "எழுத்திற்கெல்லாம் முதல் அகரம்," என மாற்றி அமைத்தால் உவமை பொருத்தமுள்ளதாகும். 'எழுத்திற்கெல்லாம் முதல் அகரம்; அது போல (அகரத்தைப் போல) உலகிற்கு முதல் ஆதி பகவன்' என உவமையும் பொருளும் அமைகின்றன.

இதுவே பரிமேலழகர் கருத்தாகுமா? இவ்வளவு கருதிக் கருதியா "அது போல" என்னும் சொல் தொடரைப் பொழிப்புரையில் சேர்த்தார்? ஈதெலாம் வலிந்து பொருள் கொண்டதாக முடியும் என ஐயுறல் வேண்டா. உரைத்திறன் காண்பதாகப் பரிமேலழகர்தம் உரையைக் கண்டவாறெல்லாம் சிதைத்ததாகும் என்வும் ஐயுறல் வேண்டா.

மேலே கூறிய பொருத்தம், உவமையின் அமைவு முதலிய எல்லாம் நுண்மாண் நுழைபுலம் மிக்க புலவர் காரி ரத்தினக் கவிராயர் காட்டியவைகளே. இக்கவிராயர் தம் உரைத்திறத்திலும் செறிவிலும் ஆழத்திலும் பரிமேலழகரோடு ஒருங்கெண்ணத்தக்கவர் என்பதைத் திருக்குறளுக்கும் தொல்காப்பியத்திற்கும் இவர் எழுதிய 'நுண்பொருள் மாலை' காட்டும். பரிமேலழகர் உரையில் விளக்கமில்லாப் பகுதிக்கு விளக்கம் காண்பதும், பொருத்தமற்றவை என்னும் பகுதிக்குக் கவிராயர் பொருத்தம் காண்பதும் மிக நுண்மை வாய்ந்தவை. இங்கு அவர் கூறும் விளக்கத்தையும் காண்க.

"அவை போல என்னாது ஒருமையால் 'அது போல' என்றது காண்க. வாளாது எடுத்துக்காட்டுவமை என்னாது தலைமை பற்றி வந்தது என்றதனானும், முதற்றே உலகு என உலகின்மேல் வைத்துக் கூறினாரேனும், உலகிற்கு முதல் ஆதி பகவன் என்பது கருத்தாகக் கொள்க என்பதனானும் எழுத்திற்கெல்லால் முதல் அகரம் ; அது போல உலகிற்கு முதல் ஆதி பகவன் என்க," என்பது அவர் விளக்கம். பரிமேலழகர் உரையைப் போலவே அவர் விளக்க உரையும் திட்பமாகவும் நுட்பமாகவும் அமைந்துள்ளது. இவ்வாறு செறிவு தோன்றவும் சுருக்கமாகவும் உரை எழுதுவது பழைய உரையாசிரியர்களின் இயல்பு. இவ்வுரையாசிரியர்கள் சில வரிகளில் எழுதிச் சென்றவைகளை விளக்கப் பல பக்கங்கள் எழுதுதல் நேர்ந்தது.

பண்டைக் கால மக்களுக்கு—புலவருக்கும் புலவர் அல்லாதாருக்கும்—இத்தகைய உரைகள் நன்கு விளங்குவ போலும் ! அக்காலத்தே "செறிவும் சுருக்கமும் புலமைக் கழகு. ஆழமும் திண்மையும் அறிவிற்கணிகலம்," எனக் கருதப்பட்டன. இவற்றிற்கு நேர் மாறானது இக்காலம். திண்மையைக் கண்டால் திடுக்கிட்டெழுவதும், ஆழத்தைக்

கண்டால் அச்சப்படுவதும் இக்காலத்தியல்பு. என்னே மாற்றம் !

கவிராயர் தந்த விளக்கத்திலிருந்து எவை பெறப்படு கின்றன ? பரிமேலழகர் கருத்தின்படி உவமையை எவ்வாறு கொள்ளல் வேண்டும் என்பதை அவர் உணர்த்தினர்; உலகிற்கு முதல் ஆதி பகவன் என்பதற்குப் பொருந்த, எழுத்திற்கெல் லாம் முதல் அகரம் என்று கொள்ளல் வேண்டும் என்பதைக் காட்டினர். இவ்வாறு கொள்ளுதல் வேண்டுமென்பதைக் காட்டவே பரிமேலழகர் அது போல என்று (அவை போல என்னது) பொழிப்புக் கூறினர் என்றும் உணர்த்தினர். இதுவே பரிமேலழகர் கருத்து; வேறு எதுவும் அன்று என்ப தற்குக் கவிராயர் இரண்டு காரணங்களைக் காட்டினர். அவற்றில் ஒன்று உவமைப் பொருளை மாற்றி உலகிற்கு முதல் ஆதி பகவன் எனப் பரிமேலழகர் கொண்டது. இக்காரணத்தை முன்பே ஆராய்ந்தோம். கவிராயர் கூறிய மற்றொரு காரணம், "இது தலைமை பற்றி வந்த எடுத்துக்காட்டுவமை" எனப் பரிமே லழகர் கூறியது. இக்காரணம் நாம் முன்பு ஆராய்ந்ததன்று. இதை இப்போது ஆராய்தல் வேண்டும். ஆராய்வோமாக.

**"இது தலைமை பற்றி வந்த எடுத்துக்காட்டு உவமை"**

இது எடுத்துக்காட்டு உவமை என்று கூறினல் போதிய தாகுமே ! அதை விட்டுச் செட்டும் செறிவும் மிக்க உரை யாசிரியர் ஏன் 'தலைமை பற்றி வந்த உவமை' எனக் குறிப் பிடல்வேண்டும்? இந்த உவமை உடைமை பற்றி வந்த உவமை யன்று ; கிழமைப் பொருண்மை பற்றி வந்த உவமை அன்று ; எழுத்துக்களின் தன்மையைப் பற்றி வந்த உவமையன்று ; எழுத்துக்கள் ஒன்று மற்றொன்ருய் மாறுந் தன்மை அல்லது விகாரம் பற்றி வந்த உவமையன்று ; முதல் என்னும் தலைமை பற்றி வந்தது. வேறு எதைப் பற்றியும்—எந்த ஒப்புமை பற்றி

யும் வந்த உவமையன்று என்பதை 'தலைமை பற்றி வந்த' என்னும் சொல்லாட்சி வற்புறுத்துகின்றது. இதற்கேற்ப எழுத்திற்கெல்லாம் முதல் அகரம் என்று கொள்ளுதல் வேண்டுமென்பது பரிமேலழகர் கருத்து. ஆதலின், அது போல என்று பொழிப்புரையில் கூறினர் எனக் கவிராயர் விளக்கம் காட்டுகின்றது. கவிராயர் கூறிய காரணங்கள் யாவும் ஏற்றற்குரியன. அவர் காட்டிய பொருத்தமும் முடிவும் முறை பிறழாதன ; முற்றிலும் கொள்ளத்தக்கன. இனி 'எடுத்துக் காட்டு உவமை' என்பதை ஆராய்வோம்.

## எடுத்துக்காட்டுவமை :

எடுத்துக்காட்டு உவமை என்பது யாது ? இஃது இங்கு வள்ளுவர் கூறிய உவமைக்குப் பெயர். இந்த உவமைக்குப் பெயரிடுவதில் உரையாசிரியர்களுக்குள் பெரிய போட்டி. இப்போட்டியில் கலந்துகொண்டவர்கள் திருக்குறள் உரையாசிரியர்கள் மட்டுமல்லர் ; தொல்காப்பிய உரையாசிரியர்களும் கலந்துகொண்டனர். பேராசிரியர் இதை 'வேறுபட வந்த உவமத் தோற்றம்' என்றனர். சேனாவரையர் இதை 'இசை எச்சம்' என்றனர். நச்சினார்க்கினியர் அவரை மறுத்தார் ; பேராசிரியருடன் உடன்பட்டார். பரிமேலழகர் 'எடுத்துக் காட்டுவமை' என்றனர். எடுத்துக்காட்டுவமை என்பது தொல்காப்பியம் கூறிய உவமை வகைகளில் ஒன்று அன்று. எடுத்துக்காட்டு உவமை என்ற பெயர் பிற்காலத்தே தமிழ் இலக்கணத்துள் நுழைந்தது போலும் !

எடுத்துக்காட்டு உவமை என்றால் பொருளை உவமையால் எடுத்துக்காட்டுவது என்று பொருள் கொள்ளலாம். எல்லா உவமையும் இவ்வாறு எடுத்துக்காட்டுவனவே. இஃது உவமை, இஃது உவமப் பொருள் என்பது தோன்றப் போல முதலிய உவம உருபு கொடாமல் கூறுவது எடுத்துக் காட்டு

உவமை என்பர். அவ்வாறாயின், எடுத்துக்காட்டா உவமை என்று அதற்குப் பெயரிடத்தகும். ‘ அது போல இது ’ அல்லது ‘ இது போல அது ’ என்று எடுத்துக் காட்டவில்லை யாதலின், ‘இதற்குப் பெயர் எடுத்துக்காட்டா உவமை என் பதே பொருந்தும் போலும் ! இத்தகைய உவமையை ‘ மறு பொருளுவமை ’ என்பர் தண்டி ஆசிரியர். இலக்கண விளக்க நூலார் ‘ வேறுபட வந்த உவமத் தோற்றம் ’ என்பதே எடுத்துக் காட்டுவமை என்பர். வேறுபட வந்த உவமத் தோற்றம் மறுபொருள் உவமை எனினும் எடுத்துக் காட்டுவமை எனினும் ஒக்கும் என்பது அவர் கருத்து.

உவமையின் பெயர் யாதாயினும், இங்கு வேண்டு வது பொருள் ஒன்றே. பெயரைப் பற்றிய போரில் நாம் புக வேண்டா. “ போல ” என்ற அல்லது அச்சொல் போன்ற ஓர் உவம உருபை எச்சொல்லோடு சேர்த்தல் வேண்டுமோ அச்சொல்லோடு சேர்த்து வள்ளுவர் கூறுமையே இக்குழப் பங்களை விளைத்தன. ஆயினும், பரிமேலழகர் வள்ளுவர் கருத்து யாதெனை உய்த்து உணர்ந்தார். அதற்கேற்ப வள்ளுவர் சொற்களைத் திருத்தி ‘ எழுத்திற்கெல்லாம் முதல் அகரம் ; அதுபோல உலகிற்கு முதல் ஆதி பகவன் ’ என உவமையையும் உவமப்பொருளையும் கொள்ளுமாறு உரை கண்டார். ஆதிபகவனுக்கு அகரம் உவமை. அதுவும் தலைமை பற்றி வந்த உவமை என்பது பரிமேலழகர் விளக்க உரை. தலைமை பற்றி வந்த இந்த உவமையைப் பரிமேலழகர் எவ்வாறு விரித்துப் பொருள் காண்கின்றார் எனக் காண்போம். ‘ எந்த உண்மையை இத் தலைமை பற்றி வந்த உவமை விளக்கு கின்றது ? எந்தப் புலப்படாப் பொருளை இது புலப்படச் செய்கின்றது ?’ என்பதை இனிக் காண்போம்.

பரிமேலழகர் உரையை மீண்டும் சேர்தல் வேண்டும். இவ்வுவமையை விளக்கும் பகுதியைக் காண்போம். “ அகரத்

திற்குத் தலைமை விகாரத்தானன்றி நாத மாத்திரையாகிய இயல்பால் பிறத்தலானும், ஆதி பகவற்குத் தலைமை செயற்கை உணர்வானன்றி இயற்கை உணர்வான் முற்றும் உணர்தலானும் கொள்க,'' என்பது இத்தலைமையை விளக்கும் பகுதி. இங்கும் இவர் உரை எளிதே விளங்குவதன்று. இவர் உரைக்கு உரை வேண்டும். இத்தலைமையின் விளக்கத்தை இரு பகுதிகளாகப் பிரிக்கலாம். ஒன்று, அகரத்தின் தலைமையைப் பற்றியது ; மற்றொன்று, ஆதிபகவன் தலைமையைப் பற்றியது. இவ்விரு பகுதியையும் ஆராய்வோம். ஆராய்ந்த பின் ஒரு தலைமையை மற்றொரு தலைமையோடு ஒப்பு நோக்குவோம். அகரத்திற்குத் தலைமை எவ்வாறு ஏற்படுகின்றது ?

## அகரத்திற்குத் தலைமை :

" அகரத்திற்குத் தலைமை விகாரத்தானன்றி நாத மாத்திரையாகிய இயல்பால் பிறத்தலால்'' என்றார். விகாரம் என்பது யாது ? ஒன்று மற்றொன்றாய் மாறுதல் அல்லது திரிதல் விகாரம் என்பர். ஒன்றிலிருந்து மற்றொன்று தோன்றலும் தோன்றாது கெடுதலுங்கூட விகாரமாகும். தோன்றல் திரிதல் கெடுதல் விகாரம் என்பர். அன்றி என்பது அல்லாமல் என்று பொருள்படும். அகரம் இகரமாதல் உகரமாதல் உயிரெழுத்துக்கள் ஆதல், உயிர் மெய்யெழுத்துக்கள் ஆதல் அல்லது திரிதல் முதலியன அகரத்தின் விகாரம். இவ்வாறு அகரம் ஒன்று மற்றொன்றாய்த் தோன்றுதல் திரிதல் அல்லது கெடுதலால் அகரம் தலைமை பெறுதல் இல்லை. அகரத்திற்குத் தலைமை இத்தகைய விகாரத்தால் அன்று; நாத மாத்திரையாகிய இயல்பால் பிறத்தலால் தலைமை. "நாத மாத்திரையாகிய'' என்பது நாத மாத்திரமாகிய அல்லது நாதமேயாகிய என்று பொருள்படும் என்பர். நாதமேயாகிய இயல்பால் அல்லது

இயற்கையாகிய நாதத்தால் பிறப்பது அகரம் ஆதலின், அதற்குத் தலைமை. அகரம் இயற்கை ஒலி அன்று. அங்காத்தல் முதலிய செயற்கையாற்பிறப்பது அகரம். செயற்கையில் இயற்கை ஒலி அகரம் என்னல் தகும். இதைக் கருதியே போலும் இராமானுஜ கவிராயர் "ஒலி, விகாரமான செயற்கையாலும் நாதமாகிய இயற்கையாலும் பிறப்பது ஆதலின், அகரத்திற்குத் தலைமை" என்றார். பரிமேலழகர் கருத்து யாதாயினும் அவர் அளித்த தலைமை நாம் இங்கு மறுக்க வேண்டுவதன்று. நாதமேயாகிய இயல்பால் பிறத்தலால் அகரத்திற்குத் தலைமை எனவே கொள்வோம். ஆதி பகவன் தலைமை எவ்வாறு பெறுகின்றான் என்பதைக் காண்போம்.

## ஆதி பகவற்குத் தலைமை :

"ஆதி பகவற்குத் தலைமை செயற்கை உணர்வானன்றி இயற்கை உணர்வால் முற்றும் உணர்தலால்" என்றார் பரிமேலழகர். ஆதி பகவற்குத் தலைமை செயற்கை உணர்வால் அன்று. செயற்கை உணர்வு என்பது யாது ? கல்வி கேள்விகளால் ஒருவன் பெறும் உணர்வு அல்லது அறிவு செயற்கை உணர்வு. பிறர்தர வருவதும் தன் செய்கையால் சேர்வதும் செயற்கை என்பர். இயற்கைக்கு மாறானது செயற்கை. ஒருவன் இயற்கை அறிவு ஒருவனுக்கு இயல்பாக அமைந்த அறிவு. அவ்வியற்கை அறிவு செயற்கை அறிவால் மிகுதலும் உண்டு. இது மக்கள் அறிவின் இயல்பு. ஆதி பகவனின் அல்லது கடவுளின் உணர்வு வேறு வகைப்பட்டது; மக்கள் அறிவைப் போன்றதன்று. கடவுள் இயற்கையாகவே முற்றும் உணர்ந்தவர். அறிவே வடிவானவர். ஆதலின், அவருக்குச் செயற்கை அறிவு எதற்கு ? இயற்கை அறிவு குறைந்தபோது அதை நிறைக்கச் செயற்கை அறிவு வேண்டப்படும். முற்றும் உணர்வே வடிவான கடவுளுக்குச் செயற்கை உணர்வு

வேண்டற்பாலதன்று. ஆதி பகவற்குத் தலைமை செயற்கை உணர்வால் அல்லாமல் இயற்கை உணர்வால் முற்றும் உணர்தலால் ஏற்படுகின்றது.

### ஒருபுடை ஒப்புமை :

இரு வகைத் தலைமையின் விளக்கத்தைக் கண்டோம். ஒரு தலைமையோடு மற்றொரு தலைமையை ஒப்பிட்டு உவமை நயம் காண்போம். அகரத்திற்குத் தலைமை நாத மாத்திரையாகிய இயல்பால் பிறப்பது. இயல்பால் பிறந்த அகரம் அறிவற்ற பொருள் ; சடப்பொருள் என்பர். அகரமும் அதற்கு முதலான நாதமுங்கூட அறிவற்ற பொருள்களே. ஆதிபகவனோ அறிவே உருவானவன். அறிவின் தலைமை அவனுடையது. அறியாமையின் தலைமை அகரத்திற்கு அமைந்தது. இவை இரண்டிற்கும் எவ்வகை ஒப்புமை காணக் கிடக்கின்றது? இவற்றுள் ஒன்றுக்கொன்று உவமை காட்டுவதால் பெறும் பயன் யாது? இவற்றைக் கருதல் வேண்டும். எவ்வளவு கருதியும் ஒரு பயனையும் காணோம். உவமை நயம் ஒன்றையும் காணோம். மூடர்களுக்குள் தலைவன் ஒருவன். அறிவாளிகளுக்குள் தலைவன் ஒருவன் : இவர்கள் இருவருக்கும் உவமை காட்டுவது போல அமைகின்றது, பரிமேலழகரின் தலைமை பற்றி வந்த உவமை விளக்கம். மொட்டைத் தலைக்கும் முழங்காலுக்கும் ஒப்புமை காட்டியது போலவா வள்ளுவர் உவமை கூறினார்? இத்தகைய உவமையைக் கொண்டா வள்ளுவர் தம் நூலைத் தொடங்குகிறார்?

உவமை என்றால் எல்லா வகையிலும் ஒப்புமை காணுதல் இயலுமா? ஏதோ ஒரு வகையிலேதான் ஒப்புமை காண்பது முடியும். இஃது ஒருபுடை ஒப்புமை, ஏகதேச உவமை என்றெல்லாம் இலக்கணம் காட்டுவர் இலக்கணம் வல்லவர். இஃதும் உண்மையே. இவ்வாறு உவமையை விரித்துக்

கூறியது இலக்கணத்திற்கு முற்றிலும் பொருந்தும். ஆனால், இவ்விளக்கம் தரும் உண்மை யாது? இதனால் புலப்படச் செய்த புலப்படாப் பொருள் யாது? இந்த ஒருபுடை ஒற்றுமையைக் காணவா இப்பாடுபட்டோம்? கானல் நீரைக் கண்டு மயங்கினோம் போலும்! அதுபோல என்ற இடத்தில் கானல் நீர் நம் கண்ணிற்பட்டது. அதைத் தொடர்ந்தோம். நாம் தொடரத் தொடர அது தூரத் தூரச் சென்றது. விடாது பின் தொடர்ந்தோம். முடிவில் என்ன கண்டோம்? ஒன்றையும் கண்டோம் இல்லோம். ஏதோ ஒருபுடை ஒப்புமை, ஒன்றுக்கும் உதவா ஒப்புமை, ஒரு பயனும் தாரா ஒப்புமை. "பேய்த்தேர்ப்பின் குடங்கொண்டு நீர்க்குச் செல்வார்" போல நாமும் பரிமேலழகர் உரையைப் பின்பற்றிச் சென்றோம். நெடுந்தூரம் சென்றோம். இவ்வாறே சென்றால் இதற்கு முடிவு காண்பது எப்போது? இந்த உவமைக்கு வேறு உரை காண்பதற்கு வழியுண்டோ எனத் தேடுவோம். வள்ளுவர் சொற்களை மாற்றாது அவர் கூறியபடியே அவர் பாட்டில் சொற்கள் அமைந்தவாறே உரை காண்பதற்கு முயல்வோம். அப்படிக் காணும்போது ஏனைய உரையாசிரியர்களுள் சிறந்த உரையாசிரியர் உரைகளையும் ஒப்பிட்டு அவற்றின் திறனையும் காண்போம்.

## II

# இலக்கணத் திறன்

“ஆக்கல் அரிதாம் அழித்தல் மிகவெளிது
நோக்கி நுவல்க திறன்.”

—ஈரடி இருநூறு

## II

# இலக்கணத் திறன்

### உவமை, எழுத்திலக்கண உவமை :

பொருளை விளக்குவது உவமை என முன்பே கண்டோம். உவமையின் பொருளை அறிந்த பின்னரே அதன் ஒப்புமையைக் கொண்டு உவமைப் பொருளை அறிதல் எளிதாகும். ஆதலின், உவமையை நுணுகி நுணுகி ஆராய்தல் வேண்டும். முதற்குறளில் அமைந்துள்ள உவமை எழுத்திலக்கணத்தையும் எழுத்தொலி இலக்கணத்தையும் அடிப்படையாகக் கொண்டது எனவும் முன்பே கண்டோம். எழுத்தெல்லாம் அகரமாகிய முதலை உடையன என்பது, உவமை. அகரம் எவ்வாறு முதலாகின்றது, எவ்வாறு எழுத்திற்கு முதலாகின்றது, எல்லா எழுத்திற்கும் எவ்வாறு முதலாகின்றது என்பதைக் காணல் வேண்டும். இவற்றைக் காண, எழுத்தொலி இலக்கணத்தையும், எழுத்திலக்கணத்தையும் உணர்தல் வேண்டும். இலக்கண அறிவையே விலக்கல் வேண்டும் என்பது இக்காலப் போக்கு. 'பாடத்திலாயினும், படிக்கும் உரையிலாயினும் இலக்கணம் என்பது எதற்கு?' என்பர். இலக்கணம் என்னும் பெயரைக் கேட்கவே இடர்ப்படும் மாணவர் பலர். இக்காலப் போக்கிற்கு முற்றிலும் மாறாக அமைந்துள்ளது முதற்குறள். வள்ளுவர் தம் நூலில் முதற்பாட்டு, முதற்பாட்டில் முதல் வரி, இலக்கணமாகவே அமைந்துள்ளது. "எழுத்தெனப்படுவ அகர முதல," என்று தொல்காப்பியம் தொடங்குகின்றது.

'அகர முதல எழுத்தெல்லாம்' என்று திருக்குறளின் முதல் வரி தொடங்குகிறது. தொல்காப்பியத்தின் தொடக்க வரிகளையே வள்ளுவர் ஓர் உவமையாக மாற்றித் தம் முதற் பாட்டில் அமைத்துக்கொண்டார் என்றால் இலக்கண அறிவின்றி அவர் உவமையை எவ்வாறு அறிதல் முடியும்? "இலக்கணம் கல்லா மாந்தர் எம் நூலுள் புகவேண்டா. இலக்கணம் கற்ற பின்னரே எம் நூலைத் தொடுக," என்று எச்சரிப்பது போன்று அமைந்துள்ளது முதற்குறளின் முதல் வரி. திருக்குறளை முற்றிலும் உணர்தல்—ஒருவாறு உணர்தலுங்கூட—இலக்கண அறிவின்றி ஆவதொன்று அன்று. ஆதலின், திருக்குறள் கற்குமுன், இலக்கணம் கற்றல் வேண்டும். அலுப்பைத் தரினும், அயர்வைத் தரினும், வெறுப்பையே தரினும் இலக்கணம் கற்றலே வேண்டும். இங்கு வள்ளுவர் உவமையை நன்றாக உணர்தற்கு வேண்டிய அளவாவது எழுத்திலக்கணத்தையும், எழுத்தொலி இலக்கணத்தையும் அறிய முயல்வோம்.

## எழுத்தின் தோற்றம் :

எழுத்திலக்கணம் கற்க, எழுத்தின் தோற்றத்திலிருந்து தொடங்குதல் வேண்டும். எழுத்துக்கள் எவ்வாறு தோன்றின; தோன்றுகின்றன? நம் உடலுள்ளிருந்து வெளியே வரும் மூச்சுக் காற்றால் எழுவது எழுத்து. உடலின் உட்புறத்தே தாமே இயங்கும் உள்ளுறுப்புக்கள் உள. அவை இயங்குவதால் காற்று உடற்குள்ளே புகுகின்றது; புகுந்த காற்று மீண்டும் வெளியே வருகின்றது. இதுவே மூச்சுக் காற்று என்பர். மூச்சுக் காற்று உள்ளே போவதும் வெளியே வருவதுமாகிய இந்நிகழ்ச்சிகள் இடைவிடாது நிகழ்கின்றன. நம் முயற்சியின்றியே இவை தாமாகவே நிகழ்கின்றன. இவ்வாறு இயல்பாக இயங்கும் மூச்சுக் காற்று, மிடறு அல்லது

குரல் வளை வழியாகவும், மூக்கு வழியாகவும் வெளியே வருகின்றது. வாய் திறந்திருக்குமானால், மூக்கு வழிச் செல்லாது வாய் வழியே மூச்சு வெளியே செல்கின்றது. இந்த மூச்சுக் காற்றின் அசைவு கண்ணுற்காணத் தக்க தன்று. வேண்டுமானால், இதன் ஓசையைக் காதால் கேட்க லாம். வலிமையுடன் மூச்சை விட்டால், மூக்கு வழியே செல்லும் மூச்சுக் காற்றின் ஓசையைக் கேட்கலாம். இதை விட இன்னும் மிகுதியாகக் கேட்கலாம், வாயைத் திறந்து வலிமையுடன் வாய் வழியாக மூச்சை விட்டால். மூச்சுக் காற்றுச் செல்லும் குரல் வளையும், வாயுறுப்பும் ஒலிபெருக்கி போல அமைந்துள்ளன. வளையம் வளையமாக அமைக்கப் பெற்றுச் சிறு வளை போன்று அமைந்த குரல் வளை, வாயின் இடத்தைச் சேர்கிறது. வாயோ, விரிந்து வளைந்து உள்வளைவு கொண்ட ஓர் ஒலிபெருக்கியாய் அமைந்துள்ளது. சிறு துளை கொண்ட குரல் வளை வழியே செல்லும் மூச்சுக் காற்று, அகன்று வளைந்த வாயிடத்தைச் சேரும் போது, விரிந்து பாவுகின்றது. இந்த மூச்சின் ஓசை, குரல் வளையில் நிகழும் போது, வலிமையுடன் மூச்சுச் செல்லும் போதுங்கூடச் செவியால் கேட்கப்படுவதில்லை. வாயைச் சேர்கின்ற போது அவ்வோசை விரிந்து பெருக்கமடைகின்றது ; காதால் கேட் கப்படுகின்றது. வாயைச் சேர்ந்த நா உதடு தாழ்வாய் முதலி யன அசையும் தன்மையின. இவற்றை அசைத்து வாய் வழியே பிறந்த ஓசையின் தன்மையை மாற்றலாம் ; குறைக்க லாம் ; பெருக்கலாம் ; அடக்கலாம்.

இயற்கையாகவே இவ்வுறுப்புக்கள் எல்லாம் குரலை எழுப்பவும் குறைக்கவும் மாற்றவும் தக்கனவாய் அமைந் துள்ளன ! இவற்றின் துணையை இயல்பாகப் பெற்ற மக்கள், சிந்தையும் செல்லாச் சேண்நெடுங் காலத்திற்கு முன்பு, முதல் முதல் குரல் எழுப்பினர் என்பர். இயல்பாகவே எழுந்தது

குரல். மேலே கூறிய ஓசையின் இயல்புகளை உணராமுன்னரே இயற்கையாகக் குரல் எழுந்தது. விலங்கினங்களும், பறவைகளும் குரல் எழுப்பிக் கத்துவதையும், கூவுவதையும் கேட்கின்றோம். இவை எல்லாம், ஓசையின் உண்மைகளை உடலுறுப்புக்களின் தன்மைகளை அறிந்தா கத்தின? தெரிந்தா கூவின ? அன்று அன்று. கத்தலும் கூவலும் இவற்றிற்கு இயற்கையாய் அமைந்தன. இவ்வாறே, இவை போன்றே ஆதிமக்களுங்கூடக் குரல் எழுப்பினர் ; இன்பமுற்ற போது நகைத்து மகிழ்ந்தனர் ; துன்பமுற்ற போது அழுது அரற்றினர் ; பிறரை அழைக்கக் குரல் எடுத்துக் கூவினர்; பிறரை அச்சுறுத்திக் குரலால் அதட்டினர். இவ்வாறு வேறு வேறு செயலை உணர்த்த வேறு வேறு குரல்கள் எழுந்தன. இக்குரலுடன் கை முதலிய வெளி உறுப்புக்களை வேண்டியவாறு அசைத்துக் கேட்போர் தவறின்றி உணருமாறு கருதிய பொருளைச் சுட்டிக் காட்டியும், கருதிய செயலுக்கேற்ப அசைவைக் காட்டியும், தங்கள் தங்கள் கருத்தைப் பிறருக்கு உணர்த்தும் வழியைக் கண்டனர். இதுவே எழுத்துக்கள் முளைத்த இடம் அல்லது எழுத்தின் தோற்றத்தில் முதற்படி என்பர்.

## பேச்சு மொழி :

ஒரு வகைக் குரல் அல்லது ஓர் ஒலி ஒரே பொருளை உணர்த்தினால்தான் அது மக்களுக்குப் பயன்படும். ஒரு பொருளை அல்லது கருத்தை உணர்த்த ஒருவர் ஒரு வகை ஒலியையும், அதே பொருளை அல்லது கருத்தை உணர்த்த வேறு ஒருவர் வேறு வகை ஒலியையும் கையாண்டால் இவற்றைக் கேட்ட பிறர் எந்த ஒலி எக்கருத்தை அல்லது எப்பொருளை உணர்த்துவது என்று எவ்வாறு அறிவர்? ஓர் ஒலி ஒரே கருத்தை அல்லது ஒரே பொருளை உணர்த்தல்

வேண்டும். அதே கருத்தை, அல்லது பொருளை உணர்த்த எல்லோரும் அதே ஒலியைக் கையாளுதல் வேண்டும். எந்த ஒலி எப்பொருளை உணர்த்துவது, எக்கருத்தைக் காட்டுவது என்பது ஒரு மக்கள் தொகுதி பழகிப் பழகிப் பொதுவாகக் கொண்ட ஒரு வகைக் குறியீடு என்பர். அதாவது, ஒருங்கே சேர்ந்து வாழ்ந்த மக்கட்கூட்டத்தார் தம்முள் பலரும் ஒப்ப, எல்லோருக்கும் தெரியுமாறு, பழக்கத்தால், இயற்கையாக முடிந்த ஒரு முடிவு என்பர். நாட்கள் செல்லச் செல்லப் பற்பல கருத்துக்களை உணர்த்தப் பற்பல ஒலிகள், ஒலிக் குறியீடுகள் தோன்றின. வேறு வேறு கருத்தை உணர்த்த வேறு வேறு ஒலிகள் எழுந்தன. இவை, ஒன்றோடு ஒன்று சேரப் பற்பல ஒலிக் கூட்டங்கள், ஒலித் தொடர்கள், பற்பல கூட்டொலிகள் பிறந்தன. இவையே ஒருவர் கருத்தை மற்றொருவருக்கு உணர்த்தும் பேச்சாய் அமைந்தன. இவ்வாறு பேச்சு மொழி பிறந்தது ; எழுதாக்கிளவியாய் வளர்ந்தது. மூச்சுக்காற்று ஒலி வடிவாகி வேண்டியவாறு வேறு வேறு ஒலி உருவம் தாங்கி மக்களுக்குப் பயன் அளித்து நின்றது. இதுவே, எழுத்தின் தோற்றத்தின் இரண்டாம் படி என்பர்.

பேச்சுமொழியைக் கண்டதோடு நின்றாரிலர், பண்டைய மக்கள். போதுமென்ற மனமே பொன்னினும் சிறந்தது என்பர். இது பொன்னின் தேட்டத்திற்குப் பொருந்தியது ஆகும் ; அறிவின் ஆக்கத்திற்கு அமைந்ததொன்றன்று. பண்டை மக்களுக்குப் பேச்சுமொழி அளித்த நலன் போதியதாகத் தோன்றவில்லை. பேச்சுமொழி எதிரே இருப்பவருக்கே பயன் தரும் ; அல்லது அருகே இருப்பவருக்கும் பேச்சொலி கேட்கும். அதற்கப்பால் தூரத்தில் இருப்பவருக்கும் அல்லது வேறிடத்தில் இருப்பவருக்கும் அது பயன்படுவதின்று. பேசுவோன் அங்குச் சென்று மீண்டும் பேசினாலன்றி அவன்

பேசிய பேச்சை மற்றோர் இடத்தில் இருப்பவர் அறிய வழி இல்லை. நேற்றுப் பேசியது என்ன, மறைவெய்திய முதியோர் கூறிய முதுமொழி எவை எனக் கேட்டோர் அன்றிப் பிறர் அறியவும் வாய்ப்பில்லை. கேட்டோர் கேட்டவைகளை நினைவிற் பொதிந்து பிறருக்குக் கூற யாவையும் நினைவில் கொள்ளுதல் எளியதொன்று அன்று. நினைப்பு எனப்படுவது நிலை பெறாதது: நினைப்பது உளதேல் மறப்பதும் உளது. ஆதலின், ஒலி வடிவைவிட மிக்க பயன் தரும் ஒன்றைத் தேடினர்.

பேசும் ஒலியைக் காதால் கேட்டுக் கருத்தை உணர்தலை விடப் பேச்சொலி உணர்த்துவதை ஓர் உருவமாகக் கண்ணால் காணும் வடிவமாக மாற்றுதல் கூடுமானால், அது மிக்க பயன் தரும்; கேளாதாரும் அவ்வுருவத்தைக் கண்டு, கருத்தை உணர்தல் முடியும்; கேட்குமாறு பேச்சு நிகழாத இடங்களுக்கும் அதை அனுப்பவும் முடியும் என்றெல்லாம் கருதினர் போலும்! முன்பு வடிவமில்லா மூச்சுக்காற்று, ஒலி வடிவு பெற்றுப் பேச்சு மொழியாயிற்று. இப்போது அவ்வொலி வடிவுக்குக் கண்ணால் காணும் வடிவம் கண்டனர்.

## ஓவிய எழுத்து :

கண்ணாற்காணும் ஒரு பொருளை உணர்த்த அதைக் குறிக்கும் ஒலியால் அல்லது பேச்சால் உணர்த்தலாம். அப்பொருளைப் போன்ற உருவத்தை எழுதிவிட்டால் பேச்சில்லாமலே அஃது எப்பொருள் என்பதை மக்கள் உணர்வர். உருவத்தை வரைந்து கருத்தை உணர்த்த ஓவிய எழுத்துக்கள் தோன்றின. இஃது எழுத்துக்கள் தோற்றத்தின் மூன்றாம்படி.

மாய்ஞ்சதரை (Mohenjo Daro) ஆரப்பார் (Harappa) முதலிய இடங்களில் தோண்டி எடுத்த புதை பொருள்களில் காணும் ஓவிய எழுத்துக்களும், அவ்வோவிய

எழுத்து முறைகளுமே தமிழ் எழுத்துக்களின் மூதாதைகள்; தமிழ் இலக்கணத்திற்கும் மூதாதைகள் என ஆராய்ச்சி உலகம் இன்று காண்கின்றது. இவ்வோவிய எழுத்துக்களில் சிலவற்றைக் கண்டு மேலே செல்வோம்.

மனிதனை உணர்த்த மனித வடிவம் போலக் கோடுகளை வரைந்தனர். வேலை உணர்த்த வேலைப்போன்ற வடிவத்தை வரைந்தனர். வேலன் என்ற கருத்தை உணர்த்த மனிதனை வரைந்து அவன் கையில் வேலையும் சேர்த்து வரைந்தனர். நாளாக நாளாக இவ்வாறு ஒரு கருத்தை அல்லது ஒரு பொருளை உணர்த்த இரண்டு வடிவங்களை வரைதல் அலுப்பைத் தந்தது போலும்! வேலை வரைந்து அதன் உச்சியில் மனிதனைக் குறிக்க ஒரு குறியீடு செய்தனர். இவ்வாறு ஒரே கருத்தை உணர்த்த இரு வடிவம் வரையும் முறை, படிப் படியே நழுவ, ஒரே வடிவம் வரையும் முறை தோன்றியது. எழுத்தின் செட்டு முளைத்தது.

மீனை உணர்த்த மீன் போன்ற வடிவத்தை வரைந்தனர். இவ்வடிவுக்கு மேலே இரண்டு கோடுகளை நீட்டி மேல் நோக்க வரைந்து, அது மேலே உள்ள மீன் விண்மீன் என உணர்த்தினர். மின்னுதல் தொழிலைக் காட்ட மீனின் உட்பகுதியில் ஒளியைக் குறிக்கும் கோடு ஒன்றை வரைந்தனர்.

அது என்னும் சுட்டை உணர்த்த இருபக்கமும் சிறிது நீண்டு சுட்டிக்காட்டும் ஒரு வடிவை வரைந்தனர். இதை ஒரு பொருளின் எதிரே வரைந்தனர்; சில இடங்களில் அதன் பின்னே வரைந்தனர். இவ்வாறு வேறுபட வரைதலால் வேறு வேறு பொருள் உணர்த்தச் செய்தனர். வேலனைக் குறிக்கும் ஓவிய எழுத்தின் இறுதியில் அது என்னும் சுட்டு ஓவியத்தைச் சேர்த்தால் "வேலன்அது" வேலனது என்ற உடைமைப் பொருளை உணர்த்தும் எனக் கொண்டனர். வேலன் என்பதன் முன்னர்ச் சுட்டு வடிவத்தைச் சேர்த்து,

"இது வேலன்" என்று சுட்டுப்பொருள் உணர்த்துவதாகக் கொண்டனர்.

ஊரை உணர்த்த ஒரு வட்ட வடிவை வரைந்தனர். 'ஊரில்' அல்லது 'ஊருள்' என்பதைக் காட்ட அவ்வட்டத்திற்குள்ளே பொருந்த, ஒரு சிறு வளைவு அமைத்தனர். ஊரின் வெளியே என்பதை உணர்த்த ஊர்வடிவோடு சேர்த்து வெளி வளைவு ஒன்றை வரைந்தனர்.

பன்மையை உணர்த்த ஒரு பொருளையே இரு முறை வரைந்தனர். இதை நாளடைவில் நழுவவிட்டுப் பன்மையை உணர்த்தும் இரண்டு கோடுகளை அல்லது அதற்கு மேற்பட்ட கோடுகளை அப்பொருளோடு சேர்த்து வரைந்தனர்.

இவற்றை எல்லாம் ஓர் ஒழுங்கு கொள்முறையில் முறை பிறழாது அமைத்தனர். இவற்றை அமைத்த ஒழுங்கு கொள் முறையிலேயே தமிழ்ச்சொல் ஆக்கத்திற்கும் தமிழ் இலக்கணத்திற்கும் வித்து விதைத்துள்ளதைக் காணலாம். இவற்றை விரிக்கிற்பெருகும். இவற்றின் விரிவெல்லாம் ஹீராஸ் அடிகளார் (Father Heras) எழுதிய இந்திய நடுத்தரைப் பண்பாட்டுத் தோற்ற ஆராய்ச்சி (Studies in Proto Indo Mediterranean Culture) என்ற நூலிற் காண்க. அடிகளார் இயற்றிய அரிய பெரிய தொண்டிற்குத் தமிழ் நாடு என்ன கைம்மாறு காண வல்லது!

மக்கள் வேண்டிய அளவுக்கு இவ்வோவிய எழுத்துக்கள் பயன் தந்தில போலும்! மக்கள் கருத்தைத் தவறின்றி உணரவும் இவை தக்கவையாக அமைந்தில. தக்க வழியைக் காண மேலும் மேலும் முயன்றனர். எல்லையற்றது முயற்சியின் அளவு. 'முயற்சி திருவினை ஆக்கும்' என்றார் வள்ளுவர். பண்டை மக்களின் விடாமுயற்சி, தக்கதோர் எழுத்து என்னும் திருவினைத் தந்தது. உழைப்பின் வாரா உறுதிகள் உளவோ?

## வரி வடிவம் அமைத்தல் :

மக்கள் பேசும் மொழியில் காணப்படும் பேச்சொலிகளை யெல்லாம் ஆராய்ந்தனர். அவ்வொலிகளையெல்லாம் பிரித் துப் பிரித்து, 'எத்தனை கூட்டொலிகள் உள ? எத்தனை தனி ஒலிகள் உள ?' எனக் கணக்கிட்டனர். 'அவ்வொலிகளில் எத்தனை வகைகள் உள ?' என அவற்றை வகைப்படுத்தினர். 'இவ்வொலிகளுக்கெல்லாம் அடிப்படையான ஒலிகள் எவை ?' என ஆராய்ந்தனர். இவ்வடிப்படையான ஒலிகளில் இரு வகை ஒலிகளைக் கண்டனர். வாய் நாக்கு முதலிய உறுப்புக்களின் உதவியால் இயங்குவனவாகி மற்ற ஒலி களுக்கு உயிர் போன்று அமைந்து, உயிர் போன்று இயங்கும் ஒலிகள் ஒரு வகையின. இவ்வுயிர்ஒலிகளின் உதவியின்றி இயங்காதன, உடல் அல்லது மெய் போன்ற ஒலிகள் மற்றொரு வகையின என வகைப்படுத்தினர்.

உயிர் ஒலிகளும் மெய் ஒலிகளும் ஒன்றோடு ஒன்று சேர்ந்து பற்பல கூட்டொலிகளை, அதாவது உயிர்மெய் ஒலி களைப் பயந்தன. உயிரும், மெய்யும், உயிர்மெய்யும் ஆகிய ஒலிகளும் அவற்றின் நீட்டமும் குறுக்கமும், அவற்றைச் சார்ந்த சார்பு ஒலிகளும் ஒரு பேச்சு மொழியில் காணும் ஒலிகள் என முடிவு கண்டனர்.

உயிர் ஒலிகளில் ஒவ்வொன்றும் மெய் ஒலிகளில் ஒவ் வொன்றும் எது எது எனக் கண்ணால் கண்டு உணருமாறு ஒவ்வொன்றிற்கும் தனித்தனி வரி வடிவம் அமைத்தனர். கோடுகளால் அல்லது வரிகளால் ஓர் ஒலியைக் காட்ட வரை யும் வடிவம் 'வரி வடிவம்' என்பர். 'எழுத்து வடிவம்' என்பதும் அதுவே. குரல் வளை வழியே எழுந்த மூச்சுக் காற்று ஒலி வடிவு பெற்று எழுத்தொலியானது என்பதை முன்பு கண்டோம். எழுந்த ஒலி எழுத்தொலியாகி இப்

போது எழுதும் எழுத்தானவாறு காண்க. இதுவே, எழுத்தின் தோற்றத்தின் நான்காம் படி என்பர்.

### எழுத்து முறைகள் :

உலகில் காணும் மக்கட்டொகுதிகளோ பல. அவ்வவற்றின் பேச்சு முறைகளும் பேச்சு மொழிகளும் பற்பல. அம் மக்கள் தொகுதிகள் வாழ்ந்த இடத்திற்கேற்பச் சூழ்நிலைகளுக்கேற்ப, அத்தொகுதி மக்கள் உடல் உறுப்புக்களின் அமைப்புக்குப் பொருந்த, இப்பேச்சொலிகளும் பேச்சு முறைகளும் வேறுபடுவன. அந்தந்தத் தொகுதி மக்களின் பண்பாட்டிற்கேற்ப, அவரவர் அறிவு நிலைக்கேற்ப, அவரவர் மொழிகளை வகைப்படுத்தினர் ; முறைப்படுத்தினர். ஆங்கிலேயர் எழுத்து முறை வேறு ; அரேபியர் எழுத்து முறை வேறு ; சீனர்களின் எழுத்து முறையும் வேறு. ஒரு மக்கட்டொகுதியின் எழுத்து முறையை மற்றொரு மக்கட்டொகுதி மேற்கொண்டதும் உண்டு.

இவ்வாறு மக்கட்டொகுதிதோறும் எழுத்து முறைகள் வேறுபடினும், எழுத்து எனப்படுவது எல்லோருக்கும் ஏற்றம் தருவது ஆயிற்று. என்று எழுத்துத் தோன்றியதோ, அன்றே தொடங்கியது மக்களின் உயர்வு. எழுத்துக்களால் அல்லது இவ்வெழுத்து முறைகளால் எய்திய நலன்கள் எண்ணற்றன. உணர்வைப் பெருக்கி அறிவை வளர்த்தது எழுத்து. உயர்வைத் தந்தது எழுத்து. உயரிய பண்பை அளித்தது எழுத்து. வாழ்வைத் தந்தது எழுத்து. மக்களை விலங்கினின்றும் வேறுபடுத்தியது எழுத்து. மக்களை மக்களாக வாழ வழி காட்டியது எழுத்து. மனத்தின் கண்ணைத் திறந்து மனத்தை இயக்குவது எழுத்து. உயிரை இயக்குவது எழுத்து. இவ்வுலகையே இயக்குவதும் எழுத்து. எண்ணிலா ஆற்றல் படைத்தது எழுத்து. இவ்வெழுத்து

முறை இல்லையேல், மக்கள் எந்நிலையில் இருந்திருப்பார்கள்! மக்கள் அறிவு எந்நிலையில் இருந்திருக்கும்! பண்பாடுதான் யாண்டு நின்றிருக்கும்! கருதுக! கருதுக! எழுத்தைவிட ஏற்றம் தந்தது, ஆற்றல் வாய்ந்தது, வேறு யாது உளது?

## மயங்கா மரபின் எழுத்து முறை :

இங்குக் கூறியவைகள் புற உரைகள் அல்ல. உவமையின் பொருத்தத்தைக் காணுங்கால் இவை நமக்கு உதவி செய்வன. 'உதவி செய்வன என்றால், இவற்றை எல்லாம் அறிந்தா உவமை அமைக்கப்பட்டது? மேலே கூறிய எழுத்தின் தோற்றம் முதலியவைகள் இக்காலக் கருத்துக்கள் அல்லவா? இவற்றை எல்லாம் பண்டைக் காலத்தே தமிழர் அறிந்திருந்தனரா? எவ்வாறு அறிந்திருத்தல்கூடும்? புத்தம் புதிய கருத்துக்களைப் பழைய நூல்களில் புகுத்தி உரை காண்பதாக முடியுமோ?' என்று ஐயுறுதல் வேண்டா. இவ்வுண்மைகள் மட்டுமன்றி, இன்னும் பற்பல உண்மைகளையும் கண்டவர் தமிழர். வியத்தகு முறையில் சிறந்திருந்தது அவர்தம் இலக்கண அறிவு. இதைக் குறித்துத் திரு. டாக்டர் சங்கரன் என்ற எழுத்தொலி ஆராய்ச்சியாளர் கூறுவதைக் காண்க :

"பழைய தமிழ் இலக்கணமாகிய தொல்காப்பியத்தில் இந்த எழுத்தொலி அமைப்பின் காட்சியைக் காணலாம் : ஓர் ஒலிக்கும் அதன் தொடர்புகொள் ஒலிக்கும் ஒரே குறியீடு தரும் 'போனீம்' கொள்கையை (Phonemic theory) ஆராயும் இக்கால மாணவர், இக்காலத்தில் வெளியாகி வரும் எழுத்தொலிக் கொள்கைகள் பலவற்றை இப்பழைய தொல்காப்பியத்தில் காணலாம். இக்காலக் கருத்துக்கள் பற்பலவற்றை இப்பழைய இலக்கணத்தில் காண்பது பெருவியப்பா

கின்றது! பெருவியப்பில் நம்மை ஆழச் செய்கின்றது!''*
என்றுபொருள்படுமாறு எழுதுகின்றார். தொல்காப்பியத்தைப் பிறர் புகழ்வது ஒருபுறமிருக்க, தொல்காப்பியம் கூறும் ஒலி முறையை நாமே ஆராய்தல்வேண்டும். அகரம் எவ்வாறு எழுத்துக்களுக்கு முதலாகின்றது என்பதைக் காண, இத்தொல்காப்பியமே உதவி செய்வது. எழுத்தின் தோற்றம் முதலியவற்றின் இயல்பையும் தமிழர் அறிந்திருந்தனர் என்பதைத் தொல்காப்பியத்தின் பாயிரம் காட்டும்.

"வடவேங்கடம் தென்குமரி
ஆயிடைத்
தமிழ்கூறு நல்லுலகத்து
வழக்கும் செய்யுளும் ஆயிரு முதலின்
எழுத்தும் சொல்லும் பொருளும் நாடிச்
செந்தமிழ் இயற்கை சிவணிய நிலத்தொடு
முந்துநூல் கண்டு முறைப்பட எண்ணிப்
புலந்தொகுத் தோனே"

என்பது அப்பாயிரத்தின் முற்பகுதி.

தொல்காப்பியர் புலம் (இலக்கணம்) தொகுத்தார். புலந்தொகுக்க, அவர் எழுத்தையும் சொல்லையும் பொருளையும் "வழக்கும் செய்யுளும் ஆயிரு முதலின்"

---

*"An insight into this structure is provided by Thol-kappiam the oldest Tamil descriptive grammar from which a modern student of Phonemics can easily rediscover many a concept that is coming into vogue today. We are lost in wonder that in this old Tamil grammar we rediscover as it were many of our modern ideas."
—Phonemics of old Tamil by C. R. Sankaran M. A. in Deccan College Monograph series, 7.

ஆராய்ந்தார் ; பேச்சு வழக்கு, செய்யுள் வழக்கு என்ற இவ்விரண்டு முதலைக்* கொண்டு—அவ்விரண்டு அடிப் படையில்—அவ்விரண்டு அடி வேரில்—ஆராய்ந்தார். பேச்சு வழக்கில் எழுத்தை ஆராய்ந்தார் ; பேச்சு வழக்கில் சொல்லை ஆராய்ந்தார் ; பேச்சு வழக்கில் பொருளை ஆராய்ந்தார். பேச்சு வழக்கை ஏன் ஆராய்தல் வேண்டும்? சொல்லைப் பேச்சு வழக்கில் ஆராய்ந்தார் என்பது பொருந்தும். பொருளை ஆராய்ந்தார் என்பதும் பொருந்தும். எழுத்தைப் பேச்சுவழக்கில் ஆராய்ந்தார் என்பது எவ்வாறு பொருந்தும்? பேச்சு மொழியிலிருந்து எடுக்கப்பட்டது எழுத்து என் பதைப் பண்டைத் தமிழர் அறிந்திருந்தனர். 'பேச்சு ஒலி களைப் பகுத்துப் பகுத்து எழுத்தொலிகள் பிரித்தெடுக்கப் பட்டன ; அவை எழுத்திலக்கணமாயின' என்பதை அக் காலத் தமிழர்கள் உணர்ந்திருந்தார்கள். எழுத்தொலிக்கு, எழுத்திலக்கணத்திற்கு ஆணிவேர் பேச்சு; அதன் கிளைவேர், செய்யுள் அல்லது இலக்கிய வழக்கு. செய்யுளைக்கொண்டு மாத்திரம் எழுத்துக்கள் எவ்வாறு ஒலிக்கப்பட்டன என்

---

*ஆயிரு முதலின் =(1) வழக்கும் செய்யுளுமாகிய இரு காரணத்தாதாலும் —இளம்பூரணர்

=(2) அவ்விரண்டையும் அடியாகக் கொள்ளுகையினல் —நச்சினர்க்கினியர்

=(3) ஆராய்ந்த பெரிய காரணத்தானே —சிவஞானமுனிவர்

=(4) வழக்கும் செய்யுளுமென்று சொல்லப் பட்ட முதலாகிய அவ்விரண்டிடத்துள்ள எழுத்தையும் சொல்லையும் பொருளையும் காடி —அரசன் சண்முகனர்

பதைக் காணல் இயலாது ; பேச்சு வழக்கிலும்* காணுதல் வேண்டும். ஆதலின், அவ்விரண்டு முதலில் தொல்காப்பியர் ஆராய்ந்தார், நல்ல தமிழ் பேசும் நல்லுலகத்தே ஆராய்ந்தார்.† வடவேங்கடம் தென்குமரி ஆயிடை,‡ வடக்கே வேங்கடம், தெற்கே குமரி, அவ்விரண்டையும் எல்லையாக வுடைய நல்ல தமிழ் பேசப்படும் இடமெல்லாம் சென்று ஆராய்ந்தார். பேச்சு வழக்கைக் காண வேண்டின் அப்பேச்சு வழக்கு நிகழும் இடத்திலேதானே காணல் முடியும் ? போக்குவரவுப் பொறிகள் இயங்கா அக்காலத்தே, வடவேங்கடம் முதல் தென்குமரி வரையில் எவ்வாறு சென்றனரோ ! எத்தனை

*'எள்ளினின்று எண்ணெய் எடுபடுமாபோல் இலக்கியத்தி னின்றெடுபடும் இலக்கணம்' என்பது அகத்தியம் என்பர். எழுத் தொலி ஆராய்ச்சியாளர் காணும் உண்மைகளுக்கு மாறுபட்டது இது. உண்மைக்கு மாறுகொளக் கூறும் நூல் முதல் நூலாகுமா, அல்லது போலி நூலாகுமா ? அகத்தியம் தொல்காப்பியர் காலத்திற்குச் சற்று முன்பு இயற்றப்பட்டிருந்தால் அது கூறும் பொருளையே பற்றித் தொல்காப்பியர் ஏன் மற்றொரு நூல் செய்தார் ? அதை மறுத்து நூல் செய்தார் எனின், அவர் எந்த இடத்தும் மறுப்புக் கூறக் காணோம். முந்துநூலையும் ஐந்திரத்தையும் குறிப்பிடும் பாயிரம் அகத்தியத்தைக் கூறவில்லை ; குறிப்பால் உணர்த்தவும் இல்லை. பாணினி வடமொழியை இறைவனிடமிருந்து பெற்றதற்குப் போட்டியாக அகத்தியர் கதை எழுந்ததாகுமோ ? இவை எலாம் ஆராய்ச்சியாளர் ஆராயத் தக்கவை.

†ஈண்டுப் பாயிரம் உணர்த்துவது தொல்காப்பியர் மொழி ஆராய்ச்சி செய்த நிலப்பகுதியின் எல்லை எனக் கொள்ளல் தகும்.

‡ஆயிடை = (1) அவற்றை எல்லையாக உடைய,

—இளம்பூரணர்

= (2) அவ்விரண்டெல்லைக்குள்ளிருந்து

—நச்சினார்க்கினியர்

= (3) அவ்விடமாகிய —சிவஞானமுனிவர்

எத்தனை ஊர்கள் சென்றனரோ! எப்பாடு பட்டு நடந்தனரோ! எத்தனை நாள் சென்றனவோ இவர் ஆராய்ச்சி நிறைவேற! தம் வாழ்நாள் எல்லாம் உழைத்தார் போலும்! எவ்வளவு எவ்வளவு உழைப்பு! உலைவிலா உழைப்பு! அரிது அரிது இவர் ஆராய்ச்சி முறை! இம்மட்டோடு நின்றாரிலர் தொல்காப்பியர். செந்தமிழ் இயற்கை சிவணிய நிலத்தொடு* இதனை ஒப்பிட்டார். நல்ல தமிழ் வழக்கைச் செந்தமிழ் வழக்கோடு ஒப்பிட்டார். நல்ல தமிழைவிடச் சிறந்தது செந்தமிழ் போலும்! அது தூய தமிழ் போலும்! அதனோடு ஒப்பிட்டார். முந்து நூல்களையும் ஆராய்ந்தார். தாம் ஆராய்ந்தவற்றை முறைப்படுத்தினார்† இலக்கணம் இயற்றினார். நன்று, நன்று இவர் ஆராய்ச்சி! வியக்கத்தக்கது இவர் ஆராய்ச்சி

---

*செந்தமிழ் இயற்கை சிவணிய =(1) செந்தமிழ் இயல்பாகப் பொருந்திய —நச்சினார்க்கினியர்

=(2) செந்தமிழின் உண்மையைப் பொருந்தி உணரும்பொருட்டு —சிவஞானமுனிவர்

=(3) செந்தமிழ் இலக்கணம் முற்றும் நிரம்பிய—அரசன் சண்முகனார்

†தொல்காப்பியர் போன்று ஆரியத்துக்கு இலக்கணம் கண்டவர் பாணினி. அவர் இலக்கணம் வகுத்த முறைமையும் இங்கு ஒப்பு நோக்குதல் தகும். பாணினி இறைவனை நோக்கித் தவம் கிடந்தார். தவத்தால் இலக்கணம் இயற்றும் ஆற்றல் தலைப்பட்டார். தவத்தின் ஆற்றலால் இறைவன் திருக்கூத்தைக் கண்ணுற்றார். கூத்து முடிந்தது; இறைவன் தன் கைகளுள் ஒன்றிலிருந்த உடுக்கையை அசைத்தார். அதினின்று பதினான்கு ஒலித் தொடர்கள் எழுந்தன. அவற்றிற்கு மகேஸ்வர சூத்திரம் என்பது பெயர். அவற்றைக் கொண்டு பாணினி தம் இலக்கணத்தை அமைத்தார். அச்சூத்திரங்களாவன: (1) அ, இ, உண் (2) ரு, லுக் (3) ஏ, ஓங் (4) ஐ, ஔச் முதலி

முறை! இவர் ஆராய்ச்சி முறை இக்கால விஞ்ஞான ஆராய்ச்சி முறைக்கு ஒப்ப மிளிர்கின்றது. ஆராய்ச்சி என்பது முதல் முதல் தோன்றியது தமிழ்நாட்டில் போலும்! இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே இத்தகைய ஆராய்ச்சி—எழுத்தொலி ஆராய்ச்சி— நுண்பொருள் ஆராய்ச்சி—தமிழ்நாட்டில் நிகழ்ந்த தென்றால், தமிழர்தம் பண்பாடு, அவர்தம் இலக்கண அறிவு, எந்த நிலையில் இருந்திருக்கும் என்று கருதிக் காண்க.

இம்மேதகு ஆராய்ச்சியாளரின் உண்மை இயற்பெயர் தெரிந்திலது. இவர் நூலின் பெயராலேயே இவர் பெயர் அமைந்தது. இவர் தொகுத்த தொல்காப்பியம் என்னும் நூலே அதன் ஆசிரியருக்குத் 'தொல்காப்பியர்' என்னும் பெயரைத் தோற்றுவித்தது. அந்நூலை அரங்கேற்றிய அன்று முதல் ஆசிரியருக்குத் தொல்காப்பியர் என்ற பெயர் நிலை பெறுவதாயிற்று. தொல்காப்பியம் என்னும் பெயர் இலக்கணப் பண்பை உணர்த்தும் பெயர். ஒரு மொழியைச் சிதையாது காப்பது காப்பியம். காப்பு இயன்றது காப்பியம். ஓவு இயன்றது ஓவியம் என்பது போன்ற சொல்லாக்க முறை பெற்றது. இலக்கியம், பண்ணியம் முதலியன இவற்றை ஒத்த

---

யன. முதல் சூத்திரத்தின் முதல் எழுத்தையும் 4-ஆம் சூத்திரத்தின் கடைசி எழுத்தையும் சேர்த்து அவற்றின் இடையே உள்ள எல்லா எழுத்துக்களையும் குறிக்க "அச்" என்று பெயரிட்டார். "அச்" என்பது வடமொழி உயிரெழுத்துக்களைக் குறிக்கும். இதைப்போலவே 5-ஆம் சூத்திரம் "ஹயவரட்" என்பது. இதன் முதல் எழுத்தையும் 14-ஆம் சூத்திரத்தின் கடைசி எழுத்தையும் சேர்த்து "ஹல்" என்று ஒரு பெயர் அமைத்தார். ஹல் என்பது 5 முதல் 14 சூத்திரங்களுக்குள் அடங்கும் வடமொழி மெய்யெழுத்துக்களைக் குறிக்கும். இவ்வாறு பற்பல கற்பனைக் குறியீடுகளாலானது பாணினியின் இலக்கணம் என்பர். அதன் பெயர், அஷ்டாத்யாயி—எட்டு அதிகாரங்களைக் கொண்டது—என்பது.

ஆக்கமுறை கொண்டவை. 'தொல்காப்பியம்' என்பது 'பழைய இலக்கணம்' என்று பொருள்படும்.

தொல்காப்பியர் இந்நூல் தொகுத்த முறையைக் கூறுத லோடு நின்றிலது பாயிரம். அவர் நூல், போக்கறு பனுவல் பாண்டியன் அவையத்து ஆராயப்பட்டது. அங்கு அவர் நூலுக்கு எதிர்ப்பும் மறுப்பும் எழுந்தன என்பதைக் காட்டு கின்றது பாயிரத்தின் எஞ்சிய பகுதி.

"போக்கறு பனுவல்
நிலந்தரு திருவிற் பாண்டியன் அவையத்து
அறங்கரை நாவின் நான்மறை முற்றிய
அதங்கோட் டாசாற் கரில்தபத் தெரிந்து
மயங்கா மரபின் எழுத்துமுறை காட்டி
மல்குநீர் வரைப்பின் ஐந்திரம் நிறைந்த
தொல்காப் பியன்எனத் தன்பெயர் தோற்றிப்
பல்புகழ் நிறுத்த படிமை யோனே"

என்று முடிகின்றது பாயிரம்.

தொல்காப்பியர் தம் ஆராய்ச்சி நூல் பனுவல் அவை யத்து, போக்கறுபனுவல் அவையத்து, போக்கறுபனுவல்* நிலந்தரு திருவிற் பாண்டியன் அவையத்து ஆராயப்பட் டது. இப்பனுவல் அவையத்திற்குத் தலைமை தாங்கியவர் அதங்கோட்டாசான். அவர் தலைமையில் தொல்காப்பியம் குற்றமற (அரில் தப)த் தெரிவிக்கப்பட்டது — எடுத்துக்காட் டப்பட்டது. 'அரில் தப' என்பதற்குக் குற்றம் கெட' என்பதுபொருள். குற்றம் கெட என்று ஏன் கூறல்வேண்டும்?

---

*பனுவல் என்பதை அவையத்து என்பதோடு இணைத்துத் பொருள் கண்டவர் அரசன் சண்முகனார். அவர் தொல்காப்பியப் பாயிர விருத்தியில் இதைக் காண்க. "(தான்) செய்த குற்றமற்ற நூலை" எனச் சிவஞானமுனிவர் கொள்வர்.

ஓர் ஆசிரியன் ஒரு நூலை அரங்கேற்றினால் அதன் அழகு, அதன் திறம் எல்லாம் எடுத்துக் காட்டுதல் இயல்பு. குற்றத்தைத் தானே கூறுதலோ, அக்குற்றத்தைத் தபுத்தல் அல்லது தகர்த்தலோ ஏற்படுதல் இல்லை. அவையோர் குற்றம் கண்டனர். ஆதலின், அரில் தப—குற்றம் கெடத்—தெரிவித்தல் நேர்ந்தது. எத்தகைய சீரிய முறையில் இப்பனுவல் அவைக்கண் ஆராய்ச்சி நிகழ்ந்தது என்பதைக் காண்க!

தலைமை தாங்கிய அதங்கோட்டாசான்—நான்மறை முற்றிய அதங்கோட்டாசான்—நான்மறை முழுதும் கற்ற ஆசான் இலக்கண ஆராய்ச்சியில் எவ்வாறு தலைமை ஏற்றார்? நான்மறை மந்திரம் ஓதி வாழ்த்துக் கூறுதற்கு இவரைத் தெரிந்தெடுத்தார்களா? அல்லால் இப்பனுவல் நல்வாழ்வு பெறுதற்கு வேத வேள்வி இயற்ற இவர் தெரிந்தெடுக்கப் பட்டாரா? இலக்கணம் அரங்கேற்றுதலுக்கும் நான்மறை முற்றிய தன்மைக்கும் என்ன தொடர்பு ஏற்பட்டது என்று காணல் வேண்டும்.

உலக மொழிகளில் இரண்டு மொழிகளே பண்டைநாள் தொட்டு மிகப் பண்பட்ட மொழிகள்; எழுத்தொலி முறைகளைக் கண்டு கையாண்ட மொழிகள். அவற்றுள் ஒன்று ஆரியம்; மற்றொன்று தமிழ். ஆரியத்தின் எழுத்தொலி முறைகளைக் கண்ட பின்னரே அவற்றையே அடிப்படையாகக் கொண்டு மேல் நாட்டு எழுத்தொலி நூல்கள் எழுந்தன என்பர். எழுதாக் கிளவியாய் வளர்ந்த நான்மறைகள், வேறு வேறு இடத்து வேறு வேறாக ஒலிக்கப்பட்டன; ஓதப்பட்டன. ஆதலின், இவற்றைத் திரிபின்றிக் காக்க, எழுத்து முறை மேற்கொள்ளவும், எழுத்தை ஒலிக்கும் முறையை வரையறுக்கவும் முயற்சி எழுந்தது. எழுதாக் கிளவியை எழுத வேண்டி, எழுத்து முறை மேற்கொள்ளப்பட்டது. எழுத்தொலி நூல்களும் வேத மொழியின் இலக்கணங்களும் எழுந்

தன. இவை வேத உறுப்புக்களாக வேதாங்கங்களாகக் கொள்ளப்பட்டன. வேத எழுத்தொலி நூலுக்குச் சிக்ஷை என்பது பெயர்; அது பிராதிசாக்கியம் என்றும் பெயர் பெறும். வேத மொழி இலக்கணத்திற்கு வியாகரணம் என்பது பெயர். ஆறு வகைப்பட்ட வேதாங்கங்களில்* சிட்சை முதலிடம் பெறும். சிட்சை என்பதும் பிராதிசாக்கியம் என்பதும் எழுத்தை எவ்வாறு ஒலிப்பது, அதன் அளவு யாது, அது எங்கிருந்து பிறப்பது என்றெல்லாம் வரையறுத்துக் கூறுவன. நான்மறை முற்றிய அதங்கோட்டாசான் என்பது அவர் காலத்திலிருந்த வேத அங்கங்களை எல்லாம் கற்று அறிவு முதிர்ந்தவர் என்பதைக் காட்டும். அதங்கோட்டாசான் வேத எழுத்தொலி நூலினும் இலக்கணத்தினும் வல்லவர், தேர்ந்தவர் என்று கொள்ளுமாறு ' நான்மறை முற்றிய ' என்னும் சொல்தொடர் அமைந்திருக்கின்றது. தக்க தலைவர் ஒருவரைக் கொண்டே அரசனது பனுவல் அவையம் தொல்காப்பியத்தை ஆராய்ந்தது. அவர் நூலில் குற்றங்கள் குறைகள் கூறப்பட்டன. அவை எலாம் தகர்க்கப்பட்டன. " அரில் தபத் தெரிந்து "† என்று கூறுகின்றது பாயிரம். அரில் தபத் தெரிந்து என்பதற்குக் குற்றங்கள் கெடுமாறு தெரிந்து கூறி, அல்லது ஆராய்ந்து கூறி அல்லது தெரிவித்து எனப் பொருள் கொள்ளல் தகும்.

---

*வேதத்தின் ஆறு அங்கங்கள் ஆவன: (1) சிட்சை, (2) வியாகரணம், (3) சந்தம், (4) நிருத்தம், (5) சோதிடம், (6) கல்பம். இப்பாகுபாட்டிற்கு முந்தியது தொல்காப்பியம். ஆதலின், பாயிரத்தில் இவை குறிப்பிடப்படவில்லை.

†' தெரிந்து ' என்பதற்குக் ' கடாவறத் தெரிந்து கூறி ' எனவும் ' குற்றமற ஆராய்ந்து கூறி ' எனவும் இளம்பூரணரும் நச்சினாக்கினியரும் உரை கண்டனர். சிவஞானமுனிவர் அந்தர்ப்பாவிதணிச் சென்னும் வடநூல் முறைப்படி தெரிவித்து எனப் பொருள்

இம்மட்டோடு நின்றிலது பாயிரம்; மயங்கா மரபின் எழுத்து முறையைக்* காட்டியதாகவும் அது கூறுகின்றது. அரில் தபத் தெரிவித்ததில் எழுத்து முறையும், சொல் முறையும், பொருள் முறையும் அடங்குமே! அவ்வா றிருக்கவும், ஏன் 'மயங்கா மரபின் எழுத்து முறை காட்டி'ய தாக மீண்டும் கூறுதல் வேண்டும்? தொல்காப்பியம் கூறிய எழுத்து முறையைப் பற்றியும் குறைகள் கூறப்பட்டன போலும்! அக்குற்றங்கள் தகர்க்கப்பட்டன. தகர்க்கப் பட்டதோடுகூட, அம்முறை மயங்காத முறை எனத் தனியே காட்டியதாகப் பிரித்துச் சிறப்பாகக் கூறுகின்றது பாயிரம். 'செந்தமிழ் மரபின் எழுத்து முறை காட்டி' என்றால், தமிழ் எழுத்து முறையை எடுத்து விளக்கினர் என்பது விளங்கும். 'சிறந்த மரபின் எழுத்து முறை காட்டி.' என்று கூறினால், இவ்வெழுத்து முறையின் சிறப்பு நன்கு விளங்குமே! அவ்வாறு கூறாது, 'மயங்கா மரபின்' என்று எதிர்மறையால் கூறக் காரணம் யாது?

---

காட்டினர். இவற்றை எல்லாம் மறுத்தார் அரசன் சண்முகனர். தெரித்தென்பது தெரிந்தெனச் செய்யுள் விகாரத்தால் மெலிந்து தெரிவித்து எனப் பொருள்படும் என்பதையும் மறுத்தார். செய்யுள் விகாரம், (நாட்டல் வலிய) செய்யுள் செய்வார் நாட்டுதலை வலியாக உடையதேயன்றிப் பிறர் நாட்டுதலை வலியாக உடையதன்று.

*எழுத்து முறை காட்டி = (1) எழுத்திலக்கணத்தை முன்னர்க் காட்டி —நச்சினர்க்கினியர்

= (2) இயற்றமிழை வேறு பிரித்து முறை யானே உலகுக்கு அறிவித்து —சிவஞானமுனிவர்

= (3) தனது நூன்முறையைக் காட்டி —அரசன் சண்முகனர்

தமிழ் எழுத்து முறை மயங்கா மரபின் எழுத்து முறை என வாளா கூறினால் பனுவல் பேரவை அதை ஏற்குமோ? ஏற்காது. மயங்கா மரபு என்று எவ்வாறு கொள்ளத்தகும் எனவும் காட்டல் வேண்டும். தொல்காப்பியர் வாளா கூறினாரிலர்; காட்டினார். காட்டினார் என்றால் பேரவை தாமே கண்கூடாகக் காணுமாறு செய்தார் (நிரூபித்தார்) என்று பொருள்படும். மயங்கா மரபின் எழுத்து முறை என்பதை எவ்வாறு காணுமாறு செய்தல் முடியும்? கருதுக. மயங்கிய மரபின் எழுத்துமுறை ஒன்றைக் காட்டி மயங்கா மரபின் எழுத்து முறையையும் காட்டி, எது எவ்வாறு மயங்கியது, எது எவ்வாறு மயங்காதது எனக் காட்டினால் பேரவை அவற்றைக் காணுதல் கூடும்; எது மயங்கா முறை எனத் துணிதலும் கூடும். இவ்வாறன்றி, வேறு வகையாக இதைக் காட்டுதற்கு வழியில்லை. மயங்கா மரபின் எழுத்து முறை என்று எதிர்மறையால் கூறியது, மயங்கிய எழுத்து முறை ஒன்றும் காட்டப்பட்டது என இசைத்து நிற்பதைக் காண்க.

மரபு என்று கூறியதையும் ஆழ்ந்து நோக்குக. மரபு என்பது தொன்றுதொட்டு வரும் வழக்கு எனப் பொருள் படும். இவ்வெழுத்து முறை—தமிழ் எழுத்து முறை—தொல்காப்பியர் புதிதாகக் கண்ட எழுத்து முறை அன்று; பிறரிடமிருந்து கடன் கொண்ட எழுத்து முறை அன்று; இன்று எழுந்த எழுத்து முறை அன்று; நெருநல் எழுந்ததன்று; தொன்றுதொட்டு வரும் தமிழ் மரபு; தமிழ் எழுத்து முறை மரபு, மயங்கா மரபு எனப் பனுவல் பேரவை காணுமாறு தொல்காப்பியர் காட்டினார்; நிலை நாட்டினார் எனப் பொருள் இசைத்து நிற்பதைக் காண்க.

மயங்கிய மரபு எது, மயங்கா மரபு எது என்று காட்டுதல் எவ்வாறு இயலும்? மயங்கிய மரபு என்பதைக் காட்ட அம்மயங்கிய மரபின் புலமையும் வேண்டாவோ? தொல்காப்

பியர் அப்புலமையையும் பெற்றிருந்தார். 'ஐந்திரம் நிறைந்த தொல்காப்பியன்' எனப் பாயிரம் கூறுவதைக் காண்க. ஐந்திரம் என்பது வேதமொழி அல்லது ஆரிய மொழியின் இலக்கணம் ; பாணினி இயற்றிய இலக்கணத்திற்கும் சிட்சைக்கும் முந்தியது, பிராதிசாக்கியங்களுக்கும் முந்தியது. தொல்காப்பியர் காலத்தே வழக்கிலிருந்தது ஐந்திர இலக்கணம் ஒன்றே; ஆதலின், அஃது ஒன்றையே பாயிரம் குறிப்பிடுகின்றது. ஐந்திரத்தைத் தொல்காப்பியர் நன்கு அறிந்தவர். 'ஐந்திரம் நிறைந்த தொல்காப்பியம்' என்று கூறாது, ஐந்திரம் நிறைந்த என்னும் அடைமொழியை ஆசிரியருக்கு ஆக்கி, 'ஐந்திரம் நிறைந்த தொல்காப்பியன்' என்று பாயிரம் கூறும் நுட்பத்தைக் காண்க. தொல்காப்பியம் ஐந்திரம் நிறைந்தது அன்று. ஆனால், அதன் ஆசிரியரோ, ஐந்திரம் நிறைந்தவர். ஆதலின், மயங்கிய மரபையும் காட்டினார் என்பதை இச்சொல்லாட்சி காட்டும். இம்மட்டோ! 'மயங்கா மரபின் எழுத்து முறை காட்டியதால் ஐந்திரம் நிறைந்த தொல்காப்பியர் எனப் பெயர் பெற்றார்,' எனப் பொருள் தருமாறு, 'அரில் தபத் தெரிந்து, எழுத்து முறை காட்டி' என்பவற்றை, ஐந்திறம் நிறைந்த 'தொல் காப்பியன் எனத் தன் பெயர் தோற்றி' என்பதோடு இணைத்துப் பாயிரம் கூறுவதையும் காண்க.

இப்பாயிரம் ஒரே வினை கொண்டு முடியினும் இரு பகுதிகளாக அமைந்துள்ளது காணலாம். 'நாடி, கண்டு, எண்ணி, புலந்தொகுத்தோனே,' என்பது ஒரு பகுதி. இது சற்று முன்பு நாம் கண்டது. 'பனுவல் அவையத்துக் காட்டி, தோற்றி, நிறுத்த படிமையோனே' என்பது மற்றொரு பகுதி. இது நாம் இப்போது காண்பது. புலம் தொகுத்த பகுதியில் ஐந்திரம் குறிப்பிடப்பட்டிலது. தொல்காப்பியர் ஐந்திரம் நாடிப் புலம் தொகுத்தாரிலர்; ஐந்திரம் கண்டு, எண்ணி நூல்

தொகுத்தாரிலர். அவர் ஐந்திரம் நிறைந்திருந்தமை பனுவல் அவையின்கண் தோன்றியது. தமிழ் இலக்கண முறையிலும், எழுத்து முறையிலும் ஐந்திரத்தைப் பின்பற்றிக் குறைகள் கூறப்பட்டன போலும்! அதில் தபத் தெரிந்து, மயங்கா மரபின் எழுத்து முறை காட்ட ஐந்திரம் நிறைந்தமை பயன் பட்டது.* 'காட்டி ஐந்திரம் நிறைந்த தொல்காப்பியன் எனத்

---

*சில ஆராய்ச்சியாளர் தொல்காப்பியர் பிராதிசாக்கியம் அறிந்தவர் என்று கூறி, அவர் அதினின்றும் கடன் கொண்டார் என்பது தோன்றப் பிராதிசாக்கியத்தினின்று சிலவற்றை எடுத்துக் காட்டுவர். தொல்காப்பியர் தம் காலத்திருந்த மறைமொழி ஒலி நூலை அறிந்தவரே. அறிந்திராவிடில் மயங்கா மரபு எது, மயங்கிய மரபு எது என்று பனுவல் அவையத்தே காட்ட இயன்றிராது. ஐந்திரம் நிறைந்த தொல்காப்பியன் ஆயினமையின் அவ்வாறு காட்ட இயன்றது. மறைநூல் ஒலி முறை மயங்கிய மரபு என்று அதில் ஒன்றையும் தொல்காப்பியர் மேற்கொண்டாரிலர்.

உயிர் ஒலிகளோடு சேர்த்து மெய்யொலிகளையும் உயிர் ஒலிகளாகக் கொள்ளும் ஆரியம். ' ரு, லு ' என்பன உயிர் ஒலிகள் ஆகா. இவற்றையும் உயிர் எழுத்துக்களாகக் கொள்வது ஆரியம். ஆதலின், அது மயங்கிய மரபு என்பர். அவ்வாறு கொள்ளாது தமிழ். தலையில் அல்லது உச்சியில் சில எழுத்துக்கள் பிறப்பவாக ' மூர்த்தன்யம் ' என அவற்றிற்குப் பெயரிட்டது பிராதிசாக்கியம். எந்த எழுத்தையும் தொல்காப்பியர் தலையில் பிறப்பதாகக் கூறினரிலர். எந்த எழுத்தும் தலையில் பிறப்பதும் இன்று. இம்மரபு மயங்கிய மரபு. இவை போல்வன பல உள. இவற்றில் சில பின்னரும் காட்டப்படும். இவற்றை எல்லாம் பாயிரம் குறிப்பால் உணர்த்தியதை விளக்குவது போன்று ' ஆலன் ' (W. S. Allen) என்ற எழுத்தொலி அறிஞர் கூறுவதைக் காண்க :

As to the pronunciation of the vocalic r and l, the ancient statements are perhaps not as clear as we could wish, but their general trend is easily followed. Their

தன் பெயர் தோற்றிப் பல்புகழ் நிறுத்த படிமையோனே"
எனப் பாயிரம் முடிவது காண்க.

---

places of articulation have already been discussed above. In distinction from the other vowels they are referred to as 'mixed' i. e. combining features of vowel and consonant (r/l); for this reason some writers even refused to admit them to the vowel system. There is general agreement that their phonetic structure is of the type: consonantal element—vocalic element—consonantal element.

Phonetics in Ancient India by W. S. Allen—Pages 61 & 62.

The *Tribhasyaratna* says: By the word *Murdhan* is meant the upper part of the buccal cavity; But there is no evidence that the word was ever used in this special sense, and comparisons by modern commentators with Greek *Ovpavos* (lit. 'vault of heaven', thence applied to 'roof of the mouth') are hardly relevant. *Murdhan* means simply 'head' or 'summit,' and the Indian terminology is reflected in the still not entirely obsolete terms 'cerebral' and 'cacuminal.' The term is in fact unusually imprecise, and Whitney is probably right in suggesting that it represents a traditional title surviving from a period when phonetic science was less well developed. (cf. also the term *Usman* for the fricatives—I-III above). From the historical stand point the retroflex sounds are relative late-comers into Indo-Aryan and they consequently occupy a peculiar place in the phonological system.

Phonetics in Ancient India by W. S. Allen—Page 53.

தொல்காப்பியருக்கு எழுத்தொலிகள் தலையிற் பிறத்தல் உடன்பாடு என்று பிறப்பியல் முதல் சூத்திரத்தைக் காட்டுவார் சிலர். இவ்வியலுள்ளே எந்த எழுத்தொலியும் தலையில் பிறப்பதாகத் தொல்

'அறங்கரை நாவின் அதங்கோட்டாசான்' என்று பாயிரம் கூறுவதையும் காண்க. நான்மறை முற்றிய ஒருவரை, நான்மறை நவிலும் நாவின் அதங்கோட்டாசான் என்று கூறுவது தானே பொருந்தும்? அவ்வாறு பாயிரம் கூறிற்றில்லை. யாரும் அறத்தை நாவோடு பொருத்திக் கூறுவதுமில்லை. 'அறங்கிடந்த நெஞ்சு' என்று கூறுவர். 'அறம் புரி கொள்கையர்' என்பர். 'அறங்கூறவையோர்' என்பர். 'அறம் கூறுசான் அறவோன்' என்பர். இவ்வாறெல்லாம் கூறாது, 'அறங் கரை நாவின்' என்று கூறியதில் ஒரு சிறப்பு அமைந்திருப்பதைக் காணலாம். அதங்கோட்டாசான் தலைமை தாங்கியது அரசனின் போக்கறு பனுவல் பேரவைக்கு. இத்தகு பேரவைக்குத் தலைமை தாங்குவார் சிறந்த அறிஞராய் இருப்பது மட்டும், நான்மறை முற்றியவராய் இருப்பது மட்டும் போதியதன்று; அறம் பிறழாதவராயும் அமைதல் வேண்டும். அவைத் தலைவரின் அறம் யாது? கூறிய பொருளின் உண்மையைக் காய்தல் உவத்தல் அகற்றி நடுவுநிலை நின்று, சார்ந்தொருபாற்கோடாது உணர்தலே அவைத் தலைவரின் அறம் என்பர். உண்மை யாதென உணர்ந்தும், அதைப் பலரிடையே பலரும் அறிய, ஒரு பேரவையிடத்தே கூறுதற்கு அஞ்சுவார் உளர். இத்தகு கோழையர் தலைமையில் நடக்கும் அவை சிறப்பதன்று; ஆராய்ச்சியும் சிறப்பதன்று. அறம் பிறழாது உண்மையைக் காணல் வேண்டும்; கண்டதைக் கூறலும் வேண்டும். இத்தன்மை எல்லாம் வாய்ந்திருந்தவர் அதங்கோட்டாசான்.

இத்தகுதியை ஆசாற்கு ஏற்றாது அவர் நாவிற்கு ஏற்றிக் கூறிய நயத்தைக் காண்க. இம்மட்டோ! 'உண்மையை

---

காப்பியர் கூறினாரிலர். நூலுள் கூறியவற்றுடன் ஒவ்வாதன யாவும் இடைச்செருகல்களே. தொல்காப்பியர் சூத்திரங்கள் போன்று எழுவாய், பயனிலை தெளிவாய் இம்முதல் சூத்திரத்தில் அமைந்தில.

மறைத்துக் கூற, மறையிற் பற்றுக்கொள் உள்ளம் ஒருவாறு கருதினும், அவர் நா அதற்கு உடன்படாது ; அவரும் அறியாமலே உண்மையைக் கூறிவிடும்' என்பதை 'அறங்கரை நாவின்' என்ற சொல்லாட்சி காட்டும். சுந்தரர் 'நான் மறக்கினும் சொல்லும் நா நமச்சிவாயவே'* என்று கூறியதை ஒக்கும் இச்சொல்லாட்சி.

அதங்கோட்டாசான் நாவை இவ்வளவு புகழக் காரணம் யாது ? மயங்கா மரபின் எழுத்து முறை என்று பிரித்துக் காட்டியதும் இவர் நாவைப் புகழ்ந்ததும் எவற்றையாவது குறிப்பனவா ? தமிழ் எழுத்து முறை மயங்கா மரபின் எழுத்து முறை என்று அதங்கோட்டாசான் உடன்பட்டார் ; அதை அவ்வவையத்தே புகழ்ந்தும் கூறினர், என்றும் இவை காட்டும் போலும் ! அவ்வாறு அல்லாவிடில் அவர் நாவிற்கு இவ்வளவு புகழை ஏற்றிக் கூறியிரார் பனம்பாரனர்.

அறங்கரை நாவின் என்று வினைத்தொகையால் கூறியதையும் கருதுதல் வேண்டும். மயங்கா மரபின் எழுத்து முறை என்று கூறினர் ; கூறிக்கொண்டிருக்கின்றார் ; இனி எங்கும் கூறுவார் என்று கூடப் பனம்பாரனர் கருதினர் போலும் !

'பல்புகழ் நிறுத்த படிமையோனே' என முடிகின்றது பாயிரம். பல்புகழ் என்பன எவை ? புகழ் என்பது ஒன்றுதானே ? பல்புகழ் என்னது தம் புகழ் என்றால் தொல்காப்பியரது கல்வியின் புகழ் சொல்வன்மையின் புகழ் அவர் நூலின் புகழ் எல்லாம் அடங்குமே ! புகழ் அல்லது தம் புகழ் என்று கூறாது 'பல்புகழ்' என்று ஏன் கூறல் வேண்டும்? பாயிரம் பாடிய பனம்பாரனர் அப்புகழில் தமக்கும் ஒரு பங்கு வேண்டி ஒரு புகழைப் பல்புகழ் ஆக்கினரோ ?

---

*சுந்தரர் தேவாரம், திருபாண்டிக் கொடுமுடி 1.

ஆம், ஆம். அப்புகழில் பனம்பாரனார்க்கும் பங்குண்டு ; நமக்கும் பங்குண்டு ; தமிழன் ஒவ்வொருவனுக்கும் பங்குண்டு; அவன் அவன், இப்பங்கைக் கொள்ளத்தக்கவனாயின். தொல்காப்பியர் தம் புகழ் ஒன்று மட்டுமா நிறுவினார் ? தம் புகழை நிறுவினார் ; தமிழ்ப் புகழை நிறுவினார் ; தமிழ்க் காப்பிய (இலக்கண)ப் புகழை நிறுவினார் ; மயங்கா மரபின் புகழை நிறுவினார் ; மயங்கா மரபின் எழுத்துமுறைப் புகழை நிறுவினார் ; தமிழன் அறிவின் புகழை நிறுவினார் ; தமிழன் ஆராய்ச்சியின் புகழை நிறுவினார் ; பாண்டியன் பனுவற் பேரவையின் புகழை நிறுவினார்.

'நிறுவிய' என்னும் சொல்லாட்சியைக் கருதுக. 'நிறுவிய' என்பது நிலை நாட்டிய என்று பொருள்படும். நிறுவுதல் எப்போது ஏற்படுவது ? நூலாசிரியன் கருத்துக்கள் குற்றமற்றவை என ஏற்ற போது ஏற்படுவது. தமிழ்மொழி மயங்கா மரபின் எழுத்து முறை கொண்டது என்பதை, தொல்காப்பியம் குற்றமற்ற நூல் என்பதை, அதங்கோட்டாசான் ஏற்றார் ; பனுவல் பேரவை ஏற்றது. தமிழ்மொழியின் புகழ் நிறுவப்பட்டது ; மயங்கா மரபின் எழுத்துமுறையின் புகழ் நிறுவப்பட்டது; தொல்காப்பியத்தின் புகழ் நிறுவப்பட்டது ; அதைத் தொகுத்த படிமையோன் புகழ் நிறுவப்பட்டது.

பன்மடங்கு ஓங்குக இப்படிமையோன் (தவத்தோன்) புகழ் ! பரவுக உலகெலாம் ! மயங்கா மரபின் எழுத்துமுறை வாழ்க ! வாழ்க தமிழ் மரபு ! வாழ்க தொல்காப்பியம் !

மயங்கா மரபின் எழுத்து முறை என்ற பெருமிதமே, வள்ளுவர் பெருமானை இவ்வெழுத்தொலி முறையிலிருந்து ஓர் உவமையை அமைக்கத் தூண்டிற்றுப் போலும் ! பலருக்கும் எளிதே விளங்காத உவமையை அவர் அமைத்துச் சென்றார். நாம் இன்னும் அதன் அடியையும் தொட்டோம்

இல்லோம். இம்மயங்கா மரபை நாம் உணர்ந்ததே உவமையை அறிதற்குப் பேருதவி புரியும்.

## அகரம் முதலாவதெப்படி ?

எழுத்தின் பிறப்பு, வளர்ப்பு, காப்பு முதலியவற்றைக் கண்டோம். இவற்றை எல்லாம் பண்டைக் காலத்தேயே தமிழ் மக்கள் அறிந்திருந்தார்கள் என்பதும் கண்டோம். இனி, எழுத்துக்களுக்கு அகரம் எவ்வாறு முதலாகின்றது என்பதைக் காணல் வேண்டும். எழுத்துக்கள், உயிர் எழுத்துக்கள் மெய்யெழுத்துக்கள் எனப் பிரிக்கப்பட்டன. மெய் யெழுத்துக்கள் தாமே இயங்குவன அல்ல ; உயிரெழுத்தின் உதவியைக்கொண்டே இயங்குவன. ஆதலின், உயிரெழுத் துக்களுள் அகரம் எவ்வாறு முதலாகின்றது என்பதைக் காண்பது, எழுத்துக்களுக்கெல்லாம் அகரம் எவ்வாறு முதலாகின்றது எனக் கண்டதாகும்.

" பன்னீ ருயிருந் தந்நிலை திரியா
மிடற்றுப் பிறந்த வளியின் இசைக்கும் ''

என்பது தொல்காப்பியம். மிடற்றின் வழியே வெளி வந்த மூச்சுக் காற்றால் ஒலிப்பன பன்னிரண்டு உயிர் எழுத்துக் களும்.

'' அவற்றுள்,
அ-ஆ வாயிரண் டங்காந் தியலும்.''

என்று கூறும் தொல்காப்பியம். ' அ ' என்பது குறில் : அதன் நீட்டம் ஆன ' ஆ ' என்பது நெடில் எனப்படும். இவை இரண்டும் அங்காத்தலால் இயலும். அங்காத்தல் என்பது வாயைத் திறத்தலால் ஏற்படுகின்றது. எழுத்தின் தோற்றம் என்ற தலைப்பின்கண் கூறியவற்றை நினைவு கூர்க.

மூச்சுக்காற்றால் எழுவது எழுத்து என்பதை அங்குக் கண்டோம். மிடற்றின் வழியே வெளிவரும் காற்றால் எழுந்து, வாய் திறந்திருக்க ஒலிப்பன அ, ஆ என்னும் இரண்டெழுத்துக்களும். மிடற்றின்கண் நகரும்போது மூச்சுக் காற்றுக்கு அசைவுகள் (vibrations) உண்டு. ஆனால், அவை காதில் கேட்கத்தக்க அளவுகொண்டன அல்ல. மிடற்றை விட்டு ஒலி பெருக்கி போன்று திறந்திருக்கும் வாயை அடைந்தபின்னரே அவ்வொலி காதில் கேட்கப்படுகிறது. ஒலி ஆராய்ச்சியாளர் ஒலிக்கவை (Tuning Fork) 'டூனிங் போர்க்' என்னும் ஒலி அளவு கருவியை வாயின் வழியாக மிடற்றுள்ளே செலுத்தி ஒலி அலைகளை அளந்து கணக்கிட்டுள்ளார். மிடறும் வாயும் சேருகின்ற (Nodal point) இடத்திலேதான் மிடற்று வளியின் ஒலி அலைகள் வலியுறத் தொடங்குகின்றன என்று கண்டனர். அவ்வொலி அலை அசைவுகள் அங்காந்த இடத்தை அடைந்த பின்னரே காதில் கேட்குமளவு பெருகி அகர வடிவம் தாங்கி ஒலிக்கின்றன.

தொல்காப்பியத்தின்படி அங்காந்த இடமே, அதாவது திறந்த வாயே, அகரத்தின் இடம்.* இங்குத் தொல்காப்பியர்

---

*'கண்டவ்ய: அகார:' அதாவது அகரம் கண்டத்தில் பிறப்பது என்று பிராதிசாக்கியம் கூறும். கண்டம் என்பது மிடறு என்று பொருள்படும். கண்டத்தில் அகரம் பிறப்பதாகத் தொல்காப்பியம் கூறிற்றில்லை. பன்னிரண்டு உயிரும் மிடற்றுப் பிறந்த வளியின் இசைக்கும் என்று கூறி அவற்றினின்று அகரத்தைப் பிரித்து அகரத்திற்கு இடம் அங்காந்த வாய் என்று கூறும் தொல்காப்பியம். பிராதிசாக்கியத்தை இங்குப் பொருத்திக் காட்ட, முதல் நாவும் முதல் அண்ணமும் சேர்கின்ற இடம் திறத்தலே அங்காத்தல் என்ற சொல்லால் உணர்த்தப்படுதலின், அவ்விடமே அவ்விரண்டெழுத்திற்கும் பிறப்பிடமாகும் என்பர் பிறர். அடி நாவும் அடி அண்ணமும் திறப்பதால் அங்காத்தல் எற்படுதல் இல்லை. உதடு திறத்தல், தாழ்வாய்

சொல் ஆட்சியைச் சற்று ஆழ்ந்து கருதல் வேண்டும். அங்காந்து இயலும் என்றார்; இசைக்கும் என்றாரிலர்; பிறக்கும் என்றாரிலர்; இயலும் என்றார். இயலும் என்பது, இயற்கையாக நிகழும் என்று பொருள்படும்.

வாய் திறந்திருக்கின்ற நிலையில் வாயுறுப்புக்கள் எந்நிலையில் அமைகின்றன என்பதைக் காணல்வேண்டும். நா, கீழ்வாய் அல்லது தாழ்வாயோடு ஒட்டிப்படுத்திருக்கின்றது. வாய் திறந்திருக்கும்போது, இதுவே நாக்கின் இயற்கை நிலை. எவ்விதத் தடையோ, அடைப்போ, நாவினால், பல்லால் அல்லது உதட்டால் ஏற்படுவதில்லை. மிடற்றின் வழியே எழுந்த மூச்சுக் காற்றுத் தடை ஏதுமின்றி இயற்கையாக வெளியே செல்கின்றது. வாய் திறத்தல் தவிர எல்லா வாயுறுப்புக்களும் இயற்கையான நிலையில் இருக்கப் பிறர் கேட்குமாறு வாயால் மூச்சு விட்டால் 'அ' பிறப்பதைக் காணலாம். இந்த நிலையில் வேறு எந்த ஒலியையும் ஒலிக்க இயலாது. ஆதலின், இதுவே மூச்சின் இயற்கை முதல் ஒலி என்று கொண்டனர் தமிழர். இவ்வொலியின் இயற்கையான தன்மையைக் குறிக்கவே 'இயலும்' என்றார் தொல்காப்பியர். இவ்வொலியைக் குறித்து (voice) குரல் ஒலி நூல் ஆங்கிலப் புலவர் 'ஐக்கின்' (Aikin) என்பவர் கூறுவதைக் கீழே காண்க.* இவர் தரும் விளக்கம் 'அங்காந்து இயலும்'

---

தாழ்தல், வாய் திறத்தல் அங்காத்தல் எனப்படும். மயங்கிய மரபு எது, மயங்கா மரபு எது என்பவற்றை இம்முதலெழுத்தின் பிறப்பிடமே காட்டிவிடும். தொல்காப்பியம் கூறியபடியே இக்கால விஞ்ஞான உலகமும் அங்காந்த வாயே அகரத்திற்கு இடமாகக் கொள்ளும். 109, 110 பக்கங்களின் அடிக் குறிப்பையும் காண்க.

* It should be understood, therefore, that when the sound ah is mentioned in these pages the following position of the organs has been prescribed :—

என்ற தொல்காப்பியத்திற்கு உடற்கூறுகள் ஒலிக் கூறுகள் முதலியவற்றை நன்குணர்ந்து விரிவுரை எழுதியது போல அமைந்துள்ளது காண்க. மிடற்றின் வழியே வந்த மூச்சுக் காற்று வாயிடத்தை அடைந்த பிறகே விரிந்து காதில் கேட்கத் தக்க அசைவுகளை அல்லது ஒலி அலைகளைப் பெற்று ஒலிக்

---

1. The jaws open so that the front teeth are at least one inch apart.
2. The tongue flat upon the floor of the mouth, with its tip and margin touching the inner surfaces of the lower teeth.
3. The lips are at rest upon the teeth and not retracted.
4. The soft palate raised enough to obstruct the passage to the nose.
5. The head and neck erect and the chest expanded.
6. The larynx drawn down by the sterno-thyroids (as described above) in association with the expanded chest.

Breathing strongly through the prescribed position of 'ah' we shall hear a sound which not only satisfies our ear as characteristic of the vowel 'ah' that we know well in language, but also with a little practice we shall detect a note possessing a distinct pitch.

In the selection of this position of the vowel-sound 'ah' I have been guided not only by the thought of phonological perfection, but also by the experience of a great number of examples, and I believe that it fairly represents a *normal and natural* sound which would be acceptable to anyone.

[Extract from pages 45, 46 and 47 of "The Voice" by W. A. Aikin, M. D.]

கின்றது. கண்டத்தில் அல்லது மிடற்றில் இவ்வொலியை ஒலிப்பது இயலாது ; மிடற்றில் ஒலிப்பினும் அஃது அங்குக் காதில் கேட்கத்தக்கதாவதுமில்லை. ஒலி பெருக்கியைப்போன்ற வாயே மூச்சுக் காற்று அகலமாய் விரியவும் கேட்குமளவுக்கு வேண்டும் ஒலி அசைவுகளைத் (vibrations) தரவும் அமைந்துள்ளது. இக்காலத்தே விஞ்ஞான முறைகளின்படி ஆராய்ந்து கண்ட* உண்மைகளுக்கு ஒப்ப அமைந்தது அங்காந்த வாயே அகரத்திற்கு இடம் என்று தொல்காப்பியர் கூறியது. இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே எவ்வாறு இவ்வுண்மைகளைத் தமிழர் கண்டனர் ? வியப்பு! வியப்பு ! பெருவியப்பு! வியப்பில் ஆழ்கின்றோம் என்று திரு. டாக்டர் சங்கரன் கூறியது புனைந்துரை அன்று ; உண்மை ! உண்மை !

---

*The resonant note is the result of the oscillations of the air which take place between the walls of the hollow space, and is therefore most distinct when the walls are regular in form, and it has a pitch in proportion to the size of the space and a character in accordance with its shape. The pitch and quality of the resonant note is also affected by the size and the shape of the orifices.

Speaking, therefore, of resonators in general, it is certain that the resonant notes are lowered in pitch both by enlarging their capacity and by diminishing their orifices, and that their resonant character is altered by varying their shape. It is from this property of varying the character of the resonant notes belonging to the hollow spaces of the resonator that we derive the power of making the vowel-sounds which form the basis of human language.

[Extract from page 48 of "The Voice" by W. A. Aikin, M. D.]

இனி அகரத்திற்குக் கூறியதே, ஆ என்று அகரத்தை நீட்டி ஒலிக்கும் ஆகார ஒலிக்கும் பொருந்தும். அகரத்தைக் குறில் என்பர் ; அதை நீட்டி ஒலிப்பதை—'ஆ' என்பதை—நெடில் என்பர். குறில்களுக்குக் கூறும் பிறப்பே நெடில்களுக்கும் பொருந்தும். ஒலி அளவு வேற்றுமை தவிர குறிலுக்கும் நெடிலுக்கும் பிறப்பு வேற்றுமை இல்லை. ஆதலின், இங்கு நெட்டெழுத்துக்களை விலக்கிக் குறில்களை ஆய்தலே போதியதாகும். அகரத்துக்கு அடுத்து நாம் காண வேண்டுவது, இகரம். இஃது எப்படி உண்டாகின்றது? இகரத்திற்கு முதல் ஒலி அகரமாகுமா என ஆராய்தல் வேண்டும்.

> "இ ஈ எ ஏ ஐ என இசைக்கும்
> அப்பா லைந்தும் அவற்றோ ரன்ன
> அவைதாம்—
> அண்பல் முதல்நா விளிம்புற லுடைய"

இவை அவற்றோரன்ன அதாவது 'அ', 'ஆ'வைப் போல இ, ஈ முதலியன அங்காத்தலை உடையன. ஆனால், நா மாத்திரம் அங்காத்தலில் பெற்ற இயற்கை நிலையைப் பெறுவதின்று. அடிநாவின் விளிம்பு உயர்கின்றது. விளிம்பு உயர நாவின் நடுவிடம் குழிகின்றது. அடி நா விளிம்பு அண்ணத்தின் பல்லைத் தொடுகின்றது. இ ஒலிக்கின்றது* அகரத்தை ஒலித்த வாயின் இடம் நாவின் செயலால் குறுகுகின்றது. அங்காந்து மூச்சுவிடும்போது எழுந்த அகர

---

*அகரத்திற்குக் கூறியது போல இ, 'ஈ' உருவாகும் இடத்தைப் பற்றியும் தெளிவு கண்டிலது ருக்வேத பிராதிசாக்கியம். இ, ஈ என்பன 'தாலவ்யம்' (Palatel) அல்லது அண்ணத்தில் உருவாவனவாக அது கூறும். தாலவ்யம், தாடையில் பிறப்பது என்பார் உளர். ருக்வேத பிராதிசாக்கியம் முதற் படலம் 19-வது சூத்திரத்தைக் காண்க. ஈண்டும் மயங்கிய மரபைக் காணலாம்.

ஒலியின் அலைகள் விரிந்து பரவ இடமின்றி நாவினுற் குறுகிய இடத்தின் வழியே செறிந்து நீளுகின்றன. இகரம் ஒலிக்கின்றது. எவ்வளவு நுட்பமாக ஒலி ஆராய்ச்சி சென்றுள்ளது, காண்க!

இனி உகரம் எவ்வாறு பிறக்கின்றது என்பதைக் காண்போம்.

"உ, ஊ, ஒ, ஓ, ஔ என இசைக்கும்
அப்பா லைந்தும் இதழ்குவிந் தியலும்."

அங்காத்த வாயின் இதழ் குவிகின்றன. வாயிடத்தே பரந்து விரிந்து எழுந்த அகர ஒலி, குவிந்து வெளியே வருகின்றது. உகர ஒலி பிறக்கின்றது. அகரத்தை ஒலித்துக்கொண்டே இதழ்களைக் குவித்துக் காண்க. வேறு எம்முயற்சியும் இன்றி, இதழ்கள் குவிதலால் அகர ஒலி உகரமாக ஒலிப்பதை யாரும் எளிதே காணலாம். முன்பு அங்காந்த அகர ஒலியை நா இகர ஒலியாகச் செய்தது; இங்கு இதழ்கள் உகர ஒலி ஆக்கின. நா வண்ணம் அங்குக் கண்டோம். இதழ் வண்ணம் இங்குக் காண்கின்றோம்.

மேலே கண்டவற்றால் என்ன பெறப்படுகின்றன? 'அங்காந்த அகர ஒலியே இ, உ ஆயிற்று; விரிந்த ஒலி அகரம்; அது ஒருவாறு குறுகி நீளும் ஒலி இகரம்; அதன் குவிந்த ஒலி உகரம்,' என்பன பெறப்படுகின்றன. இவையே தொல்காப்பியர் கருத்து என்பது, இ, ஈ முதலியவற்றின் பிறப்பைக் கூறுமுன் 'அவற்றோரன்ன' என்று அ ஆ வின் பிறப்போடு இவற்றை இணைத்ததாலும் விளங்கும்.

இனி ஆராய வேண்டுவன, எ, ஐ, ஒ, ஔ என்னும் ஒலிகள். இவற்றை மேலே கூறியவற்றோடு தொல்காப்பியர் இணைத்துவிட்டார். இவற்றைத் தனித்தனியே கூறினாரிலர். எ, ஐ, ஒ, ஔ என்பன இகரத்தையும் உகரத்தையும்

போன்ற ஒலிகளா ? அப்படியானால் அவற்றைத் தனி ஒலிகளாகப் பிரித்தது ஏன் ? 'இ'ய்யும் ' உ 'வ்வும் எ, ஐ, ஒ, ஔ என்னும் ஒலிகளும் ஒரே ஒலி ஆகா. ஒன்றற்கொன்று வேறுபாடு உண்டு. ஆனால், வேறுபாடு சிறிது. " தம் தம் திரிபே சிறிது என மொழிப "* என்று இவற்றை ஒதுக்கிச் சென்றார் தொல்காப்பியர்.

தொல்காப்பியர் இவற்றை மேற்போக்காகக் கூறிச் சென்றாரேனும், வள்ளுவர் இவற்றை விட்டபாடில்லை ; இவற்றையும் அகரத்தின் தலைமைக்கீழாக்கினார். இவற்றுள்ளும் அகரக் கூறு உண்டு என்று எவ்வாறு காணுதல் கூடும், அல்லது காட்டுதல் இயலும் ? ஒதுக்கிச் சென்ற எ, ஐ, ஒ, ஔ என்னும் நான்கெழுத்திலும் ' ஐ ' ' ஔ ' என்ற இரண்டு எழுத்துக்களைப்பற்றித் தொல்காப்பியரே மற்றோரிடத்து விளக்கம் தந்துள்ளார். மொழி மரபில்,

" அகர இகர மைகார மாகும் "†

" அகர உகரம் ஔகார மாகும் "‡

என்று கூறியது காண்க. அகரமும் இகரமும் சேர்ந்து ஐகாரமாகும் ; அகரமும் உகரமும் ஔகாரமாகும் என்பன பெறப்படுகின்றன. இவ்வொலிகளிலும் ' அகரம் ' தன் தலைமை ஆதிக்கத்தை நிலைபெறச் செய்தது.

இனி எகரத்திலும் ஒகரத்திலும் எவ்வாறு அகரம் சேர்ந்திருக்கிறது என்று காட்டுதல் முடியும் ? தொல்காப்பியரைப் போலவே நாமும் வழக்குடன் இலக்கியம் ஆயிரு முதலின் எழுத்தும் சொல்லும் நாட வேண்டுவதே வழி. இகரமும் அகரமும் சேர்ந்து வருகிற சொற்கள் சிலவற்றை

*தொல் எழுத்து 88. †தொல் எழுத்து 54.

‡தொல் எழுத்து 55.

ஆராய்வோம். இயந்திரம் என்ற சொல்லை ஆராய்வோம். இது இப்போது எந்திரம் என்று பல இடங்களிலும், தொல்காப்பியர் கூறிய நல்லுலகத்திலேயே பேசப்படுகின்றது ; எழுதவும் படுகின்றது. இ, அ என்பவை பக்குவிட்டொலிக்காது சேர்ந்தொலிக்கும்போது ஏன் எகரமாகக் காண்கின்றோம் ? இய்யும் அவ்வும் எகரமாவதைப் பேச்சிலும் காண்கின்றோம், எழுத்திலும் காண்கின்றோம். இம்மட்டோ! இரண்டு, ரெண்டு, இரட்டி, ரெட்டி எனக் கற்றாரும் கல்லாரும் பேசுவதைக் கேட்கின்றோம். இ, அ, சேர்ந்து வரும் இடங்களில் இகர ஒலி எகரமாகின்றது. அகர ஒலியின் அலைகள் குறுகிச் செறிந்து நீளுங்கால் இகரமாவதை முன்பு கண்டோம். இந்த இகரத்தை அடுத்து மீண்டும் அகரம் வருமானால் இஃது அந்த அகர ஒலியோடு ஒட்டி அதனுடன் இயைந்துவிடுகின்றது ; எகரமாகின்றது. ஆதலின், எகர ஒலியில் இகர அகரக் கூறு கள் இணைந்திருக்கக் காண்கின்றோம்.

'இனி ஒகர ஒலியில் அகரம் இடம் பெறுமா ?' என் பதைக் காண்போம். உயர்வு-ஒயர்வு, உடம்பு-ஒடம்பு, உரம்-ஓரம், குறவன்-கொறவன் என்று பெருவழக்காகப் பேச்சு மொழியில் காண்கின்றோம். மறுமலர்ச்சியாளர் சிலர், உகர மின்றி, ஒகரத்தோடே எழுதவும் செய்கின்றனர். உவ்வும், அவ்வும் பக்குவிட்டிசைக்கும் முயற்சி இன்றிச் சேர்த்துப் பேசும்போது ஒகர ஒலி பிறக்கக் காணலாம். அகர ஒலியின் அலைகள் குவிந்து உகரமாகியதை முன்பு கண்டோம். இந்த உகரத்தை அடுத்து அகரம் வரும்போது உவ்வும் அவ்வும் சேர உகரம் அதன் அண்மையில் அமைந்த அகரக் கூறு ஏற்று ஒகரமாய் ஒலிக்கின்றது.

எகரத்திலும் ஒகரத்திலும் அகரம் சேர்ந்திருப்பதைக் குறித்து இலக்கணப் பேரறிஞர் சிவஞான முனிவர் தொல் காப்பிய முதற்சூத்திர விருத்தியில் கூறுவதையும் காண்க :

" இனி எகரமாவது அகரக் கூறும் இகரக் கூறும் தம்முள் ஒத்திசைத்து நர மடங்கல் போல (நரசிங்கம் போல மனித வடிவமும் சிங்க வடிவமும் சேர்ந்து ஓர் உரு ஆனாற் போல) நிற்பதொன்று ஆகலானும், ஒகரமாவது உகரக்கூறும் அகரக்கூறும் தம்முள் ஒத்திசைத்து அவ்வாறு நிற்பதொன்று ஆகலானும், அவை அவற்றின் பின்னர் முறையே வைக்கப் பட்டன,'' என்றார்.

அகர ஒலி அலைகளே மாறி இகரமாயின, உகரமாயின என்பதற்கு வேறு சான்று காட்டுதல் இயலுமா ? அகர ஒலி வேறு, இகர, உகர ஒலிகளும் வேறு வேறு ஒலிகள் என்று கருதுதல் எவ்வாறு தவறாகும் ? இவற்றை ஓர் எடுத்துக் காட்டாலும் விளக்கலாம். புல்லாங்குழல் என்னும் குழலிசைக் கருவியை யாரும் அறிவர். அதன் தலைப்பில் மூச்சுக் காற்றைச் செலுத்த ஒரு துளை உண்டு. அதற்குச் சற்றுத் தூரத்தே ஏழு துளைகள் உள. தலைப்பின் துளை வழியே குழல் வல்லான் ஊதுகிறான். ஏனை ஏழு துளைகளும் திறந்தவாறு இருக்கின்றன. குழல் ஒலி கேட்கின்றது. இஃது ஒரு வகை ஒலி. இது குழலின் இயற்கை ஒலி என்னலாம். ஏனைய ஏழு துளைகளின்மீது குழல் ஊதுவான் விரல்கள் நகர்கின்றன. ஒவ்வொரு துளையாக அடைக்கப்படுகின்றது ; திறக்கப்படுகின்றது. ஏழு வகைக் குரல்கள் அல்லது ஏழிசைகளைக் கேட்கின்றோம். விரல்கள் இத்துளைகள்மீது புரள்கின்றன ; தாவுகின்றன ; ஓடுகின்றன. இத்துளைகள் ஒன்றைவிட்டொன்றாகவும் மாறி மாறியும் பாடும் பண்ணிற்கேற்ப முறைப்படி அடைக்கப்படுகின்றன ; திறக்கப்படுகின்றன. பற்பல வகை ஓசைகளைப் பற்பல பண்களைக் கேட்கின்றோம்.

ஏழிசைகளும் பற்பல பண்களும் எதினின்றும் எழுந்தன ? தலைத்துளை வழியே பெற்ற முதல் இசை

இல்லையேல் மற்ற இசைகள் எழ இடமுண்டா? முதல் முதலாகத் தலைத் துளை வழியே எழுந்த இயற்கை இசையி னின்றும் எழுந்தவை மற்ற இசைகள். தலைத் துளை வழியே ஊதிப் பெற்ற முதல் ஓசை அல்லது இயற்கை ஓசை இல்லையேல், மற்ற ஓசைகள் இல்லை; இசையும் இல்லை; பண்ணுமில்லை. இவைகளைப் போன்றன அகர ஒலியும் அதி னின்றும் எழுந்த எழுத்துக்களும். தலைத் துளை வழியே ஊதிப் பெற்ற முதல் ஓசையைப் போன்றது அங்காந்து ஒலித்த அகர ஓசை. தலைத் துளை ஓசையை விரல்களால் அடைக்கவும் திறக்கவும் பெற்ற மற்ற இசைகள் போன்றன மற்ற எழுத்தொலிகள். அங்காந்து ஒலித்துப் பெற்ற முதல் ஒலியாகிய அகர ஒலியை நா, பல், உதடு முதலியன அடைக்கவும் திறக்கவும் குறுக்கவும் குவிக்கவும் பிறந்தவை ஏனைய எழுத்தொலிகள். முதலில் பெற்ற அகர ஒலி இல்லையேல், ஏனைய எழுத்தொலிகளுமில்லை.

“ அக்கரங்கள் இன்றும் அகர உயிர் இன்றேல் ”*

என்று சிவஞானபோதம் கூறுவது எவ்வளவு பொருத்தமாக அமைகின்றது காண்க! இனி உவமைக்குள் புகுவோமாக.

---

*சிவஞானபோதம் சூ. 2, பா. 2.

# III

# உவமத் திறன்

"கலையுணர் வெய்தியும் கற்றுணர்ந்தும் என்னும்
கலைத்திறன் ஆய்வில் கடை?"

—ஈரடி இருநூறு

# III

# உவமத் திறன்

## உவமையிற் காணும் சொற்களை ஆய்தல்

உவமை எழுத்திலக்கண உவமம் என உணர்ந்தோம். எழுத்திலக்கணத்தைக் காண எழுத்தின் தோற்றம், வளர்ச்சி ஆதியன கண்டோம். 'மயங்கா மரபின் எழுத்துமுறை'யை மயக்கமின்றி உணர்ந்தோம். இவ்வெழுத்து முறையில் அகரம் எவ்வாறு எழுத்துக்களுக்கெல்லாம் முதலாகின்றது என்றும் கண்டோம். இந்த உண்மைகள் உவமைக்கு எவ்வாறு விளக்கம் தருகின்றன என இனிக் காணுதல் வேண்டும். இந்த உவமையில் உள்ள சொற்களுள் ஒவ்வொன்றின் பொருளை யும் ஒவ்வொன்ருகக் காண்போம். கண்டபின் அவற்றின் ஒப்புமையைக்கொண்டு உவமப் பொருளோடு ஒவ்வொன்றை யும் ஒப்பிட்டு விளக்கம் காண்போம். இதுவே உவமையைக் கொண்டு பொருளை அறியும் முறை.

'அகர முதல' என்னும் தொடக்கத்திலிருந்து தொடங்குவோம். 'அகர முதல' என்னும் தொடரில் 'முதல' என்னும் சொல் எப்பொருளைத் தருகின்றது எனக் காண்போம்.

### 'முதல'

'முதல' என்னும் சொல் இப்போது பெரும்பாலும் வழக்கில் இல்லாத சொல். இச்சொல்லிற்குப் பொருள் காண இலக்கணத்தின் உதவி வேண்டும். இலக்கணத்தின் உதவி

யின்றி இதற்குத் தக்க பொருள் காண்பது இயலாதது. இஃது அஃறிணைப் பன்மைக் குறிப்பு வினைமுற்று என்பர். குறிப்பு வினைமுற்று பத்து வகைக் குறிப்புக்களை உணர்த்த வல்லது. அவற்றில் ஒன்று உடைமைக் குறிப்பு; 'பண்பின் ஆகிய சினை முதற்கிளவி' தரும் உடைமைக் குறிப்பு என்பர். தொடக்கத்திலேயே நாம் இலக்கணத்துள் புகவேண்டா. 'முதல' என்பது முதலை உடையன என்னும் உடைமைப் பொருளைத் தரும். இதைப் பற்றிய இலக்கணக் குறிப்பைப் பின் இணைப்பிற் காண்க. இச்சொல் உணர்த்தும் உடைமைப் பொருண்மையைப் பற்றிய கருத்துக்களும் பின்னர் விளக்கம் பெறும்.

'முதல' என்பது உடைமையை உணர்த்தும் குறிப்பு வினைமுற்றாகவே முன்பும் பொருள் கூறப்பட்டது. எழுத்துக்கள் அகரமாகிய முதலை உடையன என்று முன்பே சொற்பொருள் கூறியதை நினைவு கூர்க. முதல் என்னும் சொல்லோடு 'அ' என்னும் பன்மைக் குறிப்பு விகுதி சேர்ந்து (முதல் + அ) முதல என ஆயிற்று என்பர். இவற்றுள் 'முதல்' என்பது மட்டும், அ என்னும் விகுதியை நீக்கிய முதல் என்பது மாத்திரம், எப் பொருளைத் தரும்? என்ன என்ன பொருளில் இங்கு ஆளப்பட்டுள்ளது?' எனக் காண்போம்.

## முதல்

முதல் என்பதன் பொருளை எல்லாம் கண்ட பின்னரே 'முதலை உடையன' என்பதற்கு எப்பொருள் பொருந்தும் என்பதைக் காணுதல் கூடும். ஆதலின், முதல் முதலாக 'முதல்' என்பதன் பொருளை ஆராய்வோம். முதல் என்பதன் பொருளை வரையறை செய்யாது பொருள் கூறத் தொடங்குதல் அரங்கின்றி வட்டாடியதாக முடியும்.

'முதல்' என்பதற்குப் பல பொருள்கள் உள. இதைப் பல பொருள் ஒரு சொல் என்பர். திருவள்ளுவரே இச் சொல்லைத் தம் நூலில் பல பொருள்களில் ஆண்டுள்ளார். அப்பொருள்களை ஒவ்வொன்றாக ஆராய்ந்து அவற்றில் எங் தெந்தப் பொருள்கள் இங்குப் பொருந்துவன எனக் காண் பது, உண்மைப் பொருள் காண்பதற்குத் தக்க முறையாகும்.

### முதல்=செடி கொடியின் முதல்

முதல் என்பது செடி, கொடி, மரம் முதலியவற்றின் முதலைக் குறிக்கும். முதல் என்பது இங்கு வேர் அல்லது முளை தோன்றும் பகுதி அல்லது அடிப்பகுதியைக் குறிக் கும். "வாடிய வள்ளி முதலரிந்தற்று" என்று திருவள்ளு வரே, இப்பொருளில் இச்சொல்லை ஆண்டுள்ளார். (திருக் குறள், 1304). ஒரு முதல் அல்லது வேரிலிருந்து கொடிகள் தோன்றுகின்றன; செடிகள் தோன்றுகின்றன; மரங்கள் தோன்றுகின்றன. அகரமாகிய முதலிலிருந்து எழுத்துக்கள் தோன்றுகின்றன. கடவுளாகிய முதலிலிருந்து உலகம் தோன்றுகின்றது. முதலிலிருந்து முளை தோன்றுகின்றது. முளையிலிருந்து தளிர்கள் ஒவ்வொன்றாகத் தோன்றுகின்றன; இலைகள் ஆகின்றன; கிளைகள் தோன்றுகின்றன; விரிகின் றன; பரவுகின்றன. இவ்வாறு முதலை அடிப்படையாகக் கொண்டு வளர்வன செடிகள், கொடிகள், மரங்கள் முதலி யன. இவை பற்பல கொடிகள் பற்பல செடிகள் பற்பல மரங்களாக எங்கெங்கும் பெருகுகின்றன. எங்கெங்கும் இவை நிலைத்திணையாக மிளிர்கின்றன.

இத்தன்மையே போல அகரமாகிய முதலிலிருந்து உயிர் எழுத்துக்கள் தோன்றின; உயிர்மெய் எழுத்துக்கள் தோன் றின; சொற்கள் தோன்றின; சொற்களின் தொடர்கள் தோன்றின; இவற்றாலான பற்பல நூல்கள் எழுந்தன.

எங்கெங்கும் எழுத்துக்கள் பரவின. எழுத்துக்களெல்லாம் ஒரு தனி உலகமாய் மிளிர்கின்றன.

இத்தன்மையே போன்று கடவுளாகிய முதலிலிருந்து ஓசை, ஊறு, ஒளி, சுவை, நாற்றம் (கந்தம்) தோன்றின. இவற்றினின்றும் வான்,வளி, தீ,நீர், நிலம் என்பன எழுந்தன. இவற்றினின்றும் உலகிற்காணும் இயங்குவன, இயங்காதன, உயிர் உள்ளன, உயிர் இல்லன எல்லாம் தோன்றின. இவை எல்லாம் சேர்ந்து நாம் வாழும் உலகம் தோற்றம் அளிக் கின்றது.

திருவள்ளுவர் கூறியவாறு முதலை அரிந்துவிட்டால் வள்ளிக்கொடியில்லை. முதல் இல்லையேல் கொடியில்லை, செடியில்லை, மரமில்லை, நிலத்திணை உலகே இல்லை. அகர மில்லையேல், எழுத்தில்லை, சொற்கள் இல்லை, சொற்றொட ரில்லை, எழுத்து உலகமே இல்லை. கடவுளில்லையேல், ஓசை யில்லை, ஊறு முதலியன இல்லை ; வளி, தீ, நீர், நிலம் ஒன்று மில்லை ; உலகமே இல்லை. இவ்வுண்மைகளெல்லாம் முதல் என்ற சொல்லால் பெறப்படுகின்றன.

திருவள்ளுவர் யாருக்கும் விளங்காத உவமையை, இலக் கண உவமையை அமைத்துச் சென்றார் என்று முன்பு குறை கூறினோம். அங்குக் கூறியவற்றை எல்லாம் நினைக! இலக்கண உவமை எல்லோருக்கும் விளங்காதது என்பது திருவள்ளு வருக்கே தெரியும்போலும்! அதற்காகவே எல்லோருக்கும் தெரியும்பொருட்டு முதல் என்ற சொல்லைத் தெரிந்தெடுத்து ஆண்டார் போலும்! "தாமே முழுது உணர்ந்து தண் தமிழால் வெண்குறளை" யாத்தார் என்று திருவள்ளுவரைப் புகழ்ந்தான் புலவன் ஒருவன். முழுது உணர்தல் என்பது முக்காலத்தையும் உணர்தலைக் காட்டும் போலும்! இவ்வாறு முழுதுணர்ந்த நிலையில் வள்ளுவர், தமிழ் இலக்கணத்தைத் தமிழர் பயிலாத காலமும் உண்டாகும், தம் உவமையை

உணர்தற்கு இயலாத நிலைமையும் ஏற்படும் என்றெல்லாம் அறிந்திருந்தார் போலும்! ஆதலின், இலக்கண உவமையாயினும் அது யாருக்கும் விளங்குமாறு 'முதல' என்ற சொல்லை, ஆண்டு அதற்குப் பொருள் காட்டுவதுபோல 'வள்ளி முதல்' என்ற உவமையை மற்றோர் இடத்துக் காட்டியும் சென்றார்; காண்க!

கடவுட்கொள்கையை விளக்க, உலகின் தோற்றத்தை விளக்க எழுத்திலக்கண உவமை. இன்னும் அவ்வுவமையை விளக்க மற்றோர் உவமை மறைத்து வைத்த உவமை, முதல் என்னும் சொல்லால் பெற்ற உவமையைக் காண்க. இஃது உவமையும் பொருளும் ஒன்றுபட ஓர் உருவாக்கிய உவமை அல்லது உருவகம் என்பர்.* 'உருவகம்' என்னும் பெயர் வள்ளுவருக்குப் பிற்காலத்தே தோன்றியது. பெயர் யாதாயினும், அது தரும் பொருளே தேவை.

திருவள்ளுவர் உவமைக்கு எளிமை சேர்த்த முறையைக் காண்க! பயிர் முதல் உவமையை உழவுத் தொழிலாளர்க்கு ஏற்ற உவமையை, எல்லோர்க்கும் தெரியக்கூடிய உவமையை, எளிய உவமையை முதல் என்னும் சொல்லில் அமைத்துச் சென்ற திறனைக் காண்க! முதலையும் பயிரையும் செடியையும் கொடியையும் அறியாத மக்களும் உளரோ? முதல் என்ற சொல் தரும் ஒளியைக் காண்க; அதன் ஒளி உவமையின் இருட்டறையுள் எல்லாம் சென்று உவமையை ஒளி பெறச்

---

*உவமையையும் பொருளையும் வேறுபாடு ஒழித்து, ஒப்புமை காட்டும் சொல்லையும் ஒழித்துக் கூறுவதைப் பிற்காலத்தவர் உருவகம் என்பர்.

"உவமையும் பொருளும் வேற்றுமை ஒழித்து
ஒன்றென மாட்டின்அஃது உருவக மாகும்."

(தண்டி அலங்காரம், 36)

செய்கின்றது; அழகு பெறச் செய்கின்றது; எளிமை பெறச் செய்கின்றது. இது பாட்டுக்குத் தந்த நலனைக் காண்க: பொருள் செறிவைக் காண்க. இதுவே 'கைவல் பாமகன்' பாக்களில் சொற்களை ஆளும் முறை.

இங்கு உரையாசிரியர்களில் ஒருவர் உரையும் பொருத்தமாக அமைகின்றது. திருக்குறள் உரையாசிரியர்களில் 'காலிங்கர்' என்பவர் ஒருவர். அவர் உரையைக் கீழே காண்க!

"அகரமாகிய எழுத்தின்கண் விரிந்தன ஏனையெழுத்துக்களும், அவற்றானாகிய சொற்களும், மற்றைச் சொற்றொடர்புடைய எனைத்துக் கலைகளும். மற்றும் யாவையுமாகியவது மற்றி யாதொருபடி, அப்படியே மூலகாரணனாகிய இறைவன்கண்ணே விரிந்தனவும். அவை, ஓசை, ஊறு, ஒளி, சுவை, கந்தம் என்கின்ற நுண்பூதமும், மற்று அவற்றின் வழி விரிந்த வான், வளி, தீ, நீர், நிலம் என்கின்ற ஐம்பெரும் பூதமும், அவற்றின் வழி விரிந்த நடப்பன நிற்பனவாகிய இருவகைப் பல்லுயிர்களும், மற்றும் இவ்வுயிர்கள் வாழ்கின்ற உலகங்களனைத்தும் என்றவாறு."

இவர் உரை சற்று முன் கூறிய கருத்துக்களுக்குப் பொருத்தமாக அமைந்திருப்பதைக் காண்க! பரிமேலழகர் உரையைப் போன்று செறிவும் சுருக்கமும் இவர் உரை பெற்றிலதாயினும், தெளிவும் விளக்கமும், மிக மிகப் பெற்றுள்ளது. 'மற்று' என்ற சொல்லில் மட்டிலா ஆசை கொண்டவர் இவர். இஃது இவர் காலத்துப் பண்பு, அல்லது நடை போலும்! இவர் உரைக்கு உரையும் வேண்டுவது அன்று. மேலே விளக்கியவற்றிலிருந்து உவமையை அறிந்துவிட்டதாகக் கொள்ளுதல் இயலாது. திருவள்ளுவர் உவமை மிக ஆழ்ந்து செல்வது. அதன் அடியையே நாம் இப்போது தொட்டுள்ளோம். முதல் என்ற ஒரு சொல்லின்

ஒரு பொருளைக் கண்டோம். அஃது, உவமைக்கும் உவமப் பொருளுக்கும் பொருந்தும் வழியையும் கண்டோம். முதல் என்ற சொல்லின் ஏனைய பொருள்களைக் காண்போம்; அவை பொருந்தும் வழியையும் காண்போம் :

## முதல்=கைப்பொருள் (மூலதனம்)

முதல் என்பது மூலதனம் அல்லது கைப்பொருள் என்று பொருள்படும். 'முதலிலார்க்கு ஊதியமில்லை' என்றார் வள்ளுவர் பெருமான். (குறள், 449). ஆம், முதல் இருந்தால் தானே ஊதியம் உண்டு. ஊதியம் என்பது வருவாய் என்று பொருள்படும். வாழ்க்கைக்கு வருவாய் வேண்டும். வருவாய்க்கு முதல் வேண்டும். முதல் இல்லையேல் கொள்முதல் இல்லை, கொள்ளலும் இல்லை, விற்றலுமில்லை, விற்ற முதலும் இல்லை. பொருளை எவ்வாறு பெறுவது? முதலிருந்தால் பெறலாம். பொருளைப் பெறுதற்கு ஆதாரமாக இருப்பது முதல். 'தேட்டாளன் மாட்டு' இம்முதல் சிறு முதலாயினும், பெருமுதலாகப் பெருகுகின்றது; ஒன்று பலவாகக் கோடி கோடியாகப் பெருகக் காண்கின்றோம். உலகையே ஆட்டி வைப்பது இப்பெருகிய பொருள். இதன் ஆட்சிப் பரப்புக்குள் அகப்படாத மக்களோ இல்லை. வள்ளுவர் காலத்தும் இதன் ஆட்சி குறைந்திலது போலும்! "பொருளிலார்க்கு இவ் வுலகமில்லை," என்றார் திருவள்ளுவர். இதன் ஆற்றலையும் ஆட்சி செலுத்தும் வன்மையையும் நன்கு உணர்ந்தே கூறினர் போலும்! இப்பொருளின் ஆட்டத்தை எல்லாம் இக்கால உலகம் நன்கு உணரும். இதற்கு இன்னும் விளக்கம் வேண்டுவதின்று.

எத்தொழிலுக்கும் முதல் வேண்டும். முதலின்றி ஒரு தொழிலையும் செய்ய இயலாது. உழவுத் தொழிலுக்கும் முதல் வேண்டும், வித்து அல்லது விதை முதல் வேண்டும்.

உணவைத் தருவதும், உடையைத் தருவதும் முதல். செழிப்பைத் தருவதும் செல்வாக்கைத் தருவதும் முதல். மக்கள் வாழ்வின் பொருட்பெருக்கத்திற்கு முதல் வேண்டுவது போல, எழுத்துக்களின் வாழ்விற்கும் பெருக்கத்திற்கும் முதல் வேண்டும். அகரமே அம்முதல். ஒரு சிறு முதல் அது. ஒன்று பலவாக, ஒரு கோடியாகப் பெருகியது. சிறு கைம்முதல், பெரிய பெரிய முதலாகி, உலகையே தன் ஆட்சிக்கு உட்படுத்தி அதை இயக்குவதைப்போல, ஒரு சிறு முதலாகிய அகரத்திலிருந்து, எழுத்துக்கள் முறை முறையாகப் பெருகி, உலகையே ஆட்கொண்டு, இயக்குகின்றன.

அவ்வண்ணமே கடவுளாகிய முதலிலிருந்து தோன்றியன, ஓசை, ஒளி, ஊறு என்பன. இவைகளினின்று தோன்றியனவும் பற்பல. தேட்டாளன்மாட்டுப் பொருள் பெருகுவது போல, இவை விண்ணாகி, காற்றாகி, தீயாகி, நீராகி, மண்ணாகி, மலையாகி, இப்பேருலகமாய்க் காட்சி அளித்து நிற்கின்றன. கடவுட்கைம்முதலிலிருந்து மண்ணுலகம் பெருகியது போல, இக்கடவுட்கைம்முதலிலிருந்தே ஆன்ம உலகமும் ஞான உலகமும் பெருகியதைக் காணலாம். ஆன்ம வாழ்விற்கு, அருள் வாழ்விற்கு, ஞானவாழ்விற்கு, அடிப்படையானது கடவுட்கைம்முதல். "என் வாழ் முதலே"* "என் வாழ் முதலாகிய பொருளே" என்றார் மணிமொழியார். ஞான உலகின் பெருமுதலாளி இவர்; கடவுள் முதலைக்கொண்டு பெருகிய செல்வர்; அருட் செல்வர்; ஈடிலா இறைஞானச் செல்வர். பெருகிய பொருளிலிருந்து சேமித்து வைப்பது உண்டு. இதுவே, சேம

*திருவாசகம், நீத்தல் விண்ணப்பம் 23. 39. 40

,, திருப்பள்ளி எழுச்சி. 1.

முதல் ஆவது. "மனக்கினிய வைப்பாக வைத்தேன்"† என்றார் அம்மையார். சேமித்து வைப்பது, வைப்பு முதல். பெருங்குடி வணிகர்தம் பெருமகளார் ஞானப்பொருள் ஈட்டுமிடத்தும் வணிகர் முறையை மறந்திலர் போலும்! சேமித்துச் சேமித்து "எய்ப்பில் வைப்பை" எய்தியது காண்க.

## முதல்=எண் வரிசை முதல்

இனி, முதல் என்பது, எண் வரிசையில் முதலாகிய ஒன்று என்று பொருள்படும். ஒன்று, இரண்டு, மூன்று என்று எண்ணும் எண் முறையில் முதலாக நிற்பது ஒன்று. இப்பொருளிலும் திருவள்ளுவர் இச்சொல்லை ஆண்டுள்ளார். 'வளிமுதலா எண்ணிய மூன்று' என்றார். (குறள் 934). முதல் என்ற சொல்லைத் தாம் எண் முறையிலேயே ஆண்டுள்ளதைக் காட்ட 'எண்ணிய' என்ற சொல்லையும் திருவள்ளுவர் சேர்த்தார் போலும்! எண் முதலாகிய ஒன்று இரண்டாகி, மூன்றாகி, பத்தாகி, நூறாய், ஆயிரமாய், கோடியாய், வேண்டியோர் வேண்டியாங்கு வளர்ந்துள்ளது. இவ்வெண்கள் ஒன்று பலவாகப் பெருகினும், இவற்றின் பெருக்கமனைத்தும் ஒரு முறை பற்றியே பெருகுவன; ஒழுங்கு தவறிப் பெருகுவன அல்ல. இரண்டும் இரண்டும் நான்காவதன்றி, ஐந்தாவதில்லை; மூன்றாவதுமில்லை; பிறிதொன்றாவதுமில்லை. எண்முறை ஒழுங்கு, எக்காரணம்பற்றியும், தவறுதலும் இல்லை; பிறழ்தலும் இல்லை. இது, 'மயங்கா மரபு' உடையது.

எண் முதலைப்போன்ற அகர முதலிலிருந்து எழுத்துக்கள் தோன்றின. இவையெல்லாம் இரண்டாய், மூன்றாய் எண்கள் போலச் சேர்ந்தன. சேர்ந்தவை, மீண்டும் சேர்ந்து,

†அற்புதத் திருவந்தாதி பாடல், 10.

எண் முறை போலவே, ஒன்று பலவாகப் பெருகி உள்ளன. ஒலியின் அளவை அளந்து அளந்து கண்டு, எண் முறை ஒழுங்கின்படி அமைக்கப்பட்டது தமிழ் எழுத்துமுறை. எண் முறையைப் போலவே இதுவும் மயங்கா மரபின் எழுத்து முறையானது காண்க. இலக்கணத்திறன் என்னும் பகுதியில் கூறியவற்றையும் ஈண்டு நினைவு கூர்க.

இவ்வாறே எண் முதல் போன்ற கடவுளாகிய முதலிலிருந்து தோன்றிய உலகு, ஒன்று பலவாகப் பெருகிப் பெருகி, எண்ணற்றவைகளாகி, உலகமாகக் காட்சி அளிக்கின்றது. இப்பெருக்கம் அனைத்தும் எண்முறை பிறழாதன.

'மயங்கா மரபின்' எண் முறையில் 'ஒன்று' என்னும் முதல் இல்லையேல், எண்களே இல்லை. அது போல, மயங்கா மரபின் எழுத்து முறையில் 'அகர'மாகிய முதல் இல்லையேல், எழுத்துக்களே இல்லை. கடவுளாகிய முதல் இல்லையேல், உலகமே இல்லை.

இவ்வாறு இவ்வுலகியல் பெருகியமுறையைக் கருதியே போலும் கல்லாடர், "சமயக்கணக்கர்தம் மதி வழி கூறாது உலகியல் கூறிப் பொருள் இது என்ற வள்ளுவன்" என்றார்! திருவள்ளுவர் வேறு எப்பாட்டால் உலகியல் கூறிப் பொருள் இது என்று உணர்த்துகின்றார்? முதற்குறளன்றி, வேறு எக்குறளும் கல்லாடர் கருத்துக்குப் பொருத்தமாக அமைதலைக் காணோம். மேலே கண்டவாறு, மூன்றுவகையாகப் பொருள் கொள்ளும் உவமையிலேயே உலகியல் அமைந்து கிடக்கின்றது.

## உலகின் மூவகைப் பெருக்கம் :

கொடி அல்லது செடி என்று முன்னர்க் காட்டியது, இயற்கை முறைப்பெருக்கம், கூர்தல், அல்லது உள்ளது சிறத்தல் (Evolution) என்பர். இயற்கையாகப் பெருகும்

இப்பெருக்கத்திற்கும் ஒரு முதல் உண்டு. கைம்முதல் என்று பொருள் கொண்டது செயற்கை முறைப்பெருக்கத்தை உணர்த்துவது. இது மக்களின் முயற்சியால் பெறும் பொருளின் பெருக்கம். இப்பெருக்கத்திற்கும் ஒரு முதல் வேண்டும். அதுவே கைம்முதல். மூன்றாவதாகக் கண்டது எண் முறைப் பெருக்கம். இதற்கும் ஒரு முதல் வேண்டும்.

அகர முதலுக்கும் இம்மூவகைப் பெருக்கமும் அமை கின்றன. அகர முதலிலிருந்து, இயற்கைப் பெருக்கமாக அமைந்தது, பேச்சுமொழி. அதையே, செயற்கைப் பெருக்க மாகச் செய்தது மக்களின் அறிவு. அதை முறைப்படுத்தி, வகைப்படுத்தி எழுத்து முறை கண்டனர். அளவிலாப் பெருக்கமடைந்தது எழுத்து. எண் முறைப்படி ஒவ்வோர் ஒலியின் அளவும் இயல்பும் அளந்து அளந்து கண்டு, எண் முறை ஒழுங்கின்படி கூட்டியும் பெருக்கியும் மயங்கா மரபின் எழுத்து முறை கண்டனர். இந்த மயங்கா மரபின் எழுத்து முறையில் இயற்கை முறை செயற்கை முறை எண் முறை என்ற மூன்று முறைகளும் மிளிர்கின்றன. ஆதி பகவனாகிய முதலுக்கும் இந்த மூன்று முறைகளும் பொருந்தும். அம்முதலிலிருந்து, ஒன்றிலிருந்து ஒன்றாக இயற்கையான முறையில் பெருகியது உலகு. ஆண் பெண் சேர்க்கை முதலிய செயற்கையால் பெருகியதும் இம்முதலுக்கு உண்டு. இப்பெருக்கமனைத்தும் எண் முறைப்படி நிகழ்ந்தன; நிகழ்வன. ஆதலின், கடவுள் முதலிலிருந்து இயற்கையாலும், செயற்கையாலும், எண் முறைப்படியும் எழுந்தது உலகு.

உலகத் தோற்றம் இயற்கையால் நிகழ்ந்ததாயினும், செயற்கையால் நிகழ்ந்ததாயினும், எண் முறைப்படி நிகழ்ந்த தாயினும், அதற்கு ஒரு முதல் வேண்டும். ஒரு முதலின்றி அது பெருகுவது அன்று என்பதை வற்புறுத்தவே இம்

மூன்று வகையாகிய உலக இயல்புகளை முதல் என்ற சொல்லால் வள்ளுவர் உணர்த்தினர் போலும்! முதலின்றியே உலகு தானே பெருகுவது என்ற இயற்கை வாதிகளின் மறுப்பாக முதற்றே என்னும் சொல், அதன் தேற்றேகாரம், அமைந்ததைக் காண்க. இவற்றை எல்லாம் கருதியே கல்லாடனர், உலகியல் கூறிப் பொருள் இது என்று வள்ளுவர் உணர்த்தியதாக எண்ணினர் போலும்!

திருவள்ளுவர் 'உலகியல் கூறிப் பொருள் இது' என்று உணர்த்தினர் என்பது, மேலே கூறியபடி பொருந்துவதாயினும், 'சமயக்கணக்கர்தம் மதி வழி கூறாது' என்று கல்லாடனர் கூறியது பொருத்தமுள்ளதாக அமைதல் இல்லை. மேலே கூறிய மூன்று வகை உவமை விளக்கத்திலும் சமயக் கணக்கர் மதி வழி கூறிய முறையைக் காண்பார் உளர். இயற்கைப் பெருக்கமுறையைச் சித்தாந்த முறை என்பர். முதல் செடியானது 'தான் ஆன' சித்தாந்தத்தை உணர்த்தும் என்பர். கைம்முதல் வேறு; அதனல் பெற்ற பொருள் வேறு. ஆதலின், செயற்கை முறையில் துவைதக் கொள்கையைக் காண்பார் உளர். 'எண் முறைப் பிறப்பில்' அத்துவித முறையைக் காண்பாரும் உளர்.

இவையன்றியும், முதல் என்ற சொல்லை வள்ளுவரே காரண காரியப்பொருளில் ஆண்டுள்ளார். காரிய காரண முறைப்படி, அதாவது அளவை முறைப்படி, பொருள் இது என உணர்த்துதல் சமயக் கணக்கர்தம் மதி வழி ஆகும். இந்த வழியையும் விட்டார் அல்லர் வள்ளுவர்.

### முதல் = காரணம்

இனி முதல் என்பது காரணம் என்றும் பொருள்படும். திருவள்ளுவர் 'நோய் நாடி நோய் முதல் நாடி' என்றார். (குறள், 948). 'நோய் முதல்' என்பது நோயின் காரணம்

என்று பொருள்படும் ; இது காரிய காரணப்பொருள் என்பர். அளவை முறைக்கு இன்றியமையாதது காரண காரியப் பொருள்.

அகரம் அல்லது அகரமாகிய முதல், காரணம் ; காரியம் எழுத்துக்கள். அது போல, ஆதிபகவன் அல்லது ஆதி பகவனாகிய முதல், காரணம் ; காரியம் உலகு. காரணத்தினின்றும் எழுவது காரியம். அவ்வாறே அகரத்தினின்று எழுவன எழுத்துக்கள். ஆதிபகவனாகிய முதலினின்று எழுவது உலகு. காரணம் என்பது எவ்வகைக் காரணம் ?

காரணங்களை அளவை நூலார் முதற்காரணம், நிமித்த காரணம், துணைக்காரணம் என மூன்று வகையாகப் பிரிப்பர். குடம் என்ற பொருளுக்கு மண் முதற்காரணம். மண் தானே குடமாவதின்று. அதைக் குடமாக்கக் குயவன் ஒருவன் வேண்டும். குயவன் நிமித்த காரணம். குயவனிருந்தும் மண் இருந்தும், குடமாக்குவதற்கு உருளை முதலிய கருவிகள் வேண்டும். இவைகளைத் துணைக் காரணம் என்பர். இவை போலவே, மூன்று காரணங்கள் அகர முதலிற்கும் அமைகின்றன.

அகரம் எழுத்துக்களுக்கு முதலானபோதிலும், தானே இயங்குவதன்று ; எழுத்தாவதன்று. அதற்கும் ஒரு நிமித்த காரணம் வேண்டும். இங்கு எழுத்தை ஒலிக்கும் மக்கள் நிமித்த காரணம். துணைக்காரணம் ஒலிக்கும் வாயுறுப்புக்கள் அல்லது எழுதும் கருவி முதலியன. இவற்றைப் போலவே உலகம் ஒன்றிலிருந்து ஒன்றாகத் தோன்றச் செய்ய, குயவனைப் போன்ற நிமித்த காரணம் வேண்டும். ஆதி பகவனே நிமித்த காரணம் என்பர். இவ்வாறு கடவுளை நிமித்த காரணமாகக் கூறுவது சைவ சித்தாந்தம். இதை மறுப்பாரும் உளர். வள்ளுவர் இங்கு உவமை காட்டியது அகரமாகிய முதலுக்கும் ஆதி பகவனாகிய முதலுக்குமே

யன்றி அகரமாகிய ஒலியை ஒலித்த மனிதனுக்கும் ஆதிபகவ னுக்கும் அன்று. ஆதலின், கடவுள் முதற்காரணம் என்பதே வள்ளுவர் கருத்து என்பர். இவ்வாறு உரை காண் பது அத்துவிதக் கருத்துக்குப் பொருந்தும். இக்காரண காரியப் பொருளைக் கருதியே போலும் நச்சினார்க்கினியரும், "அவ்வகரம் தனியே நிற்றலானும், பல மெய்க்கண் நின்று, அவ்வம்மெய்களுக்கு இசைந்த ஓசைகளைப் பயந்தே நிற்ற லானும் வேறுபட்டதாகலின் ஒன்றேயாயும், பலவேயாயும் நிற்பதோர் தன்மை உடைத்து என்று கோடும்," என்றார்.

இவற்றுள் புகுந்தால் எல்லை காண்பது அரிது. அவரவர் கருத்துக்கு இசைய, அவரவர் ஆற்றலுக்கேற்ப, அவரவர் கொள்கைகளை நிலை நாட்டலாம். இவ்வாறு நிலைநாட்ட இடம் தந்து நிற்பன, வள்ளுவர் சொற்போக்கும் சொல் அமைப் பும். நாம் இப்பூசலுள் புக வேண்டா. காரணமில்லையேல் காரியமில்லை. அகரம் இல்லையேல், எழுத்துக்கள் இல்லை. கடவுள் இல்லையேல், உலகில்லை. உலகுக்குக் கடவுளாகிய முதல் இல்லை என்றதன் மறுப்பாக முதல் ஒன்று உண்டு என்பதைக் கூறுவதே வள்ளுவர் கருத்து என முன்பே கண்டோம். முதல் என்ற சொல்லை உவமையிலும் பொருளி லும் ஆகிய ஈரிடத்தும் கூறியதும் உவமப் பொருளில் தேற்ற ஏகாரத்தைச் சேர்த்து முதற்றே எனக் கூறியதும் ஒரு முதல் உண்டு என்ற கருத்தை வலியுறுத்துவதே வள்ளுவர் நோக்கம் என்பதைக் காட்டுகின்றன. இத்தேற்றேகாரத் திற்கு உரைத்திறப் பகுதியில் கூறிய பொருள்களை இங்குப் பொருத்திக் காண்க.

அத்துவிதமாகக் கொள்ளுதல் வேண்டும், அல்லது துவைதமாகக் கொள்ளுதல் வேண்டுமென்பது திருவள்ளுவர் கருத்தன்று. முதல் உண்டு என்று கொண்டபின் அம்முதலை எவ்வாறு கொள்ளினும் கொள்க எனக் கருதியே, பொது

வாகப் பலருக்கும் பொருந்தும் முறையில், அவர் கூறிச் சென்றார். திருவள்ளுவர் இப்பூசலை விலக்கிச் சென்றதைப் போல நாமும் இப்பூசலுள் புகாது அகன்றுவிடுவோம்.

## உவமைப் பொருள் :

நாம் இதுகாறும் கண்டது முதல் என்ற உருவகத்தின் பொருள். உருவகம் வேறு உவமையும் வேறு. நாம் இன்னும் உவமப்பொருளுள் புகுந்தோம் அல்லோம். சற்று முன்பு கண்ட பொருள்களே சாலச்சிறந்த பொருள்களாயினவே! இன்னுமா பொருளைத் தேடல் வேண்டும்? முன்னர்க் கூறிய பொருளே உலகத் தோற்றத்தை எளிய முறையில் விளக்கின; இயற்கை முறைப் பெருக்கத்தை விளக்கின; செயற்கை முறைப் பெருக்கத்தை விளக்கின; எண் முறைப் பெருக்கத்தை விளக்கின; காரண காரிய முறையையும் விளக்கின. இவற்றிற்கு மேலாகவா இன்னும் தெளிவு வேண்டும்? அல்லது இவற்றை விட்டு வேறு பொருளோ காணல் வேண்டும்? எதற்காக வேறு பொருள் தேடி அலைவது? இவ்வாறே உரையாசிரியர் சிலர் தங்கள் தங்கள் கருத்துக்களை நுழைக்க இடம்தேடி அலைந்தனர். அவர்கள் வீழ்ந்த படுகுழியில் வீழ்வதாக முடியும் இன்னும் பொருள்காண முயல்வது என்பாருளர். இத்தடைகள் யாவும் கருதத்தக்கன; பொருந்தாதன எனப் புறக்கணிக்கத்தக்கன அல்ல.

## 'முதற்று'

முன்னர்க்கூறிய பொருள்களைச் சற்று நினைக. அப்பொருள்கள் எல்லாம் 'முதல்' என்ற ஒரு சொல்லே தந்தவை. முதல் என்ற சொல்லைத் திருவள்ளுவர் உவமையில் மட்டும் ஆண்டாரிலர்; உவமப்பொருளிலும் அதே சொல்லை

ஆண்டதைக் கருதுக. 'ஆதிபகவன் முதற்றே உலகு' என்றார். முதற்றே என்பதிலும் முன்பு கண்ட 'முதல' என்பதிற் போல முதல் என்ற சொல் அமைந்துள்ளது. முதல்+து முதற்று எனவாகும். முதற்று+ஏ முதற்றே எனவாகும். ஆதலின், "ஆதிபகவன் முதற்றே உலகு" என்பதிலுள்ள 'முதல்' என்னும் சொல்லைக்கொண்டே முன்னர்க் கூறிய எல்லாப் பொருள்களும், உருவகமாகக் கண்ட நால்வகைப் பொருள்களும், கொள்ளலாம். இந்த நான்குவகைப் பொருள் களை மாத்திரம் உணர்த்துவது திருவள்ளுவர் கருத்தானால், 'ஆதி பகவன் முதற்றே உலகு' என்பதே போதிய தாகுமே! 'அகர முதல எழுத்தெல்லாம்' என மற்றொரு முதலையும் ஏன் சேர்த்தார்? அகரமுதல எழுத்தெல்லாம் என்னும் இலக்கணத்தை ஏன் இழுத்தல் வேண்டும்? இஃது இன்றியே நால்வகைப் பொருள்களும் நன்கு விளங்குமே! 'அகர முதல எழுத்தெல்லாம்' என்பது பயனற்றதாக வன்றோ முடிகின்றது? திருவள்ளுவரா பயனின்றி எதையும் கூறுவார்? இலக்கணத்தை இங்கு இழுத்து வந்ததன் காரணத்தைக் காணல் வேண்டும். இலக்கணத்தை இங்குப் பொருத்தியது, வேறு பொருளை, அதாவது முதல் என்னும் சொல் உணர்த்திய பொருள் அன்றி வேறு பொருளை, உணர்த்தவே போலும்! 'முதல் என்னும் உருவகம் தரும் பொருளோடு நின்றுவிடாதீர்கள்; இதற்குமேலும் பொருளுண்டு,' என்று காட்டுதற்கே முதல் என்ற சொல்லை ஈரிடத்திலும் - உவமையிலும் உவமப் பொருளிலும் - பொருத்தி அமைத்துக் குறிப்புணர்த்திச் சென்றார் போலும் திருவள்ளுவர்! ஆதலின், முதல் என்ற சொல் தரும் பொருளோடு வேறு உவமைப்பொருள் உண்டோ என்று உணர முற்படுதல் பொருந்துவதேயாகும். உவமை தரும் பொருள் உண்டெனில் அதையும் காண்போமாக.

## 'அகரமுதல'

'அகரம், முதல' என்னும் இரண்டு சொற்கள் சேர்ந்து 'அகரமுதல' எனவாயின. அகர முதல என்ற தொடரில் 'முதல்' என்ற சொல்லுக்கே நாம் பொருள் கண்டோம். 'முதல' என்பதை வள்ளுவர் தனிச்சொல்லாக ஆண்டாரிலர். அதை மற்றொரு சொல் தழுவி நிற்கும் நிலையில் 'அகர முதல' என்று ஆளுகின்றார். 'அகர முதல' என்பதை எவ்வாறு பிரித்துப் பொருள் காண்பது? 'அகர முதல' என்பது பண்புத்தொகை என்பர் இலக்கண நூலார். தொக்கு நிற்பது தொகை என்பர். இரண்டு சொற்கள் சேரும்போது அவை சேரும் தன்மை அல்லது அச்சேர்க்கையின் பண்பு அல்லது குணம் வெளிப்படாமல் தொக்கு நிற்பது அல்லது மறைந்து நிற்பது தொகை. தொகை என்பது இரண்டு சொற்களின் தொகை என்றும் பொருள் கொள்ளலாம். தொகு என்பது சேர் என்று பொருள்படும். தொகுத்தது தொகையாகும். ஒன்றை ஒன்று தழுவி நிற்கும், அல்லது ஒன்றோடொன்று சேர்ந்து நிற்கும் இரண்டு சொற்களின் தொகை 'அகர முதல' என்பர். இவ்வாறு இரண்டு சொற்கள் சேரும்போது மறைந்து நிற்கும் பண்பு, தொழிற்பண்பாகலாம்; குணப்பண்பாகலாம்; பொதுவும் சிறப்புமாகிய பண்பாகலாம். இங்கு, மறைந்து அல்லது தொக்கு நிற்பது பொதுவும் சிறப்புமாகிய பண்பு. இதை இருபெயரொட்டுப் பண்புத்தொகை என்பர். இரண்டு பெயர்கள்—பொதுவும் சிறப்புமாகிய இரண்டு பெயர்கள்—ஒட்டிய அல்லது ஒன்றுசேர்ந்த தொகை இருபெயர் ஒட்டுப் பண்புத் தொகை. இங்கு முதல் என்பது ஒரு பொதுப் பெயர்; பொதுத்தன்மை வாய்ந்தது. அதன் சிறப்பு அகரம். ஒன்றை ஒன்று விசேடித்து நிற்பது என்பதும் அது. பொது

என்னும் முதலைச் சிறப்பித்து அகாமுதலாயிற்று. இது பின்னரும் விளக்கப்படும். சாரைப் பாம்பு என்பது போன்ற பண்புத்தொகை அகர முதல என்னும் தொகை என்பர்.

## பண்புத்தொகை விளக்கம்:

பண்புத் தொகையை விரித்து, தொக்கு நிற்பதை விரித்து, நாம் பொருள் காணல்வேண்டும். பண்புத்தொகையை விரித்துப் பொருள் கொள்ளுங்கால் ஆகிய என்ற சொல்லை அல்லது, ஆகிய என்பதுபோன்ற ஒரு சொல்லைச் சேர்த்துப் பொருள் கொள்ளுதல் மரபு. இங்கு 'அகரமுதல்' என்பதற்கு எவ்வாறு எவ்வாறு பொருள் கண்டார்கள் எனக் காண்போம்.

பரிமேலழகர், 'அகரமாகிய முதல்' என்று பொருள் கண்டார்.* மயிலை நாதர் 'அகரமான முதல்' என்றார். சங்கரநமச்சிவாயர் 'அகரமாகிய முதல்' என்று பொருள் கொண்டார். எவ்வாறு பண்பு விரித்துப்பொருள் கொள்ளினும், இவர்கள் கூறியன யாவும் பண்புத்தொகையின் விரிவே. இவ்விரிவை எவ்வாறு கொள்ளினும் ஒப்புமை, அல்லது உவமையின் விளக்கம் காண்பதற்கு அவை இடை நிற்பன அல்ல! "அகரமுதல" என்பது இரண்டு சொற்கள் சேர்ந்தது என்று கண்டோம். இந்த இரண்டு சொற்களுள் எது உவமை? இந்த இரண்டு சொற்களும் சேர்ந்தே உவமையா?

---

*மணக்குடவர் "அகரமாகிய எழுத்தைத் தமக்கு முதலாக உடையன என்று பொருள் கண்டார். மணக்குடவர் இரண்டிடத்தில் 'ஆகிய' 'ஆக' என வேறு வகையாக விரித்துப் பொருள் கொள்ளினும், ஆக்கச் சொற்களே அவை ஆதலின், இலக்கண வேறுபாடன்றிப் பெரியதொரு பொருள் வேறுபாடில்லை என்பர். மணக்குடவர் உரையின்படி பொருள் கொள்வது இலக்கணத்திற்குப் பொருந்துவதா என்பது பின் இணைப்பில் விளக்கப்பட்டுள்ளது காண்க.

அகாமுதல என்பதைப் பிரிப்போம். அகரம் என்பது ஒன்று, முதல என்பதிலுள்ள முதல் என்பது மற்ருென்று. இவை இரண்டும் சேர்ந்து 'அகரமாகிய முதல்' என ஆயின. இது போலவே 'ஆதிபகவன் முதற்று' என்பதும் பிரிக்கத் தக்கது. 'ஆதிபகவன்' என்பது ஒன்று, 'முதற்று' என்பதில் உள்ள முதல் என்பது மற்ருென்று. இவை இரண்டும் சேர்ந்து 'ஆதிபகவனுகிய முதல்,' என ஆயின. இங்குத் திருவள்ளுவர் உவமை காட்டியது அகரத்திற்கும் ஆதிபகவனுக்குமா, அல்லது முதலுக்கும் முதலுக்குமா? அல்லது அகரமாகிய முதலுக்கும் ஆதிபகவனுகிய முதலுக்கும் உவமையா?

'உலகு ஆதிபகவனுகிய முதலே உடையது,' என்பது வள்ளுவர் கருத்து என்பதை முன்பே கண்டோம். அகரம், உலகத்திற்குள்ளடங்கியதா, அதற்கு அப்பாற்பட்டதா? உலகத்திற்குள் அடங்கியதே அகரம். உள்ளடங்கியதானுல், உலகிற்கு ஒரு முதலும் அகரத்திற்கு மற்ருெரு முதலும் இருத்தல் இயலாது. இரண்டிற்கும் ஒரு முதல்தானே இருத்தல்கூடும்? உலகிற்கு எது முதலோ, அதுவே அகரத்திற்கும் முதல். இரண்டிற்கும் ஒரே முதல் என்ருல், எவ்வாறு ஒப்புமை காட்டுதல் முடியும்? இரண்டு பொருள் இருந்தாலன்ருே ஒன்ருேடொன்றை ஒப்புமை காட்டலாம், உவமை காட்டலாம்? ஆதலின், இங்குத் திருவள்ளுவர் கூறிய உவமை முதலுக்கும் முதலுக்கும் உவமை அன்று. முதலுக்கும் முதலுக்கும் ஒப்புமை இல்லை என்ருல், முதல் போக, எஞ்சிய அகரத்திற்கும் ஆதிபகவனுக்கும் உவமை எனக் கொள்ளுதல் தகுமா? அவ்வாறு கொள்ளலும் தக்கதன்று. அகரத்தை வள்ளுவர் தனியாகக் கூறிஞரிலர். முதலேத் தழுவி நின்ற நிலையிலேதான் அகரத்தை வைத்துள்ளார். 'அகர முதல' என்று முதலோடு இணைத்தேதான்

அகரத்தைக் கூறியுள்ளார் ; பிரித்துக் கூறினரிலர். ஆதலின், அவற்றுள் ஒன்றைப் பிரித்து விலக்கி, மற்றொன்றிற்கு மட்டும் உவமை காணல் வேண்டும் என்பது திருவள்ளுவர் கருத்தன்று. அகரமாகிய முதலுக்கும், ஆதிபகவனாகிய முதலுக்குமே இங்கு உவமை என்று துணியலாம்.

அகரமாகிய முதலும் ஆதிபகவனாகிய முதலும் ஒன்று அல்ல ; அகரமாகிய முதல் வேறு ; ஆதிபகவனாகிய முதல் வேறு. ஆனால், இவற்றுள் ஒப்புமை உண்டு. இந்த ஒப்புமையையே திருவள்ளுவர் உவமை காட்டுகின்றார். இவற்றிற்குள்ள ஒற்றுமையைக் காண்போம்.

அகரமாகிய முதல் ஒன்று ; ஆதிபகவனாகிய முதல் மற்றொன்று. முதல் என்பது இரண்டிற்கும் பொது. இப்பொதுவிலிருந்து அவை இரண்டும் பிரிந்தன. இப்பொது முதல் ஒரு நிலையில் அகரமாகியது; மற்றொன்றில் ஆதிபகவனாகியது. பொது முதல் எவ்வாறு அகரமாகியது ? அகரத்திற்கும் ஒரு முதல் உண்டு. அகரத்திற்கு முதல் மூச்சுக்காற்று என முன்னே கண்டோம். வெளிப்படையாக மூச்சுக்காற்றால் பிறந்தது அகரம். மூச்சுக் காற்றிற்கும் ஒரு முதல் உண்டு. அது பொது முதல். அந்தப் பொது முதல் மூச்சுக் காற்றாகியது. மூச்சுக் காற்று உடலுள் புகுந்து வெளியே போகும் போது அகரமாயிற்று. எழுத்தின் தோற்றத்தின்கண் கூறியவற்றை நினைவு கூர்க ! மூச்சுக் காற்றிற்கும் அகரத்திற்கும் என்ன வேற்றுமை ? மூச்சுக் காற்றும் அதன் முதலும் உருவமற்றவை. உருவம் அற்றவை எனினும், அருவமானவை எனினும் ஒக்கும். அவை கண்ணால் காணத் தக்கவை அல்ல; இயற்கை நிலையில் காதால் கேட்கத்தக்கவை அல்ல. அவை உருவம் பெற்றன. முதல் என்னும் உருவமற்ற பொதுத் தன்மையில் சிறப்பு என்னும் உருவம் தோன்றிற்று ; காதால் கேட்கப்படும் உருவம் தோன்றிற்று.

இப்படிச் சிறப்புத்தன்மை பெற்ற அகாம் என்பது பொது வாகிய முதலுடன் சேர்ந்து, 'அகர முதல' என்பதாயிற்று. அகரமாகிய முதலின் தன்மையை நன்கு உணர, பண்புத் தொகைக்குக் கூறிய எடுத்துக்காட்டைச் சற்றுப் பிரித்துக் காண்போம் :

'சாரைப் பாம்பு' என்பது எடுத்துக் காட்டப்பட்டது. இங்குப் பாம்பு பொது. பாம்பு என்னும் பொதுப் பொருளி லிருந்து சாரைப் பாம்பு, நாகப் பாம்பு, விரியன் பாம்பு முதலி யன பிரிந்தன. பாம்பின் சிறப்புச் சாரையாகிய பாம்பு நாக மாகிய பாம்பு முதலியன. இவற்றைப்போல, முதல் என்பதி லிருந்து பிரிந்தவை இரண்டு ; ஒன்று, அகரமாகிய முதல் ; மற்றொன்று, ஆதிபகவனாகிய முதல். இந்த இரண்டிற்குமே இங்கு உவமை.

## உவமை பண்புவமை :

அகரத்தின் முதல் உருவமற்றது என்பதைக் கண் டோம். உருவமற்ற முதல் உருவம் பெற்றது என்பதும் கண் டோம். அஃது ஒலி வடிவம் பெற்றது ; காதால் கேட்கும் வடிவம் பெற்றது. அருவத்தில் உருவம் தோன்றிற்று. 'இஃது' எனச் சுட்டிக் கூறுமாறு 'அகரம்' என்னும் பெயர் வடிவம் பெற்றது ; நாமரூபம் பெற்றது ; அகரமாகிய முதலாயிற்று. இதைப்போலவே ஆதிபகவனாகிய முதலும் நாமரூபம் பெற்ற முதலாயிற்று. முதல் என்பது அருவ மானது. அதில் (ரூபாரூபம்) அருவத்தில் உருவம் தோன் றிற்று ; பெயர் வடிவம் பெற்றது ; நாமரூபம் பெற்றது ; ஆதிபகவனாகிய முதலாயிற்று. அருவத்திலிருந்து உருவம் பெற்ற அகரமாகிய முதலுக்கும் அருவத்திலிருந்து உருவம் பெற்ற ஆதிபகவனாகிய முதலுக்கும் இங்கு உவமை. இது பண்பு உவமை. இதைச் சிறப்பு நிலைக்களனாகப் பிறந்த

பண்பு உவமை என்பர் இலக்கணம் வல்லுநர். உவமையைப் பண்புத் தொகையாக அமைத்து உவமப்பொருளையும் பண்புத் தொகையாகவே அமைத்து இங்குப் பண்பு உவமைப் பொருளே கொள்க எனக் குறிப்புணர்த்திச் சென்றார் போலும் திருவள்ளுவர் !

'ஒலிக்கு வடிவம் உண்டோ?' என்பது பழைய ஆராய்ச்சி. இக்கால விஞ்ஞான உலகு, ஒலிக்கு வடிவம் உண்டு என்பதை நன்கு உணரும். ஆதலின், இஃது இங்கு ஆராய வேண்டுவதுமன்று. ஆயினும், இதைக் குறித்து நச்சினார்க்கினியர் கூறுவதையுங் காண்க:

"இவ்வெழுத்தெனப்பட்ட ஓசை அருவமென்பர் அறியாதார். அதனை உருவமென்றே கோடும், அது செறிப் பச் சேறலானும், செறிப்ப வருதலானும், இடை எறியப் படுதலானும், செவிக்கட்சென்று உறுதலானும், இன்ப துன் பத்தை ஆக்குதலானும், உருவும் உருவும் கூடிப் பிறத்த லானும், தலையும் மிடறும் நெஞ்சுமென்னும் மூன்றிடத்தும் நிலைபெற்றுப் பல்லும் இதழும் நாவும் மூக்கும் அண்ணமும் உறப் பிறக்கும் என்றமையானும். அருவேயாயின், இவ் விடத்திற் கூறியன இன்மை உணர்க ; அல்லதூஉம் வன்மை, மென்மை, இடைமை என்று ஓதினமையானும் உணர்க. 'உடம்பொடு புணர்த்தல்' என்னும் இலக்கணத்தால் இவ் வோசை உருவாதல் நிலைபெற்றதென்று உணர்க."

எழுத்திலக்கணத்திற்கே ரூபாவதாரம் என்ற பெயர் தமிழ்நாட்டில் வழங்கியது இங்குக் கருதத்தக்கது. ரூபாவ தாரம் என்பது வடமொழி இலக்கணம் கூறும் நூல். இந்நூல் தர்மகீர்த்தி என்ற பௌத்தர் ஒருவரால் எழுதப்பட்டது என்பர். இதுவே பண்டைக்காலத்தே தென்னாட்டில் எங்கும் பயிலப்பட்டது ; போதிக்கப்பட்டது. இந்தப் பெயர் இதற்கு வடநாட்டில் இல்லை. குலோத்துங்கச் சோழன்

ரூபாவதாரம் என்னும் இலக்கணத்தைக் கற்பிக்கவும் வேதம் ஓதும் முறையைக் கற்பிக்கவும் திருவரங்கமுடையான் பட்டன் அம்பலத்தாடுவான் பட்டன் முதலிய 500 தமிழ் நாட்டுப் பார்ப்பனர்களை வேங்கி நாட்டில் குடியேற்றியதாக வேங்கிநாட்டுச் சாசனம் ஒன்று கூறுகின்றது.* அப்பைய தீக்ஷிதர் மாணவர் பட்டோஜி தீக்ஷிதர் 'சித்தாந்த கௌமுதி' என்ற வடமொழி இலக்கண நூலை எழுதிய பிறகு ரூபாவதாரம் வழக்கு ஒழிந்தது என்பர். சித்தாந்த கௌமுதியே எங்கும் போதிக்கப்படுவதும் பயிலப்படுவது மாயிற்று. ரூபாவதாரம் என்னும் நூல் சென்னை மாநிலக் கல்லூரியில் (Madras Presidency College) ஆசிரியரா யிருந்த அரங்காசாரியார் அவர்களால் வெளியிடப்பட்டுள்ளது.† ரூபம் என்பது வடிவம். அவதாரம் என்பது இறங்குதல். ரூபாவதாரம் என்பதற்கு 'வடிவமாகியவாறு' என்று பொருள் கொள்ளலாம். எழுத்துக்கள் இறங்கியதற்கும் கடவுள் இறங்கியதற்கும், அதாவது எழுத்தின் ரூபாவதாரத்திற்கும் கடவுள் ரூபாவதாரத்திற்கும் திருவள்ளுவர் ஒப்புமை காட்டுகிறார் ; காண்க.

### பெயர்ப் பெருக்கத்தில் ஒப்புமை :

இவ்வாறு பெயர் வடிவம் (ரூபாவதாரம்) பெற்ற 'அ' என்னும் ஒலிக்கு அகரம் என்பது தமிழ்ப் பெயர். இதை 'அகாரகா' என்பர் வடமொழியில். அராபி மொழியில் இதை 'அலிப்' என்பர். கிரேக்க மொழியில் இதை 'ஆல்பா'

---

*Sanskrit Inscriptions published in Praseena Leka mala in Kavyamala series. Published by Nirnaya Sagara Press, Bombay. இவை தவத்திரு சங்கராசாரியார் சுவாமிகள் அருளிய நன்மொழிகள் என்னும் நூலில் குறிப்பிடப்பட்டுள்ளன. பக்கம், 186.

†இந்நூல் சென்னைப் பல்கலைக் கழக நூல் நிலையத்தில் உள்ளது.

என்பர். சீனமொழியில் இதற்கு வேறு பெயர் உண்டு. வேறு வேறு மொழியில் இதற்கு வேறு வேறு பெயர் உண்டு. உலகத்தில் பேசப்படும் மொழிகள் இதுவரையில் கணக்கிடப் பட்ட வரையில் மூவாயிரம் மொழிகள் என்பர். இந்த அகர ஒலிக்கும் அம்மொழிகளில் பற்பல பெயர்கள் உள என்று கொள்ளலாம். இதைப்போலவே, ஆதிபகவனுகிய முதலுக் கும் பல்வேறு பெயர்கள் சேர்ந்துள்ளன. ஆதிபகவன் என் பது திருவள்ளுவர் இட்ட பெயர். உடைமைப் பொருட் பிரிவிற் கூறியவற்றை நினைவு கூர்க. கடவுளுக்குப் பெயரிடு தல் அவரவர் கருத்திற்கிசைந்தது என்னலாம். இவ்வாறு பெயரிடுவதில் தம் உரிமையை நிலைநாட்டி அம்மையார் கூறு வதைக் காண்க.

“ வானத்தான் என்பாரும் என்கமற் றும்பர்கோன்
தானத்தான் என்பாரும் தாமென்க—ஞானத்தால்
முன்னஞ்சத் தாலிருண்ட மொய்ஒளிசேர் கண்டத்தான்
என்நெஞ்சத் தான்என்பேன் யான் ”†

என்றார் அவர். ‘ ஈசா ’ என்பர் சிலர் ; ‘ இறைவன் ’ என்பர் சிலர் ; ‘ அல்லா ’ என்பர் சிலர் ; ‘ அப்பன் ’ என்பர் சிலர் ; ‘ அன்னை ’ என்பர் சிலர் ; ‘ ஐயன் ’ என்பர் சிலர் ; “ ஓர் உருவம் ஒரு நாமம் இல்லார்க்கு ஆயிரம் நாமம் ” சேர்ந்த வாறு காண்க. அகரமாகிய முதலுக்கும் ஆதிபகவனுகிய முத லுக்கும் இங்குக் காணும் ஒப்புமையை உணர்க. பெயர் வடிவம் பெற்றதில் மட்டும் ஒப்புமை அன்று. அப்பெயர்ப் பெருக்கத்திலும் ஒப்புமையைக் காண்க.

### மெய் பெறு உவமை :

பெயர் வடிவம் ஒன்றே எல்லா மக்களுக்கும் போதிய அறிவை, அல்லது உணர்வைத் தருவதன்று. பெயரால்

---

†காரைக்கால் அம்மையார், அற்புதத் திருவந்தாதி, பாட்டு 6.

சுட்டும் பொருளைக் கண்ணால் கண்டிருந்தால் அந்தப் பெயரைக் கூறிய உடனே அது சுட்டும் பொருள் யாதென்பதை அறிவர். அந்தப் பொருளைக் கண்டிராவிடில், அப்பெயர் உணர்த்திய பொருள் யாது எனத் தேடுவர்; குழப்பமும் எய்துவர். இது மக்கள் இயல்பு. ஒலி வடிவில் நின்ற பேச்சு மொழிக்குக் கண்ணாற்காணும் வடிவம் சேர்ந்த வழியைக் கண்டோம். அஃது இங்கு உவமப்பொருளை உணரப் பயன் படுவதைக் காண்க. அகரமாகிய எழுத்து, கண்ணாற்காணும் வரி வடிவம் பெற்றது போல, ஒலி வடிவம் அல்லது பெயர் வடிவம் பெற்ற ஆதிபகவனுக்கும் கண்ணாற்காணும் வடிவம் சேர்ந்தது.

உலக மொழிகளில் அகரம் பெற்ற வரி வடிவம் ஒன்றா, இரண்டா? பற்பல. சில ஓவிய வடிவம் தாங்கின; சில வட்ட வடிவம் தாங்கின; சில நேர்க்கோடுகளே கொண்டன; சில முற்று வளைவுகளைக் கொண்டன; சில நேர்க்கோடுகளும் வளைவுகளும் கொண்டன. இவை எலாம் சேர்ந்த வடிவையும் பெற்றன சில. இவற்றைப்போலவே, ஆதிபகவனாகிய முதலுக்கும் பற்பல வடிவங்கள் சேர்ந்தன. ஆதிபகவனை ஒரு குறியிடைக் கொள்வார் சிலர்; நடுதறியாகக் கொண்டார் சிலர்; மனித வடிவமாகவே கொள்வார் சிலர்; கற்பனை வடிவு கண்டனர் சிலர்; கடவுள் வடிவிற்குப் பற்பல முகங்கள் பற்பல கைகள் எழுந்தன.

> "நாவில் கொள்கைத் தந்தொழில் முடிமார்
> மனனேர்பு எழுதரு வாள்நிற முகனே"*

என்றார் நக்கீரர். அவரவர் மனநிலைக்கு ஏற்ப, கருத்து நிலைக்கு ஏற்ப, அறிவு நிலைக்கு ஏற்ப எழுந்தன இவ்வடிவம் எல்லாம். காலத்தால், இடத்தால் வேறுபடுவன எழுத்தின்

---

*திருமுருகாற்றுப்படை, 89, 90.

வடிவம். அவ்வாறே வேறுபடுவது கடவுள் வடிவு. அகரத்திற்கு மெய் சேர்ந்தது போல ஆதிபகவனுக்கும் மெய் சேர்ந்தது.

"அருவமாய் நின்றானை ஆரறிவார் தானே
உருவமாய்த் தோன்றிலனேல் உற்று ?''

என்ற மெய்ம்மொழியும் இங்குக் கருதத்தக்கது. அருவமாய் நின்ற அகரத்தை யாரறிவார் தக்க உருவமாய்த் தோன்றில னேல் உற்று ?

## உருவெய்து உவமை :

உரு என்பது நிறம். இது வடிவத்தோடு இயைந்து காணப்படும். கண்ணாற்காணும் வடிவம் எல்லாம் ஏதாவது ஒரு நிறத்துடனேயே தோற்றம் அளிப்பன. நீளம், அகலம், உயரம் முதலிய பண்புகள் ஒரு பொருளுக்கு இன்றியமையா தன போல, நிறமும் இன்றியமையாததென்பர். 'கண்ணாற் காணும் பொருளில் நிறமில்லாதது ஏதேனும் உண்டோ' எனக் கருதிக் காண்க. நிறம் அற்ற எப்பொருளையும் காண்பது அரிது. எழுத்தின் வரி வடிவத்திற்கும் நிறம் உண்டு. இதை இக்காலத்தே விளக்க வேண்டா. பற்பல நிறங்கள் கொண்ட மைகளால் இக்காலத்தில் வரி வடிவங்கள் தீட்டப்படுகின்றன. வள்ளுவர் காலத்திலோ, இவை ஓலையில் எழுதப்பட்டன. ஓலையில் எழுதிய எழுத்துக்கள் ஓலையின் நிறமே பெறுவன. எழுத்தாணியால் ஓலையில் பதித்த வரி வடிவங்களைச் செவ்வனே காணுமாறு கரியைத் தீற்றிக் கரு நிறமாக்கலும், பச்சை இலைகளைத் தீற்றிப் பசுமை ஏற்பித்த லும் பண்டைக்கால முறைகள். ஈண்டு உவமையை விளக்கு வது பொருள் நலம் கருதியன்று. உரு ஏற்பதால் உவமைப் பொருள் சிறப்பதன்று ; அதற்கு இவ்வுரு விளக்கம்தருவது

மன்று. ஆயினும், உவமை இலக்கணமுறையில் தொல்காப்பியர் கூறியவாறு* உவமைக்குரிய நான்கு இயல்புகளும் திருவள்ளுவர் உவமையில் பொருந்தி நிற்பதைக் காட்டுதற்கே இங்கு உவமை விரித்துக் கூறப்படுகின்றது. எழுத்தின் வரி வடிவம் நிறம் பெற்றதுபோல ஆதிபகவனின் வடிவமும் நிறம் பெறக் காண்கின்றோம். வரி வடிவ எழுத்துக்கள் உரு கெழு எழுத்துக்கள் ஆனமை போல ஆதிபகவனும் 'உரு கெழு கடவுள்' ஆயதை எங்கும் காணலாம். வடிவம் எப்பொருளால் செய்யப்படுகின்றதோ, அப்பொருளின் நிறத்தையே அது ஏற்பதாகும். இதுவன்றியும், நீறு பூசியும் சந்தனம் சாத்தியும் பொன்னுடை யுடுத்தும் உருப்பெறுவனவும் உள. இவ்வுவமை, உவமை இலக்கணத்திற்குப் பொருந்த எவ்வாறு சென்று சென்று இயைகின்றது எனக் காண்க.

## வினை உவமை:

பொருள்நலம் பயவா உருத்தரு உவமையோடு நின்றிலது வள்ளுவர் உவமை. இது தொழிலுக்கும் எட்டுகின்றது; வினை உவமையும் ஆகின்றது. "அக்காங்கள் இன்றும் அகர உயிர் இன்றேல்" என்பதையும் முன்பு கண்டோம். புல்லாங் குழலின் தலைத் துளை வழியே ஊதிப் பெற்ற இசையே மற்ற இசைகளைப் பயந்து நிற்பது; மற்ற இசைகளோடு கலந்து நிற்பது எனக் கண்டோம். அவ்வாறே நிற்பது அகரம் எனவும் உணர்ந்தோம். இனி இவை பொருளை விளக்குவதை இங்குக் காணலாம். உயிர் என்னும் பெயரைக் குறித்து நச்சினார்க்கினியர் விளக்கம் தருவது, வினை உவமையை

---

*"வினைபயன் மெய்உரு என்ற நான்கே
வகைபெற வந்த உவமத் தோற்றம்"
—தொல். உவமவியல் 1.

விளக்குவதாக அமைகின்றது. 'அவ்வகாரம் தனியே நிற்ற லானும் பல மெய்க்கண் நின்று அவ்வம்மெய்களுக்கு இயைந்த ஓசைகளைப் பயந்தே நிற்றலானும் வேறுபட்டதாகலின் ஒன்றேயாயும், பலவேயாயும் நிற்பதோர் தன்மையுடைத்து என்று கோடும். இறைவன் ஒன்றேயாய் நிற்குந் தன்மை யும் பல்லுயிர்க்குந் தானேயாய் அவற்றின் அளவாய் நிற்கும் தன்மையும் போல,' என்பது அவர் தரும் விளக்கம்.* இதை மற்றோரிடத்தும் அவர் விளக்குகின்றார். 'இறைவன் இயங்குதிணைக்கண்ணும் நிலைத்திணைக்கண்ணும் அவற்றின் தன்மையாய் நிற்குமாறு எல்லார்க்கும் ஒப்ப முடிந்தாற் போல, அகரமும் உயிர்க்கண்ணும் மெய்க்கண்ணும் கலந்து அவற்றின் தன்மையாயே நிற்கும் என்பது சான்றோர்க்கெல் லாம் ஒப்ப முடிந்தது'† என்றார். "அகரம் உயிர்என்று அறையலு மாமே." "அகர முதலாய் அனைத்துமாய் நிற்கும்"‡ என்றார் திருமூலர். தத்துவப் பேராசிரியர் அருள் நந்தி சிவாசாரியார் கூறுவதும் இங்கு நோக்கத்தகும். "அக்கரங்கள்தோறும் சென்றிடு அகரம்போல, நின்றனன் சிவனும் சேர்ந்தே"§ என்றார். செல்லுதலும் சென்று நிற்றலும், பயத்தலும் பயந்து நிற்றலும், கலத்தலும் கலந்து நிற்றலும் வினை அல்லால் வேறு எவை? வினை உவமை என்பதைப் பண்டைப் பேராசிரியர்களே விளக்கிச் சென்றனர். இதற்கு இன்னும் விளக்கம் தேவை யில்லை. அகரம் வினை ஏற்றிலதேல், எழுத்தேது? சொல் ஏது? நூல்தான் ஏது? ஆதிபகவன் தொழிற்படுதல் இல்லை யேல், நீரேது? நிலமேது? இவ்வுலகுதான் ஏது?

---

*தொல். எழுத்து 8 உரை. †தொல். எழுத்து 46.
‡திருமந்திரம் 975, 1753. §சிவஞான சித்தி. சுபக் 92.

**பயனுவமை :**

வினையோடு நின்றிலது வள்ளுவர் உவமை. பயனையும் தந்து பயன் உவமையாகவும் விளங்கல் காண்க. "வினை பயப்பது பயன்" என்பர். அகரம் வினை ஏற்றதால் பெற்ற பயன் யாது? ஆதிபகவன் வினை ஏற்றதால் பெற்ற பயன் யாது? இவற்றுள் என்ன ஒப்புமை காணப்படுகின்றது?

அருவத்திலிருந்து உருவம் பெற்றது அகரம் என்பதை முன்பு கண்டோம். ஒலி வடிவம் மட்டும் அன்றி, வரி வடிவமும் பெற்றதென்பதும் கண்டோம். அகர ஒலி சென்று சென்று, கலந்து கலந்து மற்ற எழுத்தொலிகளை எல்லாம் தந்தது. பேச்சு மொழிகளைப் பயந்தது அதன் பயன். அகரம் வரி வடிவம் ஏற்றதைப் போன்று மற்றைய எழுத்தொலிகளும் வரி வடிவம் ஏற்றன. எழுத்தின் தோற்றத்தின்கண் கூறிய எழுத்தின் பயனை எல்லாம் எண்ணுக. எழுத்துக்கள் என்று வடிவம் ஏற்றனவோ, அன்றே தொடங்கியது மக்களின் உயர்வு. மக்களின் வாழ்வு உயர்ந்தது; அறிவு உயர்ந்தது.என்று அவைவடிவம் தாங்கினவோ அன்று முதலே எழுத்துக்கள் மக்களுக்குப் பயன் தரலாயின. என்று ஆதிபகவனுக்கு வடிவம் சேர்ந்ததோ, அன்றே மக்களுக்கு அது பயன் அளிப்பதாயிற்று. உருவமற்ற நிலையில் கடவுளை யார் தாம் நினைத்தல் முடியும்? நினைக்கவோ அல்லது சொல்லவோ முடியாத நிலை, உருவமற்ற நிலை; மன வாக்குக்கெட்டாத நிலை என்பர். இது யாருக்குப் பயன் தரும்? "அருவமாய் நின்றானை ஆரறிவார் தானே உருவமாய்த் தோன்றிலனேல் உற்று?" உருவம் பெற்றதன் பயன் அறிதல். நாமரூபம் பெற்றதால்தான் கடவுள் ஒருவர் உண்டென்று மனத்தால் நினைத்தல் நேர்ந்தது, அறிதல் நேர்ந்தது. அவரைப் பெயரிட்டு அழைத்தல் இயன்றது. அவரிடத்தே முறையிடுதல் நேர்ந்தது.

அவரைத் தொழுதல் நேர்ந்தது. அவரைக் கூவி அழைத்து அழைத்துக் குறையிரந்து நின்றார் பெற்ற பயன்களோ பற்பல. தொழுது தொழுது தொண்டர்கள் பெற்ற பயன் களோ எண்ணற்றன.

எழுத்தறி புலவன் ஒரு நூலைத் திறந்து படிக்கின்றான். வாய்விட்டுப் படித்தலின்றி அவன் கண்கள் எழுத்தின்மேல் செல்கின்றன. அவன் மனம் ஒருமைப்படுகிறது. அவன் பக்கத்தே நிகழ்வது ஒன்றும் அவன் காதிற்படுவதில்லை. படிக்கும் பொருளன்றி வேறு எதையும் அவன் நினைப்பது மின்று. படித்த கருத்தே உருவாய்த் திகழ்கிறான். எழுத்துக் களின் வடிவங்கள் மறைகின்றன. அழுகிறான்; பெருமிதம் கொள்கின்றான்; அல்லது நகைக்கின்றான்; தன்னையே மறக் கின்றான். இந்த ஒருமைப்பாட்டைத் தந்தவை எவை? எழுத்துக்கள், வடிவம் பெற்ற எழுத்துக்கள். வடிவம் தந்த வாய்ப்பு இது.

இதைப்போலவே தொண்டன் ஒருவன் தான் வழிபடு கடவுள் வடிவின் முன் வழிபாடு இயற்றுகின்றான்; அவ்வடி வில் இறைவனைக் கருதுகின்றான்; இறைவன் வடிவின் திருமுன் தொழுகின்றான். 'மெய்தான் அரும்பி விதிர் விதிர்த்து' இறைவன் 'விரையார் கழற்குக் கைதான் தலை வைத்து' நிற்கின்றான். அவன் உள்ளம் வெதும்புகிறது; உருகி உருகி நைகின்றது. கரைகின்றான். கண்ணீர் ததும்புகிறது; பெருகுகிறது; பெருகி வடிகின்றது. மெல்ல மெல்ல அவன் செயல்கள் எல்லாம் நெகிழ்கின்றன, தளர்கின்றன, ஒவ் வொன்றாய் நழுவுகின்றன. ஐம்புலன்களின் செயல்கள் யாவும் ஓய்கின்றன. வடிவம் மறைகின்றது; மனத்தின் செயலும் தளர்கின்றது, ஓய்கின்றது. தன்னையே மறக் கின்றான்; இறைவனுடன் ஒன்றுபடுகின்றான். வடிவம் தந்த வாழ்விது.

ஈண்டு இவ்விருவர் மனநிலைகளையும் உன்னுக. எழுத்தறி புலவன் தன்னை மறந்த நிலையும் வழிபடு தொண்டன் தன்னை மறந்த நிலையும் ஒப்புமாறு காண்க. இவ்விருவர்தம் மனமும் ஒருமைப்பாடு எய்திய நிலையும் ஒப்புவதும் காண்க. இவ்வுவமையாலன்றி வேறு எவ்வாறு இம்மனப் பண்பாட்டிற்கு ஒப்புமை காட்டுதல் இயலும்?

மக்கள்தம் அறிவின் கண்ணைத் திறந்தது எழுத்து, எழுத்து ஏற்ற வடிவம்; ஞானக்கண்ணைத் திறந்தது கடவுள் ஏற்ற வடிவம். மனத்தைத் தெருட்டி, அறிவை வளர்த்து, பண்பாட்டைத் தந்தது எழுத்து. உளத்தை உருக்கி, அன்பைப் பெருக்கிப் பண்பாட்டை வளர்த்தது கடவுள் வடிவு. மனத்தை ஒருமைப்படுத்தியது எழுத்து. ஒன்றுமாறு உய்த்தது கடவுள் வடிவு. உலகை உயர்த்தியது எழுத்து. உலகை, உயர்த்தி உயர்த்தி, உய்ய வைத்தது கடவுள் வடிவு. 'எழுத்துக்கள் இல்லையேல் மக்கள் எந்நிலையில் இருந்திருப்பர்? அவர்தம் பண்பாடு எந்த நிலையில் இருந்திருக்கும்?' என்பவற்றை முன்பு கருதினோம். கடவுள் வடிவம் இல்லையேல், அவ்வடிவ வழிபாடு இல்லையேல், மக்கள் எந்த நிலையில் இருந்திருப்பார்கள்? அவர்தம் பண்பாடு எங்கு நின்றிருக்கும்? கருதுக.

**"ஒருதிரு முருகன் வந்து தோன்றினன் உலகம் உய்ய."**

என்று பாடினார் கச்சியப்பர். ஒரு திரு அகரம் வந்து தோன்றிற்று உயர்வு நல்க. இவற்றைப் போன்றது வள்ளுவர் உவமை தரும் விளக்கம், இருபாற்பட்ட ரூபாவதாரத்தின் பயனை எல்லாம் உன்னுக! பயன் உவமைதனையும் ஓர்க! ஓர்க!

'நன்று நன்று இவ்விளக்கம்! இஃது எங்கெங்கோ இழுத்துச் சென்று, கடைசியாக வழிபாட்டிலா முடிந்தது?' என்று அயர்வார் சிலர். வழிபாட்டில் திளைத்தவர்

தமிழர். வழிபாட்டிற்கு வழி காட்டியது தமிழ்நாடு என்பர். வழிபாட்டு நெறி (பக்தி நெறி) தென்னாட்டிலிருந்தே வடநாடு போந்தது என்பர் வடநாட்டு ஆட்சித் தலைவர் (Governor) முனிசி என்பார். வழிபாட்டில் திளைத்துத் திளைத்து 'வீடும் வேண்டா விறலினர்' தமிழர். 'வீடும் வேண்டா விறலினர்' காட்டிய வழியும் வழிபாட்டு வழியே. வழிபாட்டு வழியன்றித் திருவள்ளுவர் காட்டிய வழிதான் யாது? முதற்குறளைப் பின்பற்றும் ஒன்பது குறளையும் காண்க. இந்த ஒன்பது குறளிலும் ஆழ்ந்து கிடப்பது வழிபாடன்றி வேறு எது? வழிபாடன்றி வேறு எது இங்கு வற்புறுத்தப் பெறுகின்றது? மனத்தால் வழிபாடு, சொல்லால் வழிபாடு, மெய்யாலும் வழிபாடு; இவ்வழிபாடுகளே ஒன்பது குறள்களிலும் கூறப் படுவன.

இம்மட்டோ! முதற்குறளுக்கு அடுத்து வரும் குறளைக் கருதுக. வள்ளுவர் இங்குக் கேட்பது ஒரு கேள்வி. 'கற்றதனு லாய பயன் என்கொல்?' என்றார். எதைக் கற்றதால்? கற்க வேண்டிய கல்வி எல்லாம் கற்றதனால் ஆய பயனு? கல்விக்கென்று வேறு இடம் அளித்து அதைப் பொருட்பாலில் ஓதுக்கிய போது இங்கு அதற்கு இடம் ஏது? வள்ளுவர் அறத்துப்பாலில் கூறிய அறத்தின் வழி ஒழுகக் கல்வி வேண்டுவதன்று என்பது அவர் கருத்துப் போலும்! ஆதலின், கல்வியை அறத்துப் பாலினின்றும் விலக்கிப் பொருட்பாலில் சேர்த்தார். 'கல்வி என்னும் தொல் கடல் பிழைத்தும்' என்றார் மணி மொழியார். தம்மைப் பற்றிக்கொள்ளும் என்று அதினின்றும் தப்பிப் பிழைக்கக் கருதிய கல்வியையா திருவள்ளுவர் இங்குக் குறிப்பிடுகிறார்? அல்லால், ஆகம நூல்களைக் கற்றதன் பயனையா இங்குத் திருவள்ளுவர் குறிக்கின்றார்? இதுவும் மணிமொழியார் விலக்கிய கல்வியாயிற்றே! தெய்வம் என்ப

தோர் சித்தம் உண்டாக வேண்டுவார் மணிமொழியார். ஆனால், திருவள்ளுவரோ, 'உலகம் கடவுளாகிய முதலை உடையது' என்றதோர் எண்ணம் உண்டாக விரும்புவார் போலும் !

உலகம் கடவுளாகிய முதலை உடையது. முதலோ காண முடியாத முதல் ; கற்கத்தான் கூடிய முதல். ஒரு முதல் உண்டு என்று கற்கவேண்டிய சான்றுகள் காட்டினார். முதல் என்று காட்டி அதன் உண்மையை யாரும் அறியுமாறு உணர்த்தினார். வடிவம் ஏற்ற பண்பெலாம் காட்டினார். உவமையால் அதன் இயல்பெலாம் காட்டினார். ஒருமைப் பாடு எய்த வழிபாடே சிறந்த வழி என்றெல்லாம் உவமை யால் காட்டினார். அதன் பயனெலாம் உணர்த்தினார். இவற்றை எல்லாம் கற்றோம். 'இவற்றைக் கற்றதனாலாய பயன் என்ன ?' என்று இப்போது கேட்கின்றார். இவற்றைக் கற்ற தன் பயன் உலகம் ஒரு முதலை உடையதே என்று எதிர்வழக் கிடுவதா? அன்று. கற்ற அறிவால் கண்டவன் போலப் பாவித் துக் கூத்தாடுவதா ? அன்று. அத்துவிதம் துவைதம் என்று அமர் விளைப்பதா ? அன்று அன்று. 'வள்ளுவர் கூறியது சிவனையே; சினனையே ; திருமாலையே ; எம் கடவுளையே, எம் கடவுளையே,' என எங்கும் தொடர்ந்து எதிர் வழக்கிடுவதா ? அதுவும் அன்று. 'வழிபாடே உயர்ந்தது, உயர்ந்தது' என்று சொல்லால் முழக்குவதா ? அதுவும் அன்று. வேறு யாது ? திருவள்ளுவரே இதற்கு விடையும் பகர்வார். 'நற்றாள் தொழாஅர் எனின்' என்பது விடை. நற்றாள் தொழுக. நல்வாழ்வு பெறுக. நன்றே தொழுக. அதுவும் இன்றே தொழுக. தொழார் எனின், திருவள்ளுவர் கூறிய வற்றால் என்ன பயன் ! அவர் கூறியவற்றைக் கற்றதனாலாய பயன்தான் என்கொல் ! ஈண்டுக் கொல் என்பது வெறும் அசையாகாது, வியப்பும் இரக்கக் குறிப்பும் இசைத்து நிற்

கின்றது. இப்பகுதியே குறிப்புப் பொருள் எச்சமாகவும் அமைந்துள்ளது. திருவள்ளுவர் ஏன் இவ்வாறு கேட்கின்றார் ?

திருவள்ளுவர் முழுதுணர்ந்தவர் என்பதை முன்பே கண்டோம். அவர் முற்றுணர்வின் பயனாய்த் தமிழ் நாடு வழிபாட்டை மறக்கும் நாளும் உண்டாகும். வழிபாடு வழக்கொழிந்து அகலும் என்று கண்டார் போலும் ! அவர் காலமும் இவ்வாறு நொந்து கூற இடந்தந்த நிலையில் இருந்தது என்பதும் கருதத்தக்கது.

பின் வரும் ஒன்பது குறள்களுக்கும் தோற்றுவாய் செய்தது போல அமைந்துள்ளன முதற்குறளும், அதிற் பொதிந்த கருத்துக்களும். வள்ளுவரும் வழிபாட்டோடு நின்றாரா ? நின்றாரிலர். அவர் உவமையும் இப்பொருளோடு நின்றிலது. தொல்காப்பியர் காட்டிய உவமை இயல்புகள் இவற்றோடு முடிவு பெறும். ஆனால், வள்ளுவர் காட்டிய உவமையோ, இவற்றின் மேலும் செல்கின்றது.

## அருவத்தில் ஒப்புமை :

அகரமாகிய முதலுக்கு அருவநிலை உண்டென்பதை மேலே கண்டோம். அதன் அருவ நிலைகள் நான்கு என்பர். அவை சூக்குமை, பைசந்தி, மத்திமை, வைகரி எனப் பெறுவன. இவை எலாம் கருதிக் காணும் நிலைகள் அல்லது உய்த்துணரும் நிலைகள். இவ்வண்ணமே ஆதிபகவனாகிய முதலுக்கும் நான்கு அருவநிலை காட்டுவார் உளர். அவை யாவன : சிவம், சத்தி, நாதம், விந்து என்பர். இவை சைவ சித்தாந்திகள் கண்ட பிரிவுகள். ஏனைய சமயத்தோரும் அவரவர் கொண்ட கடவுளுக்கும் அருவநிலை உண்டு என்றே உடன்படுவர். இவை யாவையும் அகரமாகிய முதலின் அருவ நிலைகளைப் போலவே உய்த்துணரும் நிலைகள்.

இந்த நிலைகளுக்கு அப்பாற்பட்டது முதல் என்பது. இதை வெவ்வேறு சமயத்தார் வெவ்வேறாகப் பெயரிட்டு வழங்குவர். அதைப் பாழ் அல்லது சூன்யம் என்னும் ஒரு சமயம். வெளி, பெருவெளி, மோனவெளி எனும் ஒரு சமயம். பரபிரமம் என்னும் ஒரு சமயம். பரமாணு என்னும் மற்றொரு சமயம். புருஷன் அல்லது விராட்புருஷன் எனும் வேறு ஒரு சமயம். பிரகிருதி அல்லது மூலப் பிரகிருதி என்னும் மற்றொரு சமயம். இவை யாவற்றையும் உள்ளடக்கி இவற்றிற்கெல்லாம் பொருந்த அமைந்துள்ளது 'முதல்' என்பது. இப்பெயர் பாவலன் இட்ட பெயர்; விஞ்ஞான முறையில் விளக்கம் தரும் பெயர். இம்முதல் அறுவகைச் சமயத்தோர்க்கும் அவரவர் பொருளாய்க் காட்சி அளிக்கின்றது காண்க! வள்ளுவர் இதற்குப் பெயரிட்ட பொதுமையைக் காண்க.

**கால ஒப்புமை :**

அகர முதலைக் காண எத்தனை எத்தனை ஆயிரம் ஆண்டுகள் மக்கள் உழைத்திருப்பார்கள்! இதைப் போலவே மக்கள் ஆயிரம் ஆயிரம் ஆண்டுகள் உழைத்துக் கண்டது கடவுள் முதல். எழுத்தின் தோற்றத்தின்கண் கூறியவற்றை இங்கு நினைக! ஒலி ஓர் உருவத்தை ஏற்றுப் பொருளுணர்த்திய பின்பு எத்தனை எத்தனை ஆயிரம் ஆண்டுகள் சென்றிருக்கும் பேச்சு மொழியாக அஃது அமைய? பேச்சு மொழியிலிருந்து எழுத்து மொழி காண, மயங்கா மரபின் எழுத்து முறை கண்டு அகர முதலைக் காண, எத்தனை ஆயிரம் ஆண்டுகள் சென்றனவோ! யாரே அறிவர்! இவ்வண்ணமே, மக்கள் தோன்றி எத்தனை எத்தனை ஆயிரம் ஆண்டுகள் சென்றனவோ கடவுள் உண்டெனும் கருத்துத் தோன்ற! இக்கருத்து முளைத்தும் எத்தனை எத்தனை ஆயிரம் ஆண்டுகள் சென்றனவோ இக்கருத்தை அளவை முறைப்படி நிலை நாட்ட,

மயங்கா மரபின் தோற்ற முறை காண! சிந்தையும் செல்லாச் சேண் நெடுங்காலங்கள் இவை!

'வள்ளுவர் உவமை எவ்வாறு எவ்வாறு சென்று இயைகின்றது! இயைந்து இயைந்து எவ்வாறு எவ்வாறு பொருளுக்கு விளக்கம் தருகின்றது!' என்பவெல்லாம் நினைக! நினைக! 'நினைக்கும் காலை மருட்கை உடைத்தே!'

உவமை தரும் பொருள் இன்னும் முடிந்திலது. உவமை விளக்கத்தை இங்குச் சற்று நிறுத்தி, 'ஆதிபகவன்' என்ற சொல்லை அல்லது சொற்றொடரை ஆராய்வோம். பற்பல சொற்போர்களை விளைவித்தது, விளைவிப்பது இச்சொல். இச்சொல் எங்கெல்லாம் ஆளப்பட்டுள்ளது, என்னென்ன பொருளில் ஆளப்பட்டுள்ளது என்று காண்போம்.

### ஆதிபகவன் :

ஆதி பகவன் என்பது இரண்டு சொற்கள் (ஆதி + பகவன்) சேர்ந்த ஒரு சொற்றொடர். இவ்விரண்டு சொற்களும் வடசொற்கள் என்பர் சிலர். இவை இரண்டும் தமிழ்ச் சொற்களே என்பர் சிலர். இவற்றுள் ஒன்று தமிழ், ஒன்று வடசொல்; தென் சொல்லும் வடசொல்லும் சேர்ந்து அமைந்த கடவுள் பொதுப்பெயர் என்பர் சிலர். ஆதி என்னும் சொல்லும் பகவன் என்னும் சொல்லும் சேர்ந்து ஒரு சொல் நீர்மைத்தாய் அருவத்திலிருந்து உருவம் தோன்றியதை உணர்த்துவது என்பார் சிலர்.

ஆதி என்பதற்குப் பல பொருள் உள. ஆதி, (1) 'பழைமையும் (2) அரனும் (3) மாலும் (4) முதலும் (5) நேரோட்டமும்'* என்னும் பிங்கலந்தை. ஆதி என்பது

*நேரோட்டம் என்பது நேராக ஓடும் ஓட்டம். குதிரை ஓடும் ஓட்டங்களில் ஒன்று நேரோட்டம். ஞாயிற்றின் செலவை நேரோட்டம் என்பர்.

சத்தியையும் குறிக்கும். 'ஆதி பைரவி', 'ஆதி முதல்வியே'* என்பன திருமூலர் வாக்கு.

பகவன் என்பதும் பல பொருள் ஒரு சொல்.† "பட்டாரகன், மால், பங்கயன், பரமன், இரவி, அருகன், புத்தனும் பகவன்" என்னும் பிங்கலந்தை. 'செறிவன், சினேந்திரன் சித்தன் பகவன்'‡ என்றார் இளங்கோவடிகள். 'பகவன், கேவல ஞானி' என்பார் அடியார்க்கு நல்லார். 'பகவனே ஈசன் மாயோன் பங்கயன் சினனே புத்தன்' என்றார் மண்டலபுருடர். 'ஆதிபகவனை அருகனை, மாதுயர் நீங்க வழுத்துவம் பலவே' என்னும் திருக்கலம்பகம். 'ஆதி பகவன், அசோகவசலன், சோதி முதல்வன், சினவரன், தியம்பகன்' என்னும் திருப்பாமாலை. பின்னைய இரு நூலிலும் ஆதிபகவன் என்பது இடப தேவரைக் குறிக்கும். இடபதேவர் முதல் தீர்த்தங்கரர், அல்லது அருகர் என்பதைக் காட்டும். திருமாலைக் குறிக்க "அந்தமில் ஆதியம் பகவன்" என்றார் நம்மாழ்வார். இக்காலத்திலும் பகவன் என்ற சொல், சித்திகள் பெற்ற துறவியை அல்லது மெய்யுணர்வு கை வரப் பெற்ற சான்றோரையும் கடவுளையும் உணர்த்தும் சொல்லாக வழக்கிலிருப்பது காணலாம். கிருஷ்ணபகவான் என்பர். பகவான் இராமகிருஷ்ணர் என்று இராமகிருஷ்ண பரம ஹம்ஸரைக் குறிப்பிடுவர்.

இவ்வழக்குகள் எல்லாம் வள்ளுவர் காலத்திற்குப் பிந்திய காலத்து வழக்குகள். பகவன் என்ற சொல்லும், ஆதிபகவன் என்ற சொல்லும் கடவுளைக் குறிப்பனவாகவும் சித்திகள் பெற்ற ஞானியைக் குறிப்பனவாகவும், ஆளப்

---

* திருமந்திரம், வயிரவி மந்திரம், 1–24–25.

† சித்தன், ஞானகுரு.

‡ சிலம்பு 10. 177.

பட்டு வருகின்றன. வள்ளுவர் காலத்தே இச்சொற்கள் எவ்வாறு ஆளப்பட்டன என்பதற்குச் சான்றுகள் இல. நாம ரூபம் பெற்ற கடவுளைக் குறிக்கும் பொதுப் பெயராகத் திருவள்ளுவர் இதை அமைத்திருக்கலாம். அல்லது அவர் காலத்தே அவ்வாறு உணர்த்த இச்சொல், வழக்கிலும் இருந் திருக்கலாம். உரையாசிரியர்களில் இதைப் பற்றித் துருவித் துருவி ஆராய்ந்தவர் திரு. வி. க. ஆவர். அவர் திருவள்ளுவ ரைப் போன்ற பொதுமை உள்ளம் படைத்தவர் ; ஏசுநாதர், முகமது நபி முதலிய பிற மதக் குருமார்களைப் போற்றிப் புகழ்ந்து பாமாலை புனைந்த பாவலர். தாம் சிவநெறி பற்றி ஒழுகினும், "அருகன் அருகே" என்று அருகன் பெருமையை அஞ்சாது கூறிய ஆற்றல்சால் அறிஞர் திரு. வி. க. ஆதிபகவன் என்ற பெயரைக் குறித்து இம் மேதகு ஆசிரியரின் ஆராய்ச்சியை அவர் இயற்றிய திருக் குறள் விரிவுரையில் காண்க ! இதைப் பற்றிய அவர் முடிவு நாம் இங்கு மேற்கொள்ளத்தக்கது. அவர் கண்ட முடிவைக் கீழே காண்க :

"ஆசிரியர் காலத்தில் கடவுளுக்குரிய பெயர்களில் ஆதி பகவன் என்பது மன்பதையில் பெரிதும் ஆட்சி பெற்றிருக் கும். அதனால், ஆசிரியர் பொதுமை பற்றி அதை ஆண் டிருக்கலாம். இஃது ஆசிரியரது பொது நோக்கைப் புலப் படுத்துவது.

"ஆசிரியர் செவ்விய தீந்தமிழ் அரசு வீற்றிருந்த காலத்தில் வதிந்தவர். அவர் காலத்தில் பிராகிருதமும் பாலி யும் வடமொழியும் அறிஞரிடை வாழ்வு பெற்றிருந்தன. அந்நாளில், சமயக்கணக்கர், இறைவனுக்கு வழங்கப்பட்ட பல பெயர்களுள் ஆதிபகவன் என்பதையே பெரிதும் ஆண் டிருப்பர். அவ்வாட்சி ஆசிரியர் உள்ளத்தைக் கவர்ந் திருக்கலாம்.

"ஒரு நாட்டில் ஒரு விதப் புதுமை புகும்போது அது நாட்டவர் நெஞ்சைக் கவர்வது இயல்பு. இவ்வியல்பு தமிழ் மக்களிடைச் சிறந்து விளங்குவதைச் சரித்திர உலகம் நன்கு அறியும். காலப்போக்கில் ஆக்கம்பெறும் பிறமொழிச் சொற்களையும், சொற்றொடர்களையும், கருத்துக்களையும் பொருந்திய முறையில் எடுத்தாள்வது தவறாகாது.

"தனக்கோர் ஆதியின்றி எல்லா உலகும் தோன்றி நின்று ஒடுங்குவதற்குத் தானே ஆதியாய் நிற்றலால், இறைவன் ஆதிபகவன் எனப்படுகிறான்.

"பகவன் என்னும் பெயர் பல பொருளுடையதாயினும், அது சிறப்பாகக் கடவுளுக்கே வழங்கப்படுகிறது. அப்பெயர் சமயத்தவர் எல்லாராலும் பொதுமையில் வழங்கப் பெற்று ஆட்சியில் வந்திருக்கிறது.

"இது, 'பகவனே ஈசன் மாயோன் பங்கயன் சினனே புத்தன்' எனவரூஉம் மண்டலபுருடர் வாய்மையால் விளங்குகிறது. பகவன் என்னும் பெயர் கடவுளுக்கும் வேறு பிறர்க்கும், பிறவற்றிற்கும் வழங்கப்படுதலின் ஈண்டு அது கடவுளின் மேலது என்பார் ஆதிபகவன் என்றார்" என்பது திரு. வி. க. அவர்களின் ஆராய்ச்சி முடிவு.

இப்பெயருக்கு இதைவிடச் சிறந்த விளக்கம், பொதுமை உணர்வு பெற்ற விளக்கம், காண்பது அரிது. இங்குக் கூறிய உண்மையை மற்றொரு வழியாலும் துணிய இடமுண்டு. ஆதிபகவன் என்ற பெயரை ஒதுக்கித் திருவள்ளுவர் கூறிய உவமையின் இயல்புகள் எல்லாம் யார் யாருக்குப் பொருந்தும் என்று காண்பதும், உண்மையைக் காணும் வழியாகும். அவ்வாறு காணின் திருவள்ளுவர் கூறிய உவமையால் விளங்கும் இயல்புகள் எல்லாம்—ஒன்று இரண்டு இயல்புகள் அல்ல—எல்லா இயல்புகளும், முழுமுதற் கடவுளுக்கே

பொருந்துவன ; தெய்வநிலையெய்திய சான்றோர் யாருக்கும் பொருந்துவன ஆகா.

## ‘ எழுத்தெல்லாம் ’

இனி நாம் ஆராய வேண்டுவது ‘எழுத்தெல்லாம்’ என்ற சொற்றொடர். ‘ எழுத்து அகர முதல ’ என்றாலே எழுத்துக்கள் அகரமாகிய முதலை உடையன என்று பொருள் படும். ‘ முதல ’ என்று பன்மையாற்கூறியதால், இதற்குப் பன்மை எழுவாய், ‘ எழுத்துக்கள் ’ என்றே அமையும். எழுத்துக்கள் என்றால் எல்லா எழுத்துக்களையும் உணர்த்தும். அவ்வாறிருந்தும், ஏன் எல்லாம் என்ற ஒரு சொல்லையும் மிகையாகச் சேர்த்துத் திருவள்ளுவர் ‘ எழுத்தெல்லாம் ’ என்றார் ?

காலிங்கர் எழுத்து எல்லாம் என்பது “ எழுத்தாலான சொற்கள் சொற்றொடர்கள், மற்றைச் சொற்றொடர்புடைய கலைகள் ” எனப் பொருள்படும் எனக் கொண்டார். அவர் கருத்தின்படி ‘ எழுத்தெல்லாம் ’ என்பது, சொற்களான எழுத்துக்கள், நூல்களான எழுத்துக்கள் எல்லாவற்றையும் குறிக்கும். இவ்வாறு பொருள் கொள்வது பொருத்த மானதே. பரிமேலழகர், “ தமிழ் எழுத்திற்கேயன்றி வட எழுத்திற்கும் முதல் ஆகல் பற்றி ‘எழுத்தெல்லாம்’ என்றார்” என்று விளக்கினார். திரு. வி. க. “ எல்லாம் என்பது பெய் யப்பட்டிருத்தல் வெறுஞ்செய்யுளோசை நிரப்பலுக்கு மட்டு மன்று. எழுத்தெனக் கூறின் தாம் தமிழில் நூல் யாக்கப் போந்தமையான் மக்கள் எழுத்து என்பதைத் தமிழ் எழுத் தென்று கொள்ளுதற்கு இடமுண்டாகுமென்று கருதி அதைத் தகையவும் உலகிலுள்ள மொழிகளின் எழுத்துக்களை எல்லாம் குறிக்க வேண்டியும் ஆசிரியர் ‘ எழுத்தெல்லாம் ’ என்று விளக்கமாகக் கூறினார்,” என்று விளக்கம் கண்டார்.

தமிழ் எழுத்துக்களோடு மற்ற உலகமொழி எழுத்துக் களையும் குறிக்கவே வள்ளுவர் இவ்வாறு கூறினர் என்று கொள்ளல் தக்கதேயாகும். வாயைத் திறவாது எந்த உலக மொழியும் பேச இயலாது. வாயைத் திறந்து மூச்சு விடும் போதே இயற்கையாக எழும் மூச்சின் ஒலி அகரமானதால், அகரம் உலக மொழிகளுக்கெல்லாம் முதலாவது என்பது பெறப்படும். இஃது எழுத்தொலி உண்மையை அடிப்படை யாகக் கொண்டதாதலின், வள்ளுவர் தாம் உலக மொழிகளை எல்லாம் அறியாதிருந்தும் இவ்வாறு துணிந்து கூறினர் போலும்! தமிழ் மொழியைக் குறித்த மட்டில் 'எல்லாம்' என்பது எவ்வாறு பொருந்துகின்றது எனக் காலிங்கர் உரை காட்டுவதை முன்பு 'முதல்' என்பதன் பொருள் ஆராய்ச்சி யில் கண்டோம். இஃது இன்னும் பொருந்துமாற்றையும், கீழே காணலாம்.

'எழுத்தெல்லாம்' என்பது உவமைப் பகுதியில் காணப்படும் சொற்றொடர். இதற்கேற்ற உவமைப்பொருள் உலகம் என்பது. எழுத்தெல்லாம் என்பது உலகம் என்ப தோடு ஒப்புமை காட்டப்படுகிறதா எனக் காண்போம். எழுத்துக்கள் தனியாகவும் எல்லாமாகவும் உலகம் என்ப தோடு ஒப்புமை காணுமாறு சொற்களை அமைத்துள்ளார் வள்ளுவர். எழுத்துக்களுக்கும் உலகத்திற்கும் ஒப்புமை எவ்வாறு காண்கின்றார் என்பதை ஆராய்வோம்.

உலகம் என்பது இரு வகையாகப் பொருள்படும். உயிர் உள்ளன, உயிர் இல்லாதன என்னும் இரண்டு தொகுதியைக் கொண்டது உலகம் என்று கொள்வது ஒரு பொருள். இஃது அஃறிணைப் பொருள். "நீரின்றமையா துலகு" என்று வள்ளுவரே இச்சொல்லை இப்பொருளில் ஆண்டுள்ளார். உலகம் என்பது உலக மக்களைக் குறிப்பது இரண்டாவது பொருள். இஃது உயர்திணைப்பொருள். இப்பொருளிலும்

திருவள்ளுவர் இச்சொல்லை ஆண்டுள்ளார். "உலகம் பழித்தது ஒழித்துவிடின்", "இன்மையாவையா துலகு" (குறள் 841) முதலிய ஆட்சிகளைக் காண்க. இந்த இரு வகைப் பொருள் களுமே இங்குப் பொருந்தக் காணலாம்.

### எழுத்துக்களுக்கும் உலகிற்கும் உவமை :

உயிரும், உயிரில்லா மெய்யும் சேர்ந்த தொகுதியே "எழுத்தெல்லாம்." இவ்வாறே உயிர் உள்ளனவும் உயிர் இல்லனவும் சேர்ந்த தொகுதியே உலகம் எனப்படும். எழுத் துக்களில் இயங்குவன உள ; இயங்காதன உள. இவற்றைப் போலவே உலகத்திலும் இயங்குவன-இயங்குதிணை-என்பன உள. இயங்காதன-நிலைத்திணை-என்பன உள. எழுத்துக் களில் வல்லினம், மெல்லினம், இடையினம் என மூன்று இனங்கள் உள. இவ்வாறே உலகிலும் வன்பொருள் (Solids) மென்பொருள் அல்லது நுண்பொருள் (Gasses) வன்மைக்கும் மென்மைக்கும் இடைப்பட்ட பொருள் (Liquids) என்று மூன்று இனங்கள் உள. எழுத்துக்கள் ஒன்றோடொன்று சேரும் சேர்க்கை அல்லது புணர்ச்சி உண்டு. அவ்வாறே உலகப் பொருள்கள் ஒன்றோடொன்று சேரும் புணர்ச்சியும் உண்டு. எழுத்துக்களின் சேர்க்கை யால் எழுத்துக்கள் கெடுதலும், திரிதலும், மற்றொன்று தோன்றுதலும் உண்டு. இவ்வாறே உலகப் பொருள்களின் சேர்க்கையால் திரிதலும், கெடுதலும், திரிந்து மற்றொன்றுத லும், வேறொன்று தோன்றுதலும் உண்டு. இப்புணர்ச்சி வகை யால் பற்பல சொற்கள் தோன்றின ; எழுத்துலகமே தோன்றியது. இத்தகு புணர்ச்சியால் பற்பல உலகப் பொருள்கள் தோன்றின ; இவ்வுலகமே உருவானது. அச் சொற்கள் அஃறிணை உயர்திணை எனப் பிரிக்கத்தக்கன. உலகப் பொருள்களும் அவ்வாறே பிரிக்கத்தக்கன. உயர்

திணைச் சொற்களுக்கு, ஆண் பால், பெண் பால் என்ற பிரிவுகள் உள. அஃறிணைச் சொற்களுக்கு, ஒன்றன் பால் பலவின் பால் என்னும் பிரிவுகள் உள. இவற்றைப் போலவே உயர் திணை உலகப்பொருள்களுள் ஆண் உண்டு; பெண் உண்டு. அஃறிணைப் பொருள்கள் ஒன்றும் பலவும் ஆவன. "அவன், அவள், அது" என்பதே உலகு. இச்சொற்கள் பெயர் ஏற்பன. இவ்வாறே உலகப் பொருள்களும் பெயர் ஏற்பன. பெயர்ச்சொற்கள் வேற்றுமை ஏற்பன. அவ்வாறே உலகப் பொருள்களும் வேற்றுமை ஏற்பன. வேற்றுமை கொள்வதில் தலை சிறந்தவன் மனிதன். பெயர் ஏற்ற சொற்கள் வினையை ஏற்பன. பெயர் பெற்ற மனிதனும் வினை மேற்கொள்வான். வினை ஏற்ற சொற்கள் பயனைத் தருவன; பயனினை பெறுவன. வினை ஏற்ற மனிதனால் பயன் நிலை ஆதலும் உண்டு; பயன் இல்லையாதலும் உண்டு. வினை எஞ்சிய சொற்களும் உள. அவை மற்றொரு வினை கொண்டு முடிவன. தாமே வினை முடித்தலின்றி, வினை எஞ்சிய மாந்தரும் உளர். அவர் வினை எஞ்சு கிளவியைப்போல, வேறொருவர் வினையைத் தழுவிப் பிறர் பின் சென்று வாழ்பவர். சொற்கள் வினை வயப்படுவன. மக்களும் வினை வயப்படுவார்கள். வினை முற்றிய சொற்கள் உள. வினை முற்றிய மாந்தரும் உளர். காலத்தால், இடத்தால் கட்டுண்டு கிடப்பன இச்சொற்கள். உலகப் பொருள்களும் உலகமும், காலத்தாலும் இடத்தாலும் கட்டுண்டே கிடப்பன. இவ்வாறு "எழுத்தெல்லாம்" ஒரு தனி உலகமாய் வாழ்கின்றன; மிளிர்கின்றன; காட்சியளிக்கின்றன. இவ்வெழுத்துலகு மக்களோடு ஒப்புமை கண்டு மக்கள் உலகோடு போட்டியிடுவது போலும்!

மயங்கா மரபின் எழுத்து முறையை முன்பு கண்டோம். மயங்கா மரபின் இலக்கண முறையை இப்போது காண்கின்றோம். உலகப் படைப்பை, அல்லது தோற்றத்தை

ஊன்றி ஊன்றி ஆராய்ந்து, அதைப்போலவே தமிழ் மொழியை அமைத்த பண்டைத் தமிழர்தம் அறிவைக் காண்க! அவர்தம் இலக்கணத்தின் நுட்பத்தைக் காண்க! பண்டைத் தமிழர்களுக்கு அவர்தம் இலக்கணமே மறையாக (வேதமாக) அமைந்தது போலும்! தத்துவ நூலாகவும் அமைந்தது போலும்! இந்த இலக்கண அமைப்பில் பதிந்து கிடக்கும் உண்மைகளை எடுத்து உலகத் தோற்றத்திற்கும், பெருக்கத்திற்கும், தத்துவக் கருத்துக்களுக்கும், கடவுளாகிய முதலுக்கும் வள்ளுவர் உவமை காட்டிய திறனைக் காண்க! இலக்கண அமைப்பிற்கே ஒரு பேருரை வகுப்பது அவர் உவமை. இவற்றை எல்லாம் திருவள்ளுவர் எவ்வாறு ஊன்றி ஊன்றி அறிந்திருத்தல் வேண்டும்! அவர் இலக்கண அறிவின் பரப்பைக் காண்க! அவர் அறிவின் திறத்தைக் காண்க! "எழுத்தெல்லாம்" என்ற அவர் சொல் ஆட்சியின் நுட்பத்தைக் கருதிக் கருதிக் காண்க! அதன் பொருத்தத்தை உன்னுக! அவர் கருத்தையும் ஓர்க!

தமிழர் தம் கடவுளுக்கு அமைத்த கோயிலில் இத்தகு தமிழ் மொழிக்கும் தமிழ்மொழிக் காப்பியத்திற்கும் (இலக்கணத்திற்கும்) ஓர் இடம் அளித்தனர். இவற்றிற்கு இவ்வாறு அளித்த இடம் இப்போது 'வியாகரண மண்டபம்' என்று பெயர் பெறும். வடவர் சிறந்தோங்கிய வடநாட்டில் அவர்தம் வியாகரணத்திற்குக் கோயிலில் இடம் தந்தாரிலர். கோயிலில் மொழியின் காப்புக்கு இடமளிப்பது தமிழர் பண்பாடு. ஆதிபகவனாகிய முதலுக்கு வழிபாடு; அதை ஒப்பவே அகரமாகிய முதலுக்கும் வழிபாடு. இது தமிழ் நாட்டு வழிபாட்டு முறை. ஆதலின், இவ்வழிபாட்டு முறை தமிழ் நாட்டுக் கோயில்களில் மட்டும் இடம் பெறுவதாயிற்று. இப்பண்பாட்டைப் பின்பற்றியே சங்கமிருந்த பங்கமில் புலவர்களுக்கும் இறைவன் கோயிலில் இடம்

அளிக்கப்பெற்றது போலும்! வடமொழியைத் தமருகத்தினின்று அளித்த கூத்தப்பெருமானுக்கே வடநாட்டுக் கோயில்கள் இடம் தாராத போது, இலக்கணத்திற்கா அவை இடம் தரும்?

## எஞ்சிய உடைமைப் பொருள் :

வள்ளுவர் உவமையின் ஆய்வுக்கு எஞ்சி நிற்பது ஒரே சொல், 'முதல' என்பது. இச்சொல்லை முன்பும் ஆராய்ந்தோம். முன்பு இச்சொல்லைப் பிரித்து 'அ' என்னும் பலவற்றின் படர்க்கையை உணர்த்தும் குறிப்பு வினைமுற்றின் விகுதியை விலக்கிவிட்டு, முதல் என்பதற்கு மாத்திரம் பொருள் கண்டோம். இப்போது விலக்கிவிட்டதையும் சேர்த்து, 'முதல' என்பதற்கு முழுப் பொருளையும் காண்போம். 'முதல' என்பது உவமையில் காணப்படுவது. 'முதற்று' என்பது உவமப் பொருளில் காணப்படுவது. முதல, பன்மை : முதற்று, ஒருமை. 'முதல' என்பதற்கு முதலை உடையன எனப் பொருள் கண்டோம். 'முதற்று' என்பதற்கு முதலை உடையது என்று பொருள் கண்டோம். இவ்விரண்டிடத்தும் குறிப்பு வினைமுற்று உடைமைப் பொருளையே விளக்குகின்றது. ஆனால், இவற்றுள் சிறிது வேற்றுமையுண்டு.

எழுத்துக்கள் எல்லாம் அகரமாகிய முதலை உடையன என்றால், அவ்வெழுத்துக்கள் எங்குச் சென்று அவ்வுடைமையைத் தேடி வந்தன? எழுத்துக்கள் தோன்றும் முன்பே அகரம் முதலாகத் தோன்றிற்று; இயற்கையாகத் தோன்றி முதலாக அமைந்திருந்தது. ஆதலின், எழுத்துக்கள் அகரமாகிய முதலை உடையவாயின. இவ்வாறு இயற்கையாய் அமைந்த முதலையே மாந்தர் கண்டு முதலாக அமைத்தனர்.

இனி உலகுக்குக் கூறிய உடைமைப் பொருளைக் கருதுவோம்: முற்பகுதியில் உலகுக்குக் கூறிய பொருள் எல்லாம் உலகை உயர்திணையாகக் கொண்டு கூறப்பட்டன. உயர்திணையாகப் பொருள் கொள்ளும் போது ஆறும் வேற்றுமை உடைமைப் பொருளை குறிப்பு வினைமுற்று உணர்த்தும் என்பர்.* உயர்திணைக்கு ஏற்ப உடைமைக் கிழமைப் பொருள் முன்பு கொள்ளப்பட்டது. உலகு அஃறிணையாகவும் பொருள் படும் என்று சற்று முன்பு கண்டோம். உலகு தான் பெற்ற அரும்பெறல் உடைமையை எங்கேயாவது சென்று தேடி வந்ததா ? அல்லது வித்திட்டு முளைக்கச் செய்ததா ? அன்று அன்று. அதற்கு இயற்கையாய் அமைந்து கிடந்த இயற்கை உடைமை அது. தனக்கு முதலாக அமைந்து கிடந்த முதற்கிழமை அல்லது இயற்கைக் கிழமை என்று கூட அதைக் கூறலாம். எழுத்துக்களின் உடைமையைப் போலவே உலகின் உடைமையும் இயற்கை உடைமை. இவ்வாறு இயற்கையாக அஃறிணை உலகிற்கு அமைந்து கிடந்த உடைமையை உயர்திணை உலகு உழைத்து உழைத்துத் தனக்கு எது முதல் எது முதல் எனத் தேடிக் கண்டு கொண்டது; "தேடிக் கண்டுகொண்டேன்!" என ஆர்த்தது; கண்டதைத் தன் உடைமையாக (உடைமைக்கிழமையாகக்) கொண்டது. உடைமைக்கிழமைக்கு உடன் பிறந்தன உரிமையும் உரிமைப் போராட்டமும். முற்பகுதியில் கண்ட உடைமைப் போர், உரிமைப்போர் எல்லாம் எழுந்தன ; எழுகின்றன ; இன்னும் எழும்.

இவ்வாறு போரிட நின்றதுதான் எது ? முதலா? அன்று அன்று. அம்முதல் மனவாக்குக்கு எட்டாதது ; வாயாற் சொல்லுதற்கரியது ; மனத்தால் நினைத்தற்கரியது ; ஊர்

*" அதுச் சொல் வேற்றுமை யுடைமையானும் " என்னும் (தொல். சொல். 215) சூத்திரம் காண்க.

அற்றது; பேர் அற்றது; குணமற்றது ; குறியற்றது ; யாரும் உடைமையாய்ப் பெறுதற்கு அரியது. உலகம் கொண்ட உடைமை இம்முதலன்று. அன்றெனில், வேறு எம்முதல் ? ஆதிபகவனாகிய முதல், நாம ரூபமும் பெற்ற முதல், வடிவமும் பெற்ற முதல். அதுவே மலர்மிசை, மனமிசை ஏக வல்லது ; மனத்தால் நினைக்க இயல்வது ; பொருள் சேர் புகழ் ஏற்றது ; எண் குணம் உற்றது. அதுவே உலகத் துடைமை.

உலகு என்பதற்கு அஃறிணைப் பொருளும் உயர்திணைப் பொருளும் அமையுமாறு திருவள்ளுவர் கூறிய திறத்தைக் காண்க ! நுட்பத்தைக் காண்க ! இஃது உவமைக்குத் தந்த ஏற்றத்தைக் காண்க ! உடைமைப் பொருளின் பொருத்தத் தைக் காண்க ! பொருள் நுட்பத்தைக் காண்க ! காண்க !

இப்பொருளெல்லாம் தந்தது முதல என்பதில் உள்ள 'அ' என்னும் ஓர் எழுத்து. 'முதற்று' என்பதில் உள்ள 'து' என்னும் ஓர் எழுத்து (முதல் + து = முதற்று). தமிழ் மொழி அமைப்பின் செறிவைக் காண்க ! ஆற்றலைக் காண்க ! இவை தரும் பொருள் நுட்பத்தை எல்லாம் ஊன்றி ஊன்றி அறிந்து இலக்கணம் வகுத்த நுண் அறிவை யும்* காண்க ! மயங்கா மரபின் எழுத்து முறையை நினைக ! மயங்கா மரபின் இலக்கண முறையையும் கருதுக ! என்ன புண்ணியம் செய்தனம் இத்தகு மொழியைப் பெற ! இத்தகு இலக்கணத்தைப் பெற !

### உவம உருபு விரித்தல் :

இவ்வாறே, 'இதற்கு இது உவமை ; அதற்கு இது உவமை ; இது உவமை விளக்கும் பொருள்' என்று கூறிக்

*இத்தகு நுட்பம் வாய்ந்த குறிப்பு வினைமுற்றைக் குறித்த விதிகளை, நன்னூலார் தம் இலக்கணத்திலிருந்தே விலக்கியது மிக மிக வருந்தத்தக்கது !

கொண்டே சென்றால், இவற்றை எல்லாம் தொகுத்து, உவமை உருபு விரித்து, வினை முடிவு காண்பது எவ்வாறு? உவமையைப் பிரித்தால், அது, எழுத்தெல்லாம் (1), அகரமாகிய முதலை (2), உடையன (3) என மூன்று பிரிவுகளாகப் பிரியும். இவ்வாறே உவமப் பொருளையும் பிரித்தால் உலகு (1), ஆதிபகவனாகிய முதலை (2), உடையது (3) என மூன்று பிரிவுகளாகப் பிரியும். உவமையில் காணும் மூன்று பிரிவுகளுக்கும் உவமப் பொருளின் மூன்று பிரிவுகளும் நிரல் நிறையே ஒப்புமை காட்டப்படுகின்றன எனவே, முன்பெல்லாம் விளக்கம் கண்டோம். இவ்வாறு முப்பாற்பட்ட உவமைக்கு உவம உருபு விரித்து வினை முடிவு காணுங்கால், எழுத்தெல்லாம் போன்ற உலகு, அகரமாகிய முதலைப் போன்ற ஆதிபகவனாகிய முதலை, எழுத்தெல்லாம் உடையன போல உடையது என உவமை விரியும். இது முற்றுவமை என்னத் தகும்; அல்லது நிரல்நிறை உவமை எனினும் பொருந்தும். உவமையில் உள்ள ஒவ்வொரு சொல்லும் நிரல் நிறையே உவமப் பொருளில் உள்ள ஒவ்வொரு சொல்லுக்கு உவமையாக அமைந்திருப்பதெல்லாம் மேலே விளக்கப்பட்டன. திருவள்ளுவர் அன்றி வேறு யாரே இத்தகு உவமையை அமைக்க வல்லவராவர்? உவம உருபை ஏதாவது ஒரு சொல்லோடு சேர்த்துக் கூறின், அந்த ஒரு சொல் உணர்த்தும் பொருளுக்கே உவமை காண்பார்கள் என்று கருதியே, உவம உருபைச் சேர்த்து வள்ளுவர் செய்யுள் செய்திலர் போலும்!

"உவமையும் பொருளும் ஒத்தல் வேண்டும்," என்னும் தொல்காப்பியம். உவமையும் பொருளும் ஒத்துத் திகழும் உவமை, இம்முதற்குறள் உவமையைவிட வேறு யாதேனும் ஒன்று இலக்கிய உலகிலேயே காணல் இயலுமா? காணுதல் அரிதினும் அரிது! உவமை எங்கெங்கெல்லாம்

சென்றது? எவ்வாறு எவ்வாறு உவமப் பொருளோடு சென்று சென்று இயைந்தது? எவ்வாறு எவ்வாறு உவமப் பொருளை விளக்கியது? இவற்றை எல்லாம் கருதிக் கருதிக் களிப்பெய்துக! இத்தகு ஆற்றல்சால் உவமையை, அரும் பெறல் உவமையைத் தந்த புலவர் பெருமான் அறிவைப் போற்றுக! புலமையைப் புகழ்க!

### வேறுபட வந்த முடிவு :

நம் மகிழ்வுக்கு ஓர் இடையூறு ஏற்படுகின்றது. இடை அறுதலில்லா இன்பம் இனிப்பை மட்டும் தருவதன்று; புளிப்பையும் தரும். இடையறுது இன்பம் துய்த்தார்க்கு இன்பத்தின் இயல்பும் அருமையும் புலப்படுதல் இல்லை. 'துன்பமுற்றவர்க்கலால் இன்பமில்லை,' ஆதலின், இடையூறும் வேண்டற்பாலதே. உவமையும் பொருளும் ஒத்தல் வேண்டும் என்று மேலே கண்டோம். இவ்வாறு உவமையும் பொருளும் ஒத்துள்ளனவா என்று சற்று ஆழ்ந்து நோக்குவோம். உவமையில் உள்ள ஒவ்வொரு சொல்லுக்கும் உவமைப் பொருளில் உள்ள ஒவ்வொரு சொல்லுக்கும் ஒப்புமை கண்டது உண்மையே. ஆனால், உவமை பன்மையாக முடிகின்றது; உவமப்பொருள் ஒருமையாக முடிகின்றது. எல்லா வகையிலும் ஒப்புமை காட்டிய வள்ளுவர் பெருமான் ஏன் இவற்றை முடிவில் வேறுபடக் கூறினர்? இவை இரண்டையும், பன்மையாகவோ ஒருமையாகவோ ஒத்த முடிவு காட்டும் நினைவில்லையா? ஒத்த முடிவு காட்டுவது யாப்புக்குப் பொருந்தாதாகுமா? 'அகர முதல வெழுத்தெல்லாம்' என்பதை 'அகர முதல தெழுத்தெல்லாம்' என்று ஓர் எழுத்தை மாற்றி அமைத்தால் உவமையும் பொருளும் மிக எளிதே ஒருமையாக முடிகின்றன. எழுத்தெல்லாம் என்பது தொகுதி ஒருமையாகி, முதலது என்னும்

ஒருமை வினைகொண்டு முடிகின்றது. முதலது, முதற்று என முற்றிலும் ஒப்புமை ஏற்படுகின்றது. இவ்வாறன்றி உவமையைப் பன்மையாகக் கூறியவாறு உவமப் பொருளை யும் பன்மையாக அமைத்தலும் இயலாததன்று. எங்கெங் கெல்லாம் ஒப்புமையே காட்டி வந்த புலவர் இந்த ஓர் இடத் தில்—முடிவில் மட்டும்—ஏன் ஒப்புமையைக் கைவிட்டார்? ஒருமை பன்மை வேற்றுமை தெரியாத புலவரும் அல்லர் வள்ளுவர்.

உவமையையும் பொருளையும் வேறுபாடின்றி ஒத்த முடிவு காட்டுவது எளிதே ஆவதாயினும், அதை விட்டுவிட்டு ஏன் வேறுபடக் கூறினர்? இவ்வாறு வேறுபடக் கூறியது தான் பேராசிரியர் கூறிய வேறுபட வந்த உவமத்தோற்ற மாகுமா? உவமை இதுவோ அதுவோ என்று துணியுமாறு கூறுததால் வேறுபட வந்த உவமத் தோற்றம் என்றார் பேராசிரியர். இதுவோ அதுவோ என்பது ஐயம். ஐயப் பட வருவதும் வேறு; வேறுபட வருவதும் வேறு. ஒன்றை ஒருமையாக்கி மற்றொன்றைப் பன்மையாக்கியது வேறுபடக் கூறியதாகவே கொள்ளப்படும். ஐயப்படக் கூறுதல் குற்றம்; உவமைக்குக் குற்றம்; நூலுக்கும் குற்றம். வேறுபடக் கூறு தல் அழகு; உவமைக்கு அழகு; பாட்டுக்கு அழகு. இதையே பிற்காலத்தவர் வேற்றுமையணி என்றனர் போலும்! இது புலவர் பெருமக்கள் ஆராயத்தக்கது.

### வேறுபட வந்த உவமத் தோற்றம்:

வேறுபட வந்த உவமையாகவே வள்ளுவர் உவமை, கடைசியாகக் காட்சி அளிக்கின்றது. இவ்வாறு வேறுபட வந்த உவமையும் நினைவின்றிக் கூறியதாகக் கொள்ள இட மின்று; வாளா கூறியதாகக் கொள்ளவும் இடமின்று. ஏதோ ஓர் ஆழ்ந்த கருத்தோடுதான் வள்ளுவர் இவ்வாறு வேறுபடக்

கூறியிருத்தல் வேண்டும். இவ்வாறு வேறுபடக் கூறியதில் ஏதோ ஓர் ஆழ்ந்த கருத்திருத்தல் வேண்டுமென்று கண்டவர் உரையாசிரியர்களுள் ஒருவரே. அவர் திரு. வி. க. அவர் இவ்வேறுபாட்டைக் குறித்துக் கூறுவதைக் கீழே காண்க :

"உலகு என்பதும் உலகங்கள் எல்லாவற்றையும் குறிப்பதே. பன்மைத் தொகுதியை ஒருமையாகக் கூறல் மரபு. காரிய உலகைப் பன்மையாகக் கூறின் காரணத்தையும் பன்மையாகக் கொள்ளுதற்கு இடமுண்டாதல் பற்றியும், அநேகேச்சுரவாதம் உலகில் இருத்தல் பற்றியும், காரண மாகிய கடவுளின் ஒருமையை வலியுறுத்தற்பொருட்டுக் காரியத்தையும் ஒருமையாக உணர்த்தினர். உயிரும் உயிரல் பொருளும் சேர்ந்த ஒன்றைப் பன்மையாகக் கூறுவது பொருத்தமாகாது," என்பது அவர் விளக்கம். உவமப் பொருளைப் பன்மையாகக் கூறுவது பொருத்தமாகாது என்பது உண்மையே. உவமையை ஒருமையாகக் கூறல் ஏன் கூடாது? திரு. வி. க. கூறியாங்குப் பன்மைத் தொகுதியை ஒருமையாகக் கூறல் மரபாயிற்றே! மேலே காட்டியவாறு எழுத்தெல்லாம் என்ற பன்மைத் தொகுதியை ஒருமையாகக் கூறல் தகுமே! அவ்வாறும் ஏன் வள்ளுவர் கூறினரிலர்? இதற்கு ஏதோ ஓர் ஆழ்ந்த கருத்திருத்தல் வேண்டும். அதை நாமும் ஆழ்ந்து ஆழ்ந்து காணல் வேண்டும்.

## வேறுபட வந்த முடிவின் குறிப்பு :

வள்ளுவர் வேறுபடக் கூறியவை எவை? எழுத்துக் களின் முடிவையும் உலகத்தின் முடிவையும் வேறுபடக் கூறினர். எழுத்துக்களும் உலகும் ஒத்தே தோன்றின; ஒத்தே வளர்ந்தன; ஒத்தே பெருகின. ஆனல், முடிவில் வேறுபடுகின்றன. எழுத்துப் பன்மையாய் முடிகின்றது. உலகு ஒருமையாய் முடிகின்றது. எழுத்துக்கள் எண்ணற்

றனவாய்ப் பெருகிப் பெருகி எண்ணற்றனவாய் முடிகின்றன. பன்மையே அவற்றின் முடிவு. இப்பன்மை முடிவே பயனளிப்பது. இதை யாரும் அறிவர்.

எழுத்துக்கள் ஒருமையாக (ஒன்ருக) முடிந்தால் அவற்ருல் பயனேது? பெருகிய எழுத்துக்களெல்லாம் தோன்றிய முறையே மீண்டும் ஒன்றுக்குள் ஒன்ருக ஒடுங்கி ஒரே எழுத்தாக நிற்பவானுல் பெறும் பயன் யாது? அவை ஒன்றுள் ஒன்ருக ஒடுங்குவன அல்ல. மேன்மேலும் அவை பெருகிக்கொண்டேயிருப்பன. ஒவ்வொரு மொழியிலும் எத்தனை எத்தனை சொற்கள் ஆண்டுதோறும் சேர்க்கப்படுகின்றன? அவை எல்லாம் எழுத்தின் தொகையைப் பெருக்குவன. எழுத்துக்கள் பன்மையாய்—பற்பலவாய்—முடிவதே மொழியின் பண்பாடு; பயனளிக்கும் பண்பாடு.

உலகு எழுத்துக்களைப்போலத்தானே பெருகிற்று? அதுதானே வள்ளுவர் உணர்த்தியதும்? உலகு எவ்வாறு ஒருமையாய் முடிகின்றது என்பதை ஆராய்தல் வேண்டும். இம்முடிவு அரிய பெரிய கருத்தை உணர்த்துவது. சிறந்த தத்துவக் கருத்தையும் விஞ்ஞானக் கருத்தையும் கொண்டது இது. உலகப் பிறப்புக்களில் உயர்ந்த பிறப்பு மனிதப் பிறப்பு. அரிது அரிது மனிதராய்ப் பிறத்தல். மனிதரைவிடச் சிறந்த பிறவியில்லை. "அகல்ஞாலத் தகத்துள் தோன்றி", "புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாய்ப் பல் விருகமாகிப் பறவையாய்ப் பாம்பாய்" எண்ணற்ற பிறவிகளாய்ப் பிறந்து பிறந்து எண்ணற்ற ஆண்டுகள் சென்றபின் கிடைத்தது மனிதப் பிறவி. மனிதப் பிறவி வரையில் வளர்ந்து வளர்ந்து வந்தது உடல். மனிதப் பிறவிக்குப் பிறகு உடல் வளர்ச்சியில்லை; உருவ வளர்ச்சியில்லை. எங்கெங்குக் காணினும் மனிதர் எல்லோரும் ஒரே வகை உறுப்பினர். மனிதர் நிறத்தால் மாறுபடலாம்; பருமையால் மாறு

படலாம் ; உயரத்தால் மாறுபடலாம் ; இவை எல்லாம் சூழ்நிலையால் பெறும் மாற்றங்கள். எங்கெங்குக் காணினும், மனித வடிவம் எல்லாம் ஒன்றே. இதற்குமேல் இயற்கை வேறு வடிவம் ஏற்றதில்லை. ஆதலின், மனிதப் பிறவியே இறுதிப் பிறவி. மனிதப் பிறவி வரையில் வளர்ந்து வந்த உடல் வளர்ச்சி, மனிதப் பிறவியை அடைந்த பிறகு வேறு வகையாய் மாறுகின்றது. உடல் வளர்ச்சி நிற்க, உயிர் வளர்ச்சி அல்லது ஆன்ம வளர்ச்சி தொடங்குகிறது. படிப்படியாக ஊன் சுருங்கச் சுருங்க உள்ளொளி பெருகுகின்றது. ஊனின் கூர்தல் அல்லது உள்ளது சிறத்தல் (Evolution of the flesh) முடிகின்றது ; உயிரின் கூர்தல் அல்லது உள்ளது சிறத்தல் (Evolution of the spirit) தொடங்குகின்றது. எத்தனையோ முறை மனிதனாய்ப் பிறந்து பிறந்து இந்த ஆன்ம வளர்ச்சி முதிர்கின்றது. இவைகளே இன்றைய விஞ்ஞான உலகு கண்ட உண்மைகள். பழந்தமிழர்கள் கண்ட உண்மைகளும் இவைகளே.

ஊனினைச் சுருக்கி உள்ளொளி பெருக்க மணிமொழியார் வேண்டுவதைக் காணலாம். உள்ளொளி பெருகப் பெருக, உயிர் ஒருமுகப்படுகின்றது: ஒருமை எய்துகின்றது. இதுவே ஒருமை. வள்ளுவர் காட்டிய முடிவின் ஒருமை இது. உலகம் எய்தும் முடிவும் இதுவே. அவன், அவள், அது எனும் உலகு மூவினைமையின் தோற்றி இருந்து முடிவதை வள்ளுவர் காட்டும் திறனைக் காண்க! அவனே தானே ஆகும் ஒருமையும் காட்டிய நுண்மையைக் காண்க! ஒருமையில் முடிவதே உலகத்தின் உயரிய பண்பாடு.

பற்பல சமயங்கள் கூறும் உண்மைகளும் இவைகளே. இவற்றை அவை வேறு வகையாகக் கூறுவன. இவை ஒடுக்க முறை என்பன சில. உலகத் தத்துவங்கள் எல்லாம் தோன்றிய முறையில் மீண்டும் ஒடுங்குவன. ஒன்றில் ஒன்றாய் ஒடுங்கி

ஒடுங்கித் தோற்றம் தந்த முதலோடு ஒன்றுபடுவன என்பர். இவற்றை விரிக்கிற் பெருகும். இவற்றைக் கூறும் நூல்களும் அளவற்றன.

வியக்கத்தக்கது இச்சிறு குறள்! இக்குறள் தரும் பொருள்கள் வியக்கத்தக்கன; சிறு சிறு சொற்கள்; அவை தரும் பொருள்களோ, மிக மிகப் பெரியன. அப்பொருளின் பெருக்கமும் 'ஆரளவின்று.' இப்பொருள்கள் வெள்ள மாய்ப் பெருகின. ஆனால், இப்பொருளெல்லாம், சமயக் கருத்துக்கள் தத்துவக் கருத்துக்களாகவே முடிகின்றன. திருவள்ளுவர் எழுதியது அற நூலா, அல்லது சமயக் கணக்கர்தம் சாத்திரம் ஆகுமா? அல்லால், வள்ளுவரே தத்துவ நூலாசிரியரும் ஆவரோ? தத்துவக் கருத்துக் களையும் சமயக் கருத்துக்களையும் அறநூலில் கூறுவது எதற்கு? இக்கருத்துக்கள் எல்லாச் சமயங்களுக்கும் பொருந் தும் பொதுத் தன்மையே வாய்த்தனவாயினும், இவை அற நூலில் எவ்வாறு இடம் பெறுவன? இவற்றிற்கும், அற நூலுக்கும் என்ன தொடர்பு?

இங்குக் கூறிய கருத்துக்கள் அல்லது உண்மைகளே அறநூலுக்கு வேண்டற்பாலன; அறத்திற்கும் அற நூலுக் கும் புறம்பாவன அல்ல. இவைகளே திருவள்ளுவர் அறத் திற்கு அடிப்படையாய் அமைவன. இங்குக் கூறிய தத்துவ உண்மைகள் மக்கள் வாழ்க்கைக்குப் பயன்படுதல் வேண்டும். இல்லையாயின், இவையெல்லாம் திண்ணை வேதாந்தமாக முடியும்; அல்லது ஏட்டுச் சுரைக்காயாக முடியும். இவற்றால் மக்கள் பெறும் பயனே இல. இவற்றிற்குப் பொருந்த மக்கள் வாழ்வு அமைவதே இயற்கைப் பெருவாழ்வு; வாழ் வாங்கு வாழும் வாழ்வு. கடவுளாகிய முதலை உலகிற்கு உடைமையாகக் கூறிய நுட்பத்தை இங்கு நினைக! உடைமை என்பது உரிமை கொண்டாடமட்டுமன்று; அன்றாட வாழ்

வுக்குப் பயன்படுவதே உடைமை. இஃது எவ்வாறு அன்றாட வாழ்க்கைக்குப் பயன்படுதல் வேண்டும்? மேலே கூறிய தத்துவக் கருத்துக்கள் எவ்வாறு மக்கள் வாழ்வில் பொருந்துதல் வேண்டும் எனக் காட்டுவதே வள்ளுவர் அறம். பொய்க்கதைகளின்றியும் புராணக்கதைகளின்றியும் அரிய தத்துவ உண்மைகளை அடிப்படையாகக் கொண்டு அன்றாட வாழ்க்கைக்கு அறம் வகுத்ததே வள்ளுவர் சிறப்பியல்பு. இதுவே திருவள்ளுவர் இயற்றிய அரிய பெரிய பணி. மக்கள் வாழ்க்கையில் மேற்கொள்ளத்தக்க ஒழுக்கத்தை வரையறுப்பதே அறம் என முன்பே கண்டோம். இங்குக் கூறிய தத்துவ உண்மைகளுக்குப் பொருந்த, அவற்றையே அடிப்படையாகக் கொண்டு, மக்கள் வாழ்வு அமைய ஒழுக்கத்தை அறுதியிட்டுக் கூறுவதே வள்ளுவர் அறம். இதுவே அறத்திற்கும் தத்துவக் கருத்துக்களுக்கும் உள்ள தொடர்பு.

## ஒருமை காண்பதே வள்ளுவர் அறம் :

திருக்குறளுக்குள்ளே சற்றுப் புகுவோம். ' பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் '' (குறள், 972) என்றார் திருவள்ளுவர். பிறப்பொவ்வாதெனக் கூறிய அறவோன் உளன். ஒருவர் பிறப்பொக்கும் என்று கூற, ஒவ்வாதென்று மற்றொருவர் மறுதலையாகக் கூறின், உலகம் எதை ஏற்கும் ? திருவள்ளுவர் கூறியதற்குச் சான்று யாண்டுளது ? இதற்குச் சான்று பகர்வது முதற்குறள். முதற்குறள் கூறுவது யாது? மக்கள் யாவரும் ஒரே முதலிலிருந்து தோன்றியவர்கள். அவர்கள் பெருக்கமும் ஒரே முறைப்படி மயங்கா மரபின் அமைந்தது. முடிவும் ஒரே வகை முடிவு. தோற்றத்தில் ஒருமை, பெருக்கத்தில் ஒருமை, முடிவில் ஒருமை. இங்கு வேற்றுமையேது ? வேற்றுமை புகத்தான் இடமேது ? " வேற்றுமை காண்பது தவறுடைத்து. மக்கள் யாவரும்

ஓரே குலம் ; ஓரே இனம். பிறப்பால் வேற்றுமை இல்லை இல்லை இல்லையே,'' என்று சான்று பகர்வது காண்க!

மற்றும் ஒரு குறளைக் காண்போம். தான் பாடு பட்டுத் தேடிய பொருளைப் பிறருக்கு உதவ வேண்டுமென்று வற்புறுத்துவது வள்ளுவர் கூறிய ஈகை என்னும் அறம். "அற்றார் அழிபசி தீர்த்தல் ; அஃதொருவன் பெற்றான் பொருள் வைப்புழி,'' (குறள் 226) என்பது குறள். 'தேடிய உணவுப் பொருளைப் பிறர் வயிற்றில் வைத்துவிடு; இதுவே பொருள் சேர்த்து வைக்க நல்ல இடம்,' என்னும் இக் குறள். சேமித்து வைக்க நல்ல இடம் கண்டார் வள்ளுவர்! உலக மக்களைக் கேலி செய்கின்றார்போலும் வள்ளுவர்! அறிவிலா மக்கள் பாங்கிகளிலும், பிற இடங்களிலும் சேமவைப்பு அறைகளைத் தேடி அலைகின்றனர். 'அந்தோ! இவை சேம வைப்பாவனவோ!' என்று மனம் நொந்தார்போலும்! 'பிறன் வயிற்றில் வைப்பதா சேமவைப்பு? இஃது எப்படிச் சேம வைப்பாகும்! வள்ளுவர் மூளையே குழப்பம் எய்தியது போலும்! நல்ல சேமவைப்பைக் கண்டார்' என நகையாடுவார் இன்று உளார். இவர் நகையாடுவது தவறு என்று எவ்வாறு காட்டுவது? காரணமின்றி ஏதோ ஒன்றை அறம் என்று கூறிவிட்டால், அது அறமாகுமா? அதை மக்கள் எவ்வாறு பின் பற்றுவர்? இதற்கு விடை பகர்வது முதற்குறள் அன்றி வேறு எது உளது? 'அற்றான், அழிபசி உற்றான், நின்னினும் வேறல்லன். நீயே அவனானால், அவனுக்குச் செய்தது உனக்கே சேருவது என்பது திண்ணம். நீயே அவனுமாறு முதற்குறளில் காண்க,' என்று விடை பகர்வது இக்குறள். ஒருமை, ஒருமை, ஒருமையைக் காண்பதே விஞ்ஞான முறை. திருக்குறள் கூறுவதும் இதுவே. முதற் குறள் வள்ளுவர் அறத்திற்கே அடிப்படையாமாறு காண்க.

இன்னும் ஒரு குறளையும் காண்போம்: " தீயவை தீய பயத்தலான் தீயவை தீயினும் அஞ்சப்படும்." (குறள், 202). 'நான் தீ வைத்தேன். பிறன் வேகின்றான். பிறன் பொருள் வேகின்றது. நான் வெந்திலேன். என் பொருள் வெந்திலது. என் அருகிலும் தீ எட்டுதல் காண்கிலேன். 'தீயினும் அஞ்சப்படும்' என்று வள்ளுவர் எவ்வாறு கூறுவார்? என்னை எவ்வாறு தீச்சுடும்? எனக்கு எவ்வாறு தீய பயக்கும்?' என்று கேட்பார் உளர். இதற்கு விடை பகர்வது முதற்குறள். 'தீயவே நேரும் நேரும்!' என்று காட்டுவது முதற்குறள். தீ வைத்தவனைத் தீச்சுடுதல் இல்லை. தீயை ஏற்றவனையே தீச்சுடும் என்பது உண்மை. ஆனால், தீமைத் தீயோ, வைத்தவனையும் சுடும். தீயினும் கொடியது இத்தீ. எண்முறை பிறழாதன இத்தீயின் செயல்கள். ஒரே முதலிலிருந்து தோன்றியவர்களே தீயை வைத்தவனும் தீயை ஏற்றவனும். இவர்கள் இரு கிளைகள். ஒரு கிளையை எரித்த தீ, மற்றொரு கிளையையும் தாவும்; எரித்தே தீரும். " ஈண்டு தங்கிளையோடும் எரித்திடும்" என்று விடை பகரும் முதற்குறள். மக்களின் ஒழுக்க முறைக்கு, மக்களின் அற வாழ்விற்கு, வள்ளுவர் அறத்திற்குத் தத்துவக் கருத்துக்கள் எவ்வாறு அடிப்படையாய் அமைந்துள்ளன என்பதைக் காண்க. முதற்குறள் தரும் விளக்கத்தைக் காண்க.

இவ்வாறே வள்ளுவர் கூறிய அறமெலாம் முதற்குறளோடும் பாயிரத்திற்காணும் ஏனைய குறள்களோடும் பொருந்துவன. அவற்றிற்கெல்லாம் அடிப்படையாவது முதற்குறள். ஒருமையே உலக அமைப்பில் காணப்படுவது. ஒருமையே இயற்கைச் சட்டம். பன்மையில் ஒருமை காண்பதே பண்பாட்டு உயர்வு. இவ்வொருமை காண்பதே ஒழுக்கத்தின் உயர்வுமாகும். இவற்றையே வற்புறுத்துவன,

ஒருமைப்பாடு எய்தும் வாழ்வுக்கு வழி காட்டுவன, ஆயிரத்து முந்நூற்று முப்பதருங்குறளும்.

இதுவே பழந்தமிழர்களின் பண்பாடு; அப்பண்பாட்டின் அடிப்படை. "யாதும் ஊரே; யாவரும் கேளிர்" எனக் கண்டது எது? கூறியது எது? இவ்வொருமைப்பாடு. முல்லைக்குத் தேர் அளித்தது எது? மயிலுக்குப் போர்வை அளித்தது எது? ஒருமை, ஒருமை! ஒருமைப்பாடன்றி வேறு எது? மக்களுக்குள்ளே மாத்திரம் காணும் ஒருமையன்று இது. ஊர்வன, நடப்பன, பறப்பன, வளர்வன, படர்வன, உயிர் உள்ளன எல்லாவற்றோடும் காணும் ஒருமைப்பாடு இது. வள்ளுவர் அறம் உணர்த்தும் ஒருமைப்பாடும் உயிர் உள்ளன யாவற்றையுமே தழுவித் திகழ்வது. "அறிவினான் ஆகுவது உண்டோ பிறிதின்நோய் தந்நோய் போல் போற்றாக் கடை?" "ஒன்றாக நல்லது கொல்லாமை" முதலிய அறவுரைகளை உன்னுக!

உலகை ஒருமையாகக் காண்பதே உயர்நலம் தருவது. உலகைப் பன்மையாகக் காணக் காணப் பற்பல தீமையே மிகுவன. கொலையும் குறும்பும் கொடுமையும் போரும் விளையும் புலமே இப்பன்மைக்காட்சி. வேற்றுமை உணர்வும், ஒற்றுமையின்மையும், உயர்வும், தாழ்வும், சூழ்ச்சியும், சுரண்டலும், வஞ்சமும், சூதும், வறுமையும், பிணியும் வளரச் செய்வது, உலகைப் பன்மையாகக் காண்பது. இப்பன்மை உணர்வை அகற்றி, உலகத்தோடு ஒன்றாகப் பழகுதல், அல்லது ஒருமைப்பாடே உயரிய பண்பாடு. உலக மக்கள் எல்லோருக்கும் பயன்படுவது இவ்வொருமைப்பாடு. உலக மக்கள் எல்லோரும், அரசரும் குடிகளும், வறிஞரும் செல்வரும், முதலாளிகளும் தொழிலாளிகளும், பாட்டாளிகளும் தேட்டாளிகளும், கற்றோரும் கல்லாரும், இளைஞரும் முதியோரும், ஆடவரும் மகளிரும் பிணக்கின்றி வாழ - அமைதியோடு

வாழ - துன்பமின்றி வாழ - துயரின்றி வாழ-வள்ளுவர் கண்ட நெறி, இவ்வொருமை நெறி. இதுவே இப்புத்துலகு இன்று காண அவாவும் நெறி.

இம்முதற்குறள் திருக்குறளுக்கு எவ்வளவு இன்றியமையாததாகின்றது ! இம்முதற்குறள் இல்லாத திருக்குறள், தலையற்ற உடலாகமுடியும். அகரம் எழுத்துக்களுக்கு எவ்வளவு முக்கியமோ, கடவுள் கொள்கை உலகத்திற்கு எவ்வளவு முக்கியமோ, அவ்வளவு முக்கியம் திருக்குறளுக்கு இம்முதற்குறள் ஆமாறு காண்க. ஆதலின், வள்ளுவர் இக் குறளை முதலாக அமைத்தார் ; பாயிரத்தில் அமைத்தார் ; பாயிரத்திலும் முதலாக அமைத்தார் ; 'பாயிரம் என்பது யாது ? இவ்வளவு முக்கியமான குறளை நூலுள் பெய்யாது நூலுக்குப் புறத்தே பாயிரத்தில் ஏன் பெய்தார் ?' என்று காணல் வேண்டும்.

## பாயிரம் :

பாயிரம் என்பது பழைய தமிழ் இலக்கியத்துள் காணும் பழைய அமைப்பு. பழைய காலத்திருந்தே இவ்வமைப்புத் தமிழ் இலக்கியத்தில் காணப்படுவது என்னலாம். இப்பாயிரம் நூலுக்கு மிகமிக இன்றியமையாததாகக் கருதப்பட்டது. எந்நூல் உரைக்கினும் பாயிரம் உரைத்தே உரைத்தல்வேண்டுமென்பதே மரபாயிற்று. "பாயிரமில்லது பனுவல் அன்றே,"* என்றுகூடக் கொண்டனர். இதன் இன்றியமையாமையைப் பற்பல உவமைகளால் விளக்குவர் பண்டை உரையாசிரியர். இவ்வுவமைகளுள் சிலவற்றையேனும் இங்குக் காண்போம். 'இப்பாயிரந்தான், தலையமைந்த யானைக்கு வினையமைந்த பாகன் போலவும், அளப்பரிய ஆகாயத்திற்கு விளக்கமாகிய

---

*" ஆயிர முகத்தால் அகன்றதாயினும் பாயிரமில்லது பனுவல் அன்றே."

திங்களும் ஞாயிறும் போலவும், நூலுக்கு இன்றியமையாச் சிறப்பிற்று,' என்று கூறுவர். தலைமை பெற்ற யானை திருக்குறள். யானைக்கு ஒரு பாகன் இல்லையேல், அது கண்ட இடமெல்லாம் செல்லும். அது நன்மை தருவதை ஒழித்துத் தீமையே செய்யினும் செய்யும். இப்பாகனைப்போல முதற் குறள் திருக்குறளை நடத்திச் செல்கின்றது. பாகனில்லையேல் அவன் காட்டும் ஒருமை வழியில் திருக்குறள் செல்லாது பல வழியிலும் சென்று உண்மைப்பொருளை ஒழித்துப் பொருளல் பொருளை உணர்த்தவும் செய்யும். பாயிரத்தை வரையறை செய்துகொள்ளாத உரைகள் இவ்வாறு பிழைபடுதலைக் காணலாம்.

அளப்பரியது ஆகாயம். திருக்குறள் அளப்பரிய ஆகாயம் போன்றது. ஆகாயத்தை மக்கள் நன்கு உணரவேண்டுமானால், ஞாயிறுவது வேண்டும்; திங்களாவது வேண்டும். ஞாயிறும் திங்களுமே ஆகாயத்தின் ஊடெல்லாம் சென்று ஒளி செய்கின்றன. இவ்வொளியைக் கொண்டே ஆகாயத்தை மக்கள் உணர்தல் இயலும். இவ்வாகாயத்தைக் காணும் மக்களுக்கும் ஒளி தருவன ஞாயிறும் திங்களும். இவ் வண்ணமே இம்முதற்குறளும் திருக்குறளைக் காண்பதற்கு ஒளி தருகிறது. திருக்குறளின் ஊடெல்லாம் சென்று எங்கெங்கும் ஒளி பெறச் செய்கின்றது. இம் முதற்குறள் இல்லையேல், எங்கும் இருள் - உண்மைக் கருத்தைக்காண இயலாத இருள் - நள்ளிருள் - பிறர்பொருள் வவ்வும் கள்வருக்கேற்ற இருள் பரவும். பாயிரமாகிய முதற் குறள் தரும் விளக்கமில்லையேல், நூலுள்ளே காணும் பல கருத்துக்களுக்கு அமைவு காணுதல் இயலாது என்பது முன்னர் விளக்கப்பட்டது. அவற்றை மீண்டும் நினைவு கூர்க. முதற்குறள் தரும் ஒளி இல்லையேல், திருவள்ளுவர் கூறிய பல கருத்துக்கள் விளக்கமுறுதல் இல.

பாயிரம் என்பது இம்முதற்குறள் மட்டுமன்று ; நாற்பது குறள்கள் பாயிரமாக அமைந்துள்ளன. இவற்றுள் ஒன்றும் பலவும் தனித்தும் சேர்ந்தும் திருக்குறளுக்கு விளக்கம் தருவன; திருக்குறளுக்கு எவ்வாறு உரை காணல்வேண்டும் என வழி காட்டுவன. 'பாயிரம் என்பது எவ்வாறு நூல் முழுவதையும் விளக்குகின்றது ? எவ்வாறு நூலுக்கே முழுமை சேர்கின்றது,' என்பதை இந்நூலின் இறுவாயில் காணலாம்.

பாயிரம் என்னும் பாகுபாடே தமிழர்தம் இலக்கியப் பண்பாட்டை உணர்த்துவது ; அவர்தம் இலக்கிய அறிவின் நுட்பத்தைக் காட்டுவது. இத்தகைய பாகுபாடு பழைய வடமொழி நூல்களுள் காணப்படுவதில்லை என்பர். இப்பாயிரம் என்பது இக்காலத்தே சிறந்த ஆசிரியர்கள் எழுதும் முன்னுரை (Introduction) போன்றது. இதைக் குறித்து ஆங்கிலப் பேராசிரியர் பெர்னார்ட்ஷா, "நூலின் பாயிரம் அறிஞர்களுக்கு ; நூல் மற்றவர்களுக்கு," என்று கூறியது பழந்தமிழ்க் கொள்கைக்குப் பொருந்த அமைந்துள்ளது காண்க. பாயிரம் பருப்பொருள், பொதுமை வாய்ந்தது, நூலுக்கே முழுமை சேர்ப்பது. பாயிரம் என்பது பொருளடக்கமன்று. பிற்காலத்தே இதைப் பிழைபட உணர்ந்தனர். பாயிரம் பொருளை விளக்குவது; பொருளை அறிய வழி காட்டுவது. இது நூலுள் கூறியவற்றிற்கெல்லாம் பொருந்துவது. பாயிரத்தை அறிந்தவர்களுக்கே நூல் நன்கு விளங்கும். 'கொழுச்சென்றவழித் துன்னூசி இனிது செல்லுமாறு பாயிரம் கற்றவர்க்கே நூல் எளிதாக, இனிதாக விளங்கும்,' என்பர்.

இவற்றின் பொருத்தத்தை எல்லாம் உணர்த்தப் பாயிரத்திற்குக் காட்டிய பற்பல உவமைகளை ஆராய ஒரு தனி நூலே வேண்டற்பாலது. இங்குக் கூறியவைகளே பொதுப்

பாயிரத்தின் பண்பை உணர்த்துதற்குப் போதியன. இனி மேலே செல்வோமாக.

## பா நலன்

பொருள் நலன் துய்த்தும், பொருள் நலன் போற்றியும் காலத்தைப் போக்கினேம். பா நலன் இல்லாப் பாட்டுப் பாட்டாவதின்று. இப்பாட்டிற்கு வள்ளுவர் பா நலன் சேர்த்த முறை ஒரு புதுமுறை. மேலே கண்ட பொருள் நலன் எல்லாம் அரிய பெரிய தத்துவக் கருத்துக்களாக முடிந்தன. இயற்கையாக இவை எளிதில் விளங்குவன அல்ல. இவற்றைக் கற்க எத்தனையோ மக்கள் தம் வாழ்நாள் எல்லாம் கழிப்பர். எவ்வாறு கற்பினும், எத்துணைக்காலம் கற்பினும் இவற்றை உணராது தவிக்கும் மக்களோ பலர். இக்கருத்துக்கள் யாவும் பல்லாண்டு பல்லாண்டு முதிர்ந்து முதிர்ந்து அழுத்தம் பெற்ற கூழாங்கற்கள் போன்றவை. இவற்றை ஆக்கிப்படைக்க அனசூயையே தேவை. இவற்றை விளக்க இலக்கணத்தை வள்ளுவர் இழுத்து வந்த விந்தையைக் காண்க! தத்துவக் கருத்துக்களைப் போலவே இலக்கணக் கருத்துக்களும் எளிதில் விளங்குவன அல்ல. இக்கருத்துக்களும் கறித்தற்கரிய கற்களே ஆவன. வள்ளுவர் ஒரு கல்லைக் கொண்டு மற்றொரு கல்லை உடைப்பார்போலும்! 'வயிரத்தைப் பிளக்க வயிரமே வேண்டும்,' என்னும் வழி எல்லாம் அறிந்தவர் போலும்!

தத்துவக் கருத்துக்களோ, இலக்கணக் கருத்துக்களோ, பாட்டிற்குப் பொருந்தாதன என்பர் மேல் நாட்டுப் புலவர் பலர். இவற்றைப் பாக்களில் ஆளுதல் எளிதன்று. பாடுதல் வல்ல பாமகன் அல்லார் பல்லெல்லாம் தகர்ப்பன இவை. பாட்டிற்கொவ்வா இரண்டையுமே பிணைத்துப் பாநலம் கமழச் செய்ததே வள்ளுவர் சிறப்பு.

முதல் என்ற கற்பனையை நினைக. கற்பனை என்பது கற்போர் விருந்து என்பர். முதல் எனும் கற்பனை அளிக்கும் விருந்தைக் கணக்கிடுவோம். இது பலரும் உண்கெனப் பாவலன் இட்ட பயிர் முதல் விருந்து. குழவியும் அருந்தக் குழைந்த விருந்து ; பாலரும் அருந்தும் பால் உணவு விருந்து ; வணிகர்கள் சுவைக்கும் வளந்தரு விருந்து ; செட்டுகள் மிகுந்த செல்வர் விருந்து ; கணக்கர் சுவைக்கும் கணக்கின் விருந்து ; இம்மியும் பிறழாது ஏற்கும் எண்முறை விருந்து ; கனத்த விருந்து ; காரண காரிய விருந்து ; அறு வகைச் சமயத்தோர்க்கும் அவரவர் பொருளாய் அமைந்த விருந்து; அரும்பெறல் விருந்து; அறிவின் விருந்து ; பழமை விருந்து; புதுமை விருந்து ; பல்சுவை விருந்து ; சிறு சொல் தரும் பெரும்பொருள் விருந்து. இச்சிறுசொல்லே பெரு விருந்தயரும் பேரில் ஆமாறு காண்க ! கற்பனைக் களஞ்சிய மாகிய காட்சியும் பெறுக !

உவமையே பாட்டிற்கு உயரிய பாநலம் அளிப்பது. மயர்வற மதி நலம் அளிப்பதும் அதுவே. உப்புத் தருவது உணவிற்குச் சுவை : உவமை தருவது பாட்டிற்குச் சுவை. உவமை என்பதே பாவலன் பாவன்மைக்கும் புலமைக்கும் அளவுகோல் என்பதை முன்பே கண்டோம். இந்த அளவு கோல் கொண்டு வள்ளுவர் பா வன்மையை அளப்போம் ; புலமையை அளப்போம். வள்ளுவர் வன்மையை அளக்க உவமை என்னும் அளவுகோல் போதியதன்று. நாம் அளக் கும் முன்பே உவமையை எல்லாம் வள்ளுவரே அளந்து விட்டார். உவமைகள் யாவும் அவருக்கு அடிமையாயின ; அவரிடம் பணி கேட்டு நிற்கின்றன. உவமை அவரிடம் பட்ட பாட்டைப் பகர்தலும் வேண்டுமோ ! உவமை அவர் திருமுன் கை கட்டி வாய் புதைத்து நிற்கின்றது. உவமை என்னும் அளவுகோலே அவர் கையில் அகப்பட்டுக்கொண்

டது. நாம் அளப்பதற்கு அளவுகோல் அற்றோம் ஆனோம். “ வினை பயன் மெய்யுருவென்ற நான்கே வகை பெற வந்த உவமத் தோற்றம்,” என்பது தொல்காப்பியம். ‘ நான்கே ’ என்னும் தேற்றேகாரத்தை நோக்குக ! இவை தவிர வேறு உவமையே இல்லை. உவமை என்னும் மற்றவை எல்லாம் இவற்றின் தொகையும், வகையும், விரியுமாகும். இந்த உவமைகளை வள்ளுவர் பணி செய்யப் பணித்த பான்மை எல்லாம் முன்பே கண்டோம். வினை உவமமாக வினை ஏற்று நடந்தது. பயன் உவமமாகப் பயனைத் தந்து நின்றது. மெய்பெறு உவமமாகக் கோலம் புனைந்தது ; உருவும் ஏற்றது. வள்ளுவர்க்கஞ்சி வேண்டா இடத்தும் அது வேடம் புனைந்தது. அருள் பெற்ற புலவர் அப்பைய தீக்ஷிதர் உவமையைப் பற்றி முன்பு கூறியவற்றை நினைக ! அருள் பெறு புலவன் சொற்கள் அவலமாய்ப் போதல் இல. அருள் பெறு புலவன் சொல்லைக் காக்க அம்புலியும் அன்று தோன்றியது உணர்க. வள்ளுவர் பெருமான் இவ்வுவமையைப் பயில்வித்து, தலைக்கோல் தந்து, தனி அரங்கேற்றினார் போலும் ! இது களிநடம் புரிதல் காண்க ! ஓர் உவமையா நடம் புரிவது ? அதன் கூட்டமெல்லாம் களி நடம் புரிதல் காண்க ! ‘ யாப்பறி புலவர் இதயம் பூப்ப ’ நடிப்பதைக் காண்க. என்னென்ன சீர், என்னென்ன பாணி, என்னென்ன தூக்கு ! இவற்றிற்கேற்ப எத்தனை எத்தனைக் கோலம், எவ்வகை எவ்வகை நடை. வள்ளுவர் உவமையின் “ வண்ண மலர் மெல்லடி வழிச்சதியில் நிற்ப ”*க் காண்க. “ வாயுரை செய் சொற்பொருள் மலர்க்கரமுரைப்ப ”*க் காண்க. எத்தனை எத்தனை மெய்ப்பாடு ! என்னே நடம் ! என்னே நடம் ! கண்கொள்ளாக் காட்சி ! காணாதனவெல்லாம் காட்டவும்

*பிரபுலிங்க லீலை, மாயை பூசை கதி, பாட்டு, 52, 53.

செய்தது ; கேளாதனவெல்லாம் கேட்கவும் செய்தது இவ்வுவமை, இவ்வுவமை நடம்.

உவமை தந்த ஒப்புமை நலத்தைக் காண்போம். அஃது அறிவின் விளக்காய் அமைவதைக் காண்போம்; மயர்வற மதிநலம் தருவதைக் காண்போம். "அருவமாய் நின்றானை யாரறிவார் உருவமாய்த் தோன்றிலனேல் உற்று?" என்ற உண்மையை மீண்டும் உன்னுக! இஃது ஆழ்ந்ததொரு தத்துவக் கருத்து; சிறந்ததொரு கருத்து. இந்த உண்மையை எளிதாக விளக்க வல்லது வள்ளுவர் உவமையன்றி வேறு எந்த உவமை உளது? உவமையாலன்றி வேறு எவ்வகையால் இதை எளிதாக விளக்குதல் கூடும்? கருதுக! உருவம் ஏற்ற நலத்தை, வினையை, அவ்வினை தரும் பயனை எவ்வளவு, எவ்வளவு எளிதாக உணர்த்தியது வள்ளுவர் உவமை என்பவெல்லாம் நினைக! ஓரும் சமயங்கள் உச்சியிற் பழுத்த, உவமை அருங்கனி, உயரத் தோன்றுவதைக் காண்க! அணிகள்* எவையும் அணுகா உயரத்தே பூத்துக், காய்த்து, முதிர்ந்து, பழுத்து, உண்ணத் தெவிட்டா உட்சுவை செறிந்து, காண இனித்து இனித்துக் கவின் பெறத் தூங்குவதைக் காண்க! காண்க! இதன் அழகைப் பருகுக; நலனெலாம் நுகர்க!

உவமையும் பொருளும் உருக்கி விட்டென்ன ஒன்றுபட இயைந்து உருவகமாய் உவமையாய் ஒளி விடுவதைக் காண்க! உவமையை அப்பாற்படுத்திப் பொருளைக் கருதிக் காண்க. உவமையின்றிப் பொருளைக் காணோம். பொருளின்றி உவமையால் பயனுமில்லை. இத்தகு உவமையை அமைப்பது வள்ளுவரன்றி வேறு யாரால் இயன்றது? தத்துவக் கருத்துக்களை எல்லாம் ஆழ்ந்து ஆழ்ந்து கற்று, இலக்கணக்

---

*அணிகள் என்பதை அணியிலக்கணத்திற்கும் பொருத்துக.

கருத்துக்களை ஆழ்ந்து ஆழ்ந்து கற்று, இவற்றை எல்லாம் எவ்வளவு எவ்வளவு ஆழ்ந்து ஆழ்ந்து கருதிக் கருதி இந்த உவமையை அமைத்திருத்தல் வேண்டும் என்பதை மனக் கண்ணால் சற்றுக் காண்க! உவமையின் ஆக்கம் காட்டுவது அதை ஆக்கியோன் அறிவு நிலை—அவன் உணர்வு நிலை—அவன் மனநிலை. அறிவெனும் உலையில் உருக்கி உருக்கிப் பாட்டெனும் அச்சில் வார்த்து, உவமை என்னும் ஒளிபெறச் செய்த உவமத் திறனை உன்னுக! கலையின தகலமும் காட்சிக்கு இனிமையும் கண்டு கண்டு மகிழ்க!

முரண் என்பதும் ஒரு பாநலன். ஒன்றை மற்றொன்றினின்றும் தெள்ளத் தெளிய எடுத்துக் காட்டுதற்குப் பாட்டில் மிகவும் பயன்படுவது முரண். இதன் பண்பெலாம் நெடுநல்வாடைப் பாநலன் என்னும் நூலில் காண்க. ஒரு பொருளின் உண்மைச் சுவையைச் சுவைக்க முரண் மிக மிக வேண்டற்பாலது. வெயிலின்றி நிழலின் அருமை தெரிதல் அரிது. துன்பமின்றி இன்பம் இனித்தலுமின்று. ஒப்புமை ஒப்புமை என்று ஓயாது கண்ட இடத்து ஒரு வேற்றுமையே அதன் நலமெலாம் உயர்த்திக் காட்டுதல் வல்லது. ஒப்புமை ஒப்புமை என்ற உவமத் தோற்றத்துள் வேற்றுமை என்னும் வேறுபட வந்த உவமத் தோற்றம் புகுந்ததை நினைக! இம் முரண்பாடு பாட்டிற்குத் தந்த ஏற்றத்தைக் கருதுக! எழிலைக் காண்க!

பண்டைப் புலவர்களும் வள்ளுவர் பாநலனைப் பருகிப் பருகியும் பாராட்டளித்தும் பாக்கள் வரைந்தனர். "தினையளவு போதாச் சிறுபுல்நீர் சாலப் பனைஅளவு காட்டும் படித்தால்" என்று பாநலன் துய்த்தார் பரணர். புல் நுனியின் மேலே தூங்கும் பனிநீரே. அதன் நுண் துளியின் உள்ளே அதன் அருகே அமைந்த பெரிய பனையின் உருவம் அப்படியே தோன்றும். இது இயற்கைக் காட்சி. இங்குக்

காணத்தக்கது பெரியதோர் அளவு மட்டுமன்று ; பனையின் உருவம் மட்டுமன்று; அஃது ஆடி அசைவதையும் காணலாம். பெரிய அளவை அல்லது உருவத்தை மட்டும் சுருக்கிக் காட்டுவது பாட்டன்று. அவ்வாறு காட்டுவது நிழற்படம். பனையின் உருவம், அதன் இயக்கமெல்லாம் காட்டுவது பாட்டு. தினையளவு போதாச் சிறுபுல்நீர் பாடும் பாட்டு இது. இதைப் போன்றது சிறு குறள் அதன் விரி என்றார் பரணர். ஒரு பாவலன் பாட்டுப் பாட்டெனக் கருதப்படுதற்குப் பனையளவாவது காட்டல் வேண்டும். இல்லையாயின், பாட்டெனக் கருதப்படுதல் பொருந்தாதாகும். இவ்வாறு பனையளவு காட்டுதல்தானா வள்ளுவர் பாட்டுக்குப் பெருமை? பரணர் பாட்டை "உலகளவு காட்டல் உடைத்தால்" என்று திருத்திக்கொண்டால், அது முதற்குறளுக்குப் பொருந்தும் போலும்! பனையளவுதானா முதற்குறள் காட்டிற்று ? உலகின் தோற்றத்தைக் காட்டிற்று ; உலகப் பெருக்கத்தைக் காட்டிற்று ; வளர்ச்சியைக் காட்டிற்று ; முடிவையும் காட்டிற்று. மண்ணுலகு ஒன்றையா காட்டிற்று ? விண்ணுலகைக் காட்டிற்று ; அதற்கப்பாலும் காட்டிற்று. சிந்தைக்கு எட்டா, சொற்களுக்கெட்டா, சேண் நெடு உலகையும் சுட்டியதை நினைக !

## முடிவுரை

என்னே உவமைத் திறன் ! என்னே பாவலன் ! உயர்வற உயர்ந்தது வள்ளுவர் உவமை. ஒன்றே முக்கால் அடியில், எட்டே சொல்லில், எத்தனை எத்தனை ஒப்புமை ! எத்தனை எத்தனை உவமை ! எத்தனை எத்தனை அவை தரும் பொருள்கள்! உவமைக் கடலாய் உருவெடுத்துள்ளது இச்சிறு குறள். அம்மம்ம ! எவ்வளவு எவ்வளவு ஆழம் ! எவ்வளவு எவ்

வளவு நுட்பம்! ஓர் எழுத்தில் பற்பல பொருள்கள். ஒரு சொல்லில் பற்பல பொருள்கள். எழுவாய் எடுப்பில் பற்பல பொருள்கள். பயனிலை முடிவில் பற்பல பொருள்கள். உவமை அமைப்பில் ஒப்பற்ற பொருள்கள். வியப்பு! வியப்பு! பெரு வியப்பு!

வள்ளுவர் பெருமான் உவமைத் திறனை வியப்பதா? அவர் பாட்டின் திறனை வியப்பதா? அவர் சிறு சிறு சொற்களை வியப்பதா? அவற்றின் ஆழத்தை வியப்பதா? அமைப்பை வியப்பதா, அழுத்தத்தை வியப்பதா, ஆற்றலை வியப்பதா, நுட்பத்தை வியப்பதா? அவர் உணர்த்திய உடைமைப் பொருளை வியப்பதா, உவமைப் பொருளை வியப்பதா? ஒன்றுய்க் காண்கென ஒருமையாய் முடித்த முடிவை வியப்பதா? யாதென வியப்போம்! "வியத்தொறும் வியத்தொறும் வியப்பிறந்தன்று!"

தேடித் தேடிச் சொற்களைப் பிடித்துக் கட்டியிழுத்துக் கட்டுள் (யாப்புள்) அடைத்துத் திணித்தும் திணித்தும் சிதைத்தும் வதைத்தும் பூசி மெழுகிப் புதுச் சுதை சேர்த்துச் செப்பனிட்டமைத்த சீர்கொள் பாட்டோ வள்ளுவர் பாட்டு? அல்லால், சொற்களும் சீர்களும் தாமே வந்து குவிந்து குவிந்து செறிந்து செறிந்து நலமெலாம் கனிந்து நலந்தரு பாட்டாய் அமைந்தனவாமோ? 'மறந்தேயும் வள்ளுவன் என்பான் ஓர் பேதை' என்றுன் ஒரு புலவன். பாடியவன் வள்ளுவன் என்பவன் ஒரு பேதையே; பெரும் பேதையே. வள்ளுவனு, இத்தகு பாட்டைப் பாடுதல் முடியும்? மனிதனு, இப்பாட்டைப் பாடியவன்? அல்லன், அல்லன். தெய்வம் பாடியது; தமிழ்த் தெய்வம் பாடியது; தெய்வப் புலமை பாடியது.

இதோ, ஒரு கருவமைந்த—மக்கள் வளமும் பொருள் வளமும் அமைந்த—மாநகர்* எழுந்துள்ளது காண்க! திருக்குறள் என்னும் திருவமைந்த மாநகர் இது. எல்லாப் பொருள்களும் இதன்பால் உள. இதன்பால் இல்லாத எப்பொருளுமில்லை. பூதலத்தியாவையும் இவண. இம்மாநகரைச் சுற்றிய மதில்கள் வானளாவிய மதில்கள். " நூல் வரைத் தொடர்ந்து பயத்தொடு பழகி நுணங்கிய உணர்வு " போல வளர்ந்து வளர்ந்து அமைந்தது இதன் மதில். இதன் மதிலே இவ்வாறு அமைந்ததென்னின், இதனுட்புகுவது எவ்வாறு ? உள்ளே புகுதற்கு வாயில் வேண்டும். வாயிலின்றி இந்நகருள்ளே எவ்வாறு புகுதல் கூடும் ? வாயிலைத் தேடுவோம். கருவமைந்த மாநகர்க்கு உருவமைந்த வாயில் மாடத்தை இதோ காண்க. பாயிரம் என்னும் பண்புகொள் வாயில்

---

*" கருவமைந்த மாநகர்க்கு உருவமைந்த வாயில் மாடம் போலவும் " என்பது பாயிரத்தின் தன்மையை விளக்கப் பழைய உரையாசிரியர் கூறும் உவமைகளில் ஒன்று. " மாநகர் " என்பது பேரில் அல்லது கோட்டை எனப்படும். கோட்டைக்குள்ளே அரசன் மட்டுமன்றி மக்களும் வதிந்தனர். மக்கள் வதியும் பற்பல தெருக்களும் இருந்தன. கோட்டைக்குள்ளேயே நகரும் அமைந்திருந்தது என்பர். " கருவமைந்த " என்பது அந்நகர்க்குக் கருவாயமைந்த மக்களும் பொருள்களும் எனப் பொருள்படும். இந்த உவமையை இங்குப் பொருத்திக் காட்டி முதற்குறள் எப்படி நூலுக்குப் பாயிரமாகின்றது என விளக்கப்படுகின்றது.

இந்த உவமையை நன்னூலார் " மாநகர்க்குக் கோபுரமும் " என மாற்றித் தம் நூலில் அமைத்துக்கொண்டார். வாயில் என்ற சொல்லும் அதன் பொருண்மையுமே இவ்வுவமையில் முக்கியமானவை. இவற்றை இழந்தது நன்னூலார் மாற்றி அமைத்த பாயிரத் திலக்கணம். இதைப் பின்பற்றியே வாயில் என்பதன் பொருண்மையை இழந்து பாயிரத்தைப் பிழைபட உணர்ந்தனர் பிற்காலத்தவர்.

மாடம் முதற் குறள் என்னும் முதல் வாயில் மாடம், உருவமைந்த மாடம், உளங்கவர் வனப்பெலாம் உட்கொள் மாடம், 'மரபு நிலைதிரியா மாட்சிய' தாகிய மாடம்.

எழுநிலை மாடமா இது? அன்று. அமெரிக்கர் ஆக்கும் அளப்பரு மாடமா? விண்ணினைத் தடவும் வியத்தகு மாடமா? அன்று, அன்று. இவற்றின் மேலும் செல்கின்றது இது. "என்றும் அமைதி" (Ever Rest) என்னும் இமயத்துச்சியின் வளர்ந்துள்ளது இது. ஏணிப்படி நெறி இட்டுள்ளது இங்கு. செங்குத்தான படிகள் அல்ல; எளிய சாய்வையே ஏற்ற படிகள். இளைஞர் ஏறலாம்; முதியோர் ஏறலாம். ஆடவர் செல்லலாம்; மகளிர் செல்லலாம். வல்லோர் செல்லலாம்; மாட்டார் செல்லலாம். எல்லோரும் இளைப்பின்றி ஏறலாம். இதன் உச்சியை எய்துக! எய்தி நின்று காண்க! நாலு பக்கமும் சுற்றிக் காண்க! அதோ, 'பொருளொடு புணர்ந்த பக்கம்,'* காண்க! 'அருளொடு புணர்ந்த அகற்சி'*யும் காண்க! இதோ, 'காதலின் ஒன்றிக் கண்ணிய மரபை'*க் காண்க! 'காமம் நீத்த பாலை'*யும் காண்க! உயர இருந்தே இவற்றை எல்லாம் ஒருசேரக் காண்க. இவற்றின் ஊடெலாம் காண்பது யாது? உற்று நோக்குக.

யாண்டும் யாண்டும் ஒருமை ஒருமை! எல்லாம் ஒரே முதலில் தோன்றுகின்றன. ஒரே வகைப் பெருக்கம் கொள்கின்றன. எல்லாம் ஒருமுகப்பட்டு ஒரே முதலை நாடிச் செல்கின்றன. வேற்றுமை எதையும் காணோம். இன வேற்றுமையைக் காணோம். மத வேற்றுமையைக் காணோம். சைவம், வைணவம் ஒன்றையும் காணோம். அத்துவிதம், துவைதம் எல்லாம் மறைந்தன. சமணம் பௌத்தம் ஆதியன தோன்றில. எங்கும் எங்கும் அமைதி! இயம்பொணு அமைதி! இறப்பிற்

*தொல். பொருள். புறத்திணை இயல் 21.

காணும் அமைதியன்று. துடிதுடிக்கும் வாழ்வில் காணும் அமைதி! அமைதி! ஆன்ற அமைதி! அமைதி வாழ்வு!

இதுவே திறவுகோல். இந்தத் திறவுகோல் கொண்டு வாயிலைத் திறக்கலாம். வாயில்வழியே மாநகர்க்குள்ளே தடையின்றிச் செல்லலாம். மாநகர்க்குள்ளே சென்று, அதன் வளமெலாம் காணலாம். காணவல்லார்க்கு ஒரு விழுமிய பரிசில், அம்மாநகர் அளிக்கும் பரிசில், காத்திருக்கின்றது. நோபெல் பரிசினும் பெரிய பரிசில், பெறலரும்பரிசில் இப்பரிசில். இம் மாநகர் ஒரு நீயாகத் தோன்ற விழுமிய பெறலரும் பரிசில் நல்கும். மனைவியோடு ஒரு நீயாக, மக்களோடு ஒரு நீயாக, உற்றார் உறவினரோடு ஒரு நீயாக, ஊராரோடு நாட்டாரோடு ஒரு நீயாக, உலகத்தோடு ஒரு நீயாக, உயிர் உள்ளன யாவற்றோடும் ஒரு நீயாக, இறைவனோடு ஒரு நீயாக, "இருள்நிற முந்நீர் வளைஇய உலகத்து ஒரு நீயாகத் தோன்ற விழுமிய பெறலரும்பரிசில் நல்கும்."* பெறுமின்! பெறுமின்! பெறுவதைப் போற்றுமின்!

புவியதில் யாரும் போற்றிடுமாறு போதுமறை தந்த புலவரைப் போற்றுமின்! கவிரசம் சொட்டக் கற்பனை உற்ற கலைவளம் தந்த கவிஞரைப் போற்றுமின்! வழியருள் வள்ளல் வள்ளுவர் என்னும் வளந்தரும் தெய்வப் பெருமானைப் போற்றுமின்! போற்றுமின்! பணிமின்! புகழ்மின்! வாழ்த்துமின்!

**வாழ்க நம்குறள்! வள்ளுவர் தம்அறம்**
**சூழ்க வையகம் சூழ்துயர் நீங்கவே!**
**ஆழ்க தீயவை! அன்பறன் ஓங்குக!**
**வாழ்க செந்தமிழ்! வையகம் வாழ்கவே!**

---

* திருமுருகாற்றுப்படை, 293, 294.

# இணைப்பு

# இணைப்பு

## 'அகரமுதல' என்பதன் இலக்கணக் குறிப்பு :

"அகரமுதல எழுத்தெல்லாம்" என்பது முதற்குறளின் முதற்சொற்றொடர். இதில் 'அகரமுதல' என்பதற்கு எவ்வாறு பொருள் கூறுவது ? இதிற்காணும் 'முதல' என்னும் சொல் இப்போது பெரும்பாலும் வழக்கில் இல்லை. இதை வழக்கிறந்த சொல் என்றே சொல்லலாம். 'அகர முதல' என்பதற்குப் பலர் பலவாறு பொருள் கூறுகின்றனர். பழைய உரையாசிரியர் உரைகளிலும் வேறுபாடு காணப்படுகின்றது. 'அகர முதல' என்பதற்கு 'அகரமாகிய எழுத்தை முதலாக உடைய' என்றார் மணக்குடவர். அதாவது, இரண்டாம் வேற்றுமைத் தொகையாகப் பொருள் கண்டார். அகரம் என்பதை விரித்து, 'அகரமாகிய எழுத்தை' என்று விளக்கமும் கொண்டது அவர் உரை. அவரோடு உடன்பட்டாரிலர் பரிமேலழகர். இவர் 'அகரமாகிய முதலை உடைய' எனப் பண்புத் தொகையாக உரை கண்டார். 'அகரமாகிய எழுத்தை முதலாக உடைய' என்பதும், 'அகரமாகிய முதலை உடைய' என்பதும் ஒரே கருத்தை உணர்த்துவன அல்ல. இவற்றுள் இலக்கண வேறுபாடு மட்டுமன்றிக் கருத்து வேறுபாடும் உண்டு. கருத்து வேற்றுமை சிறிதே எனினும், இஃது ஆராய்ந்து துணிய வேண்டுவதொன்று.

### 'முதல'

'அகர முதல' என்பது அகரம்+முதல என்னும் இரண்டு சொற்களாலானது. இவ்விரண்டு சொற்களுள்

'முதல' என்பது எப்பொருள் தரும்? அதன் இலக்கணம் யாது?' என முதலில் ஆராய்வோம். அதன் பின்னர், 'அகரம்' என்பதும் அதனுடன் சேர 'அகர முதல' என எவ்வாறு ஆகின்றது? இச்சேர்க்கையின் இலக்கணம் யாது? இவை இரண்டு சொற்களும் சேர்ந்த நிலையில் 'அகரமுதல' என்பதற்கு இலக்கணப்படி எப்பொருள் கொள்ளுதல் தகும்?' எனவும் ஆராய்வோம்.

'முதல' என்பது அஃறிணைக் குறிப்பு வினை முற்று என்பர். மணக்குடவரும் பரிமேலழகரும் குறிப்பு வினைமுற்றாகவே பொருள் கண்டனர். இச்சொல்லை அஃறிணைக் குறிப்பு வினைமுற்றாக அன்றி வேறு வகையாகப் பொருள் கொள்ள இடமின்று. இக்குறிப்பு வினைமுற்று எவ்வாறு எவ்வாறு எவ்வெப்பொருளில் ஆளப்பட்டது என்பதைத் தொல்காப்பியம் விரிவாய்க் கூறுகின்றது.

"இன்றுஇல உடைய என்னுங் கிளவியும்
அன்றுஉடைத்து அல்ல என்னுங் கிளவியும்
பண்புகொள் கிளவியும் உளஎன் கிளவியும்
பண்பின் ஆகிய சினைமுதற் கிளவியும்
ஒப்பொடு வரூஉம் கிளவியொடு தொகைஇ
அப்பாற் பத்தும் குறிப்பொடு கொள்ளும்"
—தொல். சொல். 222.

தொல்காப்பியம் கூறும் பத்துவகைச் சொற்களே தமிழ் மொழியில் அஃறிணைக் குறிப்பு வினைமுற்றென ஆளப்பட்டன. 'வழக்குப் பயிற்சி நோக்கிப் பத்தென வரையறுத்தவாறு,'* என்பர் சேனாவரையர்.

இவற்றுள், 'இன்று, இல, உடைத்து, உடைய, அன்று, அல்ல, உள' என்னும் ஏழு சொற்களும் அஃறிணைக் குறிப்பு

*தொல். சொல். 220. சேனாவரையர் உரை.

வினைமுற்றின் ஈற்றிற்காணப்படும் சொற்கள். இவற்றுள் 'முதல' என்பது சேர்ந்ததன்று. 'முதல' என்பது ஒப்பொடு வரூஉங் கிளவியுமன்று. 'முதல' என்பதைப் பண்பு கொள் கிளவியாகக் கொள்ளலாம், அல்லது பண்பின் ஆகிய சினைமுதற்கிளவியாகக் கொள்ளலாம். இவ்விரண்டுள்ளும் எதனுடன் 'முதல' என்பது பொருந்தும் எனக் காண்போம்.

### பண்பு கொள் கிளவி :

பண்புகொள் கிளவி என்பது பண்பைக்கொண்ட சொல் என்று பொருள்படும். அத்தகைய சொற்கள், 'கரியது, கரிய' என்பன போன்றன. நிறப் பண்பையே இவை கொள்ளல்வேண்டும் என்பர் நச்சினார்க்கினியர். தொல்காப்பியம் அவ்வாறு கூறிற்றில்லை. ஆதலின், வேறு பண்புகளையும் அவை அடிப்படையாகக் கொள்ளலாம். முதலாம் தன்மையும் ஒரு பண்பு எனக் கொள்வார் உளர்.* அவ்வாறு கொள்ளின், 'முதல' என்பது எப்பொருள் தரும் எனக் காண்போம்.

'கரிய' என்பது நிறப் பண்பு கொள் கிளவி. இது 'கரியவாய் இருப்பன' அல்லது 'கரியவாக இருப்பன' என்னும் பொருள்தரும். இவற்றைப் போலவே முதல என்பதும் 'முதலாய் இருப்பன, முதலாக இருப்பன' என்னும் பொருள் தரும். இப்பொருள் முதற்குறளுக்குப் பொருந்துவதன்று. 'முதல' என்பதை எழுத்தெல்லாம் என்பதோடு சேர்ப்போம். சேர்த்தால், எழுத்தெல்லாம் முதலாக

*சேனாவரையர் கருத்தின்படி முதலாம் தன்மை குணத்திற்கும் உண்டாதலின் குணமெனப்படாது. பண்பு=குணம். தொல். சொல். 214 உரையிற் காண்க.

இருப்பன அல்லது முதலாய் இருப்பன எனப் பொருள் விரி கின்றது. இவ்வாறு கொண்டால் முதற்குறளே பொருளற்ற தாகின்றது. இனி 'முதல' என்பதை அகரத்தோடு சேர்ப் போம். சேர்ப்பின், அஃதும் பொருந்துவதன்று. அகரம் ஒருமைச் சொல். அது 'முதல' என்னும் பன்மை வினையை ஏற்பதன்று. ஆதலின், முதல என்பதைப் பண்பு கொள் கிளவியாகக் கொள்ள இடமின்று.

இம்முடிவை ஏற்பதற்குத் தடை ஒன்று உளது. குறிப்பு வினைமுற்று ஆறும் வேற்றுமை உடைமைப் பொருளைத்தரும் என்பர். 'கரிய' என்பதற்குக் கருமையை உடைய எனப் பொருள் கூறுதல் எவ்வாறு பொருந்தாதாகும்? கருமை என்னும் பண்பையே உடைமையாகக் கொள்ளலாமே என் பது தடை. இதைக் குறித்து உயர்திணைக் குறிப்பு வினை முற்றின் இலக்கணங் கூறும் சூத்திர (தொல். சொல். 215) உரையில் சேனாவரையர் "கருமையன் உடைமைப்பொரு ளாய் அடங்கலின், கரியன் இன்னான் என்பது பட வருதலே கொள்க," என்றது காண்க. இவரை ஒட்டியே நச்சினார்க் கினியரும் அதே சூத்திர உரையில் "கரியன் என்பது இவ் வண்ணமாய் இருப்பான் என்னும் பொருள் உணர்த்தி முத னிலையாய் நிற்றலின் பண்பாம். கருமையன் என்பது பண் புப் பெயர் உடைமைப் பொருளாய் நின்று கருமையை உடை யவன் என உருபு ஏற்று நிற்றலின் உடைமைப்பொருளாம்," என்றார். பண்புப்பெயர் பண்பை உணர்த்துவது ஒரு பொருள்; இதுவே பண்புகொள் கிளவிப்பொருள். பண்புப் பெயர் உடைமையை உணர்த்துவது மற்றொரு பொருள். இது வேற்றுமைப் பொருள். இரண்டும் வெவ்வேறு பொருள் கள்; ஒரே பொருள் ஆகா. பண்புப்பெயர் உடைமைப் பொருளை உணர்த்தும்போதும் 'கருமையன், கருமையை உடையவன்' எனப் பொருள்படுமேயன்றிக் 'கருமையாக

உடையவன்' என்றோ, 'கரியவாக உடையவன்' என்றோ பொருள்படுதல் இன்று.

முதல என்பது இங்கு உணர்த்தும் பொருள் உடைமைப் பொருளே. பரிமேலழகரும் மணக்குடவரும் இதற்கு உடைமைப் பொருளே கூறினர். உடைமைப் பொருள் கூறுமிடத்து 'முதல' என்பது 'முதலை உடையன' என்று வேற்றுமை உருபு விரிந்து நிற்குமேயன்றி, மணக்குடவர் கூறியவாறு 'முதலாக உடைய' என விரிதல் இன்று.

'முதல' என்னும் குறிப்பு வினைமுற்றை விரித்து 'முதலை உடைய' என இரண்டாம் வேற்றுமை உருபை விரித்தல் எவ்வாறு ஆறும் வேற்றுமை உடைமைப் பொருளுக்குப் பொருந்தும்? முதலாக உடைய எனப் பொருள் விரித்தல் எவ்வாறு பொருந்தாதாகும்? இக்கேள்விகளுக்கு நச்சினார்க்கினியரே விடை பகர்வதைக் காண்க.

"இவ்வாறன் உடைமைப்பொருட்கு இரண்டாவது விரியுமாறு என்னை எனின், 'வனைந்தான்' என்னும் தெரிநிலை முற்றுச் சொல், 'செய்தான்' என்னும் காரியத்தினை நிகழ்த்தும் காரணங்கள் எட்டனையும் உள்ளடக்கி, வினைமுதலோடு அமைந்து மாறி நின்று, அவாய்நிலை தோன்றிய காலத்துச் செயப்படுபொருள் முதலிய ஏழனையும் விரித்து நிற்குமாறு போல * * * * வினைக்குறிப்பு முற்றுச் சொல்லும் விரிந்துழி உணரப்படும் காரியத்தினை நிகழ்த்தும் காரணங்கள் எட்டனையும் உள்ளடக்கி, வினைமுதலோடு அமைந்து மாறி நின்று, அவாய்நிலை தோன்றிய காலத்துச் செயப்படுபொருள் முதலிய ஏழனையும் விரித்து நிற்கும்"* என்பது அவர் விடை.

---

*தொல். சொல். 215. நச்சினார்க்கினியர் உரை.

'முதல' என்பதனுள் அடங்கி நின்ற செயப்படு பொருள், 'முதலை உடைய' என உடைமை தோன்றுமாறு உருபு விரித்தல் இயல்பு; முதலாக உடைய என உருபு விரித் தல் அதற்கு இயல்பன்று என்பர்.

மணக்குடவர் பண்புப் பொருளை விரிக்கும் 'ஆக' என்னும் சொல்லையும் உடைமைப் பொருளை விரிக்கும் உடைய என்னும் சொல்லையும் சேர்த்து 'முதலாக உடைய' எனப் பொருள் கண்டார் போலும்! அவர் தம் உரையில் இலக்கணக் குறிப்புக்கள் சிலவே தந்துள்ளார். அவையும் பொதுத் தன்மை வாய்ந்தவை; நுட்பம் வாய்ந்தவை அல்ல.

## 'பண்பின் ஆகிய சினைமுதற் கிளவி'

இதுகாறும் கூறியவற்றால் 'முதல' என்பதைப் பண்பு கொள் கிளவியாகக் கொள்ளல் பொருந்தாது எனக் கண் டோம். அது வேற்றுமைப் பொருள் தருமிடத்தும் உடைமைகொள் கிளவியாகுமேயன்றி பண்புகொள் கிளவி ஆதல் இன்று என்பர். ஆதலின், தொல்காப்பியர் கூறிய பத்து வகைக் குறிப்பு வினைகளில் எஞ்சி நிற்பது 'பண்பின் ஆகிய சினைமுதற்கிளவி' என்பது ஒன்றே. 'முதல' என்பது இதன் பாற்படுமா என ஆராய்வோம்.

'முதல' என்னும் ஒரு சொல் மாத்திரம் சினைமுதற் கிளவி ஆதல் இன்று. சினைக்கிளவியும் முதற்கிளவியும் சேர்ந்தே சினை முதற்கிளவியாதல் வெளிப்படை. தொல்காப் பியத்தின்படி இங்குச் சினையும் முதலும் சேர்ந்த சொல் மட்டும் போதியதன்று. அச்சினையும் பண்பின் ஆகிய சினை யாக அமைதல் வேண்டும். பண்பின் ஆகிய சினையும் முதலும் சேர்ந்து 'பண்பின் ஆகிய சினைமுதற்கிளவி'யாகித் தொல் காப்பியத்தின்படி குறிப்பு வினை முற்றாகும். அகரமும் முதலும் சேர்ந்த நிலையில் 'அகர முதல' என்பது எவ்வாறு

'பண்பின் ஆகிய சினை முதற்கிளவி' ஆகும் என்பதைக் காண்போம்.

## 'அகர முதல'

பரிமேலழகர் உரையை மீண்டும் கருதுவோம். அவர் 'அகர முதல' என்பதற்குக் கூறிய உரையை நினைவு கூர்வோம். 'அகரமாகிய முதலை உடையவை' என்பது அவர் உரை. அகரம் என்பது பண்பின் ஆகிய சினை—சிறப்பு நிலைக்களனாகப் பிறந்த பண்பின் ஆகிய சினை ; அது 'முதல்' என்பதோடு சேர்ந்து, 'அகரமாகிய முதல் எனப் பண்பின் ஆகிய சினை முதற்கிளவி ஆகும்' என்பர்.

பண்பின் ஆகிய சினை முதற்கிளவியையே பிற்காலத்தவர் இரு பெயர் ஒட்டுப் பண்புத் தொகையாகக் கொண்டனர் எனக் கருத இடமுண்டு. சினை முதற்கிளவி என்பதே இரு பெயரைக் கொண்டதாகும். சினையின் பெயரும் முதலின் பெயரும் ஆகிய இரு பெயரும் சேர்ந்தே சினை முதற்கிளவி யாகும். இவ்விரு பெயரைக் கொண்ட சொல்லில் ஒரு பெயர் பண்பின் ஆகிய சினையாகி, முதல் என்னும் மற்றொரு சொல் லோடு ஒட்டும்போது இரு பெயர் ஒட்டுப் பண்புத் தொகை ஆமாறு காணலாம். இரு பெயர் ஒட்டுப் பண்புத் தொகைக் குக் கூறும் எடுத்துக்காட்டு ஒன்றையும் பிரித்துக் காண் போம். 'சாரைப்பாம்பு' என்னும் இரு பெயர் ஒட்டுப் பண்புத் தொகையில் பாம்பு முதல் ; சாரை சினை. சிறப்பும் பொதுவும் என்பனவும் அவையே. அச்சினை பண்பின் ஆகிய சினை ஆகுங்கால் சாரையாகிய பாம்பு எனப் பண்பின் ஆகிய சினை முதற்கிளவி ஆமாறு காண்க. இதைப் போன்றதே 'அகர முதல' என்பதும்.

சினை முதற்கிளவி என்று கூறாது, பண்பின் ஆகிய சினை முதற்கிளவி எனத் தொல்காப்பியர் கூறியதில் ஒரு நுட்பம்

காண்பர் சேனாவரையர். "பண்படுத்த சினைபற்றியல்லது வினைக்குறிப்பு நில்லாமையின், 'பண்பின் ஆகிய' எனப் பண்பை முதனிலையாகக் கூறினார்" என்பர். சேனாவரையர் குறிப்பின்படி 'அகர முதல' என்பது பண்பின் ஆகிய சினை முதற்கிளவியாக அமைந்திலதேல், அது குறிப்பு வினை முற்றாகி உடைமைப் பொருள் உணர்த்துதல் இன்று.

மணக்குடவர் வேற்றுமைத் தொகையாகப் பொருள் கண்டிருந்தும், அதையே தாம் மேற்கொள்ளாது, பண்புத் தொகையாகப் பொருள் கண்ட பரிமேலழகர் இலக்கண அறிவு நுட்பம் வாய்ந்தது; போற்றத்தக்கது; புகழவும் தக்கது. எவ்வளவு ஆழ்ந்து ஆழ்ந்து அவர் தொல்காப்பியத்தைக் கற்றிருத்தல் வேண்டும்! எவ்வளவு ஊன்றி ஊன்றி அவர் உரை கண்டிருத்தல் வேண்டும்! கருதுக.

இதுகாறும் ஆராய்ந்தவற்றால் நாம் கண்டது யாது? யாரும் 'எழுத்துக்கள் அகரத்தை முதலாக உடையன,' என எழுதுதல் தவறுடைத்து என்பதா? அன்று அன்று. அவ்வாறு வாளா எழுதுதல் தவறுடைத்தன்று. ஆனால், 'அகர முதல' என்பதற்கு அவ்வாறு பொருள் கூறுதலே இலக்கணத்திற்குப் பொருந்துவதன்று எனக் கண்டோம். மணக்குடவர் கூறியவாறு 'அகர முதல' என்பதை வேற்றுமைத் தொகையாகக் கொண்டால், அது சற்று முன்னர் விளக்கியவாறு வினைக்குறிப்பு ஆதலும் இன்று; அதன்கண் உடைமைப் பொருள் தோன்றலும் இன்று. 'அகர முதல' என்பதைப் பண்புத் தொகையாகக் கொண்டு, 'அகரமாகிய முதலை உடைய' எனப் பொருள் கண்ட பரிமேலழகர் உரையே தொல்காப்பியத்தின்படி வரைந்த உரையாகும். திருக்குறளுக்கு இலக்கணம் தொல்காப்பியம். தொல்காப்பியத்தின்படி அமைந்த உரையே திருக்குறளுக்குத் தக்க உரை என்க.